
# 1973 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் - 29

**18.01.1973** சமநிலை மற்றும் அருகாமையின் நிலை!

**23.01.1973** சம்பூர்ணமானவராக ஆவதற்காக நான்கு தூண்கள்!

**09.04.1973** சம்ஸ்காரத்தை இணைப்பதில் வெற்றி அடைவது என்றால் முழுமையாக தேர்ச்சி பெறுவது!

**11.04.1973** மாற்றம்!

**13.04.1973** பக்தர்கள் மற்றும் பாவனைக்கான பலன்!

**14.04.1973** குழுவினுடைய சக்தி -ஒரே எண்ணம்!

**19.04.1973** பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) ஆவதற்கான முயற்சி!

**21.04.1973** எப்படி பெயரோ, அப்படியே காரியமும்!

**24.04.1973** ஆன்மீக ஜென்மபத்திரிகை (ஜாதகம்)!

**04.05.1973** அதிகாரி மற்றும் அடிமை!

**08.05.1973 மிக உயர்ந்த சுவமானம் (சுய கௌரவம்)!**

**16.05.1973 கடைசி முயற்சி -பற்றுதலை வென்று நினைவு சொரூபமான நிலை!**

**17.05.1973 எப்படி இலட்சியமோ அப்படி இலட்சணம்!**

**25.05.1973 எதிர்காலத் திட்டம்!**

**30.05.1973 84-ஜென்மங்களின் ரிகார்ட்டை (Register) நிரப்புவதற்கான நேரம் புருஷோத்தம சங்கமயுகம்!**

**01.06.1973 சக்திகளின் ஸ்டாக் (கையிருப்பு)!**

**06.06.1973 சமநிலை மற்றும் அருகாமை நிலை!**

**08.06.1973 அனைத்தையும் விட உயர்ந்த சக்தி பகுத்தறியும் சக்தி!**

**13.06.1973 ஆன்மீகப் போர்வீரன்!**

**18.06.1973 விசேஷ ஆத்மாக்களின் விசேஷம்!**

**20.06.1973 ஈடுபாட்டின் சாதனம் தடை!**

**23.06.1973 ஆன்மீக பொக்கிஷங்களின் அதிபதி!**

**28.06.1973 யோகயுக்த் (நினைவுசொரூபம்) ஆவதினால் இயல்பாகவே யுக்தியுக்தான (யதார்த்தமான)எண்ணம், சொல் மற்றும் செயல் இருக்கும்!**

**30.06.1973 பாபா மற்றும் குழந்தைகள்!**

**08.07.1973 காலத்தின் அழைப்பு!**

**15.07.1973 பற்றுதல் மற்றும் சுபாவம் மாறுவதினால் உலக மாற்றம்!**

**21.07.1973 ஆன்மீக நீதிபதி மற்றும் உலகியல் நீதிபதி!**

**02.08.1973 சரியான விதியின் மூலமாக சித்தி சொரூப பிராப்தி!**

**23.09.1973 உலகின் ஆத்மாக்களுக்கு லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) -கொடுப்பவர் தான் உலக அதிகாரி ஆவார்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

## 18.01.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமநிலை மற்றும் அருகாமையின் நிலை!

பாப்தாதாவிற்குச் சமமாக சுயகௌரவம் உடையவராக, சுயதரிசன சக்கரதாரியாக மற்றும் பணிவுடையராக இருக்கிறீர்களா? எவ்வளவிற்கு இந்த விசேஷ தாரணைகளில் சமமாக ஆகிக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவே நேரத்தை அருகில் கொண்டு வருவீர்கள். நேரத்தைத் தெரிந்து கொள்வதற்காக அதாவது இப்பொழுது இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்று தெரிந்து கொள்வது உங்களுடைய தாரணைகளின் சமநிலையின் ஆதாரத்தில் இருக்கிறது. நேரம் எவ்வளவு அருகில் இருக்கிறது என்று இப்பொழுது சொல்லுங்கள்? சமநிலையில் அருகில் இருக்கிறீர்கள் என்றால் நேரத்திலும் அருகில் இருக்கிறீர்கள். இந்த நிகழ்ச்சியின் இடையே உங்களை நீங்களே தெரிந்து கொள்வதற்கு மற்றும் தன் மூலமாக சமயத்தைத் தெரிந்து கொள்வதற்கான நேரம் கிடைத்திருக்கிறது. இந்த விசேஷ மாதத்திற்குள் இரண்டு முக்கியமான விஷயங்களை முக்கிய ரூபத்தில் இலட்சியத்தின் ரூபத்தில் எதிரில் வைக்க வேண்டும். அது எது? ஒன்று அன்பு மற்றொன்று அன்பிலேயே ஐக்கியமாகி இருப்பது.

காரியத்தில், பேச்சில், உறவு நெருக்கத்தில் அன்பு, நினைவு மற்றும் நிலையில் அன்பில் ஒன்றரக்கலந்து விடும் நிலை இருக்க வேண்டும். யார் எவ்வளவு அன்பு நிறைந்தவராக இருப்பாரோ அவர் அவ்வளவே அன்பில் ஒன்றரக்கலந்து விட முடியும். இந்த அன்பில் ஒன்றரக்கலந்து விடும் நிலையை மனித ஆத்மாக்கள் ஒன்றரக்கலந்து விடும் நிலை என்று கூறிவிட்டார்கள். தந்தை மேல் அன்பு என்பதை அகற்றி விட்டு ஒன்றாக்கலந்து விடுவது என்ற வார்த்தையை மட்டும் பிடித்துக் கொண்டார்கள். அப்படி இந்த மாதத்திற்குள் இந்த இரண்டு முக்கிய விசேஷங்களை தாரணை செய்து பாப்தாதாவிற்குச் சமமாக ஆக வேண்டும். பாப்தாதாவின் முக்கிய விசேஷமே உங்கள் அனைவரையும் விசேஷமானவராக ஆக்கினார், அனைத்தையும் மறக்கச் செய்தார்

மற்றும் ஆத்ம அபிமானியாக ஆக்கினார் என்பது தான். இது தான் அன்பு மற்றும் அன்பில் ஒன்றரக்கலந்து விடுவது. அன்பானது உங்கள் அனைவரையும் ஒரு நொடியில் 5000 வருடத்தின் மறந்து விட்ட விஷயங்களை நினைவில் கொண்டு வந்தது. அனைத்து உறவிலும் கொண்டு வந்தது. அனைத்தையும் தியாகம் செய்பவராக ஆக்கியது. தந்தை ஒரே ஒரு விசேஷத்தின் மூலம் ஒரே நொடியில் தன்னுடையவராக ஆக்கினார் என்றால், நீங்கள் அனைவரும் கூட இந்த விசேஷத்தை தாரணை செய்து தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறீர்களா? சாகார பாபாவில் இந்த விசேஷத்தை பெர்சன்டேஜில் (சதவிகிதத்தில்) பார்க்கவில்லை மிகவும் பெர்ப ஃக்ட்டான (முழுமையான) நிலையில் பார்த்தோம் என்றால். விசேஷ ஆத்மாக்களாகிய நீங்களும் மற்றும் தந்தைக்குச் சமமாகியிருக்கும் ஆத்மாக்களும் பெர்ப்ஃக்ட் ஆக வேண்டும்; இந்த முக்கிய விசேஷத்தில் பெர்சென்டேஜ் இருக்க வேண்டாம். பெர்ஃபெக்ட் ஆக வேண்டும் ஏனென்றால் இதன் மூலமாகத் தான் அனைத்து ஆத்மாக்களின் பாக்கியம் மற்றும் அதிர்ஷ்டத்தை எழுப்பி விட முடியும். அதிர்ஷ்டப் பூட்டின் சாவி எது? "லவ்' (அன்பு) லவ் தான் லாக்கின் "கீ" (சாவி) ஆகும். இது "மாஸ்டர் கீ ஆகும். இது தான் எப்படிப்பட்ட துர்பாக்கியசாலியையும் பாக்கியசாலியாக ஆக்குகிறது. இதனுடைய அனுபவிகளாக நீங்கள் இருக்கிறீர்களா என்ன?

எவ்வளவிற்கு எவ்வளவு பாப்தாதா மேல் அன்பு ஏற்படுகிறதோ அந்த அளவே புத்தியின் பூட்டு திறந்து கொண்டே இருக்கிறது. லவ் குறைவாக இருக்கிறது என்றால் லக்-கும் (அதிர்ஷ்டமும்) குறைவு தான். அப்படி அனைத்து ஆத்மாக்களின் லக்-கின் லாக்-ஐ திறக்கக்கூடிய சாவி உங்களிடம் இருக்கிறது. எங்காவது இந்த லக்-கின் சாவியை தொலைத்து விடவில்லையே? அல்லது மாயா விதவிதமான ரூபங்களில் மற்றும் வர்ணங்களில் (கவர்ச்சியில்) இந்த சாவியை திருடிவிடவில்லையே? மாயாவின் பார்வையும் இந்த சாவி மேல் தான் இருக்கிறது. எனவே இந்த சாவியை எப்பொழுதும் பாதுகாப்பாக வைக்க வேண்டும். அனேக பொருட்கள் மேல் லவ் ஏற்படுகிறது. ஒருவேளை ஏதாவது ஒரு பொருளில் லவ் இருக்கிறது என்றால் தந்தை மேல் உள்ள லவ்வில் பெர்சென்டேஜ் வந்து விடுகிறது. தன்னுடைய உடலின், தன்னுடைய ஏதாவது ஒரு பொருளின் மேல் ஒருவேளை

என்னுடையது என்ற உணர்வு இருக்கிறது என்றால் பாபா மேல் உள்ள லவ்-வில் பெர்சென்டேஜ் இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். தன்னுடையது என்பதை அகற்றுவது என்பது தான் தந்தைக்குச் சமமான நிலையைக் கொண்டு வருவது ஆகும். எங்கு தன்னுடையது இருக்கிறதோ அங்கு பாப்தாதா எப்பொழுதும் உடன் இருப்பதில்லை.

பெர்சென்டேஜ் உடையவர் ஒருபொழுதும் பெர்ஃபெக்ட் ஆக முடியாது. பெர்சென்டேஜ் என்றால் டிஃபெக்ட் (குறை) உடையவர்; அப்படிப்பட்டவர் ஒருபொழுதும் பெர்ஃபெக்ட் ஆக முடியாது. எனவே இந்த வருடத்தில் பெர்சென்டேஜை நீக்கி பெர்ஃபெக்ட் ஆகுங்கள். அப்பொழுது தான் இந்த வருடம் வினாஷத்தின் வருடத்தைக் கொண்டு வரும். ஒரு வருடத்தின் நேரத்தைக் கொடுக்கிறோம். ஏனென்றால், ஒரு வருடம் அனேக வருடங்களின் உயர்ந்த பிராப்தியை உருவாக்குவதற்கு காரணமாகும் என்று "எங்களுக்கு எப்படி தெரியும்" இந்த புகாரை கூறக்கூடாது. தனக்குத் தானே சோதிப்பவராகி தன்னைத் தானே சோதிக்க வேண்டும், ஒருவேளை முக்கியமாக இந்த விஷயத்தில் தன்னை டெர்ஃபெக்ட்டாக ஆக்கினீர்கள் என்றால் அனேக விதமான டிஃபெக்ட் தானாகவே முடிவடைந்து விடும். இது எளிதாக சகஜமான முயற்சி செய்வது தான் இல்லையா? ஒருவேளை நீங்கள் தந்தையுடன் அன்பில் ஐக்கியமாகி இருந்தீர்கள் என்றால் மற்றவர்களையும் சுலபமாகவே தனக்குச் சமமாக மற்றும் தந்தைக்குச் சமமாக ஆக்க முடியும். அப்படி இந்த வருடம் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற லட்சியத்தை வைத்து நடந்து கொண்டீர்கள் என்றால் பாப்தாதாவும் அந்த மாதிரி குழந்தைகளுக்கு "நீங்களும் அந்த மாதிரி ஆகலாம்" என்ற வரதானம் கொடுப்பதற்காக நாடகப்படி பொறுப்பாளர் ஆகியிருக்கிறார். இந்த வருடத்தின் விசேஷமானது தந்தைக்குச் சமமாகி நேரத்தை அருகில் கொண்டு வருவதற்கானது. நேரத்தின் விசேஷத்தை தன்னுள் கொண்டு வர வேண்டும். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அன்பானவர்களாக மற்றும் அன்பில் மூழ்கியிருப்பவர்களுக்கு, தந்தைக்குச் சமமாக பணிவானவர்களாகி மற்றும் படைப்பைச் செய்யும் காரியத்தில் எப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, நேரத்தின் விசேஷத்தை தன்னுள் கொண்டு வருபவர்களுக்கு, உயர்ந்த சுயகௌரவத்தில் எப்பொழுதும்

நிலைத்திருப்பவர்களுக்கு, உயர்ந்த மற்றும் சமமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 23.01.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ணமானவராக ஆவதற்காக நான்கு தூண்கள்!

அனைவரும் தன்னை சம்பூர்ணமாக ஆக்கும் முயற்சியில் இருந்து கொண்டிருக்கிறீர்களா? சம்பூர்ணமானவராக ஆவதற்காக முக்கியமாக நான்கு விசேஷங்களை தாரணை செய்ய வேண்டும், அதன் மூலம் சுலபமாகவே சம்பூர்ணமானவராக ஆக முடியும். எப்படி யோகநிலையில் எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பதற்காக மற்றவர்களுக்கு நான்கு முக்கிய நியமங்களை தூண்களாகக் காண்பிக்கிறீர்கள் மற்றும் கூறுகிறீர்கள். அதே போலவே எப்பொழுதுமே சம்பூர்ணமானவராக ஆவதற்காக நான்கு விசேஷங்கள் தூண்கள் ரூபத்தில் இருக்கிறது. அவை யாவை? 1) ஞான மூர்த்தி (ஞானம் நிறைந்தவர்), 2) குணமூர்த்தி (குணம் நிறைந்தவர்), 3) மகாதானி மூர்த்தி (மகாதானியாக இருப்பவர்) மேலும் 4) நினைவு மூர்த்தி (நினைவு சொரூபமாக) அதாவது தபஸ்விமூர்த்தியாக இருப்பது. இந்த நான்கு விசேஷங்களையுமே தன்னுள் கொண்டு வருவதினால் சம்பூர்ண நிலையை உருவாக்க முடியும். இப்பொழுது தன்னுள் இந்த நான்கு விசேஷங்களுமே வெளிப்படையான ரூபத்தில் அனுபவம் ஆகிறதா மற்றும் பிற ஆத்மாக்களுக்கும் தென்படுகிறதா? என்று பாருங்கள்.

ஞானமூர்த்தி என்றால் எப்பொழுதும் புத்தியில் ஞானத்தின் சிந்தனை ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். எப்பொழுதும் வார்த்தைகளில் ஞானத்தினுடைய விஷயங்களையே வர்ணனை செய்து கொண்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு காரியம் மூலமாக ஞான சொரூபம் அதாவது மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இந்த முக்கிய சொரூபங்களின் சாட்சாத்காரம் தென்படட்டும். அவரைத்தான் ஞானமூர்த்தி என்று கூறுவது. இந்த விதமாக மனம், சொல் மற்றும் செயல் மூலமாக குணமூர்த்தி,

# 1973 அவ்யக்த முரளி

மகாதானிமூர்த்தி மற்றும் நினைவு அதாவது தபஸ்யாமூர்த்தி பிரத்யக்ஷ ரூபத்தில் தென்படட்டும். எப்படி வெளியுலக படிப்பில் மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள், ஒன்பது மாதங்களுக்கான பரீட்சை வைக்கிறார்கள் அதன் மூலம் தங்களுடைய படிப்பின் நிலை ஒவ்வொருவருக்கும் தெரிந்து விடுகிறது, அதே போலவே ஈஸ்வரிய படிப்பிற்கு இப்பொழுது அதிகமான காலம் கடந்து சென்று விட்டது. எனவே விசேஷமாக இந்த மாதம் நினைவு யாத்திரையில் இருந்து தன்னை சோதிப்பதற்காக அதாவது சுயம் தானே தன்னுடைய ஆசிரியராகி, பார்வையாளராகி தன்னுடைய பரீட்சையை வைத்துப் பார்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கடைசி பரீட்சை மட்டும் தான் இன்னும் இருக்கிறது. எனவே தன்னுடைய ரிசல்ட்டைப் (பரீட்சை முடிவை) பார்த்து இந்த நான்கு விசேஷங்களிலிருந்து எந்த விசேஷத்தில் மற்றும் எவ்வளவு சதவிகிதத்தில் குறை இருக்கிறது என்று சோதனை செய்யுங்கள். கடைசி பரீட்சையில்

முழுமையாக தேர்ச்சி பெறுவதற்கு தேவையான அனைத்து தகுதிகளும் இருக்கின்றனவா? இந்த மாதம் முடிவுகளைப் பார்ப்பதற்கான மாதமாகும். ஒருவேளை சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்றால் சம்பூர்ண நிலையை எப்படி அடைவீர்கள்? எனவே தன்னுடைய குறையைத் தெரிந்து அதை நிரப்புவதற்கான தீவிர முயற்சி செய்யுங்கள். இருந்த போதிலும் இப்பொழுது கொஞ்ச நேரம் நாடகப்படி முயற்சி செய்வதற்காக கிடைத்திருக்கிறது ஆனால் கடைசி பரீட்சை நடப்பதற்கு முன்பு தன்னை சம்பூர்ணமாக ஆக்க வேண்டும். தன்னுடைய ரிசல்ட்டைப் பார்த்தீர்களா? எப்படி இந்த மாதத்தில் நாலாபுறமும் நினைவு யாத்திரையில் இருப்பதற்கான ஊக்கம் மற்றும் உற்சாகம் இருந்தது, இதனுடைய ரிசல்ட் எப்படி இருந்தது என்று நினைக்கிறீர்கள்? எத்தனை மதிப்பெண்கள் கொடுக்கலாம்? ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கென்று தனிப்பட்ட மதிப்பெண்கள் தான், இருந்தாலும் நாலாபுறத்து சூழ்நிலை மற்றும் சுற்றுப்புறச்சூழல் மேலும் முயற்சியின் ஊக்கம் மற்றும் உற்சாகத்தின் ரிசல்ட்டில் எத்தனை மதிப்பெண்கள் கொடுக்கலாம்? மொத்த மதிப்பெண்களைக் கேட்கிறோம். அனைவரின் முயற்சியின் பிரபாவம் மதுபன் வரை வந்து சேருகிறது தான் இல்லையா? நீங்கள் திரிகாலதரிசியாக இல்லையா என்ன? தன்னுடைய நெருக்கமான பரிவாரத்தின் ஆத்மாக்களின்

## 1973 அவ்யக்த முரளி

முயற்சியின் திரிகாலதரிசியாக நீங்கள் இல்லையா என்ன? எதிர்காலத்திற்காக மட்டும் தான் திரிகாலதரிசியா என்ன? தற்சமயத்திற்கு இல்லையா? வைப்ரேஷன் (எண்ண அதிர்வலைகள் மூலமாக மற்றும் சுற்றுப்புறச்சூழல் மூலமாக தெரிந்து கொள்ள முடியாதா?

அறிவியலைச் சேர்ந்தவர்கள் பூமியில் இருந்து கொண்டு விண்வெளியில் இருப்பவர்களின் ஒவ்வொரு அசைவு மற்றும் ஒவ்வொரு நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள முடியும் என்றால், நினைவு பலத்தின் மூலமாக நீங்கள் உங்களுடைய உயர்ந்த முயற்சியின் வேகம் மற்றும் நிலையைத் தெரிந்து கொள்ள முடியாதா என்ன? கடைசியில் எப்பொழுது அவசியம் இருக்காதோ அப்பொழுது தெரிந்து கொள்வீர்களா? இப்பொழுதே இதைத் தெரிந்து கொள்வதற்கான பயிற்சியும் தேவையாக இருக்கிறது, கிரகித்துக் கொள்ளும் சக்தி தேவையாக இருக்கிறது. அறிவியலானது தூரத்தின் சப்தத்தைக் கிரகித்து மற்றவர்களுக்குச் சொல்ல முடியும் என்றால், நீங்களும் சுத்தமான அதிர்வலைகள் (வைப்ரேஷன்), சுத்தமான உள்ளுணர்வுகள் மற்றும் சுத்தமான சுற்றுப்புறச்சூழலை கிரகிக்க முடியாதா? இந்த கிரஹிக்கும் சக்தி (கேட்சிங் பவர்) பிரத்ய ரூபத்தில் அனுபவம் ஆகும். எப்படி இன்றைய நாட்களில் தூரத்திலிருக்கும் காட்சிகள் தொலைக்காட்சி மூலமாகத் தெளிவாகத் தென்படுகிறது. அதே போல் திவ்ய புத்தி உடையவராக ஆவதினால், ஒரு நினைவின் சுத்த எண்ணத்தில் நிலைத்திருப்பதினால், உங்கள் அனைவருக்கும் கூட ஒவ்வொருவரின் நிலை மற்றும் முயற்சியின் வேகம் மற்றும் நிலை அந்த மாதிரி தெளிவாகத் தென்படும். இந்த அறிவியல் கூட எங்கிருந்து வந்தது? அமைதியின் சக்தி மூலம் தான் அறிவியலும் வந்தது. அறிவியல் உங்களுடைய உண்மையான நிலை மற்றும் சம்பூர்ண ஸ்டேஜை புரிய வைப்பதற்காக ஒரு சாதனமாக வெளிப்பட்டு இருக்கிறது. ஏனென்றால் சூட்சும சக்தியைத் தெரிந்து கொள்வதற்காக தமோ குண புத்தி உள்ளவர்களுக்கு ஏதாவது ஸ்தூல சாதனம் தேவையாக இருக்கிறது. எந்த உயர்ந்த ஆத்மாவில் இந்த நான்கு விசேஷங்களுமே சம்பூர்ண சதவிகிதத்தில் அதாவது அதைத் தான் சென்ட் பர்சன்ட் (நூற்றுக்கு நூறு) என்று கூறுகிறார்கள். வெளிப்படும் ரூபத்தில் இருக்குமோ, அந்த மாதிரி ஆத்மாக்களில் அனைத்து

சித்திகளின் பிராப்தி தென்படும். இந்த சித்தி உங்களுடைய தற்சமயத்து முயற்சியில் தென்படுகிறதா? கொஞ்சம் சதவிகிதத்திலாவது தென்படுகிறதா அல்லது இந்த நிலை இப்பொழுது தூரமாக இருக்கிறதா? கொஞ்சம் அருகில் தென்படுகிறதா? பார்க்கப்போனால் இந்த மாதத்தின் நாலாபுறத்தின் ரிசல்ட் மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது இன்னும் என்ன செய்வீர்கள்? நினைவு யாத்திரையில் இருந்ததினால் ஏதாவது புதிய திட்டங்கள் நடைமுறையில் கொண்டு வருவதற்காக வெளிப்பட்டதா? எப்படி நாலாபுறத்திலும் கூட்டாக இருந்து நினைவின் பலத்தை தன்னுள் நிரப்புவதற்கான முயற்சி செய்தீர்களோ அப்படி இப்பொழுது வரும் இரண்டு மாதங்களில் நாலாபுறமும் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான முரசை மிக பலமான ஓசையுடன் கொட்ட வேண்டும். அந்த முரசின் ஓசையைக் கேட்டு தூங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் விழித்து விட வேண்டும். இது என்ன ஓசை மேலும் இந்த நேரம் எப்படிப்பட்ட உயர்ந்த காரியம் நடந்து கொண்டிருக்கிறது? என்று நாலாபுறமும் பரவட்டும்.

ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தை இப்பொழுது தான் உருவாக்க முடியும். அதே போலவே நாலாபுறமும் விதவிதமான யுக்திகளினால், விதவிதமான நிகழ்ச்சிகளினால் தந்தையின் அறிமுகத்தின் முரசைக் கொட்டுங்கள். இந்த இரண்டு மாதத்தில் அனைவருக்கும் இந்த விசேஷ காரியத்தில் தன்னுடைய விசேஷத்தைக் காண்பிக்க வேண்டும். எப்படி நினைவு யாத்திரையில் ஒவ்வொருவரும் தன்னுடைய முயற்சியின்படி பந்தயத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதற்கான முயற்சி செய்தார்கள்,

அதே போல் இப்பொழுது இந்த இரண்டு மாதங்களுக்குள் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்காக புதுப்புது திட்டங்களை நடைமுறையில் கொண்டு வருவதற்கான பந்தயத்தை செய்யுங்கள். பின்பு இந்த பந்தயத்தில் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசை யார் யார் பெறுபவர்கள் என்று பின்பு ரிசல்ட்டைக் கூறுவோம். மிக நல்ல வாய்ப்பும் இருக்கிறது, இப்பொழுது ரிசல்ட்டைப் பார்ப்போம். ஒரு மாதத்திற்குள் யோக பலத்தின் பிராப்தியாக என்ன அனுபவம் செய்தார்கள்? இப்பொழுது யோக பலம் மூலமாக ஆத்மாக்களை எழுப்பி விடுவதற்கான காரியம் செய்யுங்கள் மற்றும் நிரூபணம் கொடுங்கள்.

எப்படி முயற்சியின் பிரத்யக்ஷ பலன் பாப்தாதாவிடமிருந்து கூட கிடைக்கிறது. அதே போல் அதற்கு நன்றிக்கடனாக பிரத்யக்ஷபலனை காண்பியுங்கள். மேலும் சர்வ சக்திவான் தந்தையின் பாலனையின் பிரத்யக்ஷ சொரூபத்தை காண்பியுங்கள். சாகார ரூபம் மூலமாகவும் மிகுந்த பாலனையைப் பெற்றீர்கள்; மேலும் அவ்யக்த ரூபம் மூலமாகவும் பாலனையை பெற்றீர்கள். இப்பொழுது மற்ற ஆத்மாக்களுக்கு ஞானத்தின் பாலனை செய்து அவர்களையும் தந்தையின் எதிரில் கொண்டு வாருங்கள் மற்றும் தந்தையின் அருகில் கொண்டு வாருங்கள்.

நாடகத்தில் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் நேரம் மற்றும் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் வருடத்தில் மிகுந்த புதிய, நூதனமான விஷயங்களைப் பார்ப்பீர்கள். இதற்காக ஆரம்பத்தில் விசேஷமாக நினைவு பலத்தை நிரப்புவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இப்பொழுது மிக விரைவில் புதுப்புது காட்சிகள் மற்றும் புதுப்புது விஷயங்களைப் பார்ப்பீர்கள் மற்றும் கேட்பீர்கள். இதற்காக அவ்யக்த நிலை மற்றும் அவ்யக்த சந்திப்பின் விசேஷ அனுபவம் செய்ய வேண்டும். அதன் மூலம் எந்த நேரமும் சந்திப்பின் மூலமாக புத்தி பலத்தினால் தன்னுடைய முயற்சி மற்றும் உலக சேவையின் அனைத்து காரியத்தில் வெற்றி அடைபவராக ஆக முடியும். இப்பொழுது அவ்யக்த சந்திப்பின் அனுபவம் செய்தீர்களா? எந்த நேரம் விரும்புகிறீர்களோ அல்லது எந்த சூழ்நிலையில் விரும்புகிறீர்களோ, அந்த நேரம் அந்த ரூபத்தில் சந்திப்பை ஏற்படுத்தும் அனுபவம் செய்ய முடியுமா? இந்த பயிற்சி ஆகி விட்டதா என்ன? எப்பொழுது கொஞ்சம் பயிற்சி செய்திருக்கிறீர்கள் என்றால் அதை அதிகரிக்க முடியும் இல்லையா? முறையோ அனைவருக்கும் தெரிந்து விட்டது இல்லையா? இதுவோ மிக சுலபமான முறை. இதன் மூலம் எந்த தேசத்தில் எந்த ரூபத்தில் சந்திக்க விரும்புகிறீர்களோ அப்படி தன்னுடைய வேஷத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஒருவேளை தன்னுடைய வேஷத்தை உருவாக்கி விட்டீர்கள் என்றால் அந்த வேஷத்தில் மற்றும் அந்த தேசத்தை சென்றடைந்தே விடுவீர்கள் மற்றும் அந்த தேசத்துவாசி தந்தையுடன் அனேக ரூபத்தில் சந்திப்பை ஏற்படுத்த முடியும். அந்த தேசத்திற்குச் சமமாக வேஷத்தை மட்டும் தாரணை செய்யுங்கள் அதாவது ஸ்தூல வேஷம் மற்றும் ஸ்தூல

உடலின் நினைவிலிருந்து விலகி சூட்சும உடல் அதாவது சூட்சும தேசத்தின் வேஷம் அணிந்தவராக ஆகுங்கள். மாறுவேடம் போடுபவர்களாக நீங்கள் இல்லையா? வேஷத்தை தாரணை செய்யத் தெரியாதா என்ன? எப்படி இன்றைய உலகத்தில் எப்படி காரியமோ அப்படி வேஷத்தை தாரணை செய்து விடுகிறார்கள். அதே போல் நீங்களும் மாறுவேடம் பூண்டவர்களா? அப்படி எந்த நேரம் எந்தக் காரியம் செய்ய விரும்புகிறீர்களோ அந்த மாதிரி வேஷத்தை தாரணை செய்ய முடியாதா என்ன? இந்த நேரம் சாகாரம் மற்றும் அடுத்த நேரம் ஆகாரம், எப்படி ஸ்தூல ஆடைகளை சுலபமாக மாற்ற முடியும் என்றால் தன்னுடைய புத்தி மூலமாக தன்னுடைய சூட்சும உடலை தாரணை செய்ய முடியாதா என்ன? மாறுவேடம் பூண்டவர்களாக மட்டும் ஆகி விடுங்கள். அப்பொழுது அனைத்து சொரூபங்களின் சுகங்களை அனுபவம் செய்ய முடியும். மிக சுலபமானது தன்னுடையவே சொரூபம் தான் இல்லையா? ஏதாவது போலியான வேறு யாருடைய ரூபத்தையா தாரணை செய்கிறீர்கள்? மற்றவர்களின் ஆடை மேலே கீழே போக முடியும், பொருந்தும் அல்லது பொருந்தாமலும் இருக்கும் ஆனால் தன்னுடைய ஆடையையோ சுலபமாகவே அணிய முடியும். அப்படி இது தன்னுடையவே ரூபம் தான். சுலபம் தான் இல்லையா? நாடகப்படி இந்த விசேஷ பயிற்சி கூட ஏதோ இரகசியத்தினால் அடங்கியிருக்கிறது. என்ன இரகசியம் நிரம்பியிருக்கிறது? உணர்வு ஏற்படுகிறதா? நீங்கள் அனைவரும் என்னென்ன கூறுகிறீர்களோ அவை அனைத்தும் சரியானவை தான். ஏனென்றால் இப்பொழுது யதார்த்த நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் இல்லையா? வீணான நிலையோ இல்லை தானே? சக்தி நிறைந்த சொரூபத்தின் நிலை தான் இல்லையா?

இப்பொழுது நாடகத்தின் (சினிமாவின்) சுருள் வேகவேகமாக மாற வேண்டும். இப்பொழுது என்ன தற்சமயம் ஓடிக் கொண்டிருக்கிறதோ அவை அனைத்தும் மாற வேண்டும். வியக்தம் மூலமாக அவ்யக்த சந்திப்பு இவை அனைத்தும் வேகமாக மாற வேண்டும். இந்தக் காரணத்தினால் அவ்யக்த சந்திப்பின் விசேஷ அனுபவத்தை விசேஷ ரூபத்தில் செய்வித்தோம். மேலும் வரும் நாட்களிலும் அவ்யக்த நிலையின் மூலமாக அவ்யக்த சந்திப்பின் விசித்திர அனுபவத்தை அதிகமாகச் செய்வீர்கள். இந்த வருடத்திற்கு அவ்யக்த சந்திப்பு

மூலமாக விசேஷ சக்திகளின் பிராப்தியின் வரதானம் கிடைத்திருக்கிறது. எனவே இந்த மாதம் முடிந்து விட்டது என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் இந்த பயிற்சியை மேலும் இதே அனுபவத்தை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அவர்களுக்கு மிகுந்த புதுப்புது அனுபவங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். புரிந்ததா?

அந்த மாதிரி அனைத்து குணங்களில் தன்னை நிரம்பியவராக ஆக்கக்கூடிய, தன்னுடைய எண்ணம், சொல் மற்றும் செயல் மூலமாக அனைத்து விசேஷங்களை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, பாப்தாதாவின் தெய்வீக பாலனையின் பிரத்யக்ஷ பலனை காண்பிக்கக்கூடிய தந்தையின் எப்பொழுதும் அன்பிற்குரிய, எப்பொழுதும் சகயோகி, அனைத்து சக்திகளில் சமமாகக்கூடிய மற்றும் அனைத்து வெற்றிகளை அடையக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கும் மற்றும் தீவிர முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

**வரதானம்: மரியாதை கொடுக்கும் ரிகார்ட்டை (பதிவேடு) சரியாக வைத்து குஷியை மகாதானம் செய்யக்கூடிய புண்ணிய ஆத்மா ஆகுக!**

தற்சமயம் நாலாபுறங்களிலும் மரியாதை கொடுப்பதற்கான ரிகார்ட்டை (பதிவேடு) சரியாக வைப்பதின் அவசியம் இருக்கிறது. இந்த ரிகார்ட் பின்பு நாலாபுறங்களிலும் பேசப்படும். மரியாதை கொடுப்பது மற்றும் மரியாதை பெறுவது, சிறுவர்களுக்கும் மரியாதை, பெரியவர்களுக்கும் மரியாதை கொடுங்கள். இந்த மரியாதையின் ரிகார்ட் இப்பொழுது வெளியாக வேண்டும். அப்பொழுது தான் குஷியின் தானம் செய்யக்கூடிய மகாதானி புண்ணிய ஆத்மாவாக ஆவீர்கள். யாருக்காவது மரியாதை கொடுத்து குஷியாக்கி விடுவது தான் மிகப் பெரிய புண்ணிய காரியம் மற்றும் சேவை ஆகும்.

**சுலோகன்: ஒவ்வொரு நேரத்தையும் கடைசி நேரம் என்று புரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால் எவரெடியாக இருப்பீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 09.04.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்ஸ்காரத்தை இணைப்பதில் வெற்றி அடைவது என்றால் முழுமையாக தேர்ச்சி பெறுவது!

நிரந்தரமாக தந்தை மற்றும் ஆஸ்தியின் நினைவில் மூழ்கியிருக்கக்கூடிய நிரந்தர சகஜ இராஜயோகி மற்றும் கர்மயோகி என்று தன்னை புரிந்து நடந்து கொள்கிறீர்களா? எப்படி தன்னுடைய அறிமுகம் எப்பொழுதுமே நினைவில் இருக்கிறதோ அதே போல் இந்த மர்ஜீவா ஜென்மத்தின் (அலௌகீக மறுபிறவியின்) தன்னுடைய முழு அறிமுகம் நினைவில் இருக்கிறதா? யாருக்காவது தன்னுடைய இந்த சாகார உடலின் சம்மந்தம் மற்றும் செய்யும் தொழிலின் அறிமுகம் எப்பொழுதாவது மறக்கிறதா? 84-பிறவிகளுக்குள் இது எப்பொழுதாவது மறக்கிறதா என்ன? லௌகீக பிறவியின் அறிமுகத்தை நீங்கள் மறப்பதில்லை என்றால், இந்தவொரு புதுமையான, ஆன்மீக விசேஷ ஜென்மம் மற்றும் விலைமதிக்க முடியாத அலௌகீக பிறவியின் தன்னுடைய அறிமுகத்தை ஏன் மறந்து விடுகிறீர்கள்? இதுவும் அறிமுகம் தான் இல்லையா.? அறிமுகத்தில் எத்தனை விஷயங்களைக் கூறுகிறீர்கள்? எப்படி மற்றவர்களுக்கு தந்தையின் அறிமுகத்தை கொடுக்கிறீர்களோ அதே போல் தன்னுடைய அறிமுகத்தை எப்பொழுதும் நினைவில் வைப்பது கடினமா அல்லது மிக சுலபமா? பக்த மனிதர்கள் எப்பொழுது தந்தையின் மகிமை செய்கிறார்கள் என்றால், மகிமையில் ஒரு விசேஷ மகிமை செய்கிறார்கள் அந்த மகிமை மூலம் அவர்களுக்கு பிராப்தி ஏற்படுகிறது. அது என்ன மகிமை செய்கிறார்கள்? ஆனால் நீங்களோ ஞானக்கடல் என்று கூறுகிறீர்கள் ஆனால் அந்த மகிமையை பிராப்தியின் காரணமாக விசேஷமாக பக்தர்கள் செய்கிறார்கள். மேலும் இங்கேயும் சில சில குழந்தைகள் எப்பொழுதாவது அந்த மகிமை செய்கிறார்கள். எதை நீங்கள் எப்பொழுதுமே கூறுகிறீர்களோ அதுவோ பிரசித்தியானது ஆனால் அது

பக்தர்கள் மற்றும் குழந்தைகளில் சிலரிடம் எப்பொழுதாவது இருக்கிறது. 63 ஜென்மத்திற்கான அந்த மகிமை எது? அது நினைவில் வருகிறதா? நீங்கள் கூட பக்தி மார்க்கத்தில் மகிமை செய்திருந்தீர்கள் இல்லையா? மேலும் பிராப்தியின் காரணமாக செய்கிறார்கள். ஏதாவது, பிராப்தியின் சுயநலம் இருக்கிறது என்றால் அந்த நேரம் விசேஷமாக கடினத்தை சகஜமாக்குபவர் மற்றும் ஈட்டியை முள் ஆக்குபவர் என்று விசேஷமாக இதைத் தான் கூறுகிறார்கள். எப்பொழுதாவது, ஏதாவது பிரச்சனைகள் வருகிறது என்றால் அந்த நேரம் பலமற்ற ஆத்மாவாக இருப்பதால், சகஜ சாதனம் கிடைக்காத காரணத்தினால் கடினத்தை சுலபமாக்குபவரே! என்று இதைத் தான் கூறுகிறார்கள். அப்படியானால் தந்தையின் மகிமையான இது உங்களுடைய மகிமையாகவும் இருக்கிறதா? நீங்கள் கடினத்தை சுலபமாக்குபவர்களா? மாஸ்டர் ஒன்றும் குறைந்தவராக இருப்பதில்லை. 'மாஸ்டர்' என்ற வார்த்தை தந்தையை விட உயர்ந்தவர்கள் என்று நிரூபிக்கிறது. ஒருவேளை அந்த மகிமை நினைவில் இருந்தால் உங்கள் எதிரில் என்ன தடை மற்றும் கஷ்டங்கள் வருகிறது அவை கடினமாக அனுபவம் ஆகிறதா, இந்த அனுபவத்தை செய்வீர்களா என்ன? இந்த விஷயம் கடினமானது என்று அப்படி கூறுவீர்களா? எப்பொழுது நீங்கள் மற்றவர்களின் கடினத்தை சுலபமாக்குபவர்களாக இருக்கிறீர்களோ தன்னுடைய கடினத்தை அனுபவம் செய்வது என்ற இதை என்னவென்று சொல்வது? எப்படி தந்தை அனைத்து ஆத்மாக்களின் கடினமான விஷயங்களை சகஜமாக்குபவர் மற்றும் ஈட்டியிலிருந்து முள்ளாக ஆக்குபவராக இருக்கிறாரோ அதே போல் நானும் கடினத்தை சகஜமாக ஆக்குபவன் என்ற இந்த அறிமுகத்தின் நினைவில் இருங்கள். எப்படி அறிமுகமோ அதே மாதிரி எண்ணமும் வருகிறது. கடினம் அனுபவம் ஆவது என்ற இது எதன் அடையாளம்? பலமற்ற ஆத்மாக்களின் அடையாளம், மாஸ்டர் சர்வ சக்திவானின் எதிரில் கடினமான விஷயம் இருக்க முடியுமா? மனிதன் என்ன விரும்புகிறானோ அதைச் செய்ய முடியும் என்ற இந்தப் பழமொழி இந்த நேரத்தின் விஷயத்திற்கானது. இந்த பிராமண ஆத்மாக்களின் மகிமை தான் இது. அப்படியானால் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்து முடிப்பவர் என்று கூறலாமா அல்லது இந்த விஷயம் கடினமானது என்று அப்படி இருக்க முடியுமா? எப்படி சாகார ரூபத்தில் (பிரம்மாபாபாவில்) ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு காரியத்தில் அனுபவம் செய்தீர்கள், ஏதாவது கடினமான

விஷயத்தை வர்ணித்ததாகவோ அல்லது செய்ததாகவோ இருந்ததா? முழு உலகமுமே ஒரு பக்கம் இருந்தாலும் மற்றும் கொஞ்ச விசேஷ ஆத்மாக்கள் இன்னொரு பக்கம் இருந்தாலும் எந்தக் கடினமும் இல்லை.

ஸ்தாபனையின் தொடக்க நேரத்தில் முழு உலகம் ஒரு பக்கம் மற்றும் ஒரே ஒரு ஆத்மா (பிரம்மா) இன்னொரு பக்கம் இருந்தது இல்லையா? இவர்களோ பின்பு சகயோகியாக ஆனார்கள். முதலில் நிமித்தமாக ஒரு ஆத்மா ஆனார் இல்லையா? அப்படி சாகார ரூபத்தில் எப்பொழுது தந்தையின் நடைமுறை காரிய ரூபத்தைப் பார்த்தீர்கள் என்றால், பிரம்மா வம்சாவளி பிராமணன் தந்தையைப் பின்பற்றி நடப்பவர்களாக இல்லையா என்ன? ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு எண்ணத்திலும் பின்பற்றக்கூடியவர்கள். இந்த உறுதியான எண்ணம் மற்றும் இந்த நிச்சப்புத்தியின் எண்ணம் ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. இதைத் தான் அங்கதனைப் போன்று ஆடாத அசையாதவர் என்று கூறுவது. அப்படி அனைத்து விஷயங்களிலும் தந்தையைப் பின்பற்றுபவர்களாக ஆனீர்களா? சேவை செய்வது சுலபம், சாதனமும் சுலபம் என்று அனேகர் நினைக்கிறார்கள் ஆனால் ஒவ்வொரு ஆத்மாக்களுடன் நெருக்கத்தில் வந்து சம்ஸ்காரங்களை ஒத்துப் போகச் செய்வதிலும், எப்படி மேடையில் பேசுவது சுலபமோ, அந்த அளவே சுலபமாக அனுபவம் ஆகட்டும். அது வாய்மூலம் பேசுவது, இது காரியம் மூலம் பேசுவது. இதில் யார் வெற்றி அடைந்தவராக ஆகி விடுகிறாரோ அவர் தான் முழுமையாகத் தேர்ச்சி பெற்றவர் ஆகிறார். இதில் எப்படி ஆகும், என்ன இதையும் செய்ய வேண்டுமா என்று எண்ண அளவில் கூட இருக்க வேண்டாம். எப்படி கலியுக உலகத்தில் ஜெயின் மதத்தைச் சேர்ந்தவர்கள் பிடிவாதமாய் தியாகம் செய்கிறார்கள், ஒவ்வொரு முடியையும் தன்னுடைய கைகளால் பிடுங்குகிறார்கள், ஆனால் இதனுடைய கருத்து என்ன? எது சாதாரணமற்ற விஷயமோ அது கடினமாகவோ இருக்கவே இருக்கும் இல்லையா? அந்த மாதிரி கடினமான விஷபத்தையும் சுலபமாக அனுபவம் செய்கிறார்கள் என்றால், அது தியாகமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஸ்தூலமாகவோ ஒரு பழக்க வழக்கம் நடைமுறையில் இருக்கிறது ஆனால் கடினத்தை கடினமாக அனுபவம் செய்வதில்லை. என்பது தான் அதனுடைய கருத்தாகும். ஒருவேளை கொஞ்சமாவது கடினத்தின் அடையாளம் கண்கள் மூலம், வாய் மூலம் மற்றும் முகத்தின் மூலம்

வெளிப்படுத்துகிறார்கள் என்றால் அவர்களை தோல்வியுற்றவர் என்று ஆக்கி விடுகிறார்கள். தேவதை தர்மத்திற்குப் பின்னால் வந்த இவர்களும் உங்களுடைய படைப்பு தான். அப்படி உங்களுடைய படைப்பில் கூட இந்தப் பழக்க வழக்கம் வந்து கொண்டிருக்கிறது, அது ஸ்தூலமானது, ஆனால் இங்கு எண்ணத்தில், எந்தவொரு சூழ்நிலையில் அல்லது எந்தவொரு பிரச்சனையில் கடினம் அனுபவம் ஆகிறது, சுலபமாக இல்லை என்றால் தோல்வி அடைந்து விடுவார். கடினம் என்று புரிந்து கொள்ளும் காரணத்தினால் அந்த நேரம் என்ன செய்கிறார்கள்? எப்படி 'எவ்வளவு தூரமாக இருப்பீர்களோ, அவ்வளவு குஷியாக இருப்பீர்கள் என்ற பழமொழி இருக்கிறது என்றால் அதே நேரம் தன்னை அந்த விஷயத்திலிருந்து தூரமாக்கி விடுகிறார்கள். அதிலிருந்து ஒதுங்கி விடுகிறார்கள். இதையும் எந்த மார்க்கத்தின் அடையாளம் என்று கூறுவோம். துறவர மார்க்கத்தைச் சேர்ந்தவர்களுடையது. அந்த நேரத்திற்காக ஆர்வமற்றவர்கள் ஆகி விடுகிறார்கள். நீங்களோ துறவர மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை தான் இல்லையா? இல்லற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒருபொழுதும் ஒதுங்கி விட மாட்டார்கள். எப்படி தாமரை மலர் துறவர மார்க்கத்தைச் சேர்ந்தது அல்ல, முற்றிலுமே இல்லற மார்க்கத்தின் அடையாளம் ஆகும். இந்த விதமாக இல்லற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒருபொழுதும் விலகி தூரமாக ஓட மாட்டார்கள் ஆனால் கூட்டாக வந்தும், நெருக்கத்தில் வந்தும் கடினத்தை சுலடமாக ஆக்குவார்கள். இது தான் விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுடைய அறிமுகம் ஆகும்.

எப்பொழுது பெயர் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று இருக்கிறதோ பின்பு ரூபம் என்னவாக இருக்கிறது -மஹாவீரர்களினுடையதாக இருக்கிறதா? அனைத்து ஆயுதங்கள் ஏந்திய சக்திகள் மற்றும் மஹாவீரர்கள் இது தான் ரூபம். மேலும் குணமாக, தந்தையிடமிருந்து என்னென்ன அனைத்து சக்திகளை பிராப்தி செய்கிறார்கள் அவற்றை குணரூபத்தில் நடைமுறையில் கொண்டு வருவது அதாவது சகித்துக் கொள்வதற்கு, உள்ளடக்குவதற்கு, எதிர்நோக்குவதற்கு, சகயோகம் கொடுப்பதற்கான சக்தி ஆகியவை. என்னென்ன சக்திகள் இருக்கின்றனவோ அவற்றை நடைமுறை காரியத்தில் கொண்டு வருவது இது தான் குணமாகும். மேலும் காரியமாக என்ன இருக்கிறது? கடினத்தை சுலடமாக்குவது, பரிவர்த்தனை செய்வது. விலகி

ஓடுபவராக அல்ல. நிவாச ஸ்தானம் எது? அந்த ஸ்தானத்தில் நிலைத்திருப்பதினால் பிராமண நிலையின் காரியத்தை மிக நல்ல முறையில் செய்ய முடியும், அந்த ஸ்தானம் எது? அது தான் பிராமணர்களினுடைய முக்கிய ஸ்தானமான புத்தியை ஸ்திரமாக வைப்பது. அந்த ஸ்தானத்தில் பின்பு நிரந்தரமாக இருக்கவும் முடிய வேண்டும். காரியங்களை செய்து கொண்டு, அங்கிங்கு செல்லும் பொழுதும் அந்த நிலையில் இருக்க முடிய வேண்டும். அனைத்து விஷயங்களின் சாரம் அதில் வந்து விட வேண்டும். விஸ்தாரத்திலோ இந்த அனைத்து விஷயங்ளும் வந்து விடும் ஆனால் விஸ்தாரத்தை ஒரு வார்த்தையில் உள்ளடக்கிக் கொள்ளுங்கள். நிவாச ஸ்தானம் என்றால் எப்பொழுதும் அந்த நிலையில் நிலைத்திருப்பதற்கான என்ன ஸ்தானம் இருக்கிறதோ அது தான் சாட்சியாக பார்க்கும் நிலை. எப்பொழுது இந்த சாட்சியாக இருக்கும் பார்வையாளரின் நிலை இருப்பதில்லையோ அப்பொழுது இந்த அனைத்து விஷயங்களின் மறந்த நிலை வந்து விடுகிறது. டிராமாவின் கிளை மற்றும் டிராமாவின் தண்டவாளத்தில் ஒவ்வொரு காரியம் மற்றும் எண்ணம் செல்வதற்காக, இந்த சாட்சியாகப் பார்க்கும் நிலை எப்பொழுதும் தேவையாக இருக்கிறது. சிறிது நேரத்திற்காக பார்வையாளராக ஆகிறார்கள். பிறகு எனது என்பதில் மாட்டிக் கொள்கிறார்கள். இந்த நிலையிலிருந்து கீழே விழுவதற்கான முக்கிய காரணம் எனது அதாவது தேக அபிமானம். தேக அபிமானத்தையோ புரிந்து கொண்டீர்கள் ஆனால் இப்பொழுது தேக அபிமானம்

ராயல் ரூபத்தில் மாறிவிட்டது. தேக அபிமானமோ பொதுவான வெளிப்படையான ரூபம். அதிலிருந்து தன்னை அகற்றுவதற்கான முயற்சியும் செய்கிறீர்கள் ஆனால் எந்த தேக அபிமானம் ராயல் ரூபத்தில் மாறி விட்டதோ, அது சில இடங்களில் நினைவு மறந்த நிலையில் கொண்டு வருகிறது. அந்த அபிமானத்தின் அடையாளம் என்ன? அதனுடைய அஸ்திவாரம் தேக அபிமானமே தான் ஆனால் ரூபம் ராயலானது. எந்த நேரம் இந்த ராயல் ரூடம் வருகிறதோ அந்த நேரத்தின் அடையாளமாக என்ன இருக்கும்? எந்த விதமான அபிமானமும் தன்னை மற்றும் மற்றவர்களை அவசியம் அவமானம் செய்யும். மற்றவர்களின் விஷயங்களுக்கு மரியாதை கொடுக்காதது, அவர்களுடைய பேச்சைத் துண்டிப்பது, இதுவும் ஒரு ராயல் ரூபத்தின்

அபிமானம் ஆகும். ஏதாவது விஷயத்தில், இந்த விஷயத்தை விட இந்த விஷயம் உயர்ந்தது மற்றும் சரியானது என்று நினைக்கிறார்கள் ஆனால் யாருடைய கருத்தையும் துண்டித்து தன்னுடைய விஷயத்தைத் திணிக்கக்கூடாது. யார் இப்படி துண்டிக்கிறார்களோ அவர்களுக்கு அபிமானம் வருகிறது. எனவே சிறியவரானாலும், பெரியவரானாலும், மகாரதியாக (முதல் நிலையில் முன்னேறிச் செல்பவர்) இருந்தாலும், அவர் எதிரில் யாராவது குதிரை சவாரியும் (இரண்டாம் நிலையில் இருப்பவர்) தன்னுடைய தகுதிக்கு ஏற்ற மாதிரி, சக்திக்கு ஏற்ற மாதிரி தன்னுடைய கருத்தை வைக்கிறார் என்றால், அதற்கும் மரியாதை அவசியம் கொடுக்க வேண்டும். யாருடைய விஷயத்திற்காவது மரியாதை கொடுப்பது என்றால் அவருக்கு மரியாதை கொடுப்பது ஆகும். அந்த மாதிரி மரியாதை கொடுப்பவர் தான் உலகின் அதிபதியாக முடியும். மேலும் அனைவரிடமிருந்து மரியாதை பெறுவதற்கான அதிகாரி ஆகிறார்கள். எனவே தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். ஏனென்றால், எந்த நேரம், யாராவது ஏதாவது கருத்து கூறும்போது அதுதான் யதார்த்தமானது என்று நினைத்துக் கொள்கிறார்கள் என்றால், அந்த நேரம் அவருக்கு சிறிதளவு அவமானம் கூட அதிகமாக அனுபவம் ஆகும். ஒரு வார்த்தை கூட அம்பு மாதிரி அனுபவம் ஆகிறது. எனவே ஒவ்வொருவரின் கருத்திற்கு மரியாதை கொடுத்துக் கொண்டே இது எப்படி முடியும், இதுவோ நடக்கவே முடியாதது என்று அந்த மாதிரியான வார்த்தைகள் வெளிவர வேண்டாம். ஆம், மிக நன்றாக இருக்கிறது, இதன் மேல் யோசனை செய்வோம் என்று அந்த மாதிரி கூறுவதினால் என்னவாகும்? நடைமுறையிலோ அவருக்கு என்ன தெரியுமோ அதைத் தான் சொல்வார் ஆனால் சிறியவர்களை அன்பு மற்றும் மரியாதை யினால் தன்னுடைய சகயோகியாக ஆக்க வேண்டும். இது தான் மரியாதை கொடுப்பது மற்றும் மரியாதையைப் பெறுவது. அந்த மாதிரி பிராமண ஜென்மத்தின் எப்பொழுதும் உயர்ந்த நிலையில் இருக்கக்கூடியவர்களுக்கு எந்த விஷயமும் கடினமாக அனுபவம் ஆகாது. மற்றபடி அறிமுகத்தில் இன்னும் என்ன இருக்கிறது? பிராமண ஜென்மத்தின் காலம், இது எப்பொழுதுமே நினைவில் இருக்கட்டும். அப்படி "நாம் ஒவ்வொரு சேவை மற்றும் ஒவ்வொரு எண்ணத்தில் பல கோடி மடங்கு வருமானம் செய்வதற்காக பொறுப்பில் இருப்பவர்கள்" அந்த மாதிரி உயர்ந்த காலமாகும். இந்த அனைத்து அறிமுகமும்

ஒருவேளை எப்பொழுதும் நினைவில் இருக்கிறது என்றால் சுலபமாகவே சம்பூர்ணம் ஆகி விடுவீர்கள்.

அப்படி எப்பொழுதும் அந்த மாதிரி தன்னுடைய ஆன்மீக ஜென்மத்தின் அறிமுகத்தை நடைமுறையில் நடந்து கொண்டிருப்பவர்களுக்கு எப்பொழுதும் சுவமானத்தில் நிலைத்திருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, மேலும் எப்பொழுதும் சேவையின் அன்பு மற்றும் சகயோகத்தில் முழுமையாக ஈடுபட்டிருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: துடித்துக் கொண்டிருக்கும் ஒன்றுமில்லாத, (யாசிக்கும்) தாகம் நிறைந்த ஆத்மாக்களின் தாகத்தைத் தணிக்கக்கூடிய அனைத்து பொக்கிஷங்களினால் நிறைந்தவர் ஆகுக!

எப்படி அலைகளில் அடித்துக் கொண்டும் மற்றும் மூழ்கிக் கொண்டும் இருக்கும் ஆத்மா ஒரு சின்ன மரத்துண்டின் ஆதாரத்தைத் தேடுகிறது, அந்த மாதிரி துக்கத்தின் ஒரு அலை வரட்டும், பின்பு பாருங்கள் அனேக சுகம், சாந்தியின் பிச்சைக்கார ஆத்மாக்கள் உங்கள் எதிரில் வருவார்கள். அந்த மாதிரி தாகமுள்ள ஆத்மாக்களின் தாகத்தைத் தீர்க்கக்கூடிய அதீந்திரிய சுகம் மற்றும் அனைத்து சக்திகளினால், அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவராக 3தன்னை ஆக்குங்கள். தன்னுடைய நிலையும் எப்பொழுதும் ஒரே மாதிரி நிலைத்திருக்கும் மாதிரியும் மேலும் மற்ற ஆத்மாக்களையும் நிரம்பியவராக ஆக்க முடியும் அளவிற்கும் அனைத்து பொக்கிஷங்களும் அந்த அளவே சேமிப்பாகி இருக்கட்டும்.

சுலோகன்: நன்மையின் பாவனை வைத்து அறிவுரை கூறினீர்கள் என்றால் அறிவுரைகள் உள்ளத்தில் பதியும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

# 11.04.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## மாற்றம்!

நடைமுறையில் மூர்த்தியாக்கக்கூடிய. சர்வகுண சம்பன்னமான பாபா கூறுகின்றார்: நிகழ்கால நேரத்தை மாற்றத்திற்கான நேரம் என்று கூறுகின்றோம். இந்த நேரத்தின் அனுசாரமாக யார் நிமித்தமாகி இருக்கின்றார்களோ, அவர்களிடம் கூட மாற்றம் அவசியம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. எனவேதான் இதன் ஆதாரத்தில் நேரமும் மாற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றது. சமயம் மாற்றத்திற்கான ஆதாரங்களில் ஒன்றாகும். மாற்றம் செய்பவர்களின் மீது அதாவது யார் மாற்றத்திற்கு நிமித்தமானவர்களோ அவர்கள் தனக்குள் அப்படி அனுபவம் செய்வார்கள் ஒவ்வொரு நேரமும் மனம், சொல். செயலில் அனைத்து ரூபத்திலும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. முன்னேறும் கலைக்கான மாற்றம் என்று இதுதான் கூறப்படுகின்றது. மாற்றம் என்பது துவாபரயுகத்திலும் ஏற்படுகின்றது ஆனால் அது கீழே விழுவதற்கான மாற்றம். இப்பொழுது சங்கம யுகத்தில் தான் முன்னேறும் கலைக்கான மாற்றம். நேரத்தின் அனுசாரமாக முன்னேறும் கலைக்கான மாற்றம், எனவே யார் நிமித்தமாகியிருக்கக்கூடிய ஆதார மூர்த்திகளோ அவர்களிடமும் மாற்றம் அவசியம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. மாற்றத்தின் வேகத்தை (Speed) எப்பொழுதாவது சோதனை (Check) செய்கின்றீர்களா? மாற்றம் என்பது ஒரு வாரத்திலும் ஏற்படலாம். ஒருமணி நேரத்திலும், ஒரு நாளிலும் ஏற்படலாம். மொத்தமாக மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது ஆனால் நிகழ்கால சமயத்தின் அடிப்படையில், மாற்றத்தின் நிலை எவ்வாறு இருக்க வேண்டுமோ அதனை அனுபவம் செய்கின்றீர்களா? யார் நிமித்தமாகியிருக்கக் கூடிய மகாவீரரோ, ஒருவேளை அவர்களிடம் ஏதேனும் மாற்றம் ஏற்பட நேரம் ஆகிறதென்றால், கடைசி மாற்றம் நிகழ்வதிலும் நிச்சயம் நேரம் எடுக்கும்.

நிமித்தமாகியிருக்கக்கூடிய மகாவீரர்கள் தான் நேரத்தைக் காட்டக்கூடிய கடிகாரம்! எப்படி கடிகாரம் நேரத்தைத் தெளிவாகக் காட்டுகின்றதோ அதுபோல நிமித்தமாகியிருக்க கூடியவர்களும் கடிகாரத்தைப் போலத்தான்! இந்த கடிகாரத்தில் பாருங்கள் நேரம் அருகாமையில் இருக்கின்றதா? அல்லது தூரத்தில் இருக்கின்றதா? நீங்களே கடிகாரம்! மேலும் தானே சாட்சியாக இருந்து நேரத்தை சோதனை செய்யக்கூடியவர்கள். எனவே மாற்றத்திற்கான வேகம் தீவிரமாக (Fast) உள்ளதா? கடைசி தேர்வு இது தான் உலகிற்கான கடைசி பரீட்சை. இப்பொழுது சிறிது மாற்றம் ஏற்படுகின்றது என்றால் உலகின் நிலையிலும் சிறிது மாற்றம் ஏற்படுகின்றது. இதுதான் சம்பூர்ண மாற்றத்தின் நிலை என்பதைப் புரிந்து கொள்வதற்கான முழுமையான மாற்றத்தின் அடையாளம் என்ன?

இப்பொழுது மாற்றத்தின் நிலை, சம்பூர்ண மாற்றத்தின் அடையாளம், வருடங்களைக் கணக்கிட்டு மீதம் எவ்வளவு நேரம் உள்ளதோ அது! மேலும் அனைவருடைய வாயிலிருந்தும் வெளிப்பட வேண்டும், இவர்களிடம் முழுமையான மாற்றம் வந்து விட்டது. இதுவே சம்பூர்ண மாற்றத்தின் அடையாளமாகும். தன்னுடைய மாற்றத்திற்கான விஷயங்களைக் கேட்கின்றீர்கள், சதா காலத்திற்கு இயல்பான (Natural) ரூபத்தில் தென்பட வேண்டும். அது எப்படி ஏற்படும்? இப்பொழுது இயற்கையான, ரூபத்தில் இல்லை. இப்பொழுது முயற்சி செய்வதால், சற்று நேரம் வெளிப்படுகின்றது ஆனால் இயற்கையாக இருந்தால் சதா காலத்திற்கும் இருக்கும். சம்பூர்ண மாற்றத்தின் அடையாளம் இதுதான். ஒவ்வொருவரின் பலஹீனமான மூல சமஸ்காரம் எது என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருப்பீர்கள். ஒருசில நேரம் சில விஷயங்களில் முழுமையாக வெற்றி கிடைப்பதில்லை, குறைவான சதவீதத்தில் (Percentage) தேர்ச்சி அடைகின்றோம், அதற்கு மூல காரணம் இதுதான். ஒவ்வொரு விஷயத்திலும். ஒவ்வொருவருக்கும் விஷேசமாக (பலவீன) மூல சமஸ்காரம் உள்ளது, அதனை நீங்கள் 'சுபாவம்' என்று கூறுகின்றீர்கள். இவர்களிடம் இந்த சம்ஸ்காரம் இருந்தது, இப்பொழுது இல்லை என்று பிறர் கூற வேண்டும். ஒருவருக்கொருவர் தனது சம்ஸ்காரத்தைப் பற்றி உங்களுக்குள் வர்ணனை செய்கின்றீர்கள் அல்லவா? இது முயற்சிக்கான நல்ல விஷயம்தான் ஆனால் இந்த சமஸ்காரம் நாளுக்கு நாள் முயற்சியில்

முன்னேறிச் செல்வதில் தடைகளை ஏற்படுத்துகின்றது. இந்த மூல சமஸ்காரத்தில் எதுவரையில் மாற்றம் ஏற்படவில்லையோ, அதுவரையில் முழுமையான உலக மாற்றம் ஏற்பட முடியாது. அனைவருக்குள்ளும் சம்பூர்ண மாற்றம் என்பது அடுத்த விஷயம். அது வரிசைப்படித்தான் ஏற்படுகின்றது ஆனால் மாற்றத்திற்கு யார் ஆதார மூர்த்திகளோ யார் மகாவீரர், மகாரதி என்று அழைக்கப்படுகின்றனரோ அவர்களிடம் இந்த மாற்றம் மிகவும் அவசியமானது.

இவர்களிடம் இந்த சமஸ்காரம் ஆரம்பத்திலிருந்தே இருக்கின்றது என்று அவர்களைப் பார்த்து யாரும் கூறி விடக்கூடாது. இப்பொழுது (குறைந்த) சதவீதத்தில் தென்படுகின்றது என்று அதனை வர்ணனை செய்யக்கூடாது, வெளியில் தென்படக்கூடாது, இதுதான் 'சம்பூர்ண பரிவர்த்தனை' என்றழைக்கப்படுகிறது. சிறிதளவு குறை இருந்தாலும் இதனை சம்பூர்ண பரிவர்த்தனை என்று கூற முடியாது. சாதாரண மாற்றத்தைப் பற்றி மகாரதிகளிடம் யாராவது கேட்பார்களா? யார் உலக மாற்றத்திற்கு நிமித்தமானவர்களோ அவர்களுடைய மாற்றம் மற்றவர்களுடையதைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அதனை சோதனை (Checking) செய்யவும். இரவுக்கும் பகலுக்கும் உள்ள வேறுபாடு இருக்க வேண்டும். இவர்களைத் தான் அதிர்ஷ்ட நட்சத்திரம் என்று புகழ் பாடப்படுகின்றது. ஞான சூரியன், ஞான சந்திரன் அவரவர் இடத்தில் இருக்கின்றார்கள் ஆனால் முழுமையான (சம்பூர்ண) மாற்றம் ஆனவர்களுக்குத்தான் அதிர்ஷ்ட நட்சத்திரம் என்ற பெயர் கூறப்படுகின்றது. நிகழ்காலத்தில் சாகார ரூபத்தில் அனைவரும் உங்களைப் பின்பற்றுகின்றார்கள் அல்லவா? புத்தி யோகத்தின் மூலம் சக்தியடைவது, புத்தி யோகத்தின் மூலம் உயர்ந்த கர்மம் செய்வது, இதற்குத் தாய் தந்தையே நிமித்தமானவர்கள் ஆனால் சாகார ரூபத்தில் இப்பொழுது யாரைப் பின்பற்றுவார்கள்? யார் நிமித்தமாக இருக்கின்றார்களோ அவர்களைத்தான்! எனவே மாற்றத்திற்கான சிறந்த உதாரணமாகுங்கள்! வருடத்தில் ஒன்றிரண்டு முறை அப்படி குழு சேருங்கள். ஒவ்வொரு சமயத்திலும் குழுவில் தன்னுடைய முன்னேற்றத்திற்கான மாற்றம் இருக்க வேண்டும். எப்படி கடந்து சென்ற வருடங்களில் அன்பு, ஒத்துழைப்பு, இதில் முன்னேற்றம் மற்றும் மாற்றம் இருந்ததோ அதுபோன்று இப்பொழுது சம்பூர்ண நிலை

வெளிப்படையாகத் தென்பட வேண்டும். இந்த ஆண்டு இந்த மாற்றம் விஷேசமாக இருப்பது மிக அவசியமாகும்.

தற்பொழுது சிறிது சிறிதாக பெயரளவிற்கு அணு குண்டு போட ஆரம்பித்துள்ளார்கள் அல்லவா? தர்ம யுத்த நிலை வர வேண்டுமல்லவா? நீங்கள் ஒரே ஒரு விஷயத்தில் அவர்களை தோல்வியடையச் செய்ய முடியும். தர்மம் அதாவது தாரணை! அவர்களிடம் நடைமுறை வாழ்வில் இல்லை, பரமாத்மா ஞானத்தின் நடைமுறை உதாரணம் (Proof) உங்களுடைய நடைமுறை வாழ்க்கை (Practical life). ஒரு பக்கம் தர்மயுத்தம், மற்றொரு புறம் தாரணை மூர்த்திகளின் நிலை. இந்த இரண்டும் ஒன்று சேரவில்லையென்றால், உங்களுடைய நடைமுறை வாழ்க்கைக்கான சவால் (Challenge) அது பிரத்தியட்ச ரூபத்தில் தென்படாது. எந்தளவு முன்னேறிச் செல்கின்றீர்களோ, அந்தளவு இந்த விஷயத்தில் கவனம் (Attention) வைக்க வேண்டும். நடைமுறை ஞானம் என்றால், தாரணை மூர்த்தி, ஞானமூர்த்தி, குணமூர்த்தி ஆவது! மூர்த்தியின் (நிறைந்த நிலை) மூலம் ஞானம் மற்றும் குணம் வெளிப்படையாகத் தென்பட வேண்டும். தற்சமயம் விவாதம் (Discuss) செய்வதன் மூலமாக (பிறருக்கு) தன்னுடைய நிறைவான நிலையை வெளிப்படுத்த முடியாது ஆனால் ' மூரத்' (நிறைந்த நிலை) மூலமாக அவர்களுக்கு ஒரு வினாடி அமைதியை ஏற்படுத்த முடியும். ஒருபுறம் சொற்பொழிவு செய்கின்றீர்கள். மற்றொருபுறம் நடைமுறை மூர்த்தியாகவும் கூட இருங்கள். அப்பொழுதுதான் தர்மயுத்தத்தில் வெற்றியடைய (Successful) முடியும். எனவே எப்படி சேவைக்கான நிகழ்ச்சிகளை (Programme) உருவாக்குகின்றீர்களோ. கூடவே தன்னுடைய முன்னேற்ற (Progress) நிலையை அடையும் நிகழ்ச்சியையும் செய்யுங்கள். இது மிக அவசியமானது. தன்னுடைய முயற்சியின் முன்னேற்றம், தனது முயற்சியின் விதவிதமான அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சிகளையும் நடத்துங்கள். இரண்டிலும் சமநிலை (Balance) இருக்க வேண்டும். நல்லது.

இந்த முரளியின் சாரம்:

1 பாபா கூறுகின்றார்: நீங்கள் குழந்தைகள் தான் நேரத்தை காட்டும் கடிகாரம், தன்னுடைய மாற்றத்தின் வேகம் எவ்வாறு உள்ளது என்பதை

சோதனை செய்யவும். எந்த சமஸ்காரம் தான் சம்பூர்ண மாற்றத்தின் அடையாளமாகும். இவர்கள் முற்றிலும் மாறிவிட்டார்கள் என்ற சொல் அனைவருடைய வாயிலிருந்தும் வர வேண்டும், அப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

2 இப்பொழுது (நீங்கள்) தர்மயுத்தத்தினுடை வர வேண்டும். அவர்களிடம் தர்மம் மற்றும் தாரணை நடைமுறையில் இல்லை, இந்த ஒரு விஷயத்தில் தான் நீங்கள் அவர்களை தோல்வியடையச் செய்ய முடியும். மூர்த்திகளாகிய உங்களிடம் ஞானம், குணம் தென்பட வேண்டும். டிஸ்கஸ் (விவாதம்) செய்வதன் மூலமாக இல்லை. தன்னுடைய மூர்த்தியின் (நிறைந்த நிலை) மூலமாக அவர்களை அமைதிப்படுத்த முடியும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## **13.04.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# பக்தர்கள் மற்றும் பாவனைக்கான பலன்!

எப்படி பக்தர்களுக்கு பாவனைக்கான பலன் கொடுக்கிறோம், அதே போல் ஏதாவது ஆத்மா பாவனை வைத்து, துடித்துக் கொண்டு, உயிர் பிச்சை கொடுங்கள் மற்றும் என்னுடைய மனதிற்கு அமைதி கொடுங்கள் என்று உங்களிடம் வந்தால் நீங்கள் அவருடைய பாவனைக்கான பலனை கொடுக்க முடியுமா? அவர்களுக்கு தன்னுடைய முயற்சியினால் ஏதாவது கொஞ்சம் பிராப்தி ஆகிறது என்றால் அதுவோ அவருடைய தனது முயற்சியாக ஆனது மற்றும் அதனுடைய பலனாக ஆனது ஆனால் உங்களுக்கு யாராவது ஒருவேளை நான் பலமற்றவனாக இருக்கிறேன், என்னுள் சக்தி இல்லை என்று கூறினால் அந்த மாதிரியானவருக்கு நீங்கள் பாவனைக்கான பலனை தந்தை மூலமாகக் கொடுக்க முடியும், தந்தையையோ பின்பு தான் தெரிந்து கொள்வார்கள். முதலில் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்க வேண்டும் ஆனால் ஒருவேளை பாவனையின் பலன் கிடைக்க முடியும் என்றால், அப்பொழுது அவருடைய புத்தியின் யோகாவை டைரக்ஷன்படி ஏற்படுத்த முடியும். அந்த மாதிரி பாவனை உடைய பக்தர்கள் கடைசியில் அதிகமாக வருவார்கள். ஒன்று முயற்சி செய்து பதவி அடைபவர்கள், அவர்களோ வந்து கொண்டிருக்கிறார்கள், ஆனால் கடைசியில் முயற்சி செய்வதற்கு நேரமும் இருக்காது மற்றும் ஆத்மாக்களிடமும் சக்தி இருக்காது. அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு பின்பு தன்னுடைய சகயோகத்தினால் மற்றும் தன்னுடைய மகாதானம் கொடுப்பதற்கான காரியத்தின் ஆதாரத்தினால் அவருடைய பாவனைக்கான பலன் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆக வேண்டியதாக இருக்கும். அவர்களோ சக்திகளின் மூலமாக எனக்கு இந்த வரதானம் கிடைத்தது என்று தான் நினைப்பார்கள். பார்வையினால் நன்மை செய்வது என்ற மகிமை இருக்கிறது அதை அனுபவம் செய்வார்கள்.

மிக சக்திசாலியான (பவர்ஃபுல்) லைட் இருக்கிறது என்றால் சுவிட்ச் ஆன் செய்தவுடன் எங்கெல்லாம் அந்த லைட்டின் ஒளியை பரப்புகிறீர்களோ அந்த இடத்தின் கிருமிகள் ஒரு நொடியில் பஸ்பம் ஆகி விடுகின்றன. இதே விதத்தில் எப்பொழுது ஆத்மாக்கள் நீங்கள் உங்களுடைய சம்பூர்ண சக்திசாலியான நிலையில் இருப்பீர்கள் என்றால் யாராவது வந்தால் மேலும் ஒரு நொடியில் சுவிட்ச் ஆன் செய்தீர்கள் அதாவது நல்ல எண்ணம் வைத்தீர்கள் மற்றும் சுபபாவனை வைத்தீர்கள் அதாவது இந்த ஆத்மாவிற்கும் நன்மை ஏற்படட்டும் -இது தான் எண்ணம் என்ற சுவிட்ச், இதை ஆன் செய்வது என்றால் எண்ணத்தை உருவாக்குவதினால் உடனேயே அவருடைய பாவனை நிறைவேறி விடும், அவர் மிகுந்த குதூகலம் அடைந்து விடுவார். ஏனென்றால் பின்னால் வரும் ஆத்மாக்கள் கொஞ்சத்திலேயே மிகவும் திருப்தி அடைந்து விடுவார்கள். அனைத்து பிராப்திகளும் ஏற்பட்டது என்று நினைப்பார்கள். ஏனென்றால், அவர்களுடையதே இரண்டு சுண்டல் கடலைகளை பெறுவதற்கான பாகம் ஆகும். அவர்களுடைய கணக்குப்படி அதுவே அனைத்துமாக ஆகி விடும். அப்படி அனைத்து ஆத்மாக்களுக்கு அவர்களுடைய பாவனையின் பலன் ஏற்படட்டும் மேலும் யாரும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விட வேண்டாம். இதற்காக இவ்வளவு சக்திசாலியான நிலை அதாவது அனைத்து சக்திகளை இப்பொழுதிலிருந்தே உங்களில் சேமித்தீர்கள் என்றால் தான் இந்த சேமிக்கப்பட்ட சக்திகளினால் சிலருக்கு உள்ளடக்கும் சக்தி, சிலருக்கு சகித்துக் கொள்ளும் சக்தி கொடுக்க முடியும். அதாவது யாருக்கு என்ன அவசியமாக இருக்கிறதோ அதையே அவர்களுக்குக் கொடுக்க முடியும்.

எப்படி டாக்டரிடம் எப்படிப்பட்ட நோயாளி வருகிறாரோ, அதன் பிரகாரம் அவருக்கு மருந்து கொடுக்கிறார் மற்றும் ஆரோக்கியமானவராக ஆக்குகிறார். இதே விதமாக உங்களுக்கு அனைத்து சக்திகளையும் உங்களிடம் சேமிப்பதற்காக இப்பொழுதிலிருந்தே முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கும். ஏனென்றால், யாருக்கு உலக மகாராஜாவாக ஆக வேண்டுமோ அவருடைய முயற்சி தனக்காக மட்டும் இருக்காது. தன்னுடைய வாழ்க்கையில் வரும் தடை மற்றும் சோதனைகளைக் கடந்து செல்வதோ மிகவும் பொதுவான விஷயம் ஆனால் யார் உலக மகாராஜா ஆகுபவரோ அவரிடம் இப்பொழுதிலிருந்தே உலகத்திற்காக பயன்படுத்த முடியும் அளவிற்கு கையிருப்பு நிரம்பியிருக்கும். அப்படி

இந்த விதமாக யார் விசேஷ ஆத்மாக்கள் பொறுப்பாளராக இருக்கிறார்களோ அவர்களிலும் அனைத்து சக்திகளின் கையிருப்பு உள்ளுக்குள்ளே அனுபவம் ஆகட்டும். அப்பொழுது தான் சம்பூர்ண நிலை மற்றும் பிரத்யக்ஷதாவின் நேரம் இப்பொழுது அருகில் இருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம். அந்த நேரம் எந்த நினைவும் இருக்காது. மற்றவர்களுக்காவே தான் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணமும் இருக்கும். இப்பொழுதோ தன்னுடைய முயற்சிக்காக மற்றும் தன்னுடைய உடலுக்காக நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, சக்தியும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, தன்னுடைய முயற்சிக்காக மனதையும் ஈடுபடுத்த வேண்டியதாக இருக்கிறது. பின்பு இந்த நிலை முடிவடைந்து விடும். பிறகு இந்த முயற்சி மாறி ஒருநொடி மற்றும் ஒரு எண்ணம் கூட தனக்காகச் செல்ல வேண்டாம். மாறாக உலக நன்மைக்காக மட்டும் இருக்கட்டும் என்று அப்படி அனுபவம் ஆகும். அந்த மாதிரியான நிலையை சம்பூர்ண அதாவது சம்பன்ன நிலை என்று கூறப்படும். ஒருவேளை சம்பன்னம் இல்லை என்றால் சம்பூர்ணமும் இல்லை. ஏனென்றால் சம்பன்ன நிலை தான் சம்பூர்ண நிலை ஆகும். அப்படி தன்னுடைய முயற்சியை இன்னும் நுண்ணியமாக ஆக்கிக் கொண்டே செல்ல வேண்டும். விசேஷ ஆத்மாக்களின் முயற்சியும் அவசியம் வேறுபட்டதாக இருக்கும். அப்படி முயற்சி செய்வதில் அந்த மாதிரி மாற்றம் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கிறதா என்ன? இப்பொழுதோ வள்ளலின் குழந்தைகள் வள்ளல் தன்மையின் நிலையில் வர வேண்டும். கொடுப்பது தான் அவர்களுக்கு எடுப்பதாக ஆக வேண்டும். அப்படி இப்பொழுது நேரத்தின் அருகாமையின் கூடவே சம்பன்ன நிலையும் தேவையாக இருக்கிறது. ஆத்மாக்கள் உங்களுடைய சம்பன்ன நிலை தான் சம்பூர்ண நிலையை அருகில் கொண்டு வரும். எனவே நீங்களும் எப்படி முதலில் தன்னுடைய முயற்சிக்காக நேரம் சென்றது. இப்பொழுது நாளாக நாளாக மற்றவர்களுக்காக அதிகமாகச் செல்கிறதா? என்று தன்னை சோதனை செய்ய வேண்டும். தன்னுடைய கான்ஸியஸ் (உணர்வு), அபிமானம், நாடகப்படி இயற்கையாகவே முடிவடைந்து கொண்டே செல்லும். சூழ்நிலைகளின்படி கூட அந்த மாதிரி ஆகிக் கொண்டே இருக்கும். இதன் மூலம் இயல்பாகவே சோல் கான்ஸியஸ் (ஆத்ம உணர்வு) இருக்கும். காரியத்தில் ஈடுபடுவது என்றால் சோல் கான்ஸியஸ் ஆவது. சோல் கான்ஸியஸ் இன்றி செய்யும் காரியம்

வெற்றி அடையாது, அப்படி நிரந்தரமாக ஆத்ம அபிமானி ஆவதற்கான நிலை இயல்பாகவே ஆகி விடும். உலகிற்கு நன்மை செய்பவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது ஆத்மாவிற்கு நன்மை செய்பவராக ஆகியிருக்கிறீர்களா? தன்னுடைய கணக்கு வழக்கை முடிப்பதில் பிஸியாக இருக்கிறீர்களா அல்லது உலகின் அனைத்து ஆத்மாக்களின் கர்ம பந்தனத்தின் கணக்கு வழக்கை முடிக்கச் செய்விப்பதில் பிஸியாக இருக்கிறீர்களா? எதில் பிஸியாக இருக்கிறீர்கள்? லட்சியம் வைத்திருக்கிறீர்கள் என்றால் எப்பொழுதும் உலக நன்மை காரியத்திற்காக உடல், மனம், பொருள் அனைத்தையும் ஈடுபடுத்துங்கள். நல்லது. ஓம் சாந்தி

வரதானம்: சக்திசாலியான நிலை மூலமாக படைப்பின் அனைத்து ஈர்ப்புகளிலிருந்து விலகியிருக்கக்கூடிய மாஸ்டர் படைப்பவர் ஆகுக!

எப்பொழுது மாஸ்டர் படைப்பவர், மாஸ்டர் ஞானம் நிறைந்தவரின் சக்திசாலியான நிலை மற்றும் போதையில் நிலைத்திருப்பீர்களோ அப்பொழுது படைப்பின் அனைத்து ஈர்ப்புகளிலிருந்து விலகியிருக்க முடியும். ஏனென்றால், இப்பொழுது படைப்பு இன்னும் விதவிதமான வண்ணங்கள். ரூபங்களைப் படைக்கும். எனவே இப்பொழுது குழந்தைப் பருவத்தின் தவறுகள், அலட்சியத்தின் தவறுகள், சோம்பேறித்தனத்தின் தவறுகள், அக்கறையற்ற நிலையின் தவறுகள் என்ன என்ன இன்னும் மீதமிருக்கிறதோ அவற்றை மறந்து தன்னுடைய சக்திசாலியான சக்தி சொரூபம், ஆயுதங்கள் ஏந்திய சொரூபம் எப்பொழுதும் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும் ஜோதி சொரூபத்தை பிரத்யக்ஷம் செய்யுங்கள். அப்பொழுது தான் மாஸ்டர் படைப்பவர் என்று கூறுவோம்.

சுலோகன்: மனதின் நிலையை எந்தவொரு சூழ்நிலையும் உருகச் செய்யாத அளவிற்கு அதை உறுதியாக ஆக்குங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 14.04.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# குழுவினுடைய சக்தி -ஒரே எண்ணம்!

அனைத்திலும் உயர்ந்த வழி தரக்கூடிய, சதா தவறற்றவராக ஆக்கக்கூடிய சிவபாபா கூறுகின்றார்: அனைவரும் எந்த எண்ணத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள்? அனைவருக்கும் ஒரே எண்ணம்தான் இருக்கின்றதல்லவா? எப்படி இப்பொழுது அனைவருக்கும் ஒரே எண்ணம் இருக்கின்றதோ, அப்படி ஒரே ஒரு பாபாவைச் சந்திக்க வேண்டும். அசரீரி ஆக வேண்டும் என்ற சுத்தமான எண்ணத்தில் நிலைத்து விடவும். அனைவருடைய சுத்தமான ஒரே எண்ணம் எதைத்தான் செய்ய முடியாது! யாருக்கும் வேறு எந்த ஒரு எண்ணமும் எழக் கூடாது. அனைவரும் ஒரே ஸ்திதியில் இருந்தீர்களென்றால், அந்த ஒரு வினாடி சுத்த எண்ணத்தினுடைய சக்தி என்ன அதிசயம் செய்கின்றது என்பதை சொல்லுங்கள். எனவே குழுவாக அனைவரும் ஒரே தூய்மையான எண்ணத்தில் ‘ஏக்ரஸ்' (ஒரே ஒருவரின் ரசனை) ஸ்திதியை உருவாக்கக் கூடிய பயிற்சி செய்யவும்.

எப்படி ஸ்தூலமான சேனைகள் யுத்த மைதானத்திற்குச் சென்றால் ஒரே ஒரு கட்டளையின்படி (Order), ஒரே சமயத்தில் நாலா புறமும் தங்களுடைய துப்பாக்கியினால் சுட ஆரம்பித்து விடுகின்றார்கள், ஒருவேளை ஒரே நேரத்தில் ஒரே கட்டளையில் நாலாபுறமும் முற்றுகை இடவில்லை என்றால், அவர்களால் வெற்றி பெற இயலாது. அதுபோன்று தான் ஆன்மீக சேனைகளாகிய நீங்களும் குழுவாக, ஒரே தூண்டுதலில், ஒரு வினாடியில் அனைவரும் ஏக்ரஸ் ஸ்திதியில் நிலைத்து விட்டீர்களேயானால், வெற்றிக்கான மணி ஒலித்து விடும். அனைவருக்கும் ஒரே எண்ணம் மற்றும் ஒரே சக்திசாலி நிலை (Powerful) அனுபவம் ஆகின்றதா? அல்லது தன்னை நிலைப்படுத்துவதிலேயே மூழ்கியிருக்கின்றீர்களா? என்பதை இப்பொழுது பாருங்கள். சிலர் ஸ்திதியில் நிலைத்திருக்கின்றார்கள், சிலர் தடைகளை

அகற்றுவதிலேயே மூழ்கியிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட குழுவில் வெற்றியின் மணி ஒலிக்குமா?

எப்பொழுது அனைவருடைய அனைத்து எண்ணங்களும், ஒரே எண்ணமாக இணைந்து விடுகின்றதோ அப்பொழுதுதான் வெற்றியின் முழக்கம் ஏற்படும். அந்த ஸ்திதி இருக்கின்றதா? மிகக் குறைந்த எண்ணிக்கையில் விசேஷ ஆத்மாக்கள் ஏக்ரஸ் ஸ்திதி என்ற விரல்கள் மூலமாகத்தான் இந்த கலியுகம் என்ற மலையைத் தூக்க வேண்டும் அல்லது அனைத்து ஆத்மாக்களின் மூலமாகத் தூக்க வேண்டும். சித்திரத்தில் காட்டியுள்ளார்கள், அனைவரும் ஒரு விரலினால் மலையைத் தூக்குவது போல், அதற்கான அர்த்தம் குழுவாக (கூட்டாக) ஒரே எண்ணம், ஒரே ஸ்திதியில், ஒரே வழியில் இருப்பதற்கான அடையாளமாகும். எனவே பாப்தாதா இந்த கலியுக மலையை எப்பொழுது, எப்படி தூக்கப் போகின்றீர்கள் என்று குழந்தைகளிடம் கேட்கின்றார். அதனை சொல்லிவிட்டீர்கள், ஆனால் எப்பொழுது தூக்க வேண்டும்? (எப்பொழுது கட்டளை பிறப்பிக்கின்றீர்களோ) ஏக்ரஸ் ஸ்திதியில் எவரெடியாக (Ever-ready) இருக்கின்றீர்களா? என்ன கட்டளை பிறப்பிப்பார்? ஒரு வினாடியில் அனைவரும் ஏக்ரஸ் ஸ்திதியில் நிலைத்து விடுங்கள் என்ற கட்டளையைத்தான் பிறப்பிப்பார். அப்படிப்பட்ட கட்டளையை நடைமுறையில் கொண்டுவர அனைவரும் தயாராகி விட்டீர்களா? அந்த ஒரு வினாடி சதா காலத்திற்கானதாக இருக்கும். ஒரு வினாடியில் நிலைத்து விட்டு பிறகு கீழே வந்து விடலாம் என்பது போன்று கிடையாது.

எப்படி மற்ற ஆத்மாக்களுக்கு ஞானத்தின் ஒளியைக் கொடுப்பதற்காக எப்பொழுதும் சுபபாவனை மற்றும் கல்யாண்காரி பாவனை (உள்ளத்து உணர்வு) வைத்து முயற்சி செய்கின்றார்களோ, அதுபோன்று இந்த தெய்வீகக் குடும்பத்திலும் ஏக்ரஸ் (ஒரே ஒருவரின் ரசனை) நிலையில் நிலைத்து இருப்பதற்கான மேலும் குழுவின் சக்தியை அதிகப்படுத்துவதற்காக, ஒருவர் மற்றொருவருக்காக முயற்சி செய்கின்றீர்களா? இந்த தெய்வீக குடும்பத்தில் யார் யாரைப் பார்த்தாலும் அனைவருடைய மூர்த்தியிலும் ஏக்ரஸ் ஸ்திதி பிரத்யட்ச ரூபத்தில் தென்பட வேண்டும். அப்படி திட்டம் தீட்டியிருக்கின்றீர்களா? எதுவரையில் இந்த தெய்வீகக் குடும்பத்தில் ஏக்ரஸ் ஸ்திதியின்

வெளிப்பாடு ஏற்படவில்லையோ அதுவரையில் பாப்தாதாவை வெளிப்படுத்தக்கூடிய காரியம் நெருக்கத்தில் வராது. அந்தளவு எவரெடி ஆகி விட்டீர்களா? லட்சியம் வைத்திருக்கின்றீர்கள் அல்லவா? விஷ்வ மகாராஜன் ஆவதற்கு, தனிப்பட்ட (Independent) ராஜாவாக ஆக வேண்டும் என்று வைக்கவில்லை. எனவே இப்பொழுதிலிருந்து லட்சணத்தை தாரணை செய்தால் தான் லட்சியத்தை அடைய முடியும். ஒவ்வொரு பிராமணர்களுக்கும் தன்னுடைய ஏக்ரஸ் ஸ்திதியை உருவாக்குவது மட்டும் பொறுப்பு (Responsibility) அல்ல. முழு பிராமண குடும்பத்தினரையும் ஒரே ஸ்திதியை ஏற்படுத்துவதில் சகயோகியாக வேண்டும். நான் என்னுடைய சொருபத்தில் சரியாக இருக்கின்றேன் என்பதில் மட்டும் சந்தோஷம் அடைய வேண்டாம்.

ஒருவேளை குழுவில் அல்லது மாலையில் ஒரு மணி வித்தியாசமாக இருந்தாலும் மாலை அழகாக இருக்காது. நம்முடைய குழுவின் சக்தி தான் பரமாத்மாவின் ஞானத்தினுடைய விசேஷம். உயர்ந்த ஞானம் பரமாத்மாவினுடைய ஞானத்தின் வேறுபாடு இதுதான். உலகீய ஞானத்தில் ஒற்றுமை சக்தியில்லை ஆனால் இங்கு குழுவின் ஒற்றுமை சக்தியிருக்கின்றது. எனவே இந்த பரமாத்ம ஞானத்தின் விசேஷத்தினால்தான் முழு கல்பத்தில் இந்த சங்கம யுகத்திற்கு சிறப்பு மகிமை உள்ளது. ஒரே தர்மம், ஒரே ராஜ்யம், ஒரே வழி இந்த ஸ்தாபனை எங்கிருந்து ஏற்படுகின்றது? இந்த பிராமண குழுவின் விசேஷம், பிறகு தேவதை ரூபத்தில் நடைமுறையில் வருகின்றது. எனவே இந்த விசேஷ தன்மை யார் மூலமாக அதிசயம் நடக்க வேண்டுமோ, பெயர் வெளிப்பட வேண்டுமோ, விஷேசமான ரூபத்தில் அலௌகீக ரூபத்தில் வெளிப்பட வேண்டுமோ, அவர்கள் இப்பொழுது வெளிப்பட்டு விட்டார்களா? இந்த சிறப்புத் தன்மையில் எவரெடி ஆகி விட்டீர்களா? குழு ரூபத்தில் எவரெடியாக உள்ளார்களா? கல்பத்திற்கு முன்பிற்கான ரிசல்ட் (Result) நிச்சயிக்கப்பட்டது, ஆனால் இப்பொழுது திரையை விலக்குங்கள். அனைத்து நாயகிகளும் திரைக்குள் இருக்கின்றீர்கள். இப்பொழுது தன்னுடைய நிச்சயத்தை சாகார ரூபத்தில் கொண்டுவரவும். அவ்வப்பொழுது நிச்சயமானது ஆகாரியாகி விடுகின்றது. இதனை சாகாரத்தில் கொண்டு வருவது என்றாலே தன்னுடைய சம்பூர்ண நிலையை வெளிப்படுத்துவது. அந்த நாள் கேட்டீர்களல்லவா? மாற்றம் அனைவருக்குள்ளும் வந்திருக்கின்றது

ஆனால் இப்பொழுது சம்பூர்ண மாற்றத்தை வெளிப்படுத்த வேண்டும். இப்பொழுது நீங்களே வர்ணனை செய்கின்றீர்கள் அல்லவா? எங்களுக்குள் நிறைய மாற்றம் வந்துள்ளது. 'ஆனால்' என்ற வார்த்தையையும் கூடவே சொல்கின்றீர்கள். அந்த ஆனால் ஏன் வருகின்றது? இந்த வார்த்தை வரக்கூடாது. ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கக்கூடிய மூல சமஸ்காரம், அதனை நீங்கள் சுபாவம் (Nature) என்று கூறுகின்றீர்கள். அந்த மூல சமஸ்காரம் சிறிதுகூட இருக்கக்கூடாது. இப்பொழுது தன்னை விடுவித்துக் கொள்கின்றீர்கள். ஏதாவது நடந்தால், நான் அப்படி நடக்கும் என்று நினைக்கவேயில்லை, அது என்னுடைய சுபாவம், என்னுடைய சமஸ்காரம் அப்படி உள்ளது (நான் என்ன செய்யட்டும்) என்று கூறுகின்றீர்கள். இதுதான் உங்களுடைய சம்பூர்ண சுபாவமா?

ஒவ்வொருவருடைய மூல சமஸ்காரம் என்று சொல்லப்படுவது அதுதான் நம்முடைய ஆதி சமஸ்காரம். அதனை எப்பொழுது மாற்றுகின்றோமோ அப்பொழுதுதான் சம்பூர்ண நிலையடைய முடியும். சிறு சிறு தவறுகளை மாற்றிக் கொள்வது மிகவும் எளிது. தன்னுடைய மூல சமஸ்காரத்தை மாற்றுவது, இதுதான் கடைசி முயற்சியாகும். அப்பொழுதுதான் குழுவாக சேர்ந்து (ஒற்றுமையாக) ஏக்ரஸ் ஸ்திதியை உருவாக்க முடியும். இப்பொழுது புரிந்ததா? இதனை செய்வது எளிதுதானே? காப்பி (Copy) அடிப்பது எளிதுதானே? தன்னுடைய மூல சமஸ்காரத்தை அகற்றிவிட்டு, பாப்தாதாவின் சமஸ்காரம் என்னவோ அதனை காப்பியடிக்கவும். இது சகஜமா? கடினமா? இதில் காப்பியடிப்பது கூட உண்மையானதாக (Real) உள்ளது. அனைவருக்குள்ளும் பாப்தாதாவின் சமஸ்காரம் சமநிலை உள்ளதா? ஒவ்வொருவரும் பாப்தாதாவிற்கு சமமாகி விட்டால், ஒவ்வொருவருக்குள்ளும் பாப்தாதாவின் சமஸ்காரம் தென்படும். அப்பொழுது யாரை வெளிப்படுத்துவீர்கள்? பாப்தாதாவை வெளிப்படுத்துவீர்கள். எங்கு பார்த்தாலும் நீயே தெரிகின்றாய் என்ற பாட்டு பக்தியில் பாடப்படுகின்றது ஆனால் இங்கு நடைமுறையில் வெளிப்படுகின்றது. எங்கு யாரைப் பார்த்தாலும், அங்கு பாப்தாதாவினுடைய சமஸ்காரம் தான் தென்பட வேண்டும். இது கடினமா என்ன? பாபாவைப் பின்பற்றுவதற்குப் பதிலாக தன்னுடைய புத்தியை பயன்படுத்தும்போது கடினமாகி விடுகின்றது. இதில்

தன்னுடைய எண்ணங்கள் என்ற வலையில் மாட்டிவிடுகின்றார்கள். எப்படி வெளியேறுவது என்று பிறகு கேட்கின்றார்கள்; முழுமையாக மாட்டிக் கொண்ட பின் வெளியேற முயற்சி செய்கின்றார்கள். எனவே நேரம், சக்தி இரண்டும் செலவாகின்றது. கடினத்தை எளிதாக்கக்கூடிய கடைசி முயற்சியில் வெற்றி அடைய எந்த பாடத்தை உறுதி செய்ய வேண்டும்? இப்பொழுது பாபா கூறினாரல்லவா? தந்தையைப் பின்பற்ற வேண்டும். இதுதான் முதல் பாடமேயாகும். இந்த முதல் பாடம்தான் உங்களின் கடைசி நிலையைக் கொண்டு வருவதற்கு ஆதாரம். இதனை மறவாமல் பின்பற்றவும், அப்போது சதா காலத்திற்கும் மறதியற்றவராகி விடுவீர்கள். ஏக்ரஸ் நிலை வந்து விடும். நல்லது,

**மகா வாக்கியத்தின் சாரம்:**

1. சேனையில் உள்ளவர்கள் ஒரே நேரத்தில் நாலாபுறமும் குண்டு வீச ஆரம்பிக்கின்றார்கள், அப்பொழுதுதான் வெற்றியடைகின்றார்கள். இல்லையென்றால், அவர்களால் வெற்றியடைய மூடியாது. அதுபோல ஆன்மீக சேனைகளாகிய நீங்களும் குழுவாக ஒரே ஸ்திதியில் ஒரு வினாடியில் நிலைத்திருந்தீர்களானால் வெற்றி அவசியம் கிடைக்கும்.

2. ஒற்றுமை சக்திதான் பரமாத்மா ஞானத்தின் சிறப்புத் தன்மை. ஒரே தர்மம், ஒரே ராஜ்யம், ஒரே வழி, ஒரே மொழி என்ற புகழ் இந்த சங்கமயுகத்திற்கு மட்டும்தான் முழு கல்பத்திலும் பாடப் பட்டுள்ளது.

3. எப்படி பக்தி மார்க்கத்தில் புகழ் பாடப்படுகின்றது, எங்கு பார்த்தாலும் நீயே தென்படுகின்றாய்! ஆனால் இங்கு வெளிப்படையாகவே எங்கு, யாரைப் பார்த்தாலும் பாப்தாதாவினுடைய சமஸ்காரம் தான் வெளிப்பட வேண்டும். எப்பொழுது பாப்தாதாவைப் பின்பற்றுகின்றீர்களோ அப்பொழுதுதான் அது நடக்கும்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 19.04.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) ஆவதற்கான முயற்சி!

நீங்கள் உங்களை பாப்தாதாவின் நெருக்கத்தில் இருக்கும் பதமாபதம் பாக்கியசாலி, உயர்ந்த ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? யார் யாருடைய நெருக்கத்தில் இருப்பவராக இருப்பாரோ, அவரிடம் நெருக்கத்தில் இருப்பவரின் குணம் இயல்பாக மற்றும் சுலபமாகவே வந்து விடும். எனவே தான் சேர்க்கையின் பாதிப்பு அவசியம் ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது. அப்படி ஆத்மாக்கள் நீங்கள் யார் எப்பொழுதும் பாப்தாதாவின் சமீபத்தை அதாவது உயர்ந்த தொடர்பில் இருக்கிறீர்கள் என்றால், அவருடைய குணம் மற்றும் சம்ஸ்காரமும் அவசியம் பாப்தாதாவிற்குச் சமமாகவே தான் இருக்கும். நிரந்தரமாக உயர்ந்த தொடர்பில் இருக்கக்கூடிய குழந்தைகள் நீங்கள் உங்களில் எப்பொழுதும் அந்த ஆன்மீக வண்ணம் (பாதிப்பு) ஏற்பட்டதாக அனுபவம் செய்கிறீர்களா? நீங்கள் உங்களை ஒவ்வொரு நேரமும் ஆன்மீக வண்ணத்தில் வண்ண மயமாக்கப்பட்ட ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? எப்படி ஸ்தூல வர்ணம் தெளிவாகத் தென்படுகிறதோ அது போலவே தீய தொடர்பில் இருக்கும் ஆத்மாக்களுக்கு மாயாவின் வண்ணமும் (பாதிப்பும்) மறைந்திருக்க முடியாது. சொல்லுங்கள், தென்படுகிறது தான் இல்லையா? (ஆம்).

அதனால் தான் உயர்ந்த தொடர்பில் இருக்கக்கூடியவர்களின் ஆன்மீக வண்ணமும் அனைவருக்கும் தென்பட வேண்டும். யார் பார்த்தாலும் இவர்கள் ஆன்மீக வண்ணத்தினால் வண்ணம் பூசப்பட்ட ஆத்மாக்கள் என்று தெரிய வேண்டும். அந்த மாதிரி அனைவருக்கும் தெரிய வருகிறதா அல்லது இப்பொழுது குப்தமாக (மறைவாக) இருக்கிறீர்களா? இந்த ஆன்மீக வண்ணம் குப்தமாகவே இருக்க வேண்டுமா என்ன? பிரத்யக்ஷமாக எப்பொழுது ஆகும்? கடைசியில் வெளிப்படுமா என்ன? அந்த தேதி எதுவாக இருக்கும்? முடிவின் தேதி

அனைவரின் பிரத்யக்ஷதாவின் ஆதாரத்தில் இருக்கிறது. டிராமா திட்டத்தின் படி உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடன் வேதனை அடைவதற்கும் சம்மந்தம் இருக்கிறது. எதுவரை வேதனையடையவில்லையோ அதுவரை முக்திதாம் செல்வதற்கான ஆஸ்தியும் அடைய முடியாது. எனவே யார் பொறுப்பில் இருப்பவராக ஆகியிருக்கும் ஆத்மாக்களோ அவர்களிடம் தான் கேட்போம் இல்லையா? பொறுப்பில் இருப்பவர்கள் யார்? நீங்கள் அனைவரும் தான் இல்லையா? இப்பொழுது உங்களின் எதிரிலேயே உங்களுடைய சம்பூர்ண நிலை வெளிப்படையாக தென்படவில்லை என்றால் மற்றவர்களின் எதிரில் எப்படி வெளிப்படுவீர்கள் (பிரத்யக்ஷம்) உங்களுடைய சம்பூர்ண நிலை உங்களுக்கு உயர்ந்ததாகத் தென்படுகிறதா? உண்மையில் சம்பூர்ண நிலையையோ ஞானத்தின் மூலமாக அனைவரும் தெரிந்திருக்கிறார்கள் ஆனால் தன்னைத் தானே என்னவென்று நினைக்கிறீர்கள்? நெருக்கத்தின் கணக்குப்படி அதற்குச் சமமாக ஆவீர்கள் தான் இல்லையா? அப்படியானால் தன்னுடைய சம்பூர்ண நிலை தென்படுகிறதா?

நான் யார்? என்ற இந்தக் கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லையா என்ன? கல்பத்திற்கு முன்பு நான் என்னவாக இருந்தேன். அந்த தன்னுடைய சம்பூர்ண நிலை மறந்து விட்டதா என்ன? மற்றவர்களுக்கோ 5000-வருடங்களின் விஷயத்தை முதலில் நினைவூட்டுகிறீர்கள். முதன்முதலில் எப்பொழுது வருகிறார்களோ அப்பொழுது இதற்கு முன்பு எப்பொழுது சந்தித்தீர்கள் என்று கேட்கிறீர்களா இல்லையா? மற்றவர்களுக்கு கல்பத்திற்கு முந்தைய விஷயத்தின் நினைவூட்டுகிறீர்கள் என்றால், நினைவூட்டுபவர்களுக்கு தன்னுடையது நினைவிருக்கும் தான் இல்லையா? கண்ணாடி தெளிவாக இல்லையா? கண்ணாடி தெளிவாக மற்றும் சக்திசாலியாக இருக்கிறது என்றால், எந்தப் பொருள் எப்படி இருக்கிறதோ அது அப்படியே தென்படும். விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் மற்ற அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்கள், தன்னுடைய உயர்ந்த நிலையைப் பார்க்க முடியவில்லையா? வினாசம் வருவதற்கு இன்னும் கொஞ்சக் காலம் தான் இருக்கிறது, அதுவரை பொறுப்பில் இருப்பவராக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் உங்களுக்கு உங்களுடைய சம்பூர்ண நிலையின் தெளிவான சாட்சாத்காரம் ஏற்பட்டு விடட்டும். சரி,

## 1973 அவ்யக்த முரளி

வினாசத்திற்கு இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது? விரைவில் ஏற்படுமா அல்லது இன்னும் காலம் இருக்கிறதா?

இன்று சத்குருவார் நாள் இல்லையா? அதனால் இன்று வதனத்தில் ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. எந்த ஆன்மீக உரையாடல் வரிசைக்கிரமமாக முயற்சி செய்துகொண்டிருப்பவர்களின் தற்சமயத்து நிலை எப்படி இருக்கிறது? என்பதைப் பற்றி. இதில் ரிசல்ட்டாக என்ன வெளியாகியிருக்கும்? முதல் கேள்வியின் ரிசல்ட்டில் பெரும்பான்மையாக 50 சதவிகிதத்தை விட அதிகமாக வரவில்லை. அந்த முதல் கேள்வி என்னவாக இருந்தது? இந்த வருடத்திற்கான மகத்துவமாக என்ன கூறியிருந்தோம் மற்றும் டைரக்ஷன் கொடுத்திருந்தோம். இந்த வருடம் விசேஷ ரூபத்தில் நினைவு யாத்திரையில் இருக்க வேண்டும் மற்றும் அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து, வரதானத்தை பிராப்தி செய்ய வேண்டும். அப்படி யானால் டைரக்ஷன் படி வருட தொடக்கத்தில் என்ன கவனம் மற்றும் நிலை இருந்ததோ அது இப்பொழுது இருக்கிறதா? எந்த அவ்யக்த சூழ்நிலை மற்றும் ஆன்மீக அனுபவத்தை முதலில் செய்தீர்களோ அந்த ஆன்மீக நிலை இப்பொழுது இருக்கிறதா என்ன? நிலையில் மற்றும் அனுபவத்தில் வித்தியாசம் இருக்கிறதா? எப்படி அனைத்து சேவை நிலையங்களின் கவர்ந்திழுக்கும் சூழ்நிலை, அது உங்கள் அனைவரையும் கூட கவர்ந்து இழுத்துக் கொண்டே இருந்தது, அதே சூழ்நிலை சேவை செய்து கொண்டே உருவாக முடியாதா என்ன? இந்தக் கேள்விக்கான ரிசல்ட்டில் 50 சதவிகிதம் கூட இல்லை என்று கூறினோம்.

இரண்டாவது கேள்வியின் ரிசல்ட்டில் 60 சதவிகிதம் சரியாக இருந்தது. சேவையின் ரிசல்ட் மற்றும் ஊக்கம் உற்சாகத்தின் ரிசல்ட் மிக நன்றாக இருந்தது ஆனால் சமநிலை அது எந்த கேள்வி? எங்கே இருக்கிறது? ஒருவேளை சமநிலையை சரியாக வைத்தீர்கள் என்றால் வெகுவிரைவிலேயே மாஸ்டர் சக்ஸஸ்ஃபுல் (மாஸ்டர் வெற்றி நிறைந்தவர்) ஆகி தன்னுடைய பிரஜை மற்றும் பக்தர்களுக்கு பிளிஸ் (ஆனந்தம்) கொடுத்து இந்த துக்கமான உலகத்திலிருந்து கடந்து செல்ல வைக்க முடியும். இப்பொழுது பக்தர்களின் கூக்குரல் தெளிவாக மற்றும் அருகில் கேட்பதில்லை. ஏனென்றால் உங்களுக்கு தன்னுடைய

நிலையே தெளிவாக இல்லை. இது தான் இரண்டாவது கேள்விக்கான ரிசல்ட்?

மூன்றாவது கேள்வி சேவையில் மற்றும் குடும்பத்தில், உறவு நெருக்கத்தில் நீங்கள் உங்களுக்கு நீங்களே எவ்வளவு திருப்தியாக இருந்தீர்கள் மற்றும் மற்ற ஆத்மாக்கள் எவ்வளவு திருப்தியாக இருந்தார்கள்? சேவை நிலையமும் குடும்பம் தான் இல்லையா? அப்படி குடும்பத்தில் மற்றும் சேவையில் திருப்தி நிலை எவ்வளவு இருந்தது? இதில் மிகக்குறைந்தவர்கள் தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அதிகமானோர் 50 -50 ஆக இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிறார்கள். அடுத்த நேரம் இல்லை. இன்று இருக்கிறார்கள், நாளை இல்லை. இதை 50-50 என்று கூறுகிறோம். இந்த மூன்று கேள்விகள் மூலமாக நடந்து கொண்டிருக்கும் வருடத்தின் ரிசல்ட் தெளிவாகிறது இல்லையா? இந்த வருடத்தில் விசேஷமாக வரதானத்தை எடுக்க முடியும் என்று கூறியிருந்தோம் இல்லையா? ஆனால் ஒரு மாதம் தான் வரதான மாதம் என்று நினைத்து கவனம் வைத்திருந்தார்கள். இப்பொழுது மெது மெதுவாக நேரத்திற்கு ஏற்றபடி வரதான வருடம் மறந்து கொண்டே போகிறது. எனவே எவ்வளவு இந்த வரதான வருடத்தில் வரதானம் பெறுவதற்கான நினைவில் இருப்பீர்களோ அவ்வளவு சுலபமாக வரதானமும் பிராப்தி ஆகும், மேலும் ஒருவேளை மறந்து விட்டீர்கள் என்றால் அதிகமாக தடைகளையும் எதிர்நோக்குவீர்கள். எனவே நாலாபுறத்திலுமுள்ள அனைத்து பிராமண பரிவாரத்தின் ஆத்மாக்களின் எதிரில் அனைத்து விதமான தடைகளை அகற்றுவதற்காக எப்படி முதல் மாதத்தில் நினைவு மற்றும் ஈடுபாட்டின் அக்னியை நன்றாக எரிய விட்டீர்கள், அது போலவே, அதே மாதிரியான அவ்யக்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஒரு பக்கம் வரதானம், இன்னொரு பக்கம் விக்னம் (தடை). இரண்டும் ஒன்று இன்னொன்றோடு தொடர்பு இருக்கிறது. தனக்காக மட்டும் விக்னவினாஷக் (தடைகளை அழிப்பவர்) ஆக வேண்டாம் ஆனால் தன்னுடைய பிராமண குலத்தின் அனைத்து ஆத்மாக்களின் தடைகளை அழிப்பதற்காக சகயோகி ஆக வேண்டும். அந்த மாதிரி வேகத்தை அதிகரியுங்கள். சென்று கொண்டிருக்கும்போதே இடையிடையே வேகத்தைக் குறைத்து விடுகிறீர்கள், எனவே பிரத்யக்ஷம் ஆவதில் டிராமாவில் இவ்வளவு காலமாகிறது என்று தென்படுகிறது. அப்பொழுது தான் தன்னையும் பிரத்யக்ஷம் செய்ய

முடியும். தன்னில் சர்வ சக்திவானின் பிரத்யக்ஷ ரூபத்தை அனுபவம் செய்ய முடியும். ஒரிரண்டு சக்திக்காக இல்லை அனைத்து சக்திகளுக்கும், மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறீர்களா அல்லது இரண்டு, நான்கு சக்திகள் உள்ளவருடைய குழந்தைகளா? சர்வ சக்திவானை பிரத்யக்ஷம் செய்யுங்கள். நல்லது.

மாஸ்டர் பிளிஸ்ஃபுல், மாஸ்டர் நாலேட்ஜ்ஃபுல், மாஸ்டர் சக்ஸஸ்ஃபுல், சர்வ சிரேஷ்ட எப்பொழுதும் ஆன்மீக தொடர்பினால் வண்ணமயமாக்கப்பட்டிருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 21.04.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்படி பெயரோ, அப்படியே காரியமும்!

மதுபன் நிவாசி சகோதரிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு: இந்த குரூப்பிற்கு என்ன பெயர் கூறலாம்? மதுபன் நிவாசிகளை என்னவென்று கூறப்படுகிறது. யாரெல்லாம் இங்கு அமர்ந்திருக்கிறீர்களோ அனைவரும் தன்னை அந்த மாதிரி பல கோடி மடங்கு பாக்கியசாலி என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? மதுபன் நிவாசிகளின் காரணமாகத் தான் மதுபன்னின் மகிமை இருக்கிறது. மதுபன்னின் சூழலை உருவாக்குபவர் யார்? அப்படி மதுபன்னின் மகிமையாக என்ன பாடப்பட்டிருக்கிறதோ, அந்த மகிமையை ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கையில் அனுபவம் செய்கிறீர்களா?

மதுபன்னை மகான் பூமி என்று கூறப்படுகிறது. அப்படி மகான் பூமியில் இருப்பவர்கள் அவசியம் மகான் ஆத்மாக்களாகத் தான் இருப்பார்கள். அப்படி அந்த மகான் ஆத்மாக்கள் நாம் என்ற இந்த ஆன்மீக போதையில் இருக்கிறீர்களா? மகான் ஆத்மாவின் ஒவ்வொரு காரியமும் மற்றும் ஒவ்வொரு எண்ணமும் மகானாக இருக்கும். அப்படி யாருடைய ஒரு எண்ணம் கூட ஒருபொழுதும் சாதாரணமானதாக மற்றும் வீணானதாக இல்லாமல் மற்றும் ஒரு காரியம் கூட சாதாரணமானதாக மற்றும் அர்த்தமற்றதாக இல்லாததாக இருக்கின்ற மாதிரி மகானாக இருக்கிறீர்களா? ஏனென்றால், அவருடைய ஒவ்வொரு அடியும் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும். அந்த மாதிரி அர்த்த சொரூப மகான் ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? அவரைத் தான் மகான் அதாவது மதுபன் நிவாசி என்று கூறப்படுவது.

பெயர் மதுபன் நிவாசி என்றிருக்கிறது என்றால் அவசியம் அர்த்தம் நிறைந்த பெயராக இருக்குமில்லையா? அப்படியானால் இந்த கர்மேந்திரியங்கள் மூலமாக என்னென்ன காரியம் நடந்ததோ அவை அனைத்தும் அர்த்தம் நிறைந்ததாக இருந்ததா என்று தினசரி

தன்னுடைய கணக்கை சோதனை செய்கிறீர்களா? நேரம் என்ன கடந்து சென்றது அது பயனுள்ளதாக சென்றதா அதாவது மகான் காரியத்தில் ஈடுபடுத்தப்பட்டதா? அந்த மாதிரி தன்னுடைய கணக்கைப் பார்க்கிறீர்களா அல்லது மேலோட்டமான விஷயங்களை மட்டும் பார்த்தீர்களா? இந்த விதமாக நாங்கள் எங்களை சோதனை செய்கிறோம் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். மகான் ஆத்மாக்களின் ஒவ்வொரு காரியத்திற்கும் நன்னடத்தையின் ரூபத்தில் மகிமை இருக்கிறது. மகான் ஆத்மாக்களின் புன்முறுவல் அடங்கிய முகம், கவர்ந்திழுக்கும் முகம் மற்றும் தெய்வீக முகம் சிலை ரூபத்தில் நினைவுச் சின்னமாக இருக்கிறது. அந்த மாதிரி முழு நாளில் என்னுடைய முகம் எப்படி இருந்தது மற்றும் நடத்தை எப்படி இருந்தது, அது மூர்த்தியாகி பூஜையில் வரும் அளவிற்கு இருந்ததா மற்றும் என்னுடைய காரியம் என்னுடைய சரித்திர ரூபத்தில் மகிமை செய்யப்படும் அளவிற்கு இருந்ததா? என்று தன்னை பாருங்கள். இந்த லட்சியம் இருக்கிறது இல்லையா?

இங்கு கற்றுக் கொள்ளவும் படிப்பதற்கும் வருகிறீர்கள் என்றால் கடைசி லட்சியமாக என்ன இருக்கிறது? மற்றும் சங்கமயுகத்தின் லட்சியம் என்னவாக இருக்கிறது? சங்கமயுகத்தின் காரியமே நன்னடத்தையின் ரூபத்தில் மகிமை செய்யப்படுகிறது. சங்கமயுகத்தின் நடைமுறை வாழ்க்கை தேவதையின் ரூபத்தில் பூஜை செய்யப்படுகிறது. அப்படியானால் அது எப்பொழுது ஏற்படும்? இப்பொழுதைய மகிமையாக இருக்கிறது என்றால், இப்பொழுதே இருக்கும் இல்லையா? அல்லது. சத்யுகத்தில் அந்த மாதிரி ஆவீர்களா? அங்கோ அனைவருமே மலர்ந்த முகமுடையவர்களாக இருப்பார்கள் என்றால், இவர் மலர்ந்த முகமுடையவர் என்று இதையும் யார் கூறுவார்? (எவரும் கூறமாட்டார், எல்லோருமே அப்படி இருப்பர்) அதை இப்பொழுது தான் கூறுவோம் இல்லையா? யார் முகம் மலர்ந்து இருப்பதில்லையோ அவர் தான் இவர் மலர்ந்த முகமுடையவராக இருக்கிறார் என்று வர்ணனை செய்வார். அந்த மாதிரியான முகம் மற்றும் அந்த மாதிரியான காரியம் நடைமுறையில் இருக்கிறதா?

இப்பொழுது கேட்டுக் கொண்டிருக்கும்போது புன்முறுவலிக்கிறீர்கள் அதாவது உணருகிறீர்கள், அந்த புன்சிரிப்பு எவ்வளவு நன்றாக

இருக்கிறது. உணருகிறீர்கள் அப்பொழுது தான் புன்முறுவலிக்கிறீர்கள். அதே போல் ஒவ்வொரு நாளும் தன்னுடைய காரியத்தை உணருதல் மற்றும் சோதனை செய்வதினால் யாராவது கேட்டால் உடனே பதில் கூறுவீர்கள். இப்பொழுது கையை உயர்த்தவா அல்லது வேண்டாமா என்று யோசிக்கிறீர்கள். உடனடியாக ஏன் கையை உயர்த்துவதில்லை? சங்கோஜம் ஏன் ஏற்படுகிறது? காரணம் என்ன? அதே போலவே தன்னுடைய சம்பூர்ண நிலையை சொரூபத்திலும் கொண்டு வாருங்கள். வார்த்தைகளில் மட்டுமின்றி சொரூபத்தில் கொண்டு வாருங்கள். யாராவது உங்கள் எதிரில் வருகிறார் என்றால், எப்படி உங்களுடைய ஜடச்சிலைகளின் எதிரில் சென்றவுடனேயே அவர்களை மகான் என்று நினைக்கிறார்கள். தன்னை பாவி மற்றும் கீழானவன் என்று சுலபமாகவே நினைத்துக் கொள்கிறார்கள் அதாவது ஒரு நொடியில் தன்னுடைய சாட்சாத்காரத்தை செய்து (தெளிவாகப் புரிந்து கொண்டு) விடுகிறார்கள். நீ கீழானவன் என்று சிலை சொல்வது இல்லை ஆனால் தானே சாட்சாத்காரம் செய்கிறார், அது போலவே உங்கள் எதிரில் யாராவது வந்தாலும் அவர்களும் இவர்கள் என்னவாக இருக்கிறார்கள் மற்றும் நான் என்னவாக இருக்கிறேன் என்று அனுபவம் செய்யட்டும். இந்த நிலை வரத்தான் வேண்டும் இல்லையா? அது எப்பொழுது வரும்? இப்பொழுதோ ஞானப்படிப்பு முடிவடைந்து ரிவைஸ் கோர்ஸ் (மீண்டும் படிப்பது) நடந்து கொண்டிருக்கிறது என்றால் பாடங்கள் படிக்க மட்டும்தான் செய்யபடுகின்றனவா அல்லது நடைமுறையிலும் இருக்கிறதா? நடைமுறையிலும் படிப்பு முடிய வேண்டும் இல்லையா? அல்லது மீண்டும் படிப்பது எப்பொழுது முடிவடையுமோ அப்பொழுது நடைமுறையில் காண்பிப்பீர்களா? என்ன நினைத்திருக்கிறீர்கள்? அந்த நேரத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களா? நேரம் வந்தால் அனைத்தும் சரியாகி விடுமா? என்ன அப்படி நினைக்கிறீர்களா? இந்த மாதிரி வகுப்பை எப்பொழுதாவது செய்திருக்கிறீர்களா? தன்னுடைய முயற்சியை தீவிரப்படுத்துவதற்காக தன்னுடைய சக்தியின் அனுசாரம் எப்பொழுதாவது திட்டமிடுகிறீர்களா அல்லது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டம் கிடைத்தது என்றால் அதன்படி நடப்பீர்களா?

மதுபன் நிவாசிகளாக இருப்பவர்கள் அனைவரின் எதிரில் ஒரு முன் உதாரணமாக இருக்கிறார்கள் என்று இதைத் தான் பாப்தாதா பார்க்கிறார். சேம்பிள் முதலில் தயாரிக்கப்படுகிறது இல்லையா?

# 1973 அவ்யக்த முரளி

மதுபன் நிவாசிகள் சேம்பிளாக இருக்கிறார்களா அல்லது சேம்பிளாக இனி மேல்தான் தயாராக வேண்டுமா? எப்பொழுது சேம்பிள் தயாராகி விடும்போது என்றால் அதைக் காண்பித்து இந்த மாதிரி பொருள் தயாராகிக் கொண்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. அப்பொழுது தான் அதைப் பார்த்து மற்றவர்கள் வியாபாரத்திற்கான ஒப்பந்தம் செய்கிறார்கள். முதலில் சேம்பிள் தயார் ஆவதினால் பாப்தாதா அந்த மாதிரி சைகை செய்து இந்த மாதிரி ஆக வேண்டும் என்று காண்பிக்கலாம். சேம்பிள் ஆவதற்காக கடினமான முயற்சி ஒன்றும் இல்லை மிகவும் சிம்பிளான (எளிமையான) முயற்சி தான். சிம்பிள் முயற்சிக்கான ஒரு வார்த்தை, தன்னுடன் தந்தையின் சிம்பலை (அடையாளத்தை) எதிரில் வையுங்கள் என்ற ஒரு வார்த்தை தான். ஒரு வார்த்தையின் முயற்சியோ மிகவும் சுலபமானது இல்லையா? ஒருவேளை எப்பொழுதும் சிம்பல் எதிரில் இருக்கிறது என்றால் முயற்சி செய்வது சிம்பிள் ஆகி விடும். முயற்சி செய்வது சிம்பிள் ஆவதினால் சாம்பிள் ஆகி விடுவார்கள்.

மதுபன் நிவாசிகளுக்கு எத்தனை இஞ்சின்கள் இணைக்கப்பட்டு இருக்கின்றன? (நான்கு என்று யாரோ கூறினார்). அப்படியானால் ஒரு நொடியில் சென்றடைய வேண்டுமல்லவா!. அனைவரையும் விட சுலபமான முயற்சியின் லாபம் மற்றும் பொன்னான வாய்ப்பு மதுபன் நிவாசிகளுக்கு கிடைத்திருக் கிறது என்ற இதையும் ஏற்றுக் கொள்கிறீர்கள். ஏற்றுக் கொள்வதிலும், தெரிந்து கொள்வதிலும் புத்திசாலிகளாக இருக்கிறீர்கள். மேலும் பேசுவதிலும் மிகவும் புத்திசாலிகளே தான். மற்றபடி மரியாதைக்குத் தகுதியானவர் ஆவதில் ஏன் இன்னும் காலதாமதமாகிறது? எவ்வளவு மரியாதைக்குரியவராக ஆவீர்களோ அவ்வளவே அங்கு பூஜைக்கு தகுதியானவர் ஆவீர்கள். இங்கு உங்களுடைய காரியத்தைப் பார்ப்பவர்கள் ஒருவேளை உயர்ந்தது என்று ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் பூஜை செய்பவர்கள் கூட உயர்ந்தவர் என்று ஏற்றுக் கொண்டு பூஜாரியாக எப்படி ஆவார்கள்? எவ்வளவு மரியாதைக்குரியவரோ அவ்வளவு பூஜைக்குரியவர் என்ற கணக்கு இருக்கிறது. யார் பூஜைக்குரியவர்களாக ஆவார்களோ அவர்களை மற்றவர்கள் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். இப்பொழுது ஆக வேண்டுமா அல்லது பார்த்து மட்டும் மகிழ்ச்சி அடைய வேண்டுமா? எவ்வளவு இசை நிறைந்தவராக இருக்கிறீர்களோ

அவ்வளவே இரகசியம் நிறைந்தவர்களாகவும் ஆகுங்கள். இசையை வாசிப்பதிலோ திறமைசாலிகள் தான் இல்லையா? இசையைக் கேட்பதற்கும் விருப்பம் உடையவர்கள் எவ்வளவு இருப்பார்கள். இதிலோ தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள் இல்லையா? எவ்வளவு இசை நிறைந்தவர்களோ அவ்வளவு இரகசியம் நிறைந்தவர்களாக ஆகுங்கள். இரகசியம் அறிந்து நடப்பவர்களாக யார் இருக்கிறாரோ அவருடைய ஒவ்வொரு அடியும் இரகசியம் நிரம்பியதாக இருக்கும். அந்த மாதிரி இரகசியம் அறிந்து நடப்பவர் மற்றும் இசை சொரூபமானவர் இரண்டின் சமநிலையை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மதுபன் நிவாசிகள் அதிகம் அதிர்ஷ்டம் நிறைந்த நட்சத்திரங்கள். எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்களோ அந்த அளவே அனைவரின் அன்பானவர்களாகவும் ஆகுங்கள். அதிர்ஷ்டத்தில் மட்டும் குஷியடைய வேண்டாம். எவ்வளவு அதிர்ஷ்டம் இருக்கிறது என்பது கூட எவ்வளவு அன்பானவரோ அதிலிருந்து தெரிந்து கொள்ளப்படுகிறது. யார் அதிர்ஷ்டம் நிறைந்தவராக இருப்பாரோ அவர் அனைவரின் அன்பானவராக அவசியம் இருப்பார். இப்பொழுது பார்க்கும்பொழுதும், நடந்து கொள்ளும்பொழுதும் அனைவருக்கும் அன்பு கொடுப்பது மற்றும் அன்பு செய்வதற்கான காரியம் செய்ய வேண்டும். ஞானம் கொடுப்பது மற்றும் பெறுவது அந்த நிலையைக் கடந்து வந்து விட்டீர்கள், இப்பொழுது அன்பின் கொடுக்கல் வாங்கல் செய்யுங்கள். யார் எதிரில் வந்தாலும், சம்மந்தத்தில் வருகிறார் என்றாலும் அன்பைக் கொடுங்கள் மற்றும் பெறுங்கள். இதைத் தான் அனைவரின் அன்பானவர் மற்றும் அன்பிற்குரியவர் என்று கூறப்படுகிறது. ஞான தானத்தை பிராமணர்களுக்குச் செய்ய வேண்டிய தில்லை, அதை அஞ்ஞானிகளுக்குச் செய்வீர்கள், பிராமண குடும்பத்தில் இந்த தானத்தின் மகாதானியாக மட்டும் ஆகுங்கள். தானம் செய்தால் கிரகணம் விலகும் என்று கூறப்படுகிறது இல்லையா? என்னென்ன பலஹீனங்கள் இன்னும் இருக்கின்றனவோ அந்த அனைத்து விதமான கிரகணம் இந்த மகாதானத்தினால் விலகி விடும். புரிந்ததா? இந்த தானத்தில் யார் யார் மகாதானி ஆகுகிறார்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். அன்பு என்பது வார்த்தைகளில் மட்டும் இருப்பதாக இருப்பதில்லை, ஆனால் எண்ணத்தில் கூட யாரைப் பற்றியாவது அன்பைத் தவிர வேறொன்றும் உருவாக வேண்டாம். எப்பொழுது

அனைவருக் காகவும் அன்பு ஏற்பட்டு விடுகிறது என்றால், அன்பின் பிரதிபலனாக சகயோகம் இருக்கிறது. மேலும் சகயோகத்தின் ரிசல்ட்டாக வெற்றி இருக்கிறது. எங்கு அனைவரின் சகயோகம் இருக்கிறதோ அங்கு சுலபமாக வெற்றி இருக்கும். அப்படி அனைவரும் வெற்றிமூர்த்தி ஆகி விடுவீர்கள். இப்பொழுது இந்த ரிசல்ட்டைப் பார்க்கலாம். நல்லது.

வரதானம்: ஒவ்வொரு விஷயத்தில் சாரத்தை கிரஹித்து ஆல்ரவுண்ட் ஆகக்கூடிய சரளமாக முயற்சி செய்பவர் ஆகுக!

எந்த விஷயத்தைப் பார்த்தாலும், கேட்டாலும் அதன் சாரத்தைப் புரிந்து கொள்ளுங்கள் மற்றும் என்ன வார்த்தை பேசினாலும், என்ன காரியம் செய்தாலும் அதில் சாரம் நிரம்பி இருப்பதாக இருந்தால் முயற்சி சரளமாகி விடும். அந்த மாதிரி சரளமாக முயற்சி செய்பவர் அனைத்து விஷயங்களில் ஆல்ரவுண்ட் ஆக இருக்கிறார். அவரிடம் எந்தவித குறையும் தென்படுவதில்லை. எந்த விஷயத்திலும் தைரியம் குறைவதில்லை, நான் இந்தக் காரியத்தை செய்ய முடியாது என்ற இந்த வார்த்தை அவர் வாயிலிருந்து வெளிவருவதில்லை. அந்த மாதிரி சரள முயற்சியாளர் தானும் சரள சிந்தனையுள்ளவராக இருக்கிறார் மற்றும் மற்றவர்களையும் சரள சிந்தனையாளராக ஆக்கி விடுகிறார்.

சுலோகன்: சாதனங்களை உபயோகித்துக் கொண்டே அதனுடைய பிரபாவத்திலிருந்து விலகியிருப்பவராகவும், தந்தையின் அன்பானவராகவும் ஆகுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.04.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக ஜென்மபத்திரிகை (ஜாதகம்)!

இந்த நேரம் அனைவரும் மாஸ்டர் சர்வ சக்திவான் சொரூபத்தில் நிலைத்திருக்கிறீர்களா? ஒரு நொடியில் தன்னுடைய இந்த சம்பூர்ண நிலையில் நிலைத்திருக்க முடியுமா? இந்த ஆன்மீக டிரில்லின் (தேகப்பயிற்சி) பயிற்சி உடையவராக ஆகியிருக்கிறீர்களா? ஒரு நொடியில் எந்த நிலையில் தன்னை நிலைத்திருக்க விரும்புகிறீர்களோ அதில் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? எவ்வளவு நேரம் மற்றும் எந்த நேரம் விரும்புகிறீர்களோ அப்பொழுது நிலைத்திருந்து விடுங்கள். இதற்கான பயிற்சி உள்ளவர்களாக இருக்கிறீர்களா அல்லது இதுவரையிலும் கூட இயற்கை மூலமாக உருவாகியிருக்கும் சூழ்நிலைகள் உங்கள் மனநிலையை தன்பக்கம் கொஞ்சம் கொஞ்சம் ஈர்த்து விடுகிறதா? அனைத்தையும் விட அதிகமாக தன்னுடைய உடலின் கணக்கு வழக்கு, இன்னும் மீதமிருக்கும் பாவகர்மத்தின் விளைவுகளை அனுபவிக்கும் ரூபத்தில் வரக்கூடிய சூழ்நிலைகள் தன்பக்கம் ஈர்ப்பு செய்கிறதா? இந்த ஈர்ப்பும் முடிவடைந்து விட வேண்டும். இதைத் தான் சம்பூர்ண நஷ்டமோஹா (பற்றுதலை வென்ற நிலை) என்று கூறுவது, ஏதாவது பொருள் மேல் மோகம் அதாவது ஆர்வம் ஏற்படுகிறது என்றால், அது தன் பக்கம் அடிக்கடி ஈர்க்கிறது. எந்தவொரு உடலின் மற்றும் உடலின் உலகத்தின் சூழ்நிலை உங்கள் மனநிலையை அசைக்கக்கூடாது, இந்த நிலையின் மகிமை தான் பாடப்பட்டிருக்கிறது. அங்கதன் ரூபத்தில் சென்ற கல்பத்தின் என்ன மகிமை இருக்கிறதோ, இதுவே சம்பூர்ண நிலையாகும். புத்தி என்ற கால்களை இயற்கையின் சூழ்நிலைகள் அசைக்க முடியவில்லை, அந்த மாதிரி (மிக இறுதியாக) ஆகியிருக்கிறீர்களா? லட்சியமோ இது தான் இல்லையா? இதுவரை லட்சியம் மற்றும் லட்சணத்திற்கு இடைவெளி இருக்கிறது. சென்ற கல்பத்தின் மகிமை தற்சமயத்தின் நடைமுறை வாழ்க்கையில் இடைவெளி இருக்கிறது. இந்த இடைவெளியை அகற்றுவதற்காகத் தீவிர முயற்சி செய்வதற்கான வழி எது? எப்பொழுது

வழிகளைத் தெரிந்து இருக்கிறீர்கள் என்றால், பின்பு இடைவெளி ஏன் இருக்கிறது? கண்கள் இல்லையா என்ன? அல்லது கண்கள் இருக்கவும் இருக்கின்றன ஆனால் கண்களை தேவையான நேரத்தில் உபயோகிப்பதற்கான தகுதி இல்லையா? எவ்வளவு தகுதியோ அவ்வளவு மகான் நிலை தென்படுகிறதா? மகான் நிலையின் குறைவிற்கான காரணத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? என்ன முக்கியமான மரியாதைகளை எப்பொழுதும் கூறிக் கொண்டே இருக்கிறீர்களோ அந்த மரியாதையின் ஆழ்ந்த நுண்ணிய நிலை இல்லை. நுண்ணிய தன்மை வரும் போது மகாவீரநிலை வந்து விடுகிறது. மகாவீர நிலை என்றால் மகான் நிலை. அப்படியானால் பின்பு குறை எந்த விஷயத்தில் இருந்து விடுகிறது? நுண்ணியத்தில் இருக்கிறது. நுண்ணியமான பொருள் எதிலேயும் உள்ளடங்கி விட முடியும். நுண்ணிய நிலை இல்லை என்றால் எந்தவொரு பொருளும் எங்கு, எப்படி? உள்ளடக்க விரும்புகிறீர்களோ அப்படி உள்ளடங்க முடியாது. எவ்வளவு ஒரு பொருள் நுண்ணியமாக இருக்குமோ அவ்வளவு மதிப்புள்ளதாக இருக்கிறது. சக்திசாலியாக இருக்கிறது.

அப்படிப்பட்ட முதன்மையான மரியாதை மற்றும் அனைத்து மரியாதைகளிலும் சிறந்த மரியாதையாக என்ன இருக்கிறது என்று உங்களை நீங்களே கேளுங்கள். ஸ்ரீமத் தான் உங்களுடைய மரியாதை ஆகும். அப்படியானால் முதல் மரியாதையாக என்ன இருக்கிறது? (உடலையும் சேர்த்து அனைத்தையும் மறப்பது). விடுவது அல்லது மறப்பது, மறப்பது தான் விடுவதாகும். உடன் இருந்தும் கூட ஒருவேளை மறந்திருக்கிறீர்கள் என்றால் விட்டிருக்கிறீர்கள் என்பதாகும். மறப்பது தான் விடுவதாகும். எப்படி பாருங்கள், சந்நியாசிகளைப் பார்த்து அவர்கள் விடவில்லை என்று நீங்கள் சவால் விடுகிறீர்கள். வீடு வாசலை விட்டார்கள் என்று கூறுகிறார்கள்: ஆனால் விடவில்லை, ஏனென்றால் மறக்கவே இல்லை. அதே போல் ஒருவேளை சூழ்நிலைக்கேற்றபடி வெளிப்படையாக ஒருவேளை விட்டும் இருக்கிறார், விலகியும் வந்து விட்டார், ஆனால் மனதால் ஒருவேளை மறக்கவில்லை என்றால் அதை விட்டதாக கூறுவோமா என்ன? இங்கு விடுவதற்கான அர்த்தம் என்றால் என்ன? மனதால் மறப்பது! ஆனால் நீங்களோ மனதால் மறந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படி விட்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது இன்னும் விட

வேண்டியதாக இருக்கிறதா? ஒருவேளை இன்னும் கூட விட வேண்டும் என்று கூறுகிறீர்கள் என்றால் பின்பு வெகுகாலமாக விட்டவர்களின் பட்டியலிலிருந்து விடுபட்டு இப்பொழு திலிருந்து விடக்கூடியவர்களின் பட்டியலில் வந்து விடுவீர்கள். யார் யார் மனதால் எப்பொழுதிலிருந்து தியாகம் செய்தார்கள் அதாவது எந்தவொரு உடலின் பந்தனம், உடலின் சம்மந்தத்தை ஒரு நொடியில் தியாகம் செய்து விட்டார் அவரின் அந்த நாள், கிழமை மற்றும் நேரம் அனைத்தும் நாடகத்தில் மற்றும் பாப்தாதாவிடம் அடங்கியிருக்கிறது. எப்படி இன்றைய நாட்களில் ஜோதிடர், ஜோதிடக்கலையைத் தெரிந்திருப்பவர் பிறந்த நாள் மற்றும் நேரத்தின் படி தன்னுடைய தகுதிக்கேற்ற ஞானத்தின் ஆதாரத்தில் ஜாதகத்தை உருவாக்குகிறார். அவர்களுடைய ஆதாரமும் நாள், கிழமை மற்றும் நேரம் ஆகும். அவர்கள் (கிரக) நிலைகளை பார்க்கிறார்கள், எந்த மாதிரி (கிரகங்களின்) நிலையில் பிறந்திருக்கிறார் என்று பார்க்கிறார்கள். இங்கு அந்த நேரத்தின் நிலையை பார்க்கப்படுகிறது. பிறந்தவுடனேயே எந்த நிலையில் இருந்தார், அதே ஆதாரம் இங்கேயும் ஒவ்வொருவரின் எதிர்காலத்தின் பிராப்தியின் ஆதாரமாக இருக்கிறது. நீங்களும் இந்த மூன்று விஷயங்களின் நாள், கிழமை மற்றும் நிலையைத் தெரிந்து தன்னுடைய சங்கமயுகத்தின் பிராப்தி மற்றும் சங்கமயுகத்தின் எதிர்கால நிலை மற்றும் எதிர்கால ஜென்மத்தின் பிராப்தியை நீங்களாகவே தெரிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு விஷயத்தின் பிராப்தி நடைமுறை வாழ்க்கையிலும் சம்மந்தப்பட்டிருக்கிறது. இது தன்னுடைய அதிர்ஷ்டத்தைத் தெரிந்து கொள்வதற்கான கண். இதன் மூலம் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய கடைசி நிலையின் வரிசை எண்களை தெரிந்து கொள்ள முடியும்.

எப்படி ஜோதிடர் கைரேகை மூலமாகக் கூட ஜாதகத்தை தெரிந்து கொள்ள முடியும், அதே போல் நீங்கள் மாஸ்டர் திரிகாலதரிசி, திரிநேத்ரி மற்றும் ஞானசொரூபம் அதாவது மாஸ்டர் ஞானம் நிறைந்தவரான காரணத்தினால் தன்னுடைய இறந்து மறுபிறவி எடுத்த இந்த வாழ்க்கையின் நடைமுறை காரியம் என்ற ரேகைகளினால், எண்ணங்களின் சூட்சும ரேகைகளினால் ஒருவேளை எண்ணத்தை சித்திரத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் எந்த ரூபத்தில் காண்பிப்பீர்கள்? தன்னுடைய எண்ணங்களின் ரேகையின் ஆதாரத்தில்

மற்றும் காரியங்களின் ரேகைகளின் ஆதாரத்தில் எண்ண ரூப ரேகையோ நேராக அதாவது தெளிவாக இருக்கின்றனவா என்று தன்னுடைய ஜாதகத்தைத் தெரிந்து கொள்ள முடியும். ஒன்று வெகுகாலமாக (மன) நிலையில் மற்றும் நெருக்கத்தில் ஸ்ரீமத்படி நடந்து கொண்டீர்களா என்று இதை சோதனை செய்யுங்கள். இது தான் காலம் அதாவது சமயத்தைப் பார்ப்பது. சமயம் என்றால் வேளை. இதன் பிரபாவம் ஜாதகத்தில் மிகவும் ஏற்படுகிறது. அப்படி இங்கேயும் சமயம் என்றால் வெகுகாலத்து கணக்குப்படி சம்மந்தம் வைப்பது. வெகுகாலத்தின் அர்த்தம் ஸ்தூல தேதி மற்றும் வருடங்களின் கணக்குப்படி கிடையாது ஆனால் எப்பொழுதிலிருந்து ஜென்மம் எடுத்திருக்கிறாரோ அப்பொழுதிலிருந்து நீண்ட காலமாக முழு ஈடுபாட்டோடு இருப்பது. அனைத்து பாடங்களில் யதார்த்த ரூபத்தில் எவ்வளவு வெகுகாலமாக இருந்து வந்திருக்கிறீர்கள் இந்த கணக்கின் சேமிப்பு இருக்கும். உதாரணத்திற்கு யாருக்காவது 35 வருடங்கள் ஆகியிருக்கிறது, ஆனால் தன்னுடைய முயற்சியின் வெற்றியில் வெகுகாலத்தைக் கழிக்கவில்லை (வீணாக்கியுள்ளார்) என்றால் அவர் வெகுகாலத்தவர் என்ற கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டார். ஒருவேளை யாராவது 35 வருடங்களுக்குப் பதிலாக 15 வருடங்களாக வந்து கொண்டிருக்கிறார் ஆனால் 15 வருடங்களில் வெகுகாலத்து முயற்சியின் வெற்றியின் (சிறப்பான புருஷார்த்தத்தின்) ஆதாரத்தில் கணக்கில் எடுக்கப்படும். ஆக வேளையின் ஆதாரமே முக்கியமாகிறது இல்லையா?

வெகுகாலமாக முழுமையான ஈடுபாட்டில் மூழ்கியிருப்பவரின் பிராப்தியும் வெகுகாலத்திற்காக கிடைக்கும். அற்பகாலத்து வெற்றி அடைபவர்களுக்கு அற்பகால அதாவது 21-ஜென்மங்களில் குறைந்த ஜென்மங்களுக்காக மட்டும் பிராப்தி கிடைக்கும். மீதம் சாதாரண பிராப்தி. எனவே ஜோதிடர்களும் வேளைக்கு மகத்துவம் கொடுக்கிறார்கள். வெகுகாலமாக தடையற்றவர் அதாவது காரியங்களின் ரேகை தெளிவாக இருக்கிறது. அதனுடைய ஆதாரம் ஜாதகத்தின் மேல் இருக்கிறது. எப்படி கைகளின் கோடுகளில் ஒருவேளை இடையிடையே ரேகை துண்டுபட்டு இருக்கிறது என்றால் உயர்ந்த பாக்கியமாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது மற்றும் நீண்ட ஆயுள் என்றும் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. அதே போல்

இங்கேயும் ஒருவேளை தடைகளின் காரணமாக தந்தையோடு இணைக்கப்பட்டிருக்கும் புத்தியின் இணைப்பு கட் ஆகிக் கொண்டே இருக்கிறது மற்றும் தெளிவாக இல்லை என்றால் பெரிய பிராப்தி ஏற்பட முடியாது.
இப்பொழுது என்னுடைய ஜென்ம பத்திரிகை (ஜாதகம்) என்னவாக இருக்கிறது என்று உங்களை நீங்களே தெரிந்து கொள்ள முடியுமா? எந்த பதவியின் பிராப்தி அதில் அடங்கியிருக்கிறது? ஜென்ம பத்திரிகையின் திசைகளையும் பார்க்கிறார்கள். எப்படி குருதிசையும் இருக்கிறது, வெகுகாலமாக குருவின் திசை இருக்கிறதா அல்லது அடிக்கடி திசை மாறிக் கொண்டே இருக்கிறதா? சில நேரம் குருவின் திசை, சில நேரம் ராகுவின் திசை அப்படி இருக்கிறதா? ஒருவேளை அடிக்கடி மாறுகிறது என்றால் தடையற்றது இல்லை என்றால் பிராப்தியும் வெகுகாலத்திற்காக தடையற்ற இராஜ்யத்தை அடைய முடியாது. அப்படி ஆரம்பத்திலிருந்து இன்றுவரை என்ன திசை இருந்தது என்று இந்த திசைகளை சோதனை செய்யுங்கள்.

ஜென்ம பத்திரிக்கையில் (ஜாதகம்) ராசிகளையும் பார்க்கிறார்கள். இங்கு எந்த ராசி இருக்கிறது? இங்கு மூன்று ராசிகள் இருக்கின்றன. ஒன்று மகாரதியின் (யானைப்படையின்) ராசி, இரண்டாவது குதிரைப்படையின் மற்றும் மூன்றாவது காலாட்படையின். இந்த மூன்றிலிருந்து ஆரம்பத்திலிருந்து அதாவது ஜென்மம் எடுத்த காலத்திலிருந்தே முயற்சி செய்வதின் ராசி மகாரதியினுடையதாக இருந்ததா அல்லது குதிரைப்படை அல்லது காலாட்படையினுடையதாக இருந்ததா என்று தன்னுடைய ராசியையும் பாருங்கள். இந்த ராசியின் கணக்குப்படி கூட ஜென்ம பத்திரிகை எப்படி இருக்கிறது என்று தெரிந்து விடும். மாஸ்டர் திரிகாலதரிசி மற்றும் ஞான சொரூபமானவராகி தன்னுடைய ஜென்ம பத்திரிகையைத் தானே சோதனை செய்யுங்கள் மற்றும் தன்னுடைய எதிர்காலத்தைப் பாருங்கள். ராசியை, திசைகளை மற்றும் ரேகைகளை மாற்றவும் முடியும். பகுத்தறிந்து கொண்ட பிறகு, சோதனை செய்த பிறகு, பின்பு மாற்றம் செய்வதற்கான வழியை கடைபிடிக்க வேண்டும். ஸ்தூல ஞானத்திலும் கூட அனேக வழிகள் கூறுகிறார்கள். இங்கோ வழியைத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படி வழிகள் மூலமாக சம்பூர்ண சித்தியை பிராப்தி செய்யுங்கள். புரிந்ததா?.

அந்த மாதிரி ஞானசொரூப புத்தி மூலமாக சித்தியை பிராப்தி செய்யக்கூடிய, சம்பூர்ண நிலையை தன்னுடைய வாழ்க்கை மூலமாக பிரத்யக்ஷமாக காண்பிக்கக்கூடிய, எப்பொழுதும் தன்னுடைய சுயநிலை மூலமாக சூழ்நிலையைக் கடந்து செல்லக்கூடிய மகாவீரர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 04.05.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அதிகாரி மற்றும் அடிமை!

எவ்வளவு சப்தத்தில் வருவதற்கான பழக்கம் நிரந்தரமான மற்றும் இயற்கையான ரூபத்தில் இருக்கிறது, அது போலவே சப்தத்திலிருந்து விலகி தன்னுடைய ஆத்மாவின் இயற்கையான குணமாகிய அமைதி சொரூப நிலையின் அனுபவத்தையும் இயற்கையான ரூபத்தில் மற்றும் நிரந்தரமாக செய்கிறீர்களா? இரண்டு பயிற்சிகளை சம ரூபத்தில் அனுபவம் செய்கிறீர்களா? அல்லது 84 ஜென்மங்களில் சரீரதாரி ஆவதின் சம்ஸ்காரம் மிகக் கடுமையாக ஆகி விட்டதா? 84 ஜென்மங்கள் சப்தங்களில் (பேச்சில்) வந்து கொண்டே இருக்கிறீர்கள் மற்றும் 84 ஜென்மங்களின் சம்ஸ்காரங்களை ஒரு நொடியில் மாற்றம் செய்ய முடியுமா அதாவது வார்த்தைகளிலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருக்க முடியுமா அல்லது அந்த சம்ஸ்காரம் அடிக்கடி தன் பக்கம் இழுக்கிறதா? என்ன நினைக்கிறீர்கள்? 84 ஜென்மங்களின் சம்ஸ்காரம் அதிக பலமுள்ளதாக இருக்கிறதா அல்லது இந்த மங்களமான சங்கமயுகத்தின் ஒரு நொடியில் அசரீரி, சப்தங்களிலிருந்து விலகி தன்னுடைய அனாதி நிலையின் அனுபவம் கூட அதிக பிரசித்தமானதாக இருக்கிறதா? அதை ஒப்பிடும்பொழுது இந்த நிலை தன் பக்கம் ஈர்க்கும் அளவிற்கு சக்திசாலியாக இருக்கிறதா அல்லது 84-ஜென்மங்களின் சம்ஸ்காரம் சக்திசாலியாக இருக்கிறதா? அது 84-ஜென்மங்கள் மேலும் இது ஒரு நொடியின் அனுபவம் ஆகும். இருந்தாலும் சக்திசாலியான அனுபவம் எதனுடையதாக இருக்கிறது? என்ன நினைக்கிறீர்கள்? அதிகமாக எது தன் பக்கம் ஈர்க்கிறது? அந்த அனுபவமா அல்லது இந்த அனுபவமா? சப்தத்தில் வரக்கூடிய சம்ஸ்காரமா அல்லது சப்தத்தில் இருந்து விலகியிருக்கக்கூடிய அனுபவமா?

உண்மையில் இந்த ஒரு நொடியின் அனுபவம் வெகுகாலத்தின் அனுபவத்தின் ஆதாரமாகும். ஒரு நொடியில் அனேக பிராப்திகளை

அனுபவம் செய்விக்கக்கூடியது, எனவே இந்த ஒரு நொடி அனேக வருடங்களுக்குச் சமமானது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுது விரும்புகிறீர்களோ மற்றும் எப்படி வாய் மூலம் பேச விரும்புகிறீர்களோ அப்படி பேச வேண்டும். இதைத் தான் ஒரு நொடி என்று கூறுவது. இந்த உடலை இயக்கி வைக்கக்கூடிய மாஸ்டர் எஜமானனின் நிலை. அப்படி எஜமானனாக ஆகியிருக்கிறீர்களா? உடலின் எஜமானனாக ஆகியிருக்கிறீர்களா? எஜமானனாக யார் ஆக முடியும் என்ற இதைத் தெரிந்திருக்கிறீர்களா? யார் முதலில் குழந்தையாகி விடுகிறாரோ அவர் தான் எஜமானன் ஆக முடியும். ஒருவேளை குழந்தையாக நீங்கள் ஆவதில்லை என்றால் நீங்கள் உங்களுடைய உடலின் அதிபதியாகவும் ஆக முடியாது. சர்வ சக்திவானின் குழந்தை தன்னுடைய உடலின் எஜமானனாக இருக்க மாட்டார்களா? இப்பொழுது குழந்தையாக இருக்கும் நான் தான் பின்பு எஜமானன் ஆகிறேன், இப்பொழுது இந்த உடலின் எஜமானனாக இருக்கிறேன், மேலும் பின்பு உலகத்தின் எஜமானன் ஆக வேண்டும் என்ற நினைவு சொரூபமாக ஆகி விடுவார்கள் அதாவது எவ்வளவு குழந்தை என்பதின் நினைவு இருக்குமோ அவ்வளவு எஜமானத் தன்மையின் போதை இருக்கும், குஷி இருக்கும் மற்றும் இந்த மகிழ்ச்சியிலேயே மூழ்கியிருப்பார்கள். ஒருவேளை எந்த நேரத்திலாவது உடலின் அடிமையாகி விடுகிறார்கள் என்றால் அதற்கான காரணம் என்ன? தன்னுடைய மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையை மறந்து விடுகிறார்கள். தன்னுடைய அதிகாரத்தை எப்பொழுதும் எதிரில் வைப்பதில்லை. அதிகாரி ஒருபொழுதும் யாருடைய அடிமையாகவும் ஆவதில்லை.

தன்னை எவரெடி (தயார் நிலையில் இருப்பவர்) மற்றும் ஆல்ரவுண்டர் (அனைத்து சேவைகளையும் செய்பவர்) என்று நினைக்கிறீர்களா? எவரெடியின் அர்த்தம் என்ன? எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும், எப்படிப்பட்ட சோதனைகள் இருந்தாலும் ஸ்ரீமத்படி எந்த நிலையில் நிலைத்திருக்க விரும்புகிறீர்களோ அதில் நிலைத்திருக்க முடியுமா? ஆர்டர்படி எவரெடியாக இருக்கிறீர்களா? ஆர்டர் என்றால் ஸ்ரீமத் எண்ணம் கூட ஸ்ரீமத்படி இருக்குமளவிற்கு அந்த மாதிரி எவரெடியாக ஆகியிருக்கிறீர்களா? ஸ்ரீமத் கூறுகிறது -ஒருநொடியில் சாட்சி நிலையில் நிலைத்து விடுங்கள், அப்படியானால் அந்த சாட்சி

நிலையில் நிலைத்திருப்பதில் ஒரு நொடிக்குப் பதிலாக ஒருவேளை இரண்டு நொடிகளும் ஆகி விட்டது என்றால் அதை எவரெடி என்று கூறலாமா? எப்படி இராணுவத்தில் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது நில் என்றால் உடனடியாக நின்று விடுகிறார்கள். நில் என்று சொன்ன பிறகு ஒரு அடி கூட முன்னுக்கு எடுத்து வைக்க முடியாது. இதே போல் ஸ்ரீமத் கிடைக்கிறது மற்றும் டைரக்ஷன் கிடைக்கிறது. மேலும் ஒரு நொடியில் அந்த நிலையில் நிலைத்து விட வேண்டும். இரண்டாவது நொடி கூட ஆகக்கூடாது. இதைத் தான் எவரெடி என்று கூறுவது, அந்த மாதிரி ஒரு நொடியில் அந்த நிலையில் நிலைத்து விட வேண்டும்.

ஒரு நொடியில் தன்னை நிலைத்திருக்கச் செய்வதற்கான இந்த முயற்சியைத் தான் தீவிர முயற்சி என்று கூறுவது. அனைவருமே தீவிர முயற்சியாளர்கள் தான் இல்லையா? முயற்சி செய்யும் நிலையை இப்பொழுது கடந்து வந்து விட்டீர்கள் இல்லையா? அனைவருமே தீவிர முயற்சியாளர் என்ற நிலைக்கு இப்பொழுது வந்து சேர்ந்து விட்டீர்களா என்ன? அந்த மாதிரி தன்னை அனுபவம் செய்கிறீர்களா? கொஞ்சம் கூட எண்ணங்களின் மேலே கீழே போவது இருக்க வேண்டாம், அந்த மாதிரி நிலையை அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்களா? இந்தக் கணக்குப்படி அனைவரும் எவரெடியாக இருக்கிறீர்களா? சக்தி சேனையோ எவரெடி ஆகி விட்டது இல்லையா? ஆயுதம் தரித்த சக்தி சேனை இந்த நிலை வரை வந்தடைந்து விட்டதா அல்லது வந்தடைந்து கொண்டே இருக்கிறோமா? என்ன இப்பொழுது வந்தடையவில்லையா? என்ன நினைக்கிறீர்கள்? இதில் பாண்டவர்கள் நம்பர் ஒன்னாக இருக்கிறார்களா அல்லது சக்திகளா? பாண்டவர்கள் வெளியுலக சூழ்நிலை மற்றும் சூழலின் நெருக்கத்தில் வந்தும் தன்னுடைய நிலையை அந்த மாதிரி ஆக்கி விட்டார்கள் என்றால் அது தான் அதிசயம். எப்படி தன்னுடைய கார் இருக்கிறது அல்லது ஏதாவது வாகனம் இருக்கிறது என்றால் அதை எங்கு விரும்புகிறீர்களோ அங்கு நிறுத்த முடியும் இல்லையா? அந்த மாதிரி தன்னுடைய ஒவ்வொரு கர்மேந்திரியங்களை எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது காரியத்தில் ஈடுபடுத்துங்கள். மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ கர்மேந்திரியங்களை கட்டுப்பாட்டில் கொண்டு வர முடிய வேண்டும். தன்னுடைய புத்தியை எங்கு விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம்

விரும்புகிறீர்களோ, அவ்வளவு நேரம் அந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்ய முடியும் இல்லையா? பாண்டவர்கள் நம்பர் ஒன்னில் இல்லையா என்ன? அல்லது எந்த விஷயத்தில் தன்னுடைய பாதுகாப்பு இருக்கிறது என்றால் அதில் சக்திகளை முன்னுக்கு வைக்கிறீர்களா? சக்திகளை கேடயமாக ஆக்குகிறீர்களா என்ன? சக்திகளும் குறைந்தவர்கள் அல்ல. சக்திகள் பாண்டவர்களுக்கு அதிகப்படியான உதவி கொடுத்து விடுவார்கள். சக்திகள் மகாதானியாக இருக்கிறார்கள் என்றால் அந்த மாதிரி எவரெடியாக ஆக்குங்கள்.

நல்லது, ஆல்ரவுண்டரின் அர்த்தம் என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா? ஆல்ரவுண்டரின் அர்த்தம் என்ன? நீங்கள் ஆல்ரவுண்டர் தான் இல்லையா? சம்பூர்ண நிலையில் ஆல்ரவுண்டரின் நிலை எது? இதில் மூன்று முக்கியமான விஷயங்களை கவனத்தில் வைக்க வேண்டியதாக இருக்கிறது. யார் ஆல்ரவுண்டராக இருப்பாரோ அவர் ஒன்று, சேவையில் இருப்பார், இரண்டாவது, சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தில் அனைவருடன் ஒன்றிணைந்து செல்லக்கூடிய விசேஷ குணம் அவரிடம் இருக்கும். மூன்றாவது எந்தவொரு ஸ்தூல காரியமாக இருந்தாலும் அதைத் தான் கர்மனா சேவை என்று கூறுவது, அந்த கர்மனாவின் பாடத்திலும் கூட எங்கு அவரை எந்த நேரத்தில் ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ அங்கு அந்தக் காரியத்தில் அவர் வெகுகாலமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது போன்றும், இதுவொன்றும் புதிய அனுபவம் இல்லை என்பது போன்றும் அவர் அந்த மாதிரி ஈடுபட்டுவிடுவார். ஒவ்வொரு காரியத்திலும் மிக பழைய மற்றும் தெரிந்தவராகவும் தென்படுவார். யார் இம்மூன்று விஷயங்களிலும் ஒவ்வொரு சமயத்திலும் ஈடுபட்டு விடுகிறாரோ அவரைத் தான் ஆல்ரவுண்டர் என்று கூறுவது. ஏனென்றால், இந்த ஒவ்வொரு விஷயத்தின் ஆதாரத்தில் கர்மத்தின் ரேகைகள் உருவாகிறது மற்றும் ஆத்மாவின் சம்ஸ்காரங்களின் ரிகார்ட் நிரம்புகிறது. எனவே இந்த அனைத்து விஷயங்களுக்கும் பிராப்திக்கும் மிகுந்த தொடர்பு இருக்கிறது.

ஒருவேளை ஏதாவது விஷயத்தில் 90-சதவிகிதம் இருக்கிறது, 10-சதவிகிதத்தின் குறை இருக்கிறது என்றால் பிராப்தியிலும் கூட இந்தக் கொஞ்ச குறைவின் பிரபாவம் கூட ஏற்படுகிறது. இந்த சூட்சும

குறையின் காரணமாகத் தான் வரிசைக்கிரமம் கீழே இறங்கி விடுகிறது. அப்படியே பார்த்தீர்கள் என்றாலும், சமமான முயற்சியாளராகத் தென்படுவார்கள், அவர்களில் முக்கியமான விஷயங்கள் ஒருவர் இன்னொருவரில் சமமாகத் தென்படும் ஆனால் ஒருவேளை நுணுக்கமான ரூபத்தில் பார்த்தீர்கள் என்றால் ஏதாவது சதவிகிதத்தின் குறை இருக்கும் காரணத்தினால், சமமாகத் தென்பட்ட போதிலும் வரிசைக்கிரமத்தில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அப்படி மூன்று விஷயங்களிலுமே என்ன சதவிகிதம் இருக்கிறது என்ற இதன் மூலம் தன்னுடைய எண் எதுவாக இருக்கும் என்று தெரிந்து கொள்ள முடியும். மூன்று விஷயங்களும் என்னுள் இருக்கிறது என்ற இதில் மட்டும் குஷியடைந்து விடாதீர்கள். இதன் மூலம் நம்பர் உருவாகாது. எவ்வளவு சதவிகிதத்தில் இருக்கிறது அதன் பிரகாரம் நம்பர் உருவாகும். அப்படி யானால் அந்த மாதிரி எவரெடியாக மற்றும் ஆல்ரவுண்டராக ஆகியிருக்கிறீர்களா?

அனைவரின் லட்சியமோ முதலில் வருவதற்கானது தான் இல்லையா? கடைசியில் வந்தால் கூட ஒன்றும் பாதகமில்லை என்று அந்த மாதிரி லட்சியமோ இல்லை இல்லையா? ஒருவேளை எவ்வளவு கிடைக்கிறதோ அதுவே நல்லது என்ற இந்த லட்சியத்தையும் வைக்கிறீர்கள் என்றால் அவரை என்னவென்று கூறுவது? அந்த மாதிரி பலமற்ற ஆத்மாவின் டைட்டிலாக (பட்டமாக) என்னவிருக்கும்? அந்த மாதிரியான ஆத்மாக்கள் சாஸ்திரங்களிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒன்றோ அவருடைய டைட்டில் என்னவென்று கூறுங்கள், இன்னொன்று அவர்கள் எப்படி வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுங்கள். அந்த மாதிரியான ஆத்மாக்கள் "எப்பொழுது பகவான் பாக்கியத்தைக் கொடுத்தாரோ அந்த நேரம் தூங்கிக் கொண்டிருந்தார்கள்" என்று கூறப்பட்டிருக்கிறார்கள். அலட்சியமும், அரைத்தூக்கம் தான். யார் அலட்சியத்தில் இருக்கிறார்களோ அவர்களும் தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் நிலை ஆகும். ஒருவேளை கவனக்குறைவானவராக ஆனாலும் கூட, தூங்கிக் கொண்டிருந்தாயா என்று கூறுவார்கள். அந்த மாதிரியானவருக்கு டைட்டிலாக என்ன இருக்கும்? வந்திருக்கும் பாக்கியத்தை எட்டி உதைப்பவர்கள் என்று அவர்களைக் கூறப்படுகிறது. பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தையாகவும் ஆனார்கள் அதாவது

அதிகாரியாகவும் ஆனார்கள், பாக்கியம் எதிரில் வந்தது அதாவது தந்தை பாக்கியத்தை உருவாக்குபவர் எதிரில் வந்தார். எதிரில் வந்திருக்கும் பாக்கியத்தை உருவாக்குவதற்குப் பதிலாக எட்டி உதைத்தார் என்றால் அந்த மாதிரியானவரை என்னவென்று கூறுவது? பாக்கியமற்றவர் என்று தான் கூறலாம். அவர்கள் எங்கேயும் சுகத்தை அடைய முடியாது. அந்த மாதிரியோ இங்கு யாராவது ஆகுபவர்கள் இல்லை தான் இல்லையா? நீங்கள் உங்களுடைய அதிர்ஷ்டத்தை உருவாக்குபவர்கள். எப்படி அதிர்ஷ்டத்தை உருவாக்குவீர்களோ அந்த மாதிரி எதிர்காலத்தில் பிராப்தி என்ற ஓவியம் உருவாகும். தன்னுடைய எதிர்காலத்து ஓவியத்தை தெரிந்திருக்கிறீர்களா? தன்னுடைய ஓவியத்தை வரையக்கூடிய ஓவியன் தான் நீங்கள் இல்லையா? அப்படியானால் உங்களுடைய ஓவியத்தை எதுவரை வரைந்திருக்கிறீர்கள் என்று நீங்களே தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது ஓவியத்தை வரைந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது கடைசி டச்சிங் மட்டும் செய்வதற்கு மீதம் இருக்கிறதா? ஓவியத்தை உருவாக்கி விட்டீர்கள் என்றால் அது அவசியம் எதிரில் வரும். ஒருவேளை எதிரில் வரவில்லை என்றால் அதை உருவாக்குவதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதாகும். உருவாகி விட்டது என்றால் பின்பு அடிக்கடி எதிரில் வரும். அப்படி அனைவரும் நம்பர் ஒன் ஓவியர்கள் தானா அல்லது இரண்டாவது, மூன்றாவது இடத்தில் உள்ளவர்களாக இல்லையே? சில நல்ல ஓவியர்கள் இருக்கிறார்கள் ஆனால் பரந்த மனம் இல்லை என்றால் ஏதாவது குறையை செய்து விடுகிறார்கள். அப்படி நல்ல ஓவியராகவும் இருந்து, பொருட்களும் மிக நல்லதாக கிடைத்திருக்கிறது, அதே போல் பரந்த மனமுடையவராகவும் ஆகி அதாவது தன்னுடைய எண்ணம், சொல், செயல், நேரம், மூச்சு ஆகிய இவையனைத்து பொக்கிஷங்களையும் பரந்த மனதோடு உபயோகித்தீர்கள் என்றால், ஓவியம் மிக நல்லதாக உருவாகி விடும். அனேகர்களிடம் இருந்தும் கூட உபயோகப்படுத்துவதில்லை. சிக்கனம் செய்கிறார்கள். இதில் எவ்வளவு பரந்த மனம் உடையவர்களாக ஆவீர்களோ அவ்வளவு ஃபர்ஸ்ட் கிளாஸ் ஆவீர்கள். இதில் நேரத்தில் சிக்கனமும் செய்யக்கூடாது. இதே காரியத்தில் ஈடுபடுத்துவதில் சிக்கனம் செய்யக்கூடாது. வீணான காரியத்தில் ஈடுபடுத்துவதில் சிக்கனம் செய்யுங்கள். உயர்ந்த காரியத்தில் சிக்கனம் செய்யக்கூடாது. யதார்த்த

எகனாமி (சிக்கனம்) எதுவென்று கூறியிருந்தோம் இல்லையா? ஏக்னாமி ஆவது. அதாவது ஒருவரின் பெயர் எப்பொழுதும் நினைவில் இருப்பது. அந்த மாதிரி ஏக்னாமியாக இருப்பவர், எகனாமி செய்ய முடியும். யார் ஏக்னாமி இல்லையோ அவர் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் யதார்த்தமான எகனாமி செய்ய முடியாது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சுயதர்மம் அதாவது சப்தத்திலிருந்து விலகியிருக்கும் நிலையில் நிலைத்திருந்து சப்தத்தில் வரக்கூடிய மற்றும் எப்பொழுதும் அனைத்து சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் எவரெடி, ஆல்ரவுண்டர் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

வரதானம்: தன்னுடைய பார்வை மற்றும் உள்ளுணர்வின் பரிவர்த்தனை மூலமாக உலகை மாற்றக்கூடிய சாட்சாத்கார மூர்த்தி ஆகுக!

தன்னுடைய உள்உணர்வின் பரிவர்த்தனை மூலமாக பார்வையை தெய்வீகமாக ஆக்கினீர்கள் என்றால் பார்வை மூலமாக அனேக ஆத்மாக்கள் தன்னுடைய யதார்த்த ரூபம் யதார்த்த வீடு மற்றும் யதார்த்த இராஜ்யத்தைப் பார்ப்பார்கள். அந்த மாதிரி யதார்த்த சாட்சாத்காரம் செய்விப்பதற்காக உள்ளுணர்வில் கொஞ்சம் கூட தேக அபிமானத்தின் சஞ்சலம் இருக்க வேண்டாம். அப்படி உள்ளுணர்வின் சரி செய்தல் மூலமாக பார்வையை தெய்வீகமாக ஆக்கினீர்கள் என்றால் அப்பொழுது தான் உலக மாற்றம் ஏற்படும். பார்ப்பவர்கள் இது கண்கள் அல்ல, ஒரு மந்திரப்பெட்டி என்று அனுபவம் செய்வார்கள். இந்தக் கண்கள் சாட்சாத்காரம் செய்விக்கும் சாதனம் ஆகி விடும்.

சுலோகன்: சேவையின் ஊக்கம் உற்சாகத்தின் கூடவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு தான் வெற்றிக்கு ஆதாரம் ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 08.05.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மிக உயர்ந்த சுவமானம் (சுய கௌரவம்)!

தற்சமயம் தன்னைத் தானே எந்த சுவமானத்தில் (சுயகௌரவம்) இருப்பதாக நினைக்கிறீர்கள்? தன்னுடைய சுவமானத்தை தெரிந்திருக்கிறீர்களா? அனைத்தையும் விட மிக உயர்ந்த சுவமானம் இந்த நேரம்த்தில் தான் இருக்கிறது என்ற இதை தெரிந்தே இருக்கிறீர்கள் ஆனால் அது எந்த சுவமானம்? மிக உயர்ந்த சுவமானம் எது? அதை வர்ணனை செய்வதிலேயே இதை விட பெரிய சுவமானம் வேறு இருக்க முடியாது என்று தென்படும், அது எது? இந்த நேரத்தின் மிக உயர்ந்த சுவமானமாக இது தான் உள்ளது. நீங்கள் இப்பொழுது தந்தைக்கும் எஜமானனாக ஆகிறீர்கள். உலகத்தின் எஜமானன் ஆவதினால், முதலில் உலகை படைப்பவரின் எஜமானனாக ஆகிறீர்கள். சிவபாபாவிற்கும் எஜமானர்கள் நீங்கள். எனவே மாலேகம் சலாம் (எஜமானனுக்கும் வணக்கம்) என்று கூறுகிறார்கள். சுபுத்திர (நல்ல தகுதியுள்ள) குழந்தை தந்தைக்கும் எஜமானன் ஆகிறார். இந்த நேரம் தந்தையையும் கூட தன்னுடையவராக ஆக்கி விட்டீர்கள். முழுக்கல்பத்திலும் தந்தையை அந்த மாதிரி தன்னுடையவராக ஆக்க முடியாது. இப்பொழுதோ எப்பொழுது விரும்புகிறீர்களோ, எந்த ரூபத்தில் விரும்புகிறீர்களோ அந்த ரூபத்தில் தந்தையை தன்னுடையவராக ஆக்க முடியும். தந்தையும் இந்த நேரம் எந்த பந்தனத்தில் இருக்கிறார்? குழந்தைகளின் பந்தனத்தில்) அப்படியானால் படைப்பவரையும் பந்தனத்தில் கட்டிப்போடுபவர். படைப்பவரையும் சேவாதாரியாக ஆக்குபவர் அப்படிப்பட்ட சுவமானத்தை பின்பு எப்பொழுதாவது அனுபவம் செய்வீர்களா? தந்தையை உங்களுடைய சேவைக்காக அடிமை ஆக்கி விட்டீர்கள் இல்லையா? இது சுத்த சுவமானம் ஆகும். இதில் அபிமானம் இருப்பதில்லை. எங்கு சுவமானம் இருக்கிறதோ அங்கு அபிமானம் இருப்பதில்லை. தந்தையை சேவாதாரியாக ஆக்கியிருக்கிறீர்கள் ஆனால் அபிமானம் வராது. அப்படியானால் தன்னுடைய அந்த மாதிரியான சுத்தமான

சுவமானத்தில், எங்கு அபிமானத்தின் பெயர், அடையாளம் இருக்காதோ, அந்த நிலையில் நிலைத்திருக்கிறீர்களா?

எப்படி தந்தை எப்பொழுதும் ஆம் குழந்தைகளே, இனிமையான குழந்தைகளே. உலகத்தின் எஜமானக் குழந்தைகள் என்று புரிந்து தன்னுடைய தலைகிரீடமாக ஆக்குகிறார், அந்த மாதிரி தலைகிரீட நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? பிராமணர்களின் குடுமியின் இடம் எங்கு இருக்கிறது? தலைக்கு மேலே (உச்சியில்) இருக்கிறது இல்லையா? அப்படி பிராமணர்களின் குடுமி என்றால் தந்தையின் தலைகிரீடம். எப்படி தந்தை எப்பொழுதும் குழந்தைகளுக்கு சுவமானத்தை கொடுத்துக் கொண்டே தனக்குச் சமமாக ஆக்குகிறார், அதே போல் நீங்கள் அனைவரும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் எப்பொழுதும் சுவமானம் கொடுத்து தந்தைக்குச் சமமாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்களா? இந்த நேரம் ஒரு தந்தையிட மிருந்து மட்டும் தான் பெற வேண்டும் மற்ற அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்ற இந்த நினைவு எப்பொழுதும் இருக்கிறதா? ஆத்மாக்களாகிய உங்களுக்கு மற்ற ஆத்மாக்களிடமிருந்து பெற வேண்டியதில்லை, ஆனால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒரு தந்தையிடமிருந்து மட்டும் தான் பெற வேண்டும். என்ன பெற்றீர்களோ அதைக் கொடுக்க வேண்டும். வள்ளல் அல்லவா? இது எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? மேலும் எங்கு கொடுக்கிறீர்களோ அங்கும் பெறுவதற்கான ஆசை வைக்கிறீர்களா? ஒருவேளை ஒரு ஆத்மா, இன்னொரு ஆத்மா மூலமாக ஏதாவது பெற வேண்டும் என்ற இச்சை வைக்கிறார் என்றால் அதன் பிராப்தியாக என்ன இருக்கும்? அற்ப காலத்திற் கானதாகத் தான் இருக்கும் இல்லையா? அல்பஜ (ஒன்றுமில்லாத) ஆத்மாக்களிடமிருந்து அற்ப காலத்தின் பிராப்தி தான் இருக்கும். சர்வஜ (அனைத்தும் நிறைந்த) தந்தையிடமிருந்து சதா காலத்திற்கும் பிராப்தி இருக்கும். அப்படியானால் எங்கிருந்து பெற வேண்டுமோ அங்கிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா? மேலும் எங்கே கொடுக்க வேண்டுமோ அங்கு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது எப்பொழுதாவது இதை மாற்றம் செய்து விடுகிறீர்களா? ஒருவேளை ஒரு ஆத்மா இன்னொரு ஆத்மாவிற்கு ஏதாவது கொடுக்கிறது என்றாலும் கூட தந்தையிடமிருந்து பெற்றதைத் தான் கொடுக்கும் இல்லையா?

கொஞ்சமாவது ஏதாவது பெற வேண்டும் என்ற ஆசை இருந்தால் தன்னுடைய சுவமானத்திலிருந்து கீழே தள்ளி விடுகிறது.

எப்பொழுது நீங்கள் கூட தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பொக்கிஷத்தை ஏதாவது ஆத்மாவிற்கு கொடுப்பதற்கான பொறுப்பாளர் ஆகிறீர்கள் என்றாலும் என்ன நினைவு இருக்கிறது? ஆத்மாவிடம் தன்னுடையது என்று ஏதாவது இருக்கிறதா? தந்தை கொடுத்ததைத் தான் தன்னுடையதாக ஆக்கினார்கள். எப்பொழுது மற்றவர்களுக்கும் கொடுப்பதற்கான பொறுப்பாளர் ஆகிறீர்களோ, அந்த நேரம் ஒருவேளை தந்தையின் பொக்கிஷத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்ற அந்த நினைவு இல்லை என்றால் அந்த ஆத்மாக்களை உயர்ந்த சம்மந்தத்தில் இணைக்க முடியாது. இதே நினைவில் இருந்து கொண்டு ஒவ்வொரு காரியமும் செய்கிறீர்களா? தன்னுடைய உயர்ந்த சுவமானத்தின் போதையும் இருக்கட்டும். அதன் கூடவே வேறு என்ன இருக்கிறது? (குஷி) எவ்வளவு புத்தியில் போதை இருக்குமோ, அந்த அளவே காரியத்தில் பணிவு, இது தான் இந்த போதையின் அடையாளம் ஆகும். போதையும் உயர்ந்த தாக இருக்கும் ஆனால் காரியத்தில் பணிவு இருக்கும். கண்களில் எப்பொழுதும் பணிவு இருக்கும். எனவே போதையில் ஒருபொழுதும் நஷ்டம் ஏற்படுவதில்லை. புரிந்ததா?

போதை மட்டும் வைக்க வேண்டாம். ஒரு பக்கம் மிக அதிக போதை, இன்னொரு பக்கம் மிக அதிக பணிவு. எப்படி உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையும் குழந்தைகளின் எதிரில் அடிமையாகி வருகிறார் என்று கூறினோம் இல்லையா? அதுவும் பணிவானது இல்லையா? எவ்வளவு உயர்ந்தவரோ அந்தளவே பணிவு. அந்த மாதிரி சமநிலை இருக்கிறதா? அல்லது எந்த நேரம் போதையில் இருக்கிறீர்களோ அந்த நேரம் வேறு எதுவுமே பிடிப்பதில்லையா' ஏனென்றால் எப்பொழுது நான் உலகைப் படைப்பவரினும் எஜமானன் ஆவேன் என்ற தன்னுடைய இந்த சுவமானத்தின் போதையில் இருக்கிறீர்கள் என்றால் அந்த மாதிரி போதையில் இருப்பவர்களின் காரியமாக என்ன இருக்கும்? உலகத்தின் நன்மை பணிவு இன்றி ஏற்பட முடியாது. தந்தையை தன்னுடையவராக எப்பொழுது ஆக்கினீர்கள் என்றால், தந்தையும் பணிவோடு குழந்தைகளின் சேவாதாரியாக எப்பொழுது ஆனாரோ அப்பொழுது தான். அதே போல தந்தையைப் பின்பற்றி நடங்கள்.

தந்தையிடமிருந்து எவ்வளவு பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன என்று ஒவ்வொரு நேரமும் சோதனை செய்யுங்கள். எத்தனை பொக்கிஷங்களுக்கு அதிபதி என்று உங்களுக்குத் தெரியுமா? (கணக்கில் அடங்காதது). இருந்தாலும் முக்கியமானதோ வர்ணனை செய்வதில் வரும் இல்லையா? இந்த சங்கமயுகத்தில் முக்கியமாக எத்தனை பொக்கிஷங்கள் இருக்கின்றன? உங்களுக்கு எத்தனை கிடைத்திருக்கின்றன? அனைத்தையும் விட மிகப் பெரிய பொக்கிஷமாக தந்தை கிடைத்திருக்கிறார். முதல் நம்பரின் பொக்கிஷமோ இது தான் இல்லையா? எப்படி யாருக்காவது சாவி கிடைத்து விட்டது என்றால் அனைத்தும் கிடைத்து விட்டது என்பது தானே. தந்தை கிடைத்து விட்டார் என்றால் அனைத்தும் கிடைத்து விட்டது. வேறு என்ன கிடைத்திருக்கிறது? கூடவே அதையும் வர்ணனை செய்யுங்கள். ஞானமும் இருக்கிறது மேலும் அஷ்ட சக்திகளும் இருக்கின்றன. ஒவ்வொரு சக்தியையும் தனித்தனியாக வர்ணனை செய்தீர்கள் என்றால் தனித்தனியான சக்திகளும் பொக்கிஷத்தின் ரூபத்தில் இருக்கிறது. இந்த விதமாக தந்தையின் குணமாக என்ன வர்ணனை செய்கிறீர்களோ அந்த குணத்தையும் பொக்கிஷத்தின் ரூபத்தில் நீங்கள் வர்ணனை செய்யலாம். இந்த விதமாக இந்த விலைமதிக்க முடியாத சங்கமயுக நேரத்தின் ஒவ்வொரு விநாடியும் பொக்கிஷம் தான். எப்படி பொக்கிஷத்திலிருந்து பிராப்தி ஏற்படுகிறதோ அதே போல் இந்த சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடியிலிருந்தும் உயர்ந்த பிராப்தி செய்ய முடியும். அப்படி இந்த சங்கமயுகத்தின் நேரம் அதாவது ஒவ்வொரு விநாடியும் அனேக பல கோடி மடங்கை விட அதிகமான பெரிய பொக்கிஷமாகும். ஒருவேளை அனேக கோடிகளை ஒரு பக்கம் வையுங்கள் மற்றும் சங்கமயுகத்தின் ஒரு விநாடியை இன்னொரு பக்கம் வத்தீர்கள் என்றாலும் உயர்ந்ததாக சங்கமயுகத்தின் ஒரு விநாடியைத் தான் எடுக்க முடியும். ஏனென்றால், இந்த ஒரு விநாடியிலேயே சதா காலத்திற்கும் தேவையான பிராப்தி ஏற்படுகிறது. ஒரு விநாடியில் முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் ஆஸ்தியை எடுக்க முடியும் என்று அனைவருக்கும் கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி ஒவ்வொரு விநாடிக்கும் மதிப்பு ஏற்பட்டு விட்டது இல்லையா? அப்படி சங்கமயுகத்தின் நேரமும் மிகப் பெரிய பொக்கிஷமாகும்.

இப்பொழுது இந்த அனைத்து பொக்கிஷங்களிலிருந்து நான் எனக்குள் எவ்வளவு பொக்கிஷங்களை தாரணை செய்ய முடிந்திருக்கிறது என்று சோதனை செய்யுங்கள். மேலும் சில பொக்கிஷம் தாரணை ஆகியிருக்கிறது மற்றும் சில தாரணை ஆகவில்லை என்று அப்படி இல்லைதானே? ஏதாவது பொக்கிஷத்தினால் பாதி மட்டும் நிரம்பியவராகவோ இருந்து விடவில்லையே? வஞ்சிக்கப் பட்டவராக ஆகமாட்டீர்கள் ஆனால் ஒருவேளை அரைகுறையான பிராப்தி செய்திருந்தாலும் சூரிய வம்சியாக ஆகவில்லை, சந்திரவம்சியாக ஆகி விடுவீர்கள். சூரியவம்சி என்றால் முழுமையாக நிரம்பியவர். ஏதாவது விஷயத்தில் ஒருவேளை முழுமையாக நிரம்பியவராக இல்லை என்றால் சூரியவம்சி என்று கூற மாட்டோம். அப்படி அனைத்து பொக்கிஷங்களை எதிரில் வைத்து இவைகள் எனக்குள் எந்த அளவு இருக்கின்றன என்று சோதனை செய்யுங்கள். கொஞ்சத்திலேயே குஷியடைந்து விட்டீர்கள் அப்படி இந்த அனைத்து பொக்கிஷங்களையும் சோதனை செய்யுங்கள். மேலும் கூடவே என்னென்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றனவோ அவற்றின் மகாதானியாக ஆகியிருக்கிறேனா அல்லது அவற்றை எனக்காக மட்டும் வைத்துக் கொண்டேனா என்று இதையும் சோதனை செய்யுங்கள். மகாதானியாக இருப்பவர்கள் தன்னுடையதையும் மற்றவர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள் ஆனால் இருந்தாலும் அவர்கள் மற்றவர்களிடம் கேட்பவர்களாக ஆவதில்லை. ஏனென்றால் என்ன கொடுக்கிறார்களோ அவை அவர்களிடம் தானாகவே அதிகரித்து விடுகிறது. எனவே தூய்மை என்ற பொக்கிஷத்தை எவ்வளவு அனேக ஆத்மாக்களுக்கு தானமாகக் கொடுத்திருக்கிறேன் என்று இதையும் பாருங்கள். அதீந்திரிய சுகம் என்ற பொக்கிஷத்தையும் அதிகமாக தனக்காக பயன்படுத்தி இருக்கிறேனா அல்லது உலக சேவைக்காகப் பயன்படுத்தி இருக்கிறேனா என்று இதையும் பார்க்க வேண்டும். தன்னுடைய பிராப்தியையோ செய்தாகி விட்டது இல்லையா? ஆனால் இப்பொழுதைய நிலை உலக சேவைக்காகப் பயன்படுத்துவதற்கானதாகும். எனவே ஒவ்வொரு பொக்கிஷத்தையும் தனக்காக எவ்வளவு பயன்படுத்தினீர்கள்? மேலும் மற்றவர்களுக்காக எவ்வளவு பயன்படுத்தினீர்கள் என்று சோதனை செய்ய வேண்டும். இதைத் தான் சம்பூர்ண நிலை என்று கூறுவது, அனைத்து

பொக்கிஷங்களையும் மற்றவர் களுக்காகப் பயன்படுத்தினீர்களா? ஒருவேளை தன்னுடைய முயற்சிக்காக மட்டும் ஞானத்தின் பொக்கிஷம் மற்றும் சக்திகளின் பொக்கிஷத்தைப் பயன்படுத்திக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அதுவும் சம்பூர்ண நிலையாக ஆகவில்லை. இப்பொழுது மற்றவர்களுக்காக பயன்படுவதில் கொண்டு வருவதற்கான நேரம் ஆகும். ஒருவேளை இப்பொழுது வரையிலும் கூட அனைத்து சக்திகளை தனக்காகவே பயன்படுத்திக் கொண்டிருந்தீர்கள் என்றால் மற்றவர்களுக்காக மகாதானி மற்றும் வரதானியாக எப்பொழுது ஆவீர்கள்? இப்பொழுது தனக்காக இவற்றைப் பயன்படுத்த வேண்டாத அளவிற்கு பயிற்சி செய்யுங்கள். ஒருவேளை அனைத்து பொக்கிஷங்களையும் மற்றவர்களுக்காகவே காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே இருந்தீர்கள் என்றால் நீங்கள் காலியாகி விடுவீர்களா என்ன?

எப்படி தந்தை (பிரம்மாபாபா) தன்னுடைய ஓய்வு நேரத்தையும், எது உடலுக்காக அவசியமானதோ அதையும் தனக்காகப் பயன்படுத்தாமல் உலக நன்மைக்காக ஈடுபடுத்திக் கொண்டே இருந்தார். அதே போல் அனைத்து சக்திகளையும் தனக்காக இன்றி உலக நன்மைக் காரியத்திற்காக ஈடுபடுத்த வேண்டும். எப்பொழுது அனைவருக்கும் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டுமென்றால் தந்தைக்குச் சமமான நிலையையும் தாரணை செய்வீர்கள் இல்லையா? மற்றவர்களுக்குக் கொடுக்க ஆரம்பித்து விட்டீர்கள் என்றாலே தன்னைத் தானே அனைத்து விஷயங்களில் நிரம்பியிருப்பதற்கான அனுபவம் செய்வீர்கள். மற்றவர்களுக்குப் படிப்பிப்பதில் தனக்குப் படிப்பிப்பது தானாகவே ஏற்பட்டு விடும். இப்பொழுது இரட்டை அதாவது மற்றவர்களுக்காகத் தனியாக, தனக்காகத் தனியாக நேரத்தை செலவழிக்கிறீர்கள். இப்பொழுது ஒரே நேரத்தில் இரட்டை காரியங்கள் செய்யுங்கள். ஏனென்றால் நேரம் குறைவாக இருக்கிறது. நேரம் குறைவாக இருக்கிறது என்றால் இரண்டு படிப்புகளை சேர்ந்தே படிப்பார்கள். இதுவும் அதே போல் தான். நேரம் அருகில் வருகிறது என்றால் மற்றவர்களுக்குக் கொடுப்பதின் கூடவே தன்னுடையதையும் சேமிப்பு செய்யுங்கள். தனக்காக ஈடுபடுத்தாதீர்கள், ஒருவேளை இதுவரையிலும் தனக்காக ஈடுபடுத்தி மேலும் நேரத்தை இழந்து கொண்டேயிருந்தீர்கள்

என்றால் உலக மகாராஜன் ஆக முடியாது. லட்சியமோ உலக மகாராஜன் ஆவதற்கானது தான் இல்லையா?

தொடக்கத்தில் எப்பொழுது ஞான கங்கைகள் வெளிப்பட்டார்களோ அந்த நேரத்து சேவையின் விசேஷமாக என்ன இருந்தது? அந்த நேரத்தில் வெளியான வாரிசு மற்றும் இந்த நேரத்தில் வெளியாகியிருக்கும் ஆத்மாக்களில் என்ன வித்தியாசம் இருக்கிறது? சேவையோ இப்பொழுது அதிகமாக நடந்து கொண்டிக்கிறது ஆனால் வாரிசு தென்படவில்லை, ஏன்? காரணம், விஸ்தாரத்திலோ மிக அதிகமாக ஆகியிருக்கிறது, ஆனால் மூல காரணம் என்ன? அந்த நேரம் தன்னுடையது என்பது இல்லாமல் இருந்தது, உலக நன்மைக்காக தன்னுடைய அனைத்தையும் கொடுப்பது, இந்த பாவனை இருந்தது. ஏக்நாமி (ஒரு பாபா மட்டும் நினைவிலிருந்த நிலை), மற்றும் எகனாமி (வீணாக்காத சிக்கனமானவர்கள் ஆக இருந்தார்கள். னைத்து பொக்கிஷங்களில் எகனாமியாக இருந்தார்கள். வீணாக இழப்பதில்லை. நேரம் மற்றும் என்ன சக்தி அடைந்திருக்கிறார்களோ அவற்றை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் அதாவது மகாதானியின் நிலை இருந்தது. ஏனென்றால் முக்கியமாக பொறுப்பாளர்களாக ஆகியிருந்தார்கள். அப்படி அந்த நேரத்து நிலையையும், இந்த நேரத்து நிலையையும் பாருங்கள், எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? இப்பொழுது முதலில் தன்னுடைய சாதனத்தைப் பற்றி யோசிப்பார்கள், பிறகு சேவையின் சாதனம் அதாவது முதலில் சால்வேஷன் (சௌகரியங்கள்) பிறகு சர்விஸ் (சேவை) ஆனால் தொடக்கத்தில் முதலில் சர்வீஸ் இருந்தது. பின்பு தீர்வு கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி. தீர்வின் மூலமாக சேவை செய்ய வேண்டுமென்பது எண்ண அளவில் கூட இல்லாமல் இருந்தது. சாதனம் இருந்தது என்றால் சேவை இருக்கும், உதவியாளர்கள் இருந்தார்கள் என்றால் சேவை இருக்கும், தயாரான இடம் இருந்தது என்றால் சேவை இருக்கும் என்று இந்த எண்ணம் இருந்தது இல்லை. எங்கு சென்றாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் மேலும் வசதிகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் சகித்துக் கொள்ளும் சக்தி மூலமாக சேவையை வளர்க்க வேண்டும் என்ற இந்த மகாதானியின் நிலை இருந்தது.

தன்னுடைய தியாகம் மூலம் மற்றவர்களின் பாக்கியம் உருவாகிறது. எங்கு தன்னுடைய தியாகம் இல்லையோ அங்கு மற்றவர்களின் பாக்கியம் உருவாவதில்லை. தந்தையோ தன்னுடையதை தியாகம் செய்தார் அதனால் அனேக ஆத்மாக்கள் உங்களுடைய பாக்கியம் உருவாகியது. அப்படி தொடக்கத்தின் நிலையில் தன்னுடைய அனைத்து சுகங்களின் தியாகம் இருந்தது. இதன் மூலம் இந்த பாக்கியம் உருவானது. இப்பொழுது எவ்வளவு தியாகமோ அவ்வளவு மற்றவர்களுக்கு பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே வாரிசு மறைந்திருக்கிறார்கள். அப்படி இப்பொழுது மீண்டும் அதே மகாதானி ஆவதற்கான சம்ஸ்காரம் மற்றும் எப்பொழுதும் அனைத்து பிராப்திகள் இருந்த போதிலும் மற்றும் அனைத்து சாதனங்கள் இருந்த போதிலும், சாதனங்களின் மேல் செல்லாமல் சாதனாவில் (இடைவிடாத பயிற்சியில்) இருங்கள். இப்பொழுது சாதனா குறைவாக இருக்கிறது, சாதனம் அதிகமாக இருக்கிறது. தொடக்கத்தில் சாதனம் குறைவாக இருந்தது, சாதனா அதிகமாக இருந்தது. எனவே இப்பொழுது நிரந்தரமாக அந்த சாதனாவில் இருங்கள், அதாவது சாதனங்கள் இருந்தபோதிலும் தியாக உணர்வில் இருங்கள். அதன் மூலம் கொஞ்ச நேரத்தில் அனேக ஆத்மாக்களின் பாக்கியத்தை உருவாக்க முடியும். பாப்தாதா உங்கள் அனைவரின் கையில் ஆத்மாக்களின் பாக்கிய ரேகையைப் இடுவதற்கான அதிகாரம் கொடுத்திருக்கிறார். தன்னுடைய தியாகத்தின் குறைவின் காரணமாக அனேக ஆத்மாக்களின் பாக்கியத்தின் ரேகை நிறைவு பெறாமல் ஆகி விட்டது என்பது போன் இருக்க வேண்டாம். இது மிகப் பெரிய பொறுப்பாகும். எப்படி, எப்படி நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறதோ அப்படி எண்ணத்தையும் வீணாக இழக்காமல் இருப்பதற்கான பொறுப்பும் ஒவ்வொரு ஆத்மாக்களின் மேல் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இப்பொழுது தன்னுடைய குழந்தைப் பருவம் என்று நினைக்காதீர்கள். குழந்தைப் பருவத்தில் என்ன செய்தீர்களோ அது மிகவும் பிடித்திருந்தது. குழந்தைகளுக்கு கவனக்குறைவாக இருப்பது பிடித்திருக்கும். பெரிய மனிதன் மாதிரி நடந்து கொள்வது பிடிக்காது. மேலும் பெரியவர்களுக்கு கவனக்குறைவு பிடிக்காது எனவே நேரத்திற்குத் தகுந்தாற்போல் தன்னுடைய சுவமானத்தை நிலைத் திருக்கச் செய்து கொண்டே பொறுப்புக்களை கவனித்துக் கொண்டே இருங்கள். புரிந்ததா?

நல்லது, அந்த மாதிரி தந்தையை அனைத்து உறவுகளினால் தன்னுடையவராக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களை அனைத்து ஆத்மாக்களுக்காக தானம் கொடுக்கக்கூடிய மகாதானி, வரதானி, மகாதியாகி மற்றும் பலகோடி மடங்கு பாக்கியவான் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

வரதானம்: வள்ளலாகி ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு எண்ணத்தில் தானம் கொடுக்கக்கூடிய நன்மை பயக்கும் சிந்தனையுள்ள மகாதானி ஆகுக!

வள்ளலின் குழந்தைகள் நீங்கள் பெறுபவர்கள் அல்ல ஆனால் கொடுப்பவர்கள். ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தில் கொடுக்க வேண்டும், எப்பொழுது அந்த மாதிரி வள்ளலாகி விடுவீர்களோ அப்பொழுது நன்மை பயக்கும் சிந்தனையுள்ளவர், மகாதானி என்று கூறலாம். அந்த மாதிரி மகாதானி ஆவதினால் மகான் சக்தியின் பிராப்தி இயல்பாகவே ஏற்படுகிறது ஆனால் கொடுப்பதற்காக தன்னுடைய கஜானா நிரம்பியிருக்க வேண்டும். என்ன பெற வேண்டுமோ அவை அனைத்தையும் பெற்றாகி விட்டது, இன்னும் கொடுப்பது தான் பாக்கி இருக்கிறது. எனவே கொடுத்துக் கொண்டே இருங்கள். கொடுப்பதினால் கஜானா இன்னும் நிரம்பிக் கொண்டே இருக்கும்.

சுலோகன்: ஒவ்வொரு பாடத்திலும் முழு மதிப்பெண்களை சேமிக்க வேண்டும் என்றால் உள்ளடக்கும் குணத்தை தாரணை செய்யுங்கள்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 16.05.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கடைசி முயற்சி -பற்றுதலை வென்று நினைவு சொரூபமான நிலை!

தன்னை அனைத்து சக்திகளினால் நிரம்பியவராக அனுபவம் செய்கிறீர்களா? பாப்தாதா மூலமாக இந்த உயர்ந்த ஜென்மத்தின் ஆஸ்தி பிராப்தி ஆகி விட்டதா? ஆஸ்தியின் அதிகாரி அதாவது அனைத்து சக்திகளின் அதிகாரி ஆவது, அனைத்து சக்திகளின் அதிகாரி என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகியிருக்கிறீர்களா? மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவதினால் பிராப்தி சொரூபமாக என்ன அனுபவம் செய்கிறீர்களோ அதே அனுபவத்தில் நிரந்தரமாக நிலைத்திருக்கிறீர்களா அல்லது இதில் இடைவெளி இருக்கிறதா? ஆஸ்தியின் அதிகாரி ஆவதில் இரண்டு விஷயங்களை மட்டும் புத்தியில் வைப்பதினால் இடைவெளி அகற்றப்பட்டு நிரந்தரமாக அந்த நிலையை உருவாக்க முடியும், அந்த இரண்டு வார்த்தைகள் எவை? அதை நீங்கள் தெரிந்தும் இருக்கிறீர்கள், செய்து கொண்டும் இருக்கிறீர்கள் ஆனால் நிரந்தரமாகச் செய்வதில்லை. ஒன்று நினைவை யதார்த்தமாக ஆக்குவதற்கானது, இரண்டாவது காரியங்களை உயர்ந்ததாக ஆக்குவது, அந்த இரண்டு வார்த்தைகள் எவை? ஒன்று நினைவை சக்திசாலியாக ஆக்குவதற்காக எப்பொழுதும் "கனக்ஷன் (இணைப்பு) " மற்றும் காரியத்தை உயர்ந்ததாக ஆக்குவதற்காக எப்பொழுதும் தன்னுடைய "கரெக்ஷன் (சரி செய்வது) " தேவையாக இருக்கிறது. கரெக்ஷன் ஒவ்வொரு காரியத்திலும் இல்லாத காரணத்தினால் மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் ஆல்மைட்டி அத்தாரிட்டியின் (அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்த) நிலையில் நிரந்தரமாக நிலைத்திருக்க முடிவதில்லை. இந்த இரண்டு வார்த்தைகளும் சரளமானது. இங்கே வந்திருப்பதே இதற்காகத் தான் இல்லையா. எந்தக் காரியத்திற்காக வந்திருக்கிறீர்களோ அதைச் செய்வதில் கடினம் இருக்குமா என்ன?

யாருக்கு கடினம் அனுபவம் ஆகிறது? யார் பலஹீனமாக இருப்பார்களோ அவர்களுக்குத்தான். அவர்கள் கடினமாக ஏன் அனுபவம் செய்கிறார்கள். கனக்ஷன் இணைக்கப்பட்டிருந்தும் சில நேரம் கடினத்தை அனுபவம் செய்கிறார்கள். அவர்கள் கடின உழைப்பு செய்வதில்லை, அதனால் தான் கடினம் அவர்களுக்கு அனுபவம் ஆகிறது. தெரிந்தும் இருக்கிறார்கள். புரிந்தும் இருக்கிறார்கள் அதன்படி நடந்தும் கொள்கிறார்கள் ஆனால் இருக்கும் போதே பின்பு ஓய்வு விரும்பிகளாக ஆகி விடுகிறார்கள். பாப்தாதாவின் விரும்பிகளாக அன்றி ஓய்வு விரும்பிகளாக ஆகிறார்கள். அதனால் தான் தெரிந்திருந்தும் அந்த மாதிரியான நிலை உருவாகி விடுகிறது. அப்படி தந்தைக்குச் சமமாக உயர்ந்த காரியம் செய்வதில் ஓய்வு விரும்பியாக இருப்பவர் உயர்ந்த நிலையை அடைய முடியாது. எனவே ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு காரியத்தின் கரெக்ஷன் (சரி செய்தல்) செய்யுங்கள். மேலும் பாப்தாதாவின் காரியங்களோடு கனக்ஷனை ஏற்படுத்துங்கள். பின்பு தந்தைக்குச் சமமாக இருக்கிறதா என்று பாருங்கள். இப்பொழுது உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய கடைசி முயற்சியாக இன்னும் என்ன இருக்கிறது? கடைசி நிலையின் கடைசி பரீட்சையின் கேள்வியைத் தெரிந்திருக்கிறீர்களா? தெரிந்திருப்பவர்கள் அவசியம் தேர்ச்சி பெறுவார்கள் இல்லையா? நீங்கள் அனைவரும் கடைசி பரீட்சையின் கடைசி கேள்வியைத் தெரிந்திருக்கிறீர்களா? உங்களுடைய கடைசிக் கேள்வி உங்களுடைய பக்தர்களுக்கும் தெரியும். அவர்களும் வர்ணனை செய்கிறார்கள். உங்களுடைய பக்தர்கள் தெரிந்திருக்கிறார்கள் ஆனால் நீங்கள் தெரிந்திருக்கவில்லையா? பக்தர்கள் உங்களை விட புத்திசாலிகளாக ஆகி விட்டார்களா என்ன?

உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய சென்ற கல்பத்தின் ரிசல்ட் (முடிவு) பக்தர்களுக்குத் தெரியும் மற்றும் உங்களுக்கு உங்களுடைய தற்சமயத்து முயற்சியின் கடைசி நிலை மறந்து விட்டது. அந்தக் கடைசி நிலையை அடிக்கடி கேட்கிறீர்கள், மகிமையும் செய்கிறீர்கள். கீதையின் பகவான் மூலமாக கீதை ஞானம் கேட்ட பிறகு கடைசி நிலையாக என்ன வர்ணனை செய்கிறீர்கள்? (பற்றுதலை வென்ற... நினைவு சொரூபம்) பக்தர்கள் உங்களுடைய நிலையை வர்ணனை செய்கிறார்கள் இல்லையா? அப்படி கடைசி பரீட்சையின் கேள்வியாக

என்ன இருக்கிறது? நினைவு சொரூபமாக எந்த நிலை வரை ஆகியிருக்கிறீர்கள்? மேலும் பற்றுதலை வென்றவராக எதுவரை ஆகியிருக்கிறீர்கள்? இது தான் கடைசிக் கேள்வி. இந்தக் கடைசி கேள்வியை முழுமையான முறையில் நடைமுறையில் செய்வதற்காக இந்த இரண்டு வார்த்தைகளையே நடைமுறையில் கொண்டு வர வேண்டும். அப்படியானால் அனைவரும் கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவர்களாக ஆகி விடுவீர்கள் இல்லையா? கடைசி முடிவுக்கு முன்பாகவே கேள்வி அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றாலும் 108-தான் வெளியாகிறார்கள். இவ்வளவு கடினமா என்ன? முதல் நாளிலிருந்தே இந்தக் கேள்வி கிடைக்கிறது. எந்த நாள் ஜென்மம் எடுத்தீர்களோ அந்த நாளிலேயே கடைசிக் கேள்வி சொல்லப்படுகிறது.

சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் இப்பொழுது இங்கே அமர்ந்திருக்கிறீர்கள், நீங்களோ தேர்ச்சி பெறுபவர்கள் தான் இல்லையா. பாஸ் (தேர்ச்சி பெறுவதற்காக) ஆவதற்காக இந்த "பாஸ்" என்ற வார்த்தையை இன்னொரு அர்த்தத்தில் (அருகில் இருப்பது) நடைமுறையில் கொண்டு வாருங்கள். என்னென்ன நடந்ததோ அது பாஸ் ஆகி விட்டது (கடந்து சென்று விட்டது). என்ன நடந்து முடிந்ததோ அதை ஒருவேளை கடந்து விட்டது என்று புரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால் பாஸ் ஆக மாட்டீர்களா என்ன? இந்த பாஸ் வார்த்தையை ஹிந்தி மொழியில் உபயோகித்தீர்கள் என்றால் பாஸ் என்றால் உடனிருப்பது. பாப்தாதாவின் உடனிருக்கிறார்கள். இந்த ஒரு வார்த்தையை மூன்று ரூபங்களிலுமே நினைவில் வையுங்கள். பாஸ் ஆகி விட்டது (கடந்து சென்று விட்டது), பாஸ் (உடன்) இருக்க வேண்டும் மற்றும் பாஸாக (தேர்ச்சி பெற) வேண்டும். அப்படியானால் ரிசல்ட்டாக என்ன வெளியாகும்? குழுவின் நினைவுச்சின்னமாக வெற்றி மாலை ரூபத்தில் மகிமை செய்யப்பட்டிருக்கிறது. அதே வெற்றி மாலையின் மணிகளாக ஆகி விடுவார்கள். ஒருவேளை குழந்தைகளுக்கு எப்பொழுதும் தன்னுடன் இருப்பதற்கான, தன்னுடன் ஒவ்வொரு சரித்திரத்தையும் அனுபவம் செய்வதற்கான அழைப்பை பாப்தாதா கொடுக்கிறார் என்றால் அந்த மாதிரி உயர்ந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதில்லையா என்ன? முழு கல்பத்திலும் ஆத்மாக்களுக்கு உயர்ந்த ஆத்மா மூலமாக, சாதாரண ஆத்மா மூலமாக பல விதமான அழைப்பு கிடைத்துக் கொண்டே இருந்தது ஆனால் இந்த அழைப்பு இப்பொழுது இல்லையேல்

ஒருபொழுதும் இல்லை. அழைப்பை ஏற்றுக் கொள்வது என்றால் தன்னைத்தானே தந்தையுடன் வைத்துக் கொள்வது. இது கடினமா என்ன? அழைப்பின் மேல் தன்னை மட்டும் கொண்டு செல்ல வேண்டியதாக இருக்கிறது. மற்ற அனைத்தும் அழைப்பு கொடுப்பவரின் பொறுப்பாகி விட்டது. அப்படி தன்னைத் தானே தந்தையிடம் கொண்டு செல்வது அதாவது புத்தியால் தந்தையிடம் இருப்பது இதில் என்ன கடினம் இருக்கிறது? ஒருவேளை இன்றைய உலகில் ஏதாவது சாதாரண நபருக்கு ஜனாதிபதி இன்றிலிருந்து நீங்கள் என்னுடன் இருக்க வேண்டும் என்று அழைப்பு கொடுக்கிறார் என்றால் என்ன செய்வீர்? துணிந்து விடமாட்டீர்களா? மேலும் அவரே ஆர்வத்தோடு அழைக்கிறார். என்றால் அவர் என்ன செய்வீர்கள்? காலம் தாழ்த்துவீர்களா? அப்படி தந்தையின் அழைப்பை ஏன் எப்பொழுதும் ஏற்றுக் கொள்வதில்லை? ஏதாவது இழுக்கக் கூடிய கயிறுகள் இருக்கின்றனவா? குழந்தைகள் சக்திசாலிகளா அல்லது தந்தையா? சக்திசாலியிலும் சக்திசாலி யார்? யாராவது எவ்வளவு தான் சக்திசாலியாக இருந்தாலும் அவரிடமிருந்து பிராப்தியாக என்ன இருக்கிறது? பிராப்தியின் அனுபவி சொரூபத்தின் ஆதாரத்தில் அந்தக் கவர்ச்சியில் கவரப்படுவது, இது பிராமண ஆத்மாக்களுக்கு அழகாக இருக்கிறதா என்ன? பிராமண ஆத்மாக்களுக்காக மற்றும் உயர்ந்த ஆத்மாக்களுக்காக பிரபாவத்தை ஏற்படுத்தும் மாயாவும் எந்த ரூபத்தில் தென்படுகிறது? காகிதப்புலியாக அனுபவம் ஆகிறது. உங்களில் யார் அந்த பிரபாவசாலி மாயா எங்களைப் பொறுத்தவரை காகிதம் அதாவது பொம்மை என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். மாயாவை காகிதப்புலியாக ஆக்கவில்லையா என்ன? அது உயிரற்றதாக இன்னும் ஆகவில்லையா என்ன? யார் அவரே அதன் (காகிதப்புலியின்) அலங்கரித்து உருவாக்குகிறாரோ அவர் பயப்படமாட்டார் ஆனால் மற்றவர்கள் பயப்பட முடியும். இப்பொழுது அதில் உயிர் இருக்கிறதா என்ன? எப்பொழுதாவது உயிருள்ளதாக ஆகி விடுகிறதா என்ன? இப்பொழுது அதை மயக்கமடையச் செய்யவில்லையா என்ன? மயக்கமடைந்து விட்டதா அல்லது இன்னும் உயிரோடு இருக்கிறதா? மயக்கமடையச் செய்தீர்களா? உங்களைப் பொறுத்தவரை இறந்து விட்டதா? எந்த நிலை வரை இருக்கிறது? இறந்து விட்டதா, எரிந்து விட்டதா அல்லது மயக்கமடைந்து இருக்கிறதா? மூன்று நிலைகள் இருக்கின்றன. சிலரைப் பொறுத்தவரை

மயங்கிய ரூபத்தில் இருக்கிறது, சிலரை பொறுத்தவரை இறந்து விட்டது. மேலும் சிலருக்காக எரிந்தும் விட்டது அதாவது பெயர், அடையாளம் இல்லை. அப்படி ஒவ்வொருவரும் எந்த நிலை வரை வந்தடைந்திருக்கிறோம் என்று தன்னைப் பார்க்கட்டும். மயக்கமடையச் செய்வதற்குப் பதிலாக தானே மயக்கமடைந்து விடுவதில்லையே. எப்பொழுதுமே சஞ்சீவினி மூலிகை உடன் இருக்கிறது என்றால் ஒருபொழுதும் மயக்கமடைய முடியாது. மயக்கமடையச் செய்பவர் ஒருபொழுதும் மயக்கமடைய மாட்டார். பிராமண ஜென்மத்தின் காரியமே இது தான். ஜென்மம் எடுத்தவுடன் முதல் உறுதிமொழியாக என்ன கொடுத்திருக்கிறீர்கள்? மாயாவை வென்று உலகை வென்றவர் ஆவோம் என்ற இந்த உறுதிமொழியைத் தான் செய்தீர்கள் இல்லையா? இதுவோ இந்த ஜென்மத்தினுடைய காரியமே ஆகும். எந்தக் காரியத்தை பிறந்ததிலிருந்தே செய்து வருகிறீர்களோ அது கடினமாக இருக்குமா என்ன? நல்லது.

எப்பொழுதும் மயக்கம் தெளிந்த நிலையில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் அனைத்து சக்திகளினால் நிரம்பியிருக்கக்கூடிய எப்பொழுதும் பாப்தாதா உடன் இருக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தையின் காரியத்தில் உதவிக்கரம் கொடுக்கக்கூடிய, எப்போதும் சகயோகியாக இருக்கக்கூடிய, எப்பொழுதும் வெற்றி அடையும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

பார்ட்டியுடன் சந்திப்பு: இது பாப்தாதாவிற்காக பூச்செண்டு பார்ட்டியாகும். இதில் நான் எந்த மாதிரியான மலராக இருக்கிறேன். ரோஜாவாகவா அல்லது மல்லிகையா? என்று பார்க்க வேண்டும். ஒவ்வொன்றின் விசேஷத்தையோ நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? தாமரை மற்றும் ரோஜாவில் என்ன வித்தியாசம் இருக்கிறது? தாமரை மலர் அதிசயம் செய்வதில் முதன்மையாக இருக்கிறது. அனுபவம் செய்விப்பதில் ரோஜா மலர் இருக்கிறது. இங்கு பாப்தாதா அவரே மலர்களில் அனைத்து விசேஷங்களை நிரப்பி கொண்டிருக்கிறார். அறிவியலைச் சேர்ந்தவர்களும் ஒன்றிலிருந்து அனேக பொருட்களை உருவாக்குகிறார்கள் இல்லையா? அதை எங்கிருந்து கற்றுக் கொண்டார்கள்? இங்கு ஒவ்வொருவரில் அனேக விதமான மலர்களின் சாறை நிரப்ப வேண்டும். "உன்னுடைய வழி,

செயல் உனக்குத் தான் தெரியும்" என்ற மகிமை இருக்கிறது. என்னவாக இருந்ததிலிருந்து என்னவாக ஆக்குவது இது தான் செயல் இல்லையா? ஒவ்வொருவரில் அனைத்து சாறையும் நிரப்பிவிடுவது, அனைத்து மலர்களில் என்னென்ன விசேஷங்கள் இருக்கின்றனவோ அவற்றின், அனைத்து மலர்களின் விசேஷத்தை நிரப்புவது! அப்பொழுது தான் அனைத்து குணங்கள் நிரம்பியவராக ஆகுவது இது தான் தந்தைக்குப் பிடித்தமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. பகவானும் தோட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். எங்கு பார்த்தாலும், என்ன கேட்டாலும் மேலும் என்ன சொன்னாலும் அதில் விசேஷம் இருக்கிறது. தன்னுள் ஒவ்வொரு விஷயத்தின் விசேஷத்தை நிரப்புங்கள். எப்பொழுது ஒவ்வொரு விஷயத்திலும் விசேஷத்தை நிரப்புவீர்கள் என்றால், என்ன ஆகி விடுவீர்கள். விசேஷ ஆத்மா ஒருபொழுதும் சேற்றில் மாட்டிக் கொள்ளாது. எப்பொழுதும் மலர்ந்திருக்கும். நிச்சயபுத்தியை ஒவ்வொரு விஷயத்தில் நிச்சயமுடையவராக ஆக வேண்டும். புத்திசாலி தந்தையின் குழந்தைகள் நீங்கள். யார் பலவிதமான ரூபமுடையவராக எப்படி ஆவது என்று தெரிந்திருக்கிறாரோ அவர் ஒவ்வொரு விஷயத்திலும் வெற்றி அடைபவராக இருப்பார். நல்லது.

வரதானம்: செய்பவர் செய்விப்பவரின் நினைவு மூலமாக சகயோகத்தை அனுபவம் செய்யக்கூடிய வெற்றி அடைபவர் ஆகுக!

எந்தக் காரியத்தை செய்து கொண்டிருந்தாலும், இந்தக் காரியத்தின் பொறுப்பாளராக ஆக்கும் முதுகெலும்பாக யார் இருக்கிறார் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். முதுகெலும்பு இல்லாமல் எந்தக் காரியத்திலும் வெற்றி கிடைக்க முடியாது. எனவே எந்தக் காரியத்தை செய்து கொண்டிருந்தாலும் நான் ஒரு கருவியாவேன், செய்விப்பவர் சுயம் அனைத்து சக்திகள் நிறைந்த தந்தை ஆவார் என்று இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதை நினைவில் வைத்து காரியம் செய்தீர்கள் என்றால் சகஜயோகாவின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். பின்பு இந்த சகஜயோகா அங்கு (சத்யுகத்தில்) சகஜ இராஜ்யம் செய்விக்கும். இங்கே உள்ள சம்ஸ்காரத்தை அங்கே எடுத்துச் செல்வீர்கள்.

சுலோகன்: ஆசைகள் நிழலுக்குச் சமமானது நீங்கள் மறுபக்கம் திரும்பி விட்டீர்கள் என்றால் பின்னாலேயே வரும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 17.05.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்படி இலட்சியமோ அப்படி இலட்சணம்!

தந்தையின் விசேஷங்களாக என்ன இருக்கிறதோ அதை தன்னில் அனுபவம் செய்கிறீர்களா? எப்படி அனைவருக்கும் தன்னுடைய இந்த படிப்பின் முக்கியமான நான்கு பாடங்களைக் கூறுகிறீர்கள் இல்லையா, அதே போல் முக்கியமான விசேஷங்களும் நான்கு இருக்கின்றன. அவற்றை தெரிந்திருக்கிறீர்களா? நான்கு பாடங்களுக்கு ஏற்றபடி நான்கு விசேஷங்கள் இருக்கின்றன -ஞானம் நிறைந்தவர், சக்தி நிறைந்தவர், சேவை செய்பவர் மற்றும் ஆனந்தம் நிறைந்தவர். இந்த முக்கிய நான்கு விசேஷங்களை தன்னில் அனுபவம் செய்கிறீர்களா? இந்த நான்கும் எந்த சதவிகிதத்தில் இருக்கிறது என்பதில் மிகுந்த வித்தியாசம் இருக்கிறதா அல்லது கொஞ்சமா? நீங்கள் தந்தையை பின்பற்றி நடப்பவர்கள் தான் இல்லையா? நான்கு பாடங்களாக என்ன இருக்கின்றனவோ அவை வாழ்க்கையில் இயற்கையான ரூபத்தில் இருக்கின்றனவா அல்லது இப்பொழுது ஏற்றம், இறக்கத்தின் இயற்கையான ரூபம் இருக்கிறதா? எவ்வளவு சதவிகிதத்தில் இயற்கையான ரூபம் இருக்கிறது? 14 கலை வரை இயற்கையான ரூபம் ஆகியிருக்கிறதா? சம்பூர்ண நிலையை அடைவதற்காக இப்பொழுது முயற்சி செய்யும் வேகம் தீவிரமாக இல்லை என்றால் நேரத்திற்கு தகுந்தாற் போல் தன்னை சம்பன்னமாக ஆக்க முடியுமா? தற்காலிகக் காரியத்திற்காக பாப்தாதாவின் மற்றும் தன்னுடைய வழியின் அனுசாரம் என்ன நிலை உருவாகிறதோ அது வேறு விஷயம் ஆனால் கடைசி நிலைக்கு ஏற்றபடி அந்த மாதிரியான வேகத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய வேகத்தில் நீங்கள்

திருப்தியாக இருக்கிறீர்களா? இதற்காகவும் திட்டம் இருக்கிறதா அல்லது சேவைக்காக மட்டும் தான் திட்டத்தை உருவாக்குகிறீர்களா?

எப்படி சேவைக்காக விதவிதமான திட்டத்தை உருவாக்குகிறீர்கள் அதே போல் தன்னுடைய முயற்சியின் வேகத்தில் திருப்தியாக இருப்பதற்காகவும் ஏதாவது திட்டத்தை உருவாக்குகிறீர்களா? நடைமுறையில் பிராப்தியாக அல்லது வெற்றியாக என்ன இருக்கிறதோ அதன் அனுசாரமாகத் தான் வேகமும் அதிகரிக்கும். எப்பொழுது தன்னுடைய வேகத்தில் திருப்தியாக இருக்கிறீர்கள் என்றால் பின்பு சக்திசாலியான திட்டத்தை உருவாக்க வேண்டும் இல்லையா. சேவையில் வெற்றி குறைவாக இருக்கிறது என்று எப்பொழுது பார்க்கிறீர்கள் என்றால் அதற்காகவும் புதியதாக ஏதாவது யோசித்திருக்கிறீர்களா? விதவிதமான முறையில் ஏர் உழுது இந்த பூமியை சரி செய்வதற்காகவும் முயற்சி செய்கிறீர்களா? தானே செய்ய முடியவில்லை என்றாலும் குழுவின் சகயோகத்தினால் கூட இதை சரி செய்கிறீர்கள் இல்லையா? பார்க்கப்போனால் இந்த விஷயத்திற்காக இந்தளவே தெளிவானதா? தனக்காக இவ்வளவு ஆர்வம் இருக்கிறதா? எவ்வளவு கவலை இருக்கிறது? திட்டத்தை உருவாக்குகிறீர்களா என்ன? தன்னுடைய வேகத்தை அதிகரிப்பதற்காக ஏதாவது புதுத்திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? ஏகாந்தத்தில் இருந்து நினைவு யாத்திரையை அதிகரிப்பதற்காக திட்டத்தை உருவாக்குகிறீர்களா?

எப்படி யார் விசேஷ சேவையின் மேடையில் வருபவராக இருக்கிறார் அவருக்கு தன்னுடைய ஒவ்வொரு காரியத்தையும் செட் செய்வதற்கு, அனுபவம் செய்வதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டியது இருக்கிறது இல்லையா. அதே போலவே அமிர்தவேளையில் இன்று எந்த விஷயத்தில் மற்றும் எந்த பலஹீனத்தின் மேல் விசேஷ கவனம் கொடுத்து இதனுடைய சதவிகிதத்தை அதிகரிக்கலாம் என்று தன்னுடைய முயற்சியின் முன்னேற்றத்திற்கான திட்டத்தை செட் செய்ய (உருவாக்க) வேண்டும். இன்றைய நாளில் நடைமுறையில் என்ன கொண்டு வர வேண்டும் மேலும் எவ்வளவு சதவிகிதம் வரை இந்த விஷயத்தை முயற்சியில் கொண்டு வர வேண்டும் என்று ஒவ்வொருவரும் தன்னுடைய தைரியத்திற்கு ஏற்றபடி அந்த

திட்டத்தை புத்தியில் வைக்க வேண்டும். தன்னுடைய தினசரி நடவடிக்கையின் கூடவே இதையும் செட் செய்யுங்கள் பின்பு இரவில் தன்னால் செட் செய்யப்பட்ட விஷயத்தை எவ்வளவு நடைமுறையில் மற்றும் எத்தனை சதவிகிதம் வரை தாரணை செய்ய முடிந்தது என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை செய்யவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? மேலும் செய்தார் என்றால் எந்தெந்த விசேஷ யுக்தியினால் தன்னில் முன்னேற்றத்தை அனுபவம் செய்தார்? இந்த இரண்டு ரிசல்ட்டையும் எதிரில் கொண்டு வர வேண்டும் மேலும் ஒருவேளை இன்று என்ன லட்சியமாக வைத்தேனோ அதில் அவ்வளவு வெற்றி கிடைக்கவில்லை, மேலும் எவ்வளவு திட்டமிட்டேனோ அவ்வளவு நடைமுறையில் ஆகவில்லை என்றால் அதை அப்படியே விட்டு விடக் கூடாது.

எப்படி ஸ்தூல காரியத்தில் லட்சியம் வைப்பதினால் ஒருவேளை ஏதாவது காரணத்தினால் அது அரைகுறையாக இருந்து விட்டது என்றால் அதை நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்கிறீர்கள் இல்லையா? அதே போல் தினசரி இந்த காரியத்திற்கான லட்சியத்தை வைத்துக் கொண்டே நிறைவேற்ற வேண்டும். ஒரு விஷயத்தில் விசேஷ கவனம் கொடுப்பதினால் விசேஷ பலம் கிடைக்கும். எந்தக் காரியம் செய்து கொண்டும் நினைவு வரும் மேலும் நினைவு சொரூபமானவராகவும் ஆகியே விடுவீர்கள். எப்படி வெளியுலக ஞானத்தில் கூட ஒருவேளை ஏதாவது பாடத்தை உறுதி செய்யப்படுகிறது என்றால் அதை இரண்டாவது தடவை, மூன்றாவது மற்றும் நான்காவது தடவை உறுதியாக்கப்படுகிறது. மேலும் அதை விட்டு விடுவது இல்லை. அப்படி இதிலும் தன்னுடைய லட்சியத்தை வைத்து ஒவ்வொரு விஷயத்திலும் முடித்துக் கொண்டே செல்லுங்கள். இதில் அலட்சியம் இருக்க வேண்டாம். யோசித்தீர்கள், திட்டத்தை உருவாக்கினீர்கள் ஆனால் நடைமுறையில் செய்வதில் ஒருவேளை ஏதாவது பிரச்சனை எதிரில் வந்தது என்றால் செய்தே தான் ஆக வேண்டும் என்ற உறுதித்தன்மை எண்ணத்தில் இருக்கிறது என்றால் அந்த அளவே உறுதித்தன்மை சம்பூர்ணத்தின் அருகில் கொண்டு வரும். தற்சமயம் திட்டமும் இருக்கிறது ஆனால் இதில் என்ன குறை இருக்கிறது? உறுதித்தன்மையின் குறைவு. உறுதியான எண்ணத்தை வைப்பதில்லை. விசேஷ ரூபத்தில் அடென்ஷன் கொடுத்து காண்பிக்க

வேண்டும் அதில் பலஹீனம் இருக்கிறது. மஹாரதிகளுக்கு அதாவது சேவை செய்யும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு சேவையின் கூடவே சுயசேவைக்கான கவனமும் தேவையாக இருக்கிறது.

ஒன்று சுயசேவை இன்னொன்று உலக நன்மைக்கான சேவை. இரண்டின் சமநிலை சரியாக இருக்கிறதா? நினைக்க மட்டும் செய்யாதீர்கள், இப்பொழுது இதன் பிரகாரம் தன்னுடைய உயர்ந்த எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். எப்படி யோசித்து யோசித்து காலம் கடந்து சென்று விட வேண்டாம் என்று மனிதர்களுக்கு கூறுகிறீர்கள் இல்லையா? அதே போல் தன்னுடைய முன்னேற்றத் தின் திட்டத்தை யோசிப்பதின் கூடவே நடைமுறையில் உறுதியான எண்ணத்தோடு செய்யுங்கள். ஒருவேளை தினசரி ஒரு விசேஷத்தை எதிரில் வைத்துக் கொண்டே தன்னுடைய திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்தீர்கள் என்றால் கொஞ்ச நாட்களிலேயே தன்னுள் பெரிய வித்தியாசத்தை உணருவீர்கள்.

இந்த விசேஷ வரதான பூமியில் தன்னுடைய முன்னேற்றத்திற்காகவும் கொஞ்சம் திட்டத்தை உருவாக்குகிறீர்களா மற்றும் சேவை செய்து மீட்டிங்கை மட்டும் செய்து சென்று விடுகிறீர்களா? தன்னுடைய முன்னேற்றத்திற்காக இரவின் நேரமோ அனைவருக்கும் இருக்கிறது. எப்பொழுது விசேஷமாக சேவையின் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருகிறீர்கள் என்றால் அந்த நாட்களில் தூக்கத்தை வென்றவராக ஆவதில்லையா என்ன? தன்னுடைய முன்னேற்றத்திற்காக ஒருவேளை தூக்கத்தையும் தியாகம் செய்தீர்கள் என்றால் நேரம் கிடைக்காதா என்ன? இங்கேயோ வேறு காரியமே என்ன இருக்கிறது? எப்படி மற்ற திட்டங்களை உருவாக்குகிறீர்கள் அப்படி தன்னுடைய முன்னேற்றத்திற்காகவும் ஏதாவது விசேஷ திட்டத்தை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இங்கு என்னென்ன சுய முன்னேற்றத்திற்கான சாதனத்தை நடைமுறையில் கொண்டு வருவீர்களோ அதற்கு அனைத்து பக்கங்களிலிருந்து சகயோகத்தின் லிஃப்ட் கிடைக்கும். என்ன லட்சியம் வைக்கிறீர்களோ அதன் பிரகாரம் நடைமுறையில் லட்சணம் உடையவராக ஆக முடிவதில்லை என்றால் அதற்கான காரணத்தையும் அதன் நிவாரணத்தையும் தெரிந்திருக்கிறீர்களா?

ஞானம் நிறைந்தவராகவோ ஆகி விட்டீர்கள் மற்றபடி குறையாக என்ன இருக்கிறது அதனால் நடைமுறையில் கொண்டு வர முடியவில்லை? சக்திசாலியாக இல்லாத காரணத்தினால் ஞானத்தை நடைமுறையில் செய்ய முடிவதில்லை. சக்திசாலியாக ஆவதற்காக என்ன செய்ய வேண்டியதிருக்கும்? நடைமுறை திட்டத்தை உருவாக்குங்கள். ஒருவேளை இதுவரை நீங்கள் மட்டுமே தயாரானீர்கள் என்றால் உங்களுடைய வம்சாவளி எப்பொழுது தயாராகும்? பிரஜை எப்பொழுது தயாராகும்? இந்த தடவை நடைமுறையில் கொஞ்சம் செய்து காண்பிக்க வேண்டும். முயற்சி செய்வதில் ஒவ்வொருவருக்கும் மிக நல்ல அனுபவம் ஏற்படுகிறது அந்த அனுபவத்தின் பரிமாற்றத்தினால் ஒவ்வொருவரின் முன்னேற்றத்தின் சாதனத்தை கேட்டு தன்னுள்ளும் பலம் நிரம்பி விடுகிறது. அந்த மாதிரியான வகுப்பை எப்பொழுதாவது செய்கிறீர்களா? நல்லது. ஓம் சாந்தி.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳✳✳✳

# 25.05.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எதிர்காலத் திட்டம்!

தன்னை உலகை மாற்றுபவர் மற்றும் உலகிற்கு நன்மை செய்பவர் என்று நினைக்கிறீர்களா? உலகின் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் செய்தி கொடுப்பவர் என்று நினைத்துக் கொண்டே உலகில் எதுவரை செய்தி கொடுக்க முடிந்திருக்கிறது என்று இதற்கான கணக்கை எடுத்துக் கொண்டே இருக்கிறீர்களா? எங்கெங்கு செய்தி கொடுப்பதற்கான காரியம் இப்பொழுது நடக்க வேண்டுமோ அதற்காக புதுப்புது திட்டங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறீர்களா? ஒருவருக்கு எது தன்னுடைய காரியமாகவும் பொறுப்பாகவும் இருக்கிறதோ அந்தக் காரியத்திற்காக அவரிடம் எப்பொழுதும் திட்டம் ஓடிக் கொண்டே இருக்கும்.

எங்கேயாவது செய்தி கொடுப்பதற்காக மற்றும் தந்தையின் அறிமுகத்தின் செய்தியை பரப்புவதற்காக இதுவரை என்னென்ன திட்டங்களை நடைமுறையில் கொண்டு வருகிறீர்கள், அதில் முக்கியமாக இந்த முயற்சி தான் செய்கிறீர்கள், எந்த பூமியில் மற்றும் எந்த இடத்தில் செய்தி கொடுக்க வேண்டுமோ அங்கு முன்பாகவே மேடை தயார் செய்கிறீர்கள். சொற்பொழிவை தயார் செய்கிறீர்கள் மேலும் விளம்பரத்திற்கான விதவிதமான முறைகளை கடைபிடிக்கிறீர்கள் அதன் மூலம் அந்த இடத்தின் ஆத்மாக்களுக்கு செய்தி கொடுப்பதற்கான காரியம் செய்து கொண்டு இருக்கிறீர்கள் ஆனால் இந்த சாதனங்கள் மூலமாக இதுவரை உலகிலுள்ள அம்சம் மாத்திரம் ஆத்மாக்களுக்குத் தான் செய்தி கொடுக்க முடிந்திருக்கிறது. இப்பொழுது கொஞ்ச காலத்திற்குள் அனைத்து உலகிலுள்ள ஆத்மாக்களுக்கு செய்தி கொடுக்க வேண்டும், ஞானம் மற்றும் யோகாவின் அறிமுகம் கொடுத்து தந்தையின் அறிமுகம் செய்விப்பதற்கான காரியம் செய்தே தான் ஆக வேண்டும், கூடவே இந்த இயற்கையையும் தூய்மையாக்க வேண்டும், அப்பொழுது தான் உலக

மாற்றம் ஏற்படும். இதற்காக கொஞ்ச காலத்தில் மிகப் பெரிய காரியம் செய்வதற்காக எதிர்கால எந்த திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள்? அதன் வடிவமைப்பு புத்தியில் வருகிறதா? இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ, அது அதே வடிவமைப்பா அல்லது கொஞ்சம் வேறுபட்டதா? அது என்ன என்று முன்பாகவே பார்க்கிறீர்களா அல்லது அது நடந்து கொண்டிருக்கும் போதே பார்க்கிறீர்களா? ஒருவேளை தெளிவாக இருக்கிறது என்றால் இரண்டு வார்த்தைகளில் கூறுங்கள்.

எப்பொழுது நேரமும் ஷார்ட்டாக (குறைவாக) இருக்கிறது என்றால் திட்டமும் ஷார்ட் ஆக வேண்டும். ஷார்ட் ஆக இருக்கட்டும் ஆனால் பவர்ஃபுல் (சக்திசாலியாக) ஆக இருக்கட்டும். அந்த இரண்டு வார்த்தைகள் எவை? எதிர்கால திட்டம் நடைமுறையில் இரண்டு வார்த்தைகளின் ஆதாரத்தில் தான் நடக்க வேண்டும். அந்த இரண்டு வார்த்தைகளை முன்பும் கூறியிருந்தோம். ஒன்றோ சாட்சாத் (அப்படியே) தந்தை மாதிரியானவர் மற்றும் இரண்டாவது சாட்சி மேலும் சாட்சாத்கார மூர்த்தியாக இருப்பது. எதுவரை இந்த இரண்டுமானவராக ஆகவில்லையோ அதுவரை உலக மாற்றத்தை கொஞ்ச காலத்தில் செய்ய முடியாது. இந்த திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்காக எப்படி இப்பொழுது கூட மேடை மற்றும் சொற்பொழிவை தயாரிக்கிறீர்கள் அதே போலவே உங்களுக்கு உங்களுடைய மனநிலை என்ற மேடையை தயார் செய்ய வேண்டியது இருக்கும்.

தன்னுடைய இலட்சணங்கள் மூலமாக எதிர்காலத்தின் சாட்சாத்காரம் செய்விப்பதற்காக, எப்படி விதவிதமான விஷயங்களை யோசித்துக் கொண்டே மேடை தயார் செய்கிறீர்கள் அதே போலவே இந்த முகத்தின் இடையில் என்னென்ன முக்கியமான கர்மேந்திரியங்கள் இருக்கின்றன அந்த கர்மேந்திரியங்கள் மூலமாக தந்தையின் சரித்திரம், தந்தையின் காரியத்தின் சாட்சாத்காரம், தந்தையின் குணங்களின் சாட்சாத்காரம் ஏற்படட்டும். இந்த விதவிதமான ஞான விஷயங்களை தயார் செய்ய வேண்டியதாக இருக்கும். கண்கள் மூலமாக பார்வையாலே நன்மை செய்ய முடிய வேண்டும் அதாவது கண்களின் பார்வை மூலமாக அந்த ஆத்மாக்களின் பார்வை, உள்உணர்வு, நினைவு மற்றும் காரியத்தை மாற்றி விடுங்கள். நெற் மூலமாக தன்னுடைய மற்றும் அ ரின் சொரூபங்களின் தெளிவான சாட்சாத்காரம் செய்வியுங்கள். உதடுகள்

மூலமாக ஆன்மீக புன்முறுவலினால் அழியாத குஷியின் அனுபவம் செய்வியுங்கள். முழு முகம் மூலமாக தற்சமயத்தின் உயர்ந்த பதவி மற்றும் எதிர்கால பதவியின் சாட்சாத்காரம் செய்வியுங்கள், தன்னுடைய உயர்ந்த எண்ணம் மூலமாக மற்ற ஆத்மாக்களின் வீணான எண்ணங்கள் மற்றும் தீய எண்ணங்களின் பெருகி ஓடிக் கொண்டிருக்கும் வெள்ளத்திலிருந்து மற்றும் தன்னுடைய சக்தி மூலமாக குறைந்த நேரத்தில் விலகச் செய்து காண்பியுங்கள். வீணான எண்ணத்தை சுத்த எண்ணங்களில் மாற்றம் செய்திடுங்கள். தன்னுடைய ஒரு வார்த்தை மூலமாக அனேக் காலமாக துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு தன்னுடைய இலட்சியத்தின், தன்னுடைய இலக்கிற்கு சென்றடையும் அனுபவத்தை செய்வியுங்கள். அந்த ஒரு வார்த்தை எது? சிவபாபா'. 'சிவபாபா' என்று கூறுவதினாலேயே புகலிடம் மற்றும் இலட்சியம் கிடைத்து விட வேண்டும். தன்னுடைய ஒவ்வொரு காரியம் அதாவது சரித்திரம் மூலமாக, சரித்திரம் தந்தையினுடையது மட்டும் இல்லை நீங்கள் ஒவ்வொரு உயர்ந்த ஆத்மாக்களின் உயர்ந்த காரியமும் சரித்திரமாகும். சாதாரண காரியத்தை சரித்திரம் என்று கூற மாட்டோம். அப்படி ஒவ்வொரு உயர்ந்த காரியம் என்ற சரித்திரம் மூலமாக தந்தையின் உருவத்தை காண்பியுங்கள். எப்பொழுது அந்த மாதிரி ஆன்மீக சொற்பொழிவை நடைமுறையில் செய்வீர்களோ அப்பொழுது கொஞ்ச காலத்தில் உலகத்தின் மாற்றத்தை செய்வீர்கள். இதற்காக மேடையும் தேவையாக இருக்கிறது.

மேடையை தயார் செய்வதில் முக்கியமாக என்னென்ன சாதனங்களை உபயோகிக்கிறீர்கள் என்று தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அது உங்களுடைய விசேஷ அடையாளம் ஆகும். மேடையை வெள்ளையாக செய்கிறீர்கள், இது தான் உங்களுடைய முக்கிய அடையாளம் மற்றும் சிம்பள் ஆகும். எப்படி (வெள்ளை) ஆடை பிரசித்தியாக இருக்கிறது இல்லையா. அப்படி எப்படி ஆத்மாவின் ஸ்டேஜ் (மனநிலை) இருக்கிறதோ அதே போலவே வெளியில் இருக்கும் ஸ்டேஜிற்கும் (மேடைக்கும்) ரூபம் கொடுக்கிறீர்கள். என்னென்ன விஷயங்களை ஸ்தூல மேடையில் வைப்பதற்கான முயற்சி செய்கிறீர்கள் அவைகளிலிருந்து ஒருவேளை ஒரு பொருளாவது நினைவில் இருக்கவில்லை அல்லது சரியான ரூபத்தில் இல்லை என்றால் ஸ்டேஜின் தோற்றம் நன்றாக இருப்பதில்லை. இதே போலவே

எப்பொழுது உங்களுடைய நிலை என்ற ஸ்டேஜ் மூலமாக நடைமுறையில் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்றால் இதற்காகவும் இந்த அனைத்து விஷயங்களின் ஏற்பாடு தேவையாக இருக்கிறது. லைட் தேவையாக இருக்கிறது அதாவது டபுள் லைட் சொரூபத்தின் நிலை தேவையாக இருக்கிறது. இரண்டு லைட்டைப் பற்றியோ தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒருவேளை மேடையில் யாராவது லேசான மெல்லிய உடல் இல்லாதவராக இருக்கிறார். அமருவதிலும் எழுவதிலும் சுமை உடையவராக இருக்கிறார் என்றால் பேச்சை கேட்பதற்கு பதிலாக மக்கள் அவரையே பார்த்துக் கொண்டிருக்க ஆரம்பித்து விடுவார்கள். அப்படி இங்கு டபுள் லைட்டின் நிலை தேவையாக இருக்கிறது. மேலும் தொலைதூரம் வரை சப்தம் தெளிவான ரூபத்தில் சென்றடைய வேண்டும் அளவிற்கு மைக்கும் சக்திசாலியானதாக இருக்க வேண்டும். அப்படி மைக்கிலேயும் சக்தி இருக்க வேண்டும். ஒரு எண்ணத்தை உருவாக்குங்கள். ஒரு பார்வையை வைப்பதினாலேயே அந்த பார்வை மற்றும் அந்த எண்ணம் லைட் ஹவுசின் காரியத்தை செய்யட்டும். இடத்தில் இருந்து கொண்டே அனேக ஆத்மாக்களின் மேல் உங்களுடைய உயர்ந்த எண்ணம் மற்றும் தெய்வீக பார்வையின் பிரபாவம் ஏற்படட்டும். அந்த மாதிரி சக்திசாலியான மைக்கை உருவாக்க வேண்டியதாக இருக்கும். அப்படி மைக்காக எது ஆனது? எண்ணம் மற்றும் பார்வை. தெய்வீக மற்றும் ஆன்மீக பார்வை. அதே போலவே வெண்மை அதாவது சுத்தமான புத்தி வேண்டும் அதில் கொஞ்சம் கூட எந்தக் கறையும் இருக்க வேண்டாம். ஒருவேளை மேடையில் ஏதாவது கறை இருந்தால், வெண்மை இல்லை என்றால் அனைவரின் கவனம் விரும்பாவிட்டாலும் அதன் பக்கம் செல்லும். மேலும் சுலோகன்களின் அலங்காரமும் தேவையாக இருக்கிறது. இந்த மனநிலை என்ற மேடையில் எந்த சுலோகனின் அலங்காரம் தேவையாக இருக்கிறது? மனநிலையின் மேடை மற்றும் நடைமுறையில் எண்ணம், சொல், செயலின் சொற்பொழிவு. அந்த மாதிரி மேடைக்காக எந்த சுலோகன் தேவையாக இருக்கிறது. ஒன்று நான் ஆத்மா, உலக நன்மைக்கான உயர்ந்த காரியத்திற்காக சர்வ சக்திவான் தந்தை மூலமாக பொறுப்பாளராக ஆக்கப்பட்டிருக்கிறேன். இந்த சுலோகன் நினைவிலிருக்கட்டும். இந்த நிலையில் ஒருவேளை இந்த சுலோகன் நினைவில்லை என்றால் மேடை அழகாக இருக்காது.

விசேஷ தாரணை களுக்காகவே சுலோகன்கள். இன்னொரு சுலோகன் -நான் ஆத்மா மகாதானி மற்றும் வரதானி ஆவேன். எந்த ஆத்மாவிற்கு தானம் பெறுவதற்கும் மற்றும் தானம் கொடுப்பதற்குமான தைரியம் இல்லையோ அவர்களுக்கும் வரமளிக்கும் வள்ளல் தந்தை மூலமாக கிடைத்துள்ள வரதானங்கள் மூலமாக தன்னுடைய நிலையின் சகயோகம் மூலம் வரதானம் கொடுக்க வேண்டும். அப்படியானால் சுலோகனாகும்? நான் மகாதானி மற்றும் வரதானி ஆவேன். இது தான் தெளிவாக்குவது. மூன்றாவது விஷயம் -ஆத்மா எனக்கு என்னுடைய சரித்திரம். வார்த்தை மற்றும் எண்ணம் மூலமாக என்னுடைய முகம் மூலம் அனைத்து ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் முகம் மற்றும் காரியங்களின் சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும். இந்த விதமாக மேடையை அழகு படுத்துவதற்கான என்ன சுலோகன் இருக்கிறதோ அதையும் நினைவில் வைக்க வேண்டும். அந்த மாதிரி தன்னுடைய ஸ்டேஜை (மேடை / நிலை மற்றும் சொற்பொழிவை தயார் செய்யுங்கள். மேடையில் நாற்காலியில் அமருங்கள் அதாவது தன்னுடைய கௌரவத்தின் நாற்காலியில் அமருங்கள். அப்படி மேடை, சொற்பொழிவு மற்றும் கௌரவம் (ஸ்டேடஸ்) இந்த மூன்றுமே அவசியமாக இருக்கிறது. பின்பு கொஞ்ச காலத்தில் உலகை மாற்றம் செய்து விடுவீர்கள். இதைச் செய்யவோ தெரியும் இல்லையா ஆனால் மனநிலை அந்த மாதிரி உறுதியானதாக, ஒரே சீரானதாக, ஆடாத மற்றும் அசையாததாக இருக்க வேண்டும் என்ற இந்த கவனமும் வைக்க வேண்டும். அதனால் எந்தவொரு புயலும், மேலும் எந்தவொரு சூழ்நிலையும் அதை அசைத்து விடக்கூடாது. அந்த மாதிரி தன்னை தயார் செய்யுங்கள் அப்படி பயிற்சி இருக்கிறதா? அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறீர்களா மற்றும் எவர் ஹேப்பியாக இருக்கிறீர்களா? அதன் மூலம் ஒரு நொடியில் எப்படி நிலையோ, எப்படி ஸ்தானமோ மற்றும் எப்படிப்பட்ட ஆத்மாக்களின் இடமோ அதன் பிரகாரம் கொஞ்ச நேரத்தில் தன்னுடைய நிலையை தயார் செய்து நடைமுறை சொற்பொழிவை நிகழ்த்த முடிய வேண்டும். புரிந்ததா? இது தான் எதிர்காலத் திட்டம்.

நல்லது. அந்த மாதிரி எப்பொழுதும் தன்னுடைய நிலை மூலமாக, ஸ்டேடஸ் மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கு தன்னுடைய சம்பூர்ண நிலை, தன்னுடைய உண்மையான ஸ்டேடஸின்

சாட்சாத்காரம் செய்விக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, உலக நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

வரதானம்: எப்பொழுதும் கட்டளை என்ற திலகமிட்டு முதல் பரிசை பெறக்கூடிய கட்டளைப்படி நடப்பவர் ஆகுக!

எந்தக் குழந்தைகளின் நெற்றியில் கட்டளைப்படி நடப்பவர் என்ற நினைவின் திலகம் இடப்பட்டிருக்கிறது. ஒரு எண்ணம் கூட கட்டளையின்றி செய்வதில்லை. அவர்களுக்கு முதல் பரிசு கிடைக்கிறது. எப்படி சீதைக்கு கோட்டின் உள்ளே அமர்ந்திருப்பதற்கான கட்டளை இருந்தது, அந்த மாதிரி ஒவ்வொரு அடியை எடுத்து வைத்து, ஒவ்வொரு எண்ணத்தை செய்து கொண்டே தந்தையின் கட்டளை என்ற கோட்டிற்கு உள்ளே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பீர்கள். எந்த விதமான இராவணனின் சம்ஸ்காரம் முற்றுகை இடாது மேலும் நேரமும் வீணாகச் செல்லாது.

சுலோகன்: யார் மீதாவது பற்றுதல் இருக்கிறது என்றால் அந்த பற்றுதல். முயற்சி செய்வதில் கவனக்குறைவானவராக அவசியம் ஆக்கும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 30.05.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 84-ஜென்மங்களின் ரிகார்ட்டை (Register) நிரப்புவதற்கான நேரம் புருஷோத்தம சங்கமயுகம்!

அனைவரும் தன்னை பாண்டவ சேனையின் மகாவீராங்கனை அல்லது மகாவீரணிகள் என்று நினைக்கிறீர்களா? மகாவீரன் என்றால் தன்னை சக்திசாலியானவர் என்று நினைக்கிறீர்களா? பலமற்ற ஆத்மா யாராவது எதிரில் வந்தார் என்றால், பலமற்றவருக்கு பலம் கொடுப்பவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது இதுவரை தன்னிலேயே பலம் நிரப்பிக் கொண்டு இருக்கிறீர்களா? கொடுப்பவர்களாக இருக்கிறீர்களா அல்லது பெறுபவர்களாக ஆகியிருக்கிறீர்களா? அனைத்து சக்திகளின் ஆஸ்தியை அடைந்து விட்டீர்களா அல்லது இன்னும் பிராப்தி அடைய வேண்டுமா? இதுவரை பிராப்தி செய்வதற்கான நேரமா அல்லது செய்விப்பதற்கான நேரமா? மகானாக ஆவதற்காக கடும் உழைப்பை எடுப்பதற்கான நேரமா? ஒருவேளை கடைசி வரை யார் மூலமாவது எந்த விதமான சேவையை எடுத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால், சேவைக்கான பிரதிபலனை எதிர்காலத்தில் செய்வீர்களா என்ன? எதிர்காலம் பிராப்தியை அனுபவிப்பதற்கான நேரமா அல்லது பிரதிபலனைக் கொடுப்பதற்கான நேரமா? அனைத்து விஷயங்களையும் புத்தியில் வைத்துக் கொண்டே என்னுடைய கடைசி பங்கு மற்றும் இந்த எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். இப்பொழுதிலிருந்தே அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையின் பொக்கிஷத்தை கொடுக்கக்கூடிய வள்ளலாக எப்பொழுது ஆவீர்களோ, தன்னுடைய சக்திகள் மூலமாக தாகத்திலிருக்கும் மற்றும் துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு வாழ்க்கைப் பிச்சை கொடுப்பீர்களோ, வரம் அளிப்பவராகி கிடைக்கப்பெற்ற வரதானங்களின் மூலமாக அவர்களையும் தந்தையின் அருகில் கொண்டு வருவீர்களோ, தந்தையின் உறவில் கொண்டு வருவீர்களோ அப்பொழுது இங்கே உள்ள

வள்ளல் தன்மையின் சம்ஸ்காரம் எதிர்காலத்தில் 21 ஜென்மங்கள் வரை இராஜ்யபதவி அதாவது வள்ளல் தன்மையின் சம்ஸ்காரத்தை நிரப்ப முடியும். இந்த சங்கமயுகத்தை புருஷோத்தம சங்கமயுகம் மற்றும் மிக உயர்ந்த யுகம் என்று ஏன் கூறுகிறீர்கள்? ஏனென்றால், ஆத்மாவில் ஒவ்வொரு விதமான தர்மத்தின், இராஜ்யத்தின், உயர்ந்த சம்ஸ்காரங்களின், உயர்ந்த சம்மந்தங்களின் மற்றும் உயர்ந்த குணங்களின் அனைத்து உயர்ந்தவைகளும் இப்பொழுது ஒரு ரிகார்டு போன்று நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. 84 ஜென்மத்தின் ஏறும் கலை மற்றும் இறங்கும் கலை இந்த இரண்டின் சம்ஸ்காரங்களை இந்த நேரம் ஆத்மாவில் நிரப்புகிறீர்கள். ரிகார்ட்டை நிரப்பும் நேரம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

எப்பொழுது எல்லைக்குட்பட்ட ரிகார்ட்டை (இசைத்தட்டு) நிரப்புகிறார்களோ எவ்வளவு கவனம் வைக்கிறார்கள். எல்லைக்குட்பட்ட ரிகார்ட்டை நிரப்புபவர்களும் மூன்று விஷயங்களை கவனத்தில் வைக்கிறார்கள். அவை எவை? அவர்கள் வாயுமண்டலம் (சுற்றுப்புறச்சூழல்), தன்னுடைய உள்உணர்வு மற்றும் குரல் இந்த மூன்று விஷயங்களின் மேல் கவனம் வைக்கிறார்கள். ஒருவேளை உள் உணர்வு சஞ்சலமாக இருக்கிறது மற்றும் அது ஒருமுகப்படவில்லை என்றால் குரலிலும் ஒரு ஈர்ப்பு சுவை இருப்பதில்லை. எந்த விதமான பாட்டை பாடுகிறார்களோ அதே ரூபத்தில் நிலைத்திருந்து பாடுகிறார்கள். ஒருவேளை துக்கமான பாடலாக இருக்கிறது என்றால் துக்கமான ரூபத்தை தாரணை செய்து பாடல் பாடவில்லை என்றால் கேட்பவர்களுக்கு அந்தப் பாடல் மூலமாக எந்தவொரு ரசனையும் வராது. எப்பொழுது எல்லைக்குட்பட்ட பாடல் பாடுபவர் மற்றும் ரிகார்ட்டை பதிவு செய்பவர்களும் இந்த அனைத்து விஷயங்களின் கவனம் வைக்கிறார்கள் என்றால், நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட ரிகார்ட்டை பதிவு செய்பவர்கள், முழுக் கல்பத்திற்கான ரிகார்ட்டை பதிவு செய்பவர்கள் என்றால் ஒவ்வொரு நேரமும் இந்த அனைத்து விஷயங்களின் மேல் கவனம் வைக்கிறீர்களா? ஒவ்வொரு விநாடியும் ரிகார்ட் பதிவாகிக் கொண்டிருக்கிறது என்ற இந்த கவனம் இருக்கிறதா? என்ன இவ்வளவு கவனம் இருக்கிறதா? ரிகார்ட் பதிவாகிக் கொண்டே இருக்கும் பொழுது ஒருவேளை உற்சாகத்திற்குப் பதிலாக சோம்பல் வந்து விட்டது என்றால் ரிகார்ட் எப்படி பதிவாகும்? ரிகார்ட்டை பதியும்

பொழுது யாராவது சோம்பேறித்தனமாக இருப்பார்களா என்ன? அப்படி நீங்களும் எப்பொழுது ரிகார்ட்டை பதிவு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் பதிவு செய்து கொண்டிருக்கும்பொழுதே சோம்பல் வருகிறதா அல்லது எப்பொழுதும் உற்சாகத்தில் இருக்கிறீர்களா? எப்பொழுதாவது தன்னால் நிரப்பப்பட்ட முழு நாளின் ரிகார்ட்டை, இன்றைய ரிகார்ட் எப்படி பதிவாகி இருக்கிறது என்று சாட்சியாகிப் பார்க்கிறீர்களா?

எப்படி டேப்பிலும் (ஒலிநாடாவிலும்) முதலில் நிரப்பி பிறகு எப்படி பதிவாகி இருக்கிறது என்று பார்க்கிறார்கள் மற்றும் கேட்கிறார்கள். சரியாக இருக்கிறதா அல்லது இல்லையா? என்று அதே போல் நீங்களும் சாட்சியாகிப் பார்க்கிறீர்களா என்ன? பார்ப்பதினால் என்னவாகும்? சரியாக பதிவாகியிருக்கிறதா என்று தனக்குத் தானே திருப்தியாக இருக்கிறதா என்று பார்ப்பார் அல்லது தன்னைத் தானே பார்த்துக் கொண்டே இதை விட நன்றாக பதிவாகியிருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? ரிசல்ட்டைப் பார்க்கிறீர்கள் தான் இல்லையா? யார் எப்பொழுதும் தன்னைத் தானே சாட்சியாகி தினசரி சோதனை செய்கிறார்களோ, ஒருபொழுதும் சோதனை செய்யத் தவறுவது இல்லை என்று நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள் (மிகக்குறைந்தவர்கள் கையை உயர்த்தினார்கள்). இப்பொழுது சோதனை யாளராகவே ஆகவில்லையா? யார் செக்கராக ஆகவில்லையோ அவர் மேக்கராக (உருவாக்குபவராக) எப்படி ஆவார்? மறந்து விடுகிறீர்களா என்ன? நேரம் மேலே கீழே போக முடியும் ஆனால் மறந்து விட்டீர்கள் என்றிருக்கக்கூடாது. அப்படி ஆத்மாவின் தினசரி நடவடிக்கையாக அமிர்தவேளை எதை தயாரிக்கிறீர்கள் மற்றும் நிர்ணயம் செய்கிறீர்கள் அது ஏன் மறந்து விடுகிறது என்று சோதிக்க வேண்டும் அல்லது நிர்ணயம் செய்வதே தெரியாதா? ஆத்மாவின் தினசரி காரியங்களை நிர்ணயம் செய்யத் தெரியுமா? இது மிக சாதாரண விஷயம், இந்த சாதாரண விஷயத்தில் கூட ஒருவேளை மறந்த நிலை இருக்கிறது என்றால் ஆத்மா இதுவரையிலும் பலமற்றதாக இருக்கிறது என்று நிரூபணமாகிறது. யார் தன்னைத் தானே ஈஸ்வரிய நியமம், ஈஸ்வரிய மரியாதைகளில் நடத்து விக்க முடியாதோ அவர் உலகின் மரியாதைப்பூர்வமான சட்டம் நிறைந்த இராஜ்யத்தை நடத்து விக்க முடியுமா? யார் சங்கமயுக இராஜ பதவியின் அதிகாரியாக ஆக

முடியவில்லையோ அவர் எதிர்கால இராஜ பதவியை எப்படி அடைய முடியும்?

இந்த குழுவின் டீச்சர்ஸ் யார்? இவ்வளவு குறைந்த ரிசல்ட்டிற்கான பொறுப்பாளர் யார்? வந்திருக்கும் டீச்சர், தானே சோதனையாளராக இருக்கிறாரா என்ன? தைரியத்துடன் யாரும் கையை உயர்த்தவில்லை. ஒருவேளை இப்பொழுதே உலகயுத்தம் தொடங்கி விட்டது என்றால்? அந்த நேரம் எழுந்து நின்று விடுவோம் என்று யாரோ கூறினார்). ஒருவேளை அந்த நேரத்தில் எழுந்து நின்று விடுவீர்கள் என்றால் இதை என்னவென்று கூறுவது, இயற்கையின் ஆதாரத்தில் எந்த ஆத்மா நடந்து கொண்டிருக்கிறாரோ அந்த ஆத்மாவை என்னவென்று சொல்வது? நேரமும் இயற்கை தான் இல்லையா? ஒருவேளை ஆத்மா இயற்கையின் ஆதாரத்தில் நடந்து கொண்டிருப்பவராக இருக்கிறார் என்றால் அவரை கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவர் என்று சொல்ல முடியுமா? நேரத்தின் தள்ளுதலினால் யார் செல்ல ஆரம்பித்தாரோ அவரை என்னவென்று கூறலாம்? தள்ளுதலினால் செல்பவராக ஆவோம் என்று இதைத் தான் யோசித்தீர்களா என்ன? தற்சமயத்து இந்தக் குழுவோ மிகவும் பலஹீனமாக இருக்கிறது, பெரும்பான்மையோர் பலஹீனமானவர்கள். நல்லது. இருந்தாலும் கடந்தது, கடந்ததாகவே இருக்கட்டும் ஆனால் இப்பொழுதிலிருந்து நீங்கள் உங்களை மாற்றம் செய்து கொள்ளுங்கள். இருந்தாலும் இப்பொழுது மிகக் குறைந்த நேரம் இருக்கிறது. இப்பொழுதோ பாப்தாதா மற்றும் சகயோகி உயர்ந்த ஆத்மாக்கள் முயற்சி செய்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள் உங்களுக்கு ஒன்றிற்கு ஆயிரம் மடங்கு உதவி கொடுத்து, ஆதரவு கொடுத்து, அன்பு கொடுத்து மற்றும் சம்மந்தத்தின் ரூபத்தில் பலம் கொடுத்து முன்னேறிச் செல்ல வைக்க முடியும் ஆனால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு இந்த விஷயங்கள் அதாவது லிஃப்ட் கிடைப்பதும் முடிந்து விடும். எனவே இப்பொழுது என்னென்ன பெற விரும்புகிறீர்களோ அதைப் பெற முடியும். பின்பு தந்தையின் ரூபத்தின் அன்பு மாறி சுப்ரீம் ஜஸ்டிஸின் (தலைமை நீதிபதியின்) ரூபம் ஆகி விடும்.

நீதிபதியின் எதிரில் எவ்வளவு தான் அன்பிற்குரிய உறவினராக இருந்தாலும் சட்டம், சட்டம் தான். இப்பொழுது அன்பிற்கான நேரம்,

பின்பு சட்டத்திற்கான நேரமாக ஆகி விடும். பிறகு அந்த நேரம் லிஃப்ட் கிடைக்க முடியாது. இப்பொழுது பிராப்திக்கான நேரம் பின்பு கொஞ்ச காலத்திற்கு பிறகு பிராப்திக்கான நேரம் மாறி வேதனைப்படுவதற்கான நேரம் வரும். அந்த நேரம் விழித்தெழுவீர்களா என்ன? இருந்தாலும் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் கொஞ்ச காலத்தில் வெகு காலத்தின் பிராப்தியை உருவாக்கிக் கொள்ளுங்கள் என்று தான் கூறுவார். நேரத்தின் காத்திருத்தலில் அலட்சிய மானவராக ஆகாதீர்கள். நம்முடைய ஒவ்வொரு காரியமும் 84-ஜென்மங்களின் ரிகார்ட்டை நிரப்புவதற்கான ஆதாரம் ஆகும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தன்னுடைய உள்உணர்வு, தன்னுடைய சுற்றுப்புறச்சூழல் மற்றும் தன்னுடைய வார்த்தைகளை யதார்த்த ரூபத்தில் செட் செய்யுங்கள். எப்படி அவர்கள் கூட சுற்றுப்புறச்சூழலை உருவாக்குகிறார்களோ அதே போன்று நீங்களும் உங்களுடைய சூழ்நிலையை, தன்னுடைய உள்நோக்குமுகத்தின் சக்தியினால் உயர்ந்ததாக ஆக்குங்கள். உள்உணர்வை உயர்ந்ததாக மற்றும் வார்த்தைகளையும் இரகசியம் அறிந்து சொல்லப்பட்டதாக மற்றும் யுக்தியுக்தானதாக ஆக்குங்கள் அப்பொழுது தான் இந்த ரிசல்ட் மாற முடியும். மாற்றவோ வேண்டும் இல்லையா? என்ன அப்படியே சம்மதம் தானே? நாங்கள் ஐந்து தத்துவங்களையும் மாற்றுவோம் என்று மிகப் பெரியதாக சவால் விடுகிறீர்கள். அப்படியானால் சோதனையாளராக இல்லாமல் எப்படி உருவாக்குபவராக ஆவீர்கள். இப்பொழுதிலிருந்து புகார்கள் முடிவடைந்து விட வேண்டும். இப்பொழுதிலிருந்து இந்த பலஹீனம் விடுபட்டது, பின்பு கடைசி வரை ஒருபொழுதும் இது இருக்காது என்று நினைப்பவர்கள் கையை உயர்த்துங்கள். இதனுடைய பொறுப்பு யாரிடம் இருக்கிறது (இது தீதியிடம் இருக்கிறது என்று சிலர் சொன்னார்கள், பாப்தாதாவிடம் இருக்கிறது என்று சிலர் சொன்னார்கள்). பாப்தாதா செய்தார் என்றால் பாப்தாதா அடைவார். செய்யும் நேரத்தில் பாப்தாதா மற்றும் அடையும் நேரத்தில்? எதிர்கால பதவி அடைவதற்கான தியாகம் செய்தீர்கள் என்றால் பிறகு செய்வதற்கான தியாகமும் செய்யுங்கள் ஆனால் அவர்கள் செய்ய முடிவதில்லை ஏனென்றால் முக்திதாமத்தைச் சேர்ந்தவர்களாக இல்லவே இல்லை. ஒவ்வொருவருக்கும் தன்னுடைய பொறுப்பைத் தானே எடுக்க வேண்டும். ஒருவேளை தீதி, தாதி மற்றும் டீச்சர் பொறுப்பானவர்கள் என்று நினைத்தீர்கள் என்றால், நீங்கள்

எதிர்காலத்தில் அவர் களுடைய பிரஜை ஆக வேண்டியதிருக்கும், இராஜாவாக ஆக முடியாது என்பது நிரூபணமாகிறது. இது கூட அடிமையாக இருப்பதின் சம்ஸ்காரமாக ஆனது இல்லையா? யார் அடிமையாக இருப்பவரோ அவர் அதிகாரி ஆக முடியாது. உலக இராஜ்ய பாக்கியத்தை அடைய முடிவதில்லை. எனவே தன்னுடைய பொறுப்பை, பிறகு முழு உலகத்தின் பொறுப்பை எடுப்பவர் உலக மகாராஜன் ஆக முடியும். உலகிற்கும் நன்மை செய்யும் குழந்தையாக இருந்து தன்னுடைய நன்மையைச் செய்ய முடியாதா? இது அழகாக இருக்கிறதா என்ன? இதையோ கலியுகத்தின் கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பதின் அடையாளத்தைக் கூறுகிறீர்கள். யாரோ லட்சாதிபதியாக இருக்கிறார், ஆனால் ஒரு ரூபாய்க்குக் கூட சுகத்தை அடைய முடிவதில்லை. அப்படி அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தின் அதிபதியாக இருக்கிறீர்கள், ஆனால் தனக்காக ஒரு சின்ன சக்தியைக் கூட உபயோகிக்க முடிவதில்லை, இதை என்னவென்று கூறலாம். சங்கமயுகத்தில் இது பிராமணர்களின் அடையாளமா என்ன? இப்பொழுது சங்கமயுகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்களா அல்லது எப்பொழுதாவது சங்கமயுகத்தில் நிலைத்திருக்க முடியவில்லை என்றால் எங்காவது சென்று விடலாம் என்று ஒருகாலை கலியுகத்தில் வைத்திருக்கிறீர்களா? சங்கமயுகத்தின் அடையாளம் இது அல்ல. எனவே இப்பொழுதிலிருந்தே தீவிர முயற்சி செய்பவராகி செய்யத் தான் வேண்டும். மேலும் ஆகத் தான் வேண்டும் என்று உறுதியான எண்ணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். செய்வோம் மற்றும் திட்டத்தை உருவாக்குவோம் என்ற இது கூட தீவிர முயற்சி என்று சொல்லப்பட மாட்டாது. என்ன திட்டத்தை உருவாக்குவீர்கள்? ஏற்கனவே உருவாக்கப்பட்டது இல்லையா என்ன? திரிகாலதரிசிக்கோ திட்டத்தை உருவாக்குவதில் நேரம் எடுக்காது, ஏனென்றால் அவருக்கோ மூன்று காலமும் தெளிவாக இருக்கிறது. அனைத்துக் காரியமும் ஒரு நொடியில் நடக்க வேண்டும் என்று அந்த மாதிரி தன்னுடைய வேகத்தை அதிகப்படுத்துங்கள், அதிவேகம் உள்ளவர் தான் சத்கதியை அடைய முடியும். நல்லது.

அந்த மாதிரி நம்பிக்கைக்குரியவர். பாப்தாதாவின் உயர்ந்த எண்ணத்தை செயலாக்கக்கூடிய, ஒவ்வொரு எண்ணம், செயல் மற்றும் வார்த்தையை சோதனை செய்யக்கூடிய, ஒவ்வொரு நொடியில்,

ஒவ்வொரு எண்ணத்தில் தன்னுடைய நன்மை மற்றும் உலகின் நன்மை செய்யக்கூடிய உலகிற்கு நன்மை செய்யும். உலகத்தை மாற்றம் செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

## 01.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அனைத்து சக்திகளின் ஸ்டாக் (கையிருப்பு)!

தன்னை விக்ன ப்ரூ்ப் (தடைகள் தாக்கமுடியாதவர்) என்று நினைக்கிறீர்களா? எப்பொழுது தானே விக்ன ப்ரூ்ப் ஆவீர்களோ அப்பொழுது தான் மற்றவர்களை விதவிதமான விக்னங்களிலிருந்து காப்பாற்ற முடியும். தன்னிடமும் ஏதாவது மனதின் விக்னம் இருக்கிறது என்றால், மற்றவர்களை விக்ன ப்ரூ்ப் ஆக ஒருபொழுதும் ஆக்க முடியாது. இப்பொழுதோ அந்த மாதிரியான நேரம் வந்து கொண்டிருக்கிறது. முழு மூங்கில் காட்டிற்கும் எப்பொழுது நெருப்பு பிடிக்குமோ அந்த நெருப்பிலிருந்து காப்பாற்றுவதற்காக சில முக்கிய விஷயங்கள் அவசியமாக இருக்கிறது. எப்படி எப்பொழுதாவது நெருப்புபிடிக்கிறது என்றால், நெருப்பிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான முதலில் எந்தப் பொருளின் அவசியம் உணரப்படுகிறது?

எப்பொழுது இந்த விநாசத்தின் நெருப்பு நாலாபுறமும் பிடிக்குமோ அந்த நேரம் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய முதன் முதலான கடமை என்னவாக இருக்கிறது? அமைதியின் தானம் அதாவது சீதளதன்மையின் தண்ணீர் கொடுப்பது. தண்ணீர் விட்ட பிறகு என்னென்ன செய்கிறார்கள்? யாருக்கு என்னென்ன அவசியமாக இருக்கிறதோ அவர்களின் தேவைகளை நிறைவேற்றுகிறார்கள். சிலருக்கு ஓய்வு வேண்டும், சிலருக்கு இருப்பிடம் வேண்டும். அதாவது, யாருக்கு என்ன தேவையாக இருக்கிறதோ அதை நிறைவேற்றுகிறார்கள். உங்களுக்கு எந்த தேவைகளை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கும் என்று அதை தெரிந்திருக்கிறீர்களா? அந்த நேரம் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு சக்தியின் தேவை இருக்கும். சிலருக்கு சகித்துக் கொள்ளும் சக்தியின் தேவை இருக்கும், சிலருக்கு உள்ளடக்கும் சக்தியின் தேவை இருக்கும், சிலருக்கு நிர்ணயம் செய்யும் சக்தியின் தேவை இருக்கும் வேறு யாருக்காவது தன்னைத்

தானே பகுத்தறியும் சக்தியும் தேவை இருக்கும். யாருக்காவது முக்தியை சென்றடைய வேண்டும் என்ற அவசியம் இருக்கும். அந்த ஆத்மாக்களுக்கு விதவிதமான சக்திகளின் தேவை இருக்கும். தந்தையின் அறிமுகம் மூலமாக ஒரு நொடியில் அமைதி இல்லாத ஆத்மாக்களுக்கும் அமைதி ஆக்குவதின் சக்தியும் அந்த நேரம் தேவையாக இருக்கும். அதை இப்பொழுதிலிருந்தே சேமித்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அந்த நேரம் பற்றிக் கொண்டுவிட்ட நெருப்பிலிருந்து எப்படி காப்பாற்ற முடியும்? உயிர்பிச்சை எப்படி கொடுக்க முடியும்? இதை முன்பாகவே தயார் செய்வதற்காக தன்னைத் தானே பார்க்க வேண்டியதாக இருக்கும்.

எப்படி ஆறு மாதங்களில் இந்த இந்த பொருளின் அவசியம் இருக்கும் என்று ஆறு மாதத்திற்கான ஸ்டாக்கை (கையிருப்பை) வைத்துக் கொள்கிறீர்கள் இல்லையா? சோதனை செய்து பின்பு நிரப்பிவிடுகிறீர்கள். இந்த விதமாக இந்த ஸ்டாக்கையும் சோதனை செய்கிறீர்களா என்ன? முழு உலகிலுள்ள அனைத்து ஆத்மாக் களுக்கு சக்தியின் தானம் கொடுக்க வேண்டியதிருக்கும். அவ்வளவு ஸ்டாக்கை சேமித்திருக்கிறீர்களா அதன் மூலம் தன்னையும் அந்த சக்திகளின் ஆதாரத்தில் நடத்து விக்க முடிய வேண்டும் மேலும் மற்றவர்களுக்கும் சக்தி கொடுக்க முடிய வேண்டும் அதனால் யாரும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விட வேண்டாம். ஒருவேளை தன்னிடம் சக்திகள் சேமிப்பாக இல்லை என்றால் மேலும் ஒரு ஆத்மாவாவது வஞ்சிக்கப்பட்டு இருந்து விட்டது என்றால் இதனுடைய சுமை யார் மேல் இருக்கும்? யார் நிமித்தமாகி இருக்கிறார்களோ அவர்கள் மேல் தான். எப்பொழுதும் தன்னுடைய ஒவ்வொரு சக்தியின் ஸ்டாக்கை சோதனை செய்யுங்கள். யாரிடம் அனைத்து சக்திகளின் ஸ்டாக் சேமிப்பாகி இருக்கிறதோ அவர்கள் தான் முக்கியமானவர்கள் என்று மகிமை செய்யப்படுகிறார்கள்.

எப்படி நட்சத்திரங்கள் இருக்கின்றன. அவைகளிலும் வரிசைக்கிரமம் இருக்கின்றன. யாரிடம் ஸ்டாக் சேமிப்பாகி இருக்கிறதோ அவர்கள் தான் அதிர்ஷ்ட நட்சத்திரங்களின் ரூபத்தில் பிரகாசமாக உலக ஆத்மாக்களின் இடையே தென்படுவார்கள். எனவே அனைத்து சக்திகளின் ஸ்டாக் இருக்கின்றதா என்ற இந்த சோதனை செய்ய

வேண்டும். மகாரதிகளுக்கு தன்னுடைய ஒவ்வொரு எண்ணத்தின் மேல் முன்பாகவே கவனம் இருக்கிறது. மகாரதிகளின் சோதனை செய்வதின் முறையே வித்தியாசமானது. யோகாவின் சக்தி இருக்கும் காரணத்தினால் இயல்பாகவே யுக்தியுக்த் எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் இருக்கும். இப்பொழுது இது இயற்கையான ரூபமாக ஆகி விட்டது. மகாரதிகளின் சோதனையின் ரூபமே இது தான் சோதனைகளில் எந்த சக்தியின் எவ்வளவு ஸ்டாக் சேமிட்டாகி இருக்கிறது, அந்த சேமிப்பாகியிருக்கும் ஸ்டாக்கிலிருந்து எத்தனை ஆத்மாக்களுக்கு நன்மை செய்ய முடியும்? எப்படி ஸ்தூலமான ஸ்டாக்கை கண்காணிக்க வேண்டும் மற்றும் சேமிக்க வேண்டும் என்பது ஒரு வேலையாக இருக்கிறதோ அதே போல் அனைத்து சக்திகளின் ஸ்டாக்கை சேமிப்பதற்கான பொறுப்பும் இருக்கிறது. ஆல்ரவுண்டரின் ஒவ்வொரு பொருளின் ஸ்டாக்கின் தேவைக்கேற்றபடி சேமிக்க வேண்டியதாக இருக்கிறது. அமிர்தவேளையில் எழுந்து தன்னை கவனம் என்ற தண்டவாளத்தில் செல்ல வைப்பது என்றால் தண்டவாளத்தில் வண்டி சரியாகச் செல்லும். பிறகு மேலே கீழே போவது என்கிற சம்பவமே இல்லை. அப்படி இப்பொழுது ஸ்டாக்கை சேமிப்பதற்கான சோதனையை வைத்துக் கொள்ள வேண்டும். பாரதத்திற்கானது மட்டும் இல்லை, முழு உலகத்தின் பொறுப்பு குழந்தைகளாகிய உங்கள் மேல் இருக்கிறது. மகாரதிகளின் ஒவ்வொரு காரியமும் மகானாக இருக்க வேண்டும். யாரை விட மகானாக இருக்க வேண்டும். குதிரைப்படை மற்றும் காலாட்படையை விட மகானாக இருக்க வேண்டும். நல்லது.

வரதானம்: நினைவின் மந்திரம் மூலமாக எண்ணம் மற்றும் காரியத்தில் அழியாத சித்தியை (வெற்றியை) பிராப்தி செய்யக்கூடிய சித்தி சொரூபமானவர் ஆகுக!

குழந்தைகள் நீங்கள் சர்வ சக்திவானின் அரசாங்கத்தின் தூதுவர்கள். எனவே யாருடனாவது உரையாடல் செய்யும் போது தன்னுடைய மனதை நிலை குலையச் செய்யக்கூடாது. நினைவின் மந்திரத்தை உபயோகியுங்கள். எப்படி யாராவது வார்த்தைகளினால் அல்லது வேறு ஏதாவது முறையினால் வசமாவதில்லை என்றால் மந்திரம் தந்திரம் செய்கிறார்கள், உங்களிடம் ஆத்மீக பார்வையின் கண்கள் மற்றும்

மன்மனாபவ இதனுடைய மந்திரம் இருக்கிறது. அதன் மூலம் தன்னுடைய எண்ணங்களை நிறைவேறச் செய்து சித்தி சொரூபமானவர் ஆக முடியும்.

**சுலோகன்: காரிய உணர்வுக்குப் பதிலாக ஆத்ம உணர்வுடையவராக ஆகுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

# 06.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமநிலை மற்றும் அருகாமை நிலை!

இன்று பாப்தாதா யாரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்? எப்படி தந்தைக்கு விதவிதமான கர்த்தவ்யங் களின் (செயல்களின்) காரணமாக அனேக பெயர்களால் மகிமை செய்யப்படுகிறது அதே போலவே குழந்தைகளுக்கும் அனேக பெயர்களால் மகிமை செய்யப்பட்டிருக்கிறது. இன்று எந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிந்து கொள்ள முடியுமா? எண்ணத்தை பகுத்தறிய முடியுமா? இன்று பாப்தாதா தன்னுடைய மணிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சிலர் நெற்றியின் மணியாக இருக்கிறார்கள், சிலர் கழுத்தின் மணி மற்றும் சிலர் இதயத்தின் மணிகளாக இருக்கிறார்கள். மூன்று விதமான மணிகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கிறோம். நீங்கள் அனைவரும் கூட தன்னை மணி என்று நினைக்கிறீர்கள் தானே இல்லையா. இது மணிகளின் சபை ஆகும். மணிகளில் உயர்ந்த மணி எது? நான் முதல் நம்பரின் மணியாக இருக்கிறேனா அல்லது இரண்டாவது மற்றும் மூன்றாவது நம்பரின் மணியாக இருக்கிறேனா என்று இதையும் ஒவ்வொருவரும் தன்னைத் தெரிந்து கொள்ள முடியும். முதல் நம்பரின் விசேஷம் என்ன என்பதை தெரிந்திருக்கிறீர்களா? முதல் நம்பர் நெற்றியின் மணி ஆகும். அந்த நெற்றியின் மணிக்கு இரண்டு விசேஷங்கள் இருக்கின்றன. தன்னுடைய சொரூபத்தின் விசேஷங்களையோ சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். இப்பொழுது தெரிந்து மட்டும் கொள்வதல்ல மாறாக அந்த விசேஷங்களின் சொரூபமாக எவ்வளவு ஆகியிருக்கிறோம் என்ற இதையும் பாருங்கள். யாருடைய சொரூபமாக எது இருக்கிறதோ அதை வர்ணனை செய்வது சுலபமாக இருக்கிறது. "நான் யார்? எப்படி இருக்கிறேன்?" இதையும் வர்ணனை செய்ய வேண்டுமா? இரண்டு விசேஷங்களை மட்டும் கேட்கிறோம். அதிகமாக இருக்கின்றன, ஆனால் இரண்டை மட்டும் கேட்கிறோம். (விதவிதமான கருத்துக்கள்

வெளியாகின). நெற்றிமணியின் இரண்டு விசேஷங்கள் இவை தான் -ஒன்று சமநிலை மற்றும் இன்னொன்று அருகாமை நிலை. பாப்தாதாவிற்கு சமமான நிலை. இதில் நீங்கள் அனைவரும் கூறிய விஷயங்கள் வந்து விடுகிறது. பாப்தாதா லைட் (ஒளி / லேசான) மற்றும் மட் (சக்தி ரூபத்தி இருக்கிறார் இல்லையா? அப்படி தந்தைக்குச் சமமான நிலை என்றால் லைட் மற்றும் மைட் சொரூபமாக ஆகியே விட்டது. தந்தை சர்வ சக்திவானாக இருக்கிறார் என்றால் தந்தைக்குச் சமமாக சர்வ சக்திகள் நிரம்பியவராகவோ ஆகியே விட்டீர்கள். தந்தை எப்பொழுதும் சித்தி (வெற்றி) சொரூபமாக இருக்கிறார் என்றால் வெற்றியை அடைந்தே இருக்கிறார். அதே போல் தந்தைக்குச் சமமாக நெற்றியின் மணிகள் கூட அனைத்து வெற்றி சொரூபமாக இருக்கிறார்கள். எது தந்தையின் மகிமையாக இருக்கிறதோ அந்த அனைத்து மகிமைக்குத் தகுதியான அதாவது அனைத்து தகுதிகளும் நிரம்பிய சொரூபமாகும். இரண்டாவது விஷயம் அருகாமை நிலை. பாப்தாதாவிற்கும் அருகாமை, ஆனால் பாப்தாதாவினுடன்தான் அனைத்து உலகத்து ஆத்மாக்களின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தின் கூட அருகில் இருக்கிறீர்கள். எந்த விதமான சம்ஸ்காரம் உடையவராக இருந்தாலும் ஆனால் பாப்தாதாவின் அருகில் இருக்கும் காரணத்தினால், பகுத்தறியும் சக்தி இருக்கும் காரணத்தினால், காந்தத்திற்குச் சமமாக எவ்வளவு தூரத்திலிருக்கும் ஆத்மாவையும் பாப்தாதாவின் அருகில் கொண்டு வருபவர்கள். தந்தையின் குணங்கள், தந்தையின் கர்த்தவ்யங்களின் அருகில் கொண்டு வருபவர்கள். அருகாமை என்றால் காந்தத்தின் சொரூபமாக இருப்பது. காந்தத்திற்குச் சமமாக மற்றும் காந்தத்தின் அருகில் இருக்கும் காரணத்தினால் அனைத்து சக்திகளின் ஆதாரத்தினால் உலகிற்கு நன்மை செய்வதற்கான பொறுப்பாளராக ஆகிறார்கள். அப்படி அருகாமையில் இருக்கும் ஆத்மாக்கள் உலகின் ஆதாரமானவர்கள் மற்றும் உலகிற்கு நன்மை செய்யக்கூடியவர்கள், அவர்கள் தான் நெற்றியின் மணிகள் ஆவார்கள். அந்த மாதிரி நெற்றியின் மணி ஒவ்வொரு எண்ணத்தில், ஒவ்வொரு காரியத்தில் தன்னை உலகிற்கு ஆதாரமானவர் மற்றும் நன்மை செய்வர் என்று புரிந்து ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறார்கள் அதாவது இப்பொழுதிலிருந்தே அவர்கள் கிரீடம் அணிந்தவர்களாகவும் ஆசனதாரிகளாகவும் இருக்கிறார்கள். எதிர்காலத்தின் கிரீடம் மற்றும் ஆசனம், இந்தக் கிரீடம் மற்றும்

ஆசனத்திற்கு எதிரே ஒன்றுமே இல்லை. அந்த மாதிரியான மகான் ஆத்மாக்கள் தான் அந்த மாதிரி மகான் கிரீடம் மற்றும் ஆசனத்தின் அதிகாரியாக இருக்கிறார்கள். எப்பொழுதும் கிரீடம் மற்றும் ஆசனதாரியாக ஆகி நடந்து கொள்பவர்களாக இருக்கிறார்கள். சில நேரம் கிரீடத்தை கீழே இறக்கி வைப்பது, சில நேரம் ஆசனத்தை விட்டு விடுவது என்று அப்படி இல்லை. அனைத்து நேரமும் கிரீடம் அணிந்தவராக மற்றும் ஆசனதாரியாக இருப்பவர். அப்படி கிரீடம் மற்றும் ஆசனத்தை தெரிந்திருக்கிறீர்களா? உலகத்தின் மகாராஜா ஆவதை விட இப்பொழுதைய கிரீடம் மற்றும் ஆசனம் மிக உயர்ந்ததாகும். ஒருவேளை சங்கமயுகத்தின் இராஜாவாக ஆகவில்லை என்றால் எதிர்காலத்தின் இராஜாவாகவும் ஆக முடியாது. எனவே இது அனைத்து மகாராஜாக்களின் சபை கூடியிருக்கிறது என்று அப்படியும் புரிந்து கொள்ளலாம். எதிர்காலத்து ஆசனத்திலோ வரிசைக்கிரமமாக ஒருவர் தான் அமர முடியும், அங்கு ஒன்றிற்கு பதிலாக இருவர் அமர முடியாது. ஜோடிகளாக இருக்கிறார்கள் என்றாலும் ஒரே ஒரு ஜோடியாக ஆனார்கள் ஆனால் சங்கமயுகத்தின் ஆசனம் அவ்வளவு பெரியது அதில் எவ்வளவு பேர் விரும்பினாலும் அமர முடியும். ஸ்தானம் (இடம்) இருக்கிறது ஆனால் ஸ்திதி (நிலை) தேவையாக இருக்கிறது. ஸ்திதி இல்லாமல் ஆசனத்தில் ஸ்தானம் கிடைக்க முடியாது. அப்படியானால் அனைவரும் அவரவர்களுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு விட்டீர்களா அல்லது இப்பொழுது புக்கிங் (முன் ஏற்பாடு) செய்து கொண்டிருக்கிறீர்களா? ஒருவேளை கிரீடம் அணிந்தவராக இல்லை என்றால் ஆசனதாரியாகவும் ஆக முடியாது. இந்த ஆசனத்திற்கான கன்டிஷன் (நிபந்தனை) மிகக் கடுமையானது. மிகப் பெரியது தான் ஆனால் ஆசனம் எவ்வளவு பெரியதோ அந்த அளவு அதற்கான கன்டிஷனும் பெரியது.

நான் உலகிற்கு நன்மை செய்பவன் என்ற இந்த பொறுப்பின் கிரீடத்தையும் அணிந்தாகி விட்டதா? ஒவ்வொரு காரியத்தையும் உலகிற்கு நன்மை செய்பவராகி காரியம் செய்கிறீர்களா அல்லது தன்னுடைய நன்மையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? எப்படி குடும்ப வாழ்க்கையிலிருப்பவர்கள் தன்னுடைய குடும்பத்திலேயே மூழ்கியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். அதே போல் நீங்களும் தனக்காக மட்டும் செய்யும் முயற்சி என்ற குடும்ப

வாழ்க்கையிலேயே மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறீர்களா? தான் உட்கார்ந்து சாப்பிடும் அளவிற்காக மட்டும் சேமிப்பு செய்கிறீர்களா அல்லது தனக்காகக் கூட தந்தையிடமிருந்து ஆசீர்வாதம் மற்றும் கிருபை கிடைக்க வேண்டும் என்ற ஆசையையும் வைக்கிறீர்களா? உதவி செய்யுங்கள், தைரியம் கொடுங்கள் என்று கேட்பதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லையே? யார் இதுவரை தனக்காக மட்டும் பெறுவதிலும் மற்றும் செய்வதிலுமே மூழ்கியிருக்கிறாரோ அவர் உலகிற்கு கொடுக்கக்கூடிய வள்ளலாக எப்பொழுது ஆவார்? என்ன கடைசியில் ஆவாரா? என்ன அந்த நேரம் ஹைஜம்ப் (உயர்வாக தாண்டுதல்) செய்ய முடியுமா? ஆனால் முடியாது. வெகுகாலத்து சம்ஸகாரம் உள்ளவர்களுக்குத் தான் வெகுகாலத்தின் இராஜ்ய பாக்கியம் பிராப்தி ஆகும். "இப்பொழுது இல்லையேல் ஒருபொழுதும் இல்லை" என்ற இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். கடைசி நேரமாக எப்பொழுது ஆகுமோ அப்பொழுது செய்து விடுவோம் என்று அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுது என்பதும் இல்லை, அப்பொழுது என்பதும் இல்லை ஆனால் இப்பொழுதே அப்படி கிரீடம் அணிந்தவராகவும் ஆசனதாரியாகவும் ஆக வேண்டும். எந்த ஆசனதாரியாக ஆக வேண்டும்? ஆசனதாரி என்றால் தன்னுடைய ஆசனத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா. தந்தையின் இதய சிம்மாசனதாரி. இந்த இதயசிம்மாசனத்தின் நினைவுச் சின்ன அடையாளத்தை பார்த்திருக்கிறீர்களா? இதயம் தான் ஆசனம். இதனுடைய நினைவுச்சின்னம் எதுவாக இருக்கிறது? எங்கு அமர்ந்திருக்கிறீர்களோ அது தான் நினைவுச் சின்னமாகும். தில்வாலா (பரந்த உள்ளம் உடையவர்) தான் இல்லையா. இந்த தில்வாடா கோவில் தான் உள்ளத்தை பறிப்பவர் மற்றும் கொடுப்பவர்களின் நினைவுச்சின்னமாகும்.

இதயசிம்மாசனதாரியாக யார் ஆக முடியும்? யார் திலாராம் சிவபாபாவிற்கு உள்ளத்தை கொடுப்பவர் களோ மற்றும் தந்தையின் உள்ளத்தை அடைபவர்களோ அவர்கள் தான் ஆக முடியும். கொடுப்பது மட்டும் இல்லை, யார் யாருக்கு கொடுக்க மற்றும் பெறத் தெரியுமோ அவர் தான் இதயசிம்மாசனதாரி ஆவார். தந்தையின் இதயத்தை எப்படி அடைய முடியும்? யாருடைய இதயத்தையும் எப்படி அடையப்படுகிறது? எது அவருடைய உள்ளத்தின் உயர்ந்த எண்ணமாக

இருக்கிறதோ அந்த எண்ணத்தை நிறைவேற்றுவது என்றால் இதயத்தை அடைவது, அப்படி தந்தையின் இதயத்தை அடைவது என்றால் உலகிற்கு நன்மை செய்பவர் ஆவது மற்றும் உலகிற்காக சர்வ சக்திகளின் வள்ளல் ஆவது. அடையவும் தெரியுமா அல்லது கொடுத்து மட்டும் குஷி அடைந்து விடுகிறீர்களா? கொடுப்பது சுலபமா அல்லது பெறுவது சுலபமா? எது மலிவான வியாபாரம். உண்மையில் ஒருவேளை கொடுக்கத் தெரியும் என்றால் பெறுவது தானாக வந்து விடுகிறது. இதயத்தை பாப்தாதாவிற்கு கொடுத்து விட்டீர்கள் என்றால் யாருக்கு கொடுத்து விட்டீர்களோ அவருடைய இதயமாகி விட்டது தான் இல்லையா, எந்தப் பொருளை (மற்றவருக்கு) கொடுத்து விடுகிறார்களோ அந்தப் பொருள் யாருடையதாக இருக்கிறது? உங்களுடையதா அல்லது யாருக்கு கொடுத்தீர்களோ அவர்களுடையதா? கொடுத்தோ விட்டீர்கள் இல்லையா. பிறகு திரும்பவும் எடுத்துக் கொண்டும் இருக்கிறீர்களா? ஏதாவது இதயத்தின் துண்டை வைத்துக் கொண்ட இருக்கிறீர்களா? இதுவரையிலும் அப்படி இருக்கிறதா என்ன? இதயத்தை கொடுப்பவர் வேறு யாருக்காவது இதயத்தை விற்று விட்டால், அடமானம் வைக்கப்பட்டதை யாராவது விற்று விட்டால் அது நல்ல காரியமாக ஆவது இல்லை தான் இல்லையா. எப்பொழுது இதயத்தைக் கொடுத்து விட்டீர்கள் என்றால் அந்த இதயம் திலாராம் (இதயத்தை கொள்ளை கொண்ட ராம்) உடையதாகி விட்டது. எது அவருடைய உள்ளத்தின் எண்ணமோ அதுவே உங்களுடைய உள்ளத்தின் எண்ணமாக இருக்குமா அல்லது வித்தியாசம் இருக்குமா? இதயத்தை அடைவது என்றால் என்ன? எது தந்தையின் எண்ணமோ அது தன்னுடைய எண்ணமாக இருப்பது. எப்பொழுது உள்ளமே அவருடையதாக ஆகி விட்டது என்றால் எண்ணமும் ஒன்றாகத் தான் இருக்கும் வித்தியாசம் இருக்காது. அப்படி கொடுப்பவருக்கு பெறுவதும் தெரியுமா அல்லது கடினமாக இருக்குமா? ஒருவேளை கடினமாக இருக்கிறது என்றால் அதனுடைய அர்த்தம் உள்ளத்தை கொடுப்பதற்கு விருப்பமே இல்லை என்பதாகும். தன்னிடம் ஏதோ ஒரு துண்டை வைத்துக் கொண்டிருக்கிறார். கொஞ்சம் கூட துண்டை மறைத்து வைத்துக் கொள்ள வேண்டாம். யாருக்கு கொடுப்பது மற்றும் பெறுவது இரண்டுமே தெரியுமோ அவர் திறமை நிறைந்தவர் ஆனார் இல்லையா. இதன் மேல் ஒரு கதையும் இருக்கிறது. மிக பிரபலமான கதை ஆகும். தன்னுடைய கதை மறந்து விட்டதா? யார்

தன்னுடைய இதயத்தின் துண்டை மறைத்து வைத்திருக்கிறார்களோ அவர்களுடைய கதை ஆகும். சத்திய நாராயணனின் கதை. எதை விலைமதிக்க முடியாத பொருள் என்று மறைத்து வைத்தாரோ அது குப்பையாகி விட்டது. இங்கேயும் சத்தியமான தந்தை யார் சத்திய நாராயணனாக ஆக்கக் கூடியவரோ அவரிடமிருந்து ஒருவேளை கொஞ்சமாவது இதயத்தின் துண்டை மறைத்து வைத்திருந்தால் இந்த வாழ்க்கையின் படகிற்கு என்ன நிலைமை ஆகும்? குப்பையாகி விடும் அதாவது எந்தப் பிராப்தியும் இருக்காது. வெறும் கையாக இருந்து விடுவார். ஒரு பைசாவை திருடுபவரையும் திருடன் என்று தான் சொல்வோம் இல்லையா. ஒருவேளை யாராவது ஆயிரம் ரூபாயைத் திருடுகிறார் மேலும் யாராவது ஒரு பைசாவைத் திருடுகிறார் என்றால் இருவரையும் திருடன் என்று தான் கூறுவோம் இல்லையா. சின்னத் திருடன் அடிக்கடி திருடுகிறான், பெரிய திருடன் ஒரு தடவை செய்கிறான். எனவே இதயத்தை கொடுத்து விட்டீர்கள் என்றால் கொடுத்தே விட்டீர்கள். அந்த மாதிரி இதயத்தை கொடுப்பவர்கள் எப்பொழுதும் நெற்றியின் மணிக்குச் சமமாக லைட் ஹவுஸ், மைட் ஹவுஸாக இருக்கிறார்கள். இங்கு லைட் ஹவுஸாக மட்டும் ஆக வேண்டாம் ஆனால் கூடவே மைட் ஹவுஸாகவும் ஆக வேண்டும். அந்த மாதிரியானவரைத் தான் நெற்றியின் மணி என்று கூறப்படுவது.

நெற்றியின் மணியாக இருக்கிறேனா என்று இப்பொழுது கூறுங்கள். எப்படி நெற்றி நினைவிற்கான இடமாக இருக்கிறது அதே போல் நெற்றியின் மணியின் அடையாளமாக எப்பொழுதும் நினைவு சொரூபமாக இருப்பது. நெற்றியின் மணி மிக நல்ல அலங்காரமாக இருக்கும். ஒருவேளை நெற்றியில் மணி பிரகாசிக்கிறது என்றால் எவ்வளவு நல்ல அலங்காரமாக இருக்கும். நெற்றியின் மணி மிக உயர்ந்த அலங்காரமாகும். அலங்காரத்தின் மேல் அனைவரின் பார்வை இயல்பாகவே செல்லும். அந்த மாதிரி நெற்றியின் மணிகளின் மேல் உலகின் அனைத்து ஆத்மாக்களின் பார்வை அதாவது கவர்ச்சி இயல்பாகவே இருக்கும். அந்த மாதிரி நெற்றியின் மணியாக இருக்கிறீர்களா? ஒருவேளை இருளின் நடுவே மணியை வைத்து விட்டீர்கள் என்றால் என்ன தென்படும்? வெளிச்சத்தை கொடுப்பதற்கான காரியத்தையும் செய்யும். அப்படி இந்த உலகின் இருண்ட இரவில் நாலாபுறத்து இருளின் இடையே அந்த மாதிரி

# 1973 அவ்யக்த முரளி

நெற்றியின் மணி என்ன காரியம் செய்யும்? வழியை காண்பிப்பதற்கான, லட்சியத்தை அடைவதற்கான காரியம் செய்யும். ஒவ்வொருவரையும் அவர்களுடைய லட்சியம் வரை கொண்டு சேர்க்க வேண்டும். அப்படியானால் அந்த மாதிரி நெற்றியின் மணியாக இருக்கிறீர்களா அல்லது சில நேரம் நீங்களே இங்கும் அங்கும் அலைந்து விடுகிறீர்களா? யார் அவரே அலைந்து கொண்டிருக்கிறாரோ அவர் மற்றவர்களை லட்சியம் வரை சென்றடையச் செய்ய முடியுமா? அந்த மாதிரி நெற்றியின் மணி ஒருபொழுதும் வீணான எண்ணங்கள் என்ற விதவிதமான அனேக சிறுசிறு சந்துகளில் அலைய மாட்டார்கள். இதுவும் அனேக விதமான சந்துகள் அதில் செல்வதினால் லட்சியத்தை விட்டு விலகி இங்கு அங்கு அலைந்து விடுகிறார்கள். அப்படி சந்துகளில் இப்பொழுது சுற்றிக் கொண்டோ இருக்கவில்லையே?

எப்பொழுதும் ஒரு தந்தையின் வழி மற்றும் ஒருவரின் நினைவிலேயே மூழ்கியிருந்தீர்கள் என்றால் ஒருவரின் வழிப்படி நடப்பவர், ஒரே சீரான நிலையில் இருக்க முடியாதா என்ன? ஒருவேளை ஒரே சீரான நிலை இல்லை என்றால் அவசியம் ஒரு வழியில் இன்னொரு வழியையும் கலந்து விடுகிறீர்கள். ஒருவேளை ஒரு வழி இருக்கிறது என்றால் ஒரே சீரான நிலையும் அவசியம் இருக்கும். இந்த பழைய சம்ஸ்காரத்தையும் ஒருவேளை கலக்குகிறீர்கள் என்றால் அதுவும் ஒருவரின் வழியாக ஆவதில்லை. இது ஆத்மாவின் வழி, ஆத்மாவிற்கு தன்னுடைய கர்மங்களின் அனுசாரம் உருவாக்கப்பட்ட சம்ஸ்காரம் இருக்கிறது. பரமாத்மா ஞானம் மூலம் உருவாக்கப்பட்ட சம்ஸ்காரம் இருப்பதில்லை. அப்படி ஒருவேளை தன்னுடைய பழைய சம்ஸ்காரம் கலந்து விடுகிறது என்றால் அனேக சந்துகளில் அலைந்து விடுவார்கள் ஒரே சீரான நிலையில் இருப்பதில்லை. ஒரு லட்சியத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்க மாட்டார்கள். எனவே அலைவது முடிவடைய வேண்டும். இன்னும் இதுவரை அலைந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது இருக்க வேண்டாம். மாயாவின் விதவிதமான கவர்ச்சியில் அலைவதும் முடிவடைந்து விட்டது. இப்பொழுது இந்த சந்துகள் எங்கிருந்து உருவானது? வீணான எண்ணங்களிலிருந்து உருவானது. தன்னுடைய சுபாவம் என்ற இந்த சந்துகளில் அலைவது முடிவடைய வேண்டும். எப்படி நீங்கள் மகாநாடு வைக்கிறீர்கள் என்றால் கடைசியில் தீர்மானத்தை

நிறைவேற்றுகிறீர்கள் இல்லையா. அதே போல் அலைவது நின்று விட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுங்கள். இதுவும் பிராமணர்களின் மகாநாடு தான் இல்லையா. மேளா என்றால் மகாநாடு. எப்படி மகாநாடு மூலமாக அதிகமான விஷயங்களைப் பெறுகிறீர்கள் மற்றும் நிறைவேற்றுவதற்கான முயற்சியை செய்கிறீர்கள். அந்த அரசாங்கமோ நிறைவேற்றுவதில்லை ஆனால் இந்த பாண்டவ அரசாங்கம் நிறைவேற்றிவிடும். எனவே உங்களுக்குள் சந்தித்து இதை நிறைவேற்றிக் காண்பியுங்கள். கையை அப்படியே உயர்த்துவது மட்டும் சுலபம் தான். இந்த விரலினால் எதுவும் நடப்பதில்லை இதுவோ திடமான எண்ணம் என்ற விரல் ஆகும். எதுவரை இந்த விரலை தூக்கவில்லையோ அதுவரை பாஸ் ஆக முடியாது. புரிந்ததா.

அந்த மாதிரி ஒரு நொடியில் திட எண்ணம் என்ற விரல் கொடுக்கக்கூடிய மகாவீர் மற்றும் மகாவீரனிகளுக்கு, எண்ணம் மற்றும் செயலில் சமமாக இருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இதயசிம்மாசனதாரி மற்றும் உலகிற்கு நன்மை செய்பவர் என்ற நினைவு ரூபத்திலிருப்பவர்களுக்கு கிரீடமணிந்த மற்றும் ஆசனதாரி குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளும் மற்றும் நமஸ்காரமும்.

வரதானம்: சதோபிரதான நிலையில் நிலைத்திருந்து எப்பொழுதும் சுகம் சாந்தியின் அனுபவம் செய்விக்கக்கூடிய இரட்டை அஹிம்சைவாதி ஆகுக!

எப்பொழுதும் தன்னுடைய சதோபிரதான சம்ஸ்காரத்தில் நிலைத்திருந்து சுகம் சாந்தியின் அனுபவம் செய்வது இது தான் அஹிம்சை ஆகும். ஹிம்சை என்றால் அதன் மூலம் துக்கம் மற்றும் அமைதியின்மையின் பிராப்தி ஆவது. எனவே முழு நாளில் எந்த விதமான ஹிம்சையும் செய்யவில்லையே என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை வார்த்தை மூலமாக யாருடைய மனநிலையை மேலே கீழே போகச் செய்து விடுகிறீர்கள் என்றால் இதுவும் ஹிம்சை தான். ஒருவேளை தன்னுடைய சதோபிரதான சம்ஸ்காரங்களை அழுத்தி வைத்து மற்ற சம்ஸ்காரங்களை நடைமுறையில் கொண்டு வருகிறீர்கள் என்றால் இதுவும் ஹிம்சை

தான். எனவே நுணுக்கத்தில் சென்று மகான் ஆத்மாவின் நினைவு மூலம் இரட்டை அஹிம்சைவாதி ஆகுங்கள்.

சுலோகன்: சத்தியத்தின் கூடவே அசத்தியம் கலந்து விட்டவுடன் குஷி மறைந்து விடுகிறது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 08.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்தையும் விட உயர்ந்த சக்தி பகுத்தறியும் சக்தி!

அனைத்து சக்திகளிலும் விசேஷமான சக்தியை தெரிந்திருக்கிறீர்களா? தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? அனைத்து சக்திகளிலும் மிக உயர்ந்த சக்தி எது? எப்படி படிப்பில் அனேக பாடங்கள் இருக்கின்றன! ஆனால் அவைகளிலிருந்து ஒன்று முக்கியமானதாக இருக்கும். அது போலவே அனைத்து சக்திகளும் அவசியமானவை தான் ஆனால் இந்த சக்திகளில் அனைத்தையும் விட உயர்ந்த சக்தி எது? எது அவசியமானதோ அது இல்லாமல் மகாரதி மற்றும் மகாவீரராக ஆவது கடினமாகும். அனைத்துமே அவசியமானவை தான் ஒன்றிற்கு இன்னொன்றோடு சம்மந்தம் இருக்கிறது ஆனால் இருந்தாலும் நம்பர் ஒன் ஆக ஒன்று இருக்கிறது, அது அனைத்து சக்திகளையும் அருகில் கொண்டு வரக்கூடியது, அது எது? (பகுத்தறியும் சக்தி),

செல்ஃப் ரியலைசேஷன் (தன்னை உணர்வது) கூட பகுத்தறியும் சக்தி தான். செல்ஃப் ரியலைசேஷனின் அர்த்தமே தன்னைத் தானே பகுத்தறிவது மற்றும் தெரிந்து கொள்வது. முதலில் தந்தையை உணர்வீர்கள். அப்பொழுது தான் தெரிந்து கொள்வீர்கள் அல்லது அறிந்து கொள்வீர்கள். மேலும் எப்பொழுது அறிந்து கொள்வீர்களோ அப்பொழுது தந்தைக்கு நெருக்கத்தில் மற்றும் சமமாக ஆக முடியும். பகுத்தறியும் சக்தி தான் நம்பர் ஒன் ஆகும். பகுத்தறிவது இதை நடைமுறையில் பொதுவான வார்த்தையில் அறிமுகம் என்று கூறுகிறோம். முதன்முதலில் ஞானத்தின் ஆதாரமே தந்தையை அறிந்து கொள்வது அதாவது இந்த விஷயத்தின் காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்று பகுத்தறிவது. முதலில் பகுத்தறியும் சக்தி அவசியமானது. பகுத்தறியும் சக்தியை ஞானம் நிறைந்த நிலை என்று கூறுகிறோம்.

பகுத்தறியும் சக்தியின் விஸ்தாரம் என்ன? மேலும் அதிலிருந்து என்னென்ன பிராப்தி ஆகிறது? இந்த விஷயத்தில் உங்களுக்குள் ஆன்மீக கலந்துரையாடல் செய்யலாம். நமக்குள் நாம் ஒருவர் போல் சமமாக இருக்கும் விளையாட்டு விளையாடுபவர்களாக இருக்கிறார்கள் என்றால் விளையாட்டில் கூட மகிழ்ச்சி வருகிறது. விளையாடிக் கொண்டே இணைப்பும் ஏற்பட்டு விடுகிறது. இந்த விளையாட்டில் கூட அவர்களுக்குள் விளையாடிக் கொண்டே நண்பர்கள் ஆகி விடுகிறார்கள். இது ஸ்தூலமான விளையாட்டாக ஆனது. இங்கேயும் கூட விளையாடிக் கொண்டே ஆத்மாக்களின் நெருக்கத்தின் இணைப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆத்மாக்களின் சம்ஸ்காரம் சுபாவத்தின் ஒன்றிணைப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்த விளையாட்டின் துணைவனாக இருப்பவர் மிக உறுதியானவராக இருக்கிறார், வாழ்க்கையின் கடைசி வரை தன்னுடைய துணையை உடனிருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆன்மீக விளையாட்டுடன் கடைசி வரை உங்களுக்குள் ஒன்றிணைந்த ஒரு உறவை வைத்துக் கொள்கிறீர்கள். அதனால் தான் இந்த ஒன்றிணைந்த நிலையின் அடையாளமாக 'மாலை' உருவாகியிருக்கிறது. அனைத்து விஷயங்களிலும் எப்பொழுது ஒருவர் இன்னொருவருடன் நெருக்கமாகி விடுகிறார். ஒன்றிணைந்து விடுகிறார் என்றால் அப்பொழுது மணி மணியோடு சேர்ந்து மாலை உருவாகுகிறது. இணைந்திருப்பதின் (மாலை) அடையாளம் ஆகும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 13.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீகப் போர்வீரன்!

தன்னை ஆன்மீக சேனையின் மகாரதி என்று நினைக்கிறீர்களா? சேனையின் மகாரதி என்று யாரைக் கூறப்படுகிறது? அவருடைய லட்சணம் என்னவாக இருக்கும்? மகாரதி என்றால் இந்த ரதத்தில் சவாரி செய்பவர், தன்னை ரதி (ஓட்டுநர்) என்று புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமான விஷயமானது தன்னை ரதி என்று புரிந்து இந்த ரதத்தை ஓட்டுபவர் என்று தன்னை அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை யுத்த மைதானத்தில் யாராவது மகாரதி தன்னுடைய ரதம் அதாவது சவாரியின் வசம் ஆகி விடுகிறார் என்றால், அந்த மகாரதி வெற்றி அடைபவராக ஆக முடியுமா என்ன? அல்லது மேலும் தன்னுடைய சேனையின் வெற்றி ரூபம் ஆவதற்குப் பதிலாக இன்னும் அதிகமாக தடையின் உருவாக ஆகி விடுவாரா? குழப்பம் ஏற்படுவதற்குக் காரணமானவராக ஆகி விடுவார். அப்படி இங்கு யார் யார் இந்த ஆன்மீக சேனையின் போர்வீரர்களாக இருக்கிறீர்களோ அவர்கள் இந்த ரதத்தின் ரதியாக ஆகியிருக்கிறீர்களா? எப்படி போர்வீரன் அனைத்து நபர்களையும் அனைத்து வைபவங்களையும் விட்டு விட்டு யுத்தம் மற்றும் வெற்றி இந்த இரண்டு விஷயங்களை மட்டும் புத்தியில் வைத்துக் கொண்டே தன்னுடைய லட்சியத்தை நிறைவேற்றுவதிலேயே ஈடுபட்டு இருப்பவராக இருக்கிறார். அப்படியே இந்த இரண்டு விஷயங்களின் லட்சியம் இருக்கிறதா அல்லது மற்ற அனேக விஷயங்கள் நினைவில் இருக்கிறதா? என்று தன்னைத் தானே கேளுங்கள். அந்த மாதிரி போர்வீரர்களாக ஆகியிருக்கிறீர்களா? எங்கேயும் இருங்கள் ஆனால் நாம் யுத்த மைதானத்தில் நின்று கொண்டிருக்கும் போர்வீரர்கள் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். போர்வீரர்கள் ஒருபொழுதும் ஓய்வு விரும்பியாக இருப்பதில்லை. போர்வீரர்கள் ஒருபொழுதும் அலட்சியம் மற்றும் சோம்பேறித்தனத்தின் நிலையில் இருப்பதில்லை. போர்வீரர்கள் ஒருபொழுதும் ஆயுதங்கள் இல்லாமல் இருப்பதில்லை, எப்பொழுதும்

ஆயுதம் தரித்தவராக இருப்பார்கள். போர்வீரர்கள் ஒருபொழுதும் பயத்தின் வசமானவர்களாக இருப்பதில்லை, பயமற்றவர்களாக இருப்பார்கள். போர்வீரர்கள் ஒருபொழுதும் யுத்தத்தைத் தவிர வேறு எந்த விஷயத்தையும் புத்தியில் வைப்பதில்லை. எப்பொழுதும் போர்வீரன் என்ற நிலையின் உள்உணர்வு மற்றும் வெற்றி அடைபவரின் நினைவில் இருக்கிறார்கள். நாம் அனைவரும் கூட ஒவ்வொருவரும் சேர்ந்து வெற்றி அடைபவராக இருக்கிறோமா? இந்த பார்வையோடு ஒவ்வொருவரையும் பார்க்கிறோமா? அந்த மாதிரியான ஆன்மீக போர்வீரர்களின் பார்வையில் நாம் அனைவரும் ஒவ்வொருவருடன் சேர்ந்து மகாவீரர்களாக, வெற்றி அடைபவர்களாக இருக்கிறோம் என்பது தான் எப்பொழுதும் இருக்கும். நாம் ஒவ்வொரு விநாடி ஒவ்வொரு அடியில் யுத்த மைதானத்தில் நின்று கொண்டிருக்கிறோம். வெற்றி அடைய வேண்டும் என்ற ஒரே ஒரு ஈடுபாடு மட்டும் தான் இருக்கிறது. அனைத்து உறவுகளிலிருந்தும் அனைத்து இயற்கையின் சாதனங்களிலிருந்தும் தன்னுடைய புத்தியை விடுவித்து விட்டாகி விட்டதா? விலகி வந்து விட்டீர்களா? அல்லது யுத்த மைதானத்தில் இருக்கிறீர்கள், ஆனால் புத்தியின் தொடர்பு உறவு அல்லது ஏதாவது இயற்கையின் சாதனங்களோடு இணைக்கபட்டிருக்கிறதா? தன்னை முழுமையான சுதந்திரமானவர் என்று நினைக்கிறீர்களா? அல்லது ஏதாவது விஷயத்தில் மற்றவர்களின் அடிமை நிலையும் இருக்கிறதா?

சம்பூர்ண சுதந்திரம் என்றால், எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது இந்த உடலை ஆதாரமாக எடுங்கள், எப்பொழுது விரும்புகிறீர்களோ கொஞ்சம் கூட இந்த உடல் தன் பக்கம் ஈர்க்காத அளவிற்கு தேக உணர்விலிருந்து அப்படி விலகியவராக ஆகி விடுங்கள். அந்த மாதிரி தன்னுடைய உடலின் உணர்வு, உடலின் பற்றுதலிலிருந்து சுதந்திரமானவர். தன்னுடைய ஏதாவது பழைய சுபாவத் திலிருந்தும் சுதந்திரம், சுபாவத்திற்குக் கூட கட்டுப்பட்டவராக இருக்க வேண்டாம். தன்னுடைய சம்ஸ்காரங்களிலிருந்தும் சுதந்திரம். தன்னுடைய அனைத்து லௌகீக நெருக்கம் அல்லது அலௌகீக பரிவாரத்தின் நெருக்கத்தின் பந்தனத்திலிருந்தும் சுதந்திரம். அந்த மாதிரி சுதந்திரமானவராக ஆகியிருக்கிறீர்களா? அந்த மாதிரியானவரைத்தான் முழுமையான சுதந்திரமானவர் என்று கூற முடியும். அந்த மாதிரி நிலைக்கு வந்தடைந்து விட்டீர்களா அல்லது

இன்னும் ஏதேனும் ஒரு சின்ன கர்மேந்திரியம் தன்னுடைய பந்தனத்தில் கட்டிப் போட்டு விடுகிறதா?
ஒருவேளை சின்னஞ்சிறு எறும்பு சிங்கத்தை அல்லது யானையை தொந்தரவு செய்து விடுகிறது என்றால் அந்த மாதிரி யானையை, சிங்கத்தை என்னவென்று கூறுவது? சிங்கம் என்று கூறுவோமா? ஒரு வீணான எண்ணம் மாஸ்டர் சர்வ சக்திவானை தொந்தரவு செய்து விடுகிறது அல்லது ஒரு பழைய 84 ஜென்மங்களின் இற்றுப்போன சம்ஸ்காரம், மாஸ்டர் சர்வ சக்திவான், மகாவீர், விக்ன விநாஷக், திரிகாலதரிசி, சுயதரிசன சக்கரதாரியைத் தொந்தரவு செய்து விடுகிறது, முயற்சி செய்வதில் பலஹீனமானவராக ஆக்கி விடுகிறது என்றால், அந்த மாதிரியான மாஸ்டர் சர்வ சக்திவானை என்னவென்று கூறுவது? எந்த நேரம் இந்த நிலையில் இருக்கிறீர்களோ, அந்த நேரம் உங்கள் மேலேயே ஆச்சரியம் ஏற்படு வதில்லையா? எனக்கு வீணான எண்ணம் வருகிறது. பழைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் தன்னுடைய வசப்படுத்தி விடுகிறது. தந்தையின் நினைவின் அனுபவம் ஏற்படுவதில்லை, தந்தை மூலமாக எந்த பிராப்தியும் இல்லை, சின்னஞ்சிறு தடையைக் கண்டு பயந்து விடுகிறோம், நிரந்தர அதீந்திரிய சுகம் அல்லது மகிழ்ச்சி இல்லை, குஷியின் அனுபவம் ஏற்படுவதில்லை என்ற வார்த்தைகள் வெளியாகிறது என்றால், இந் மாதிரியான வார்த்தைகள் பிராமண குல பூஷணர்களுடையதாக இருக்க முடியுமா என்ன? அந்த மாதிரியான பிராமணர்களை எந்த பிராமணன் என்று கூறுவது? வெளியுலக ஜாதி பிராமணன் என்றால்? ஒருவேளை உண்மையான பிராமணன் என்று கூறிக் கொண்டு, இந்த வார்த்தைகளைச் சொல்கிறீர்கள் என்றால், துவாபரயுக பிராமணர்களுக்கும் மற்றும் இந்த மாதிரி சொல்லக்கூடிய பிராமணர்களுக்கும் (உங்களுக்கும்) என்ன வித்தியாசம் இருக்கிறது?

தற்சமயம் பிராமணன் ஆகக்கூடிய குழந்தைகள், பிராமணத்தன்மையின் முதல் லட்சணத்தை வாழ்க்கையில் கொண்டு வந்திருக்கிறேனா? என்று தன்னைத் தானே பார்க்க வேண்டும். பிராமண தன்மையின் முதல் லட்சணம் எது? மற்ற தொடர்பை விட்டுவிட்டு அந்த ஒரே ஒருவரின் தொடர்பில் இணைந்து கொள்வது. ஒருவேளை தன்னுடைய கர்மேந்திரியங்களின் பக்கம் கூட இணைப்பு இருக்கிறது என்றால், இதை பிராமணர்களின் முதல் லட்சணம் என்று கூற

முடியுமா? எப்பொழுது ஒரு தந்தையைத் தவிர இன்னொருவர் யாரும் இல்லை என்பது தான் பிராமணர்களின் முதன்முதலான உறுதிமொழி மற்றும் மர்ஜீவா ஜென்மத்தின் (மறுபிறவி முதன்முதலான வார்த்தையாகும். இது தான் முதல் உறுதிமொழியும் முதல் லட்சணமும் ஆகும். அப்படியானால் முதலில் இந்த லட்சணம், உறுதிமொழியை மற்றும் முதல் வார்த்தையைக் கடைப்பிடித்து நடக்கிறீர்களா அல்லது சொல்வது ஒன்றாக இருந்தாலும், அனேக பக்கங்களில் இணைப்பு உள்ளதா? அந்த மாதிரி வெளியுலக ஜாதி பிராமணர்களை வெற்றி அடைபவர்கள் என்று கூறமுடியுமா? இவ்வளவு பெரிய உலகத்திற்குள் பிராமணர்களுக்காக தன்னுடைய சின்னஞ்சிறு உலகம் இருக்கிறது, அந்த மாதிரியான சின்னஞ்சிறு உலகத்தில் ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே உலகிலுள்ள எந்த ஆத்மாக்களைப் பார்த்தாலும், அவர்களை நன்மை பயக்கும் பாவனையோடு மட்டும் தான் பார்க்கிறார்கள், உறவு மற்றும் பற்றுதலின் பாவனையோடு பார்ப்பதில்லை ஆனால் ஈஸ்வரிய சேவைக்கான உணர்வில் மட்டும் பார்க்கிறார்கள். ஐந்து தத்துவங்களைப் பார்த்துக் கொண்டே, இயற்கையை பார்த்துக் கொண்டே இயற்கையின் வசமாக மாட்டார்கள். இயற்கையையும் சதோபிரதானம் ஆக்குவதற்கான காரியத்தில் ஈடுபட்டிருப்பார்கள். யார் இயற்கையை ஆனால் மாற்றுபவராக இருக்கிறாரோ அவரே இயற்கையின் வசமாக முடியுமா? யார் இப்பொழுது இயற்கையை வசப்படுத்த முடியவில்லையோ அவர் எதிர்காலத்தில் சதோபிரதான இயற்கையின் சுகத்தை அடைய முடியாது. அப்படி இயற்கையின் வசமாக ஆவதில்லையே? இதுவோ யாராவது டாக்டர் நோயாளியை காப்பாற்றச் செல்கிறார், ஆனால் அவரே நோயாளி ஆகி விடுகிறார் என்பது போலாகி விடுகிறது. செய்ய வேண்டிய காரியமோ இயற்கையை மாற்றுவதற்கானது, ஆனால் அதற்குப் பதிலாக இயற்கையின் வசமாகி விடுகிறார் என்றால் அவரை பிராமணன் என்று கூற முடியுமா என்ன? அனைவருமே பிராமணர் களாகவோ ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? நான் பிராமணன் இல்லை என்று யாராவது கூறுவார்களா? பிராமணன் ஆவது என்றால் அந்த மாதிரி லட்சணத்தை தாரணை செய்வது. அப்படி அந்த மாதிரி லட்சணமுடையவரா அல்லது பெயர் அளவில் தான் பிராமணனா? இதை உங்களிடமே கேளுங்கள்.

பிராமண பிறவியின் விசேஷம் என்ன? அது வேறு எந்த ஜென்மத்திலும் இருப்பதில்லை. பிராமண பிறவியின் விசேஷமே இது தான் -மற்ற அனைத்து பிறவிகளும் ஆத்மாக்கள் மூலமாக ஆத்மாக்களுக்கு ஏற்படுகிறது, ஆனால் ஒரே ஒரு இந்த பிராமண பிறவி மட்டும் தான் பரம்பிதா பரமாத்மா மூலமாக நேரடியாக ஏற்படுகிறது. தேவதை பிறவி கூட பரமாத்மா மூலமாக இல்லை, உயர்ந்த ஆத்மாக்களின் மூலமாகத் தான் ஏற்படுகிறது. அப்படியானால் பிராமண பிறவியின் விசேஷங்களானது எது முழுக்கல்பத்திலும் மற்ற எந்த பிறவிகளிலும் இல்லையோ அந்த மாதிரி விசேஷங்கள் நிரம்பிய பிறவியாகும் என்றால் அந்த ஆத்மாக்களிடமும் விசேஷமாக என்ன இருக்க வேண்டும்? தந்தையின் குணமாக என்ன இருக்கிறதோ அதுவே பிராமண ஆத்மாக்களின் குணமாக இருக்க வேண்டும். அந்த குணம் கூட இந்த பிராமண பிறவியில் தவிர வேறு எந்த பிறவியிலும் வர முடியாது. எப்படி இந்த பிராமண வாழ்க்கையில் திரிகாலதரிசி, திரிநேத்ரி, ஞான சொரூபம் ஆகிறீர்களோ, அப்படி மற்ற பிறவிகளில் ஆவீர்களா என்ன? அப்படியானால் பிராமண வாழ்க்கைக்கு மட்டுமே உரிய குணம் மற்றும் விசேஷங்களாக என்ன இருக்கிறது அதை இந்த பிராமண வாழ்க்கையில் அனுபவம் செய்யவில்லை என்றால் பின்பு எப்பொழுது செய்வீர்கள்? பிராமணனாகி மற்றும் பிராமண வாழ்க்கையின் விசேஷத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் பிராமணன் ஆகி என்ன செய்தீர்கள்?

எப்படி பரமாத்மாவின் குழந்தையாக இருந்து தந்தையைத் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சோழிக்கு சமமானவர்கள் என்று மற்றவர்களுக்கு கூறுகிறீர்கள். அப்படி நீங்கள் அனைவருக்கும் கூறுகிறீர்கள் தான் இல்லையா? ஆனால் யாராவது வைரத்திற்குச் சமமான பிறவி எடுத்திருந்தும் வைரத்திற்குச் சமமான வாழ்க்கையை வாழ்வதில்லை. வைரம் கையில் கிடைத்தும் அதைக் கல் என்று நினைத்து, அதன் மதிப்பை புரிந்து கொள்ளவில்லை என்றால், அந்த மாதிரியானவரை என்னவென்று கூறுவது? மிகப் பெரிய புத்திசாலி. மற்ற வார்த்தைகளாலோ சொல்ல முடியாது இல்லையா? தலைகீழான ரூபத்தில் மிகப் பெரிய புத்திசாலி என்று அப்படி எப்பொழுதாவது ஆகி விடவில்லையே? அப்படி பிராமண பிறவியின் மதிப்பைத் தெரிந்து

கொள்ளுங்கள். சாதாரண விஷயம் இல்லை. நாம் மட்டும் தான் பிராமணன் ஆகியிருக்கிறோம். பிராமண வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறேனா? என்று எப்பொழுதும் தன்னை சோதனை செய்யுங்கள். நல்லது.

அந்த மாதிரி உயர்ந்த ஜென்மம், உயர்ந்த காரியம், உயர்ந்த வாழ்க்கை, உயர்ந்த சேவையில் எப்பொழுதும் இருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, உலக நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு மற்றும் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்ட முழுமையான சுதந்திர ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே தாமரை மலர் ஆசனத்தில் வீற்றிருக்கக்கூடிய சகஜ மற்றும் நிரந்தர யோகி ஆகுக!

நிரந்தரமாக யோக சொரூபமாக இருப்பதற்காக தாமரை மலரின் ஆசனத்தில் எப்பொழுதும் வீற்றிருங்கள் ஆனால் யார் லேசாக இருக்கிறாரோ அவர் தான் தாமரை மலரின் ஆசனத்தில் நிலைத்திருக்க முடியும். எந்த விதமான சுமை அதாவது பந்தனம் இருக்க வேண்டாம். மனதின் எண்ணங்களின் சுமை, சம்ஸ்காரங்களின் சுமை, உலகின் அழியக்கூடிய பொருட்களின் கவர்ச்சியின் சுமை, லௌகீக உறவினர்களின் பாசத்தின் சுமை என்று எப்பொழுது இந்த அனைத்து சுமைகளும் முடிவடைந்து விடுகிறதோ அப்பொழுது தாமரை மலர் ஆசனத்தில் வீற்றிருந்து நிரந்தர யோகியாக முடியும்.

சுலோகன்: சகித்துக் கொள்ளும் குணத்தை தாரணை செய்தீர்கள் என்றால் அசத்தியத்தின் ஆதாரத்தை எடுக்க வேண்டியது இருக்காது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசேஷ ஆத்மாக்களின் விசேஷம்!

அனைவரும் இந்த நேரம் தன்னுடைய உயர்ந்த சுவமானத்தின் (சுயகௌரவத்தின்) சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? உயர்ந்த சுவமானத்தின் ரூபத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? இந்த நேரம் உலகைப் படைப்பவரின் நேரடிப் படைப்பு, முதல் படைப்பு, அனைத்தையும் விட உயர்ந்த படைப்பு மற்றும் படைப்பவரின் குழந்தையாக இருந்து அதிபதியாகும் பாப்தாதாவின் கண்ணின் மணி, இதயசிம்மாசனதாரி, நெற்றியின் மணிகளாக இருக்கிறீர்கள். மேலும் பாப்தாதாவின் காரியத்தில் உதவியாளராக இருக்கிறீர்கள் மேலும் உலகிற்கு நன்மை செய்யும், உலகின் ஆதாரமூர்த்தி, உலகின் எதிரில் உயர்ந்த உதாரண ரூபத்தில் இருக்கிறீர்கள். அப்படி அனைத்து சுவமானம் நினைவு இருக்கிறதா? எப்பொழுதும் சுவமானத்தின் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது சிம்மாசனத்தில் நிலைத்திருக்க முடிவதில்லையா? பெயரே சிம்மாசனம்! இதனுடைய அர்த்தம் என்ன? இதன் மேல் யாரால் அமர்ந்திருக்க முடியும்? அனைத்து சக்திகள் நிரம்பியவர் தான் இந்த ஆசனத்தில் அதாவது நிலையில் நிலைத்திருக்க முடியும். சிம்மம் என்றால் சிங்கம் என்பதாகும். ஒருவேளை சிங்கமாக ஆகவில்லை என்றால் ஆசனத்தில் நிலைத்திருக்க முடியாது. சிம்மாசனம் யாருக்காக இருக்கிறது? யார் சர்வ சக்திவானின் முதல் படைப்பாக இருக்கிறார்களோ அவர்களுக்காக. முதல் படைப்பில் படைப்பவருக்குச் சமமாக அனைத்து சக்திகளும் சொரூபத்தில் தென்படுகிறதா? முதல் படைப்பின் விசேஷமாக இந்த நேரத்தில் என்ன இருக்கிறதோ அதைத் தெரிந்திருக்கிறீர்களா? அந்த விசேஷத்தின் காரணமாக உலகைப் படைப்பவருக்கும் எஜமானனாக ஆகிறீர்கள், தந்தையையும் விட விசேஷ பூஜைக்குத் தகுதியானவராக ஆகிறீர்கள், தந்தையும் அந்த மாதிரியான படைப்பின் குணங்களை மகிமை செய்கிறார், மேலும் வந்தனம் செய்கிறார் அந்த விசேஷம் எது? ஆத்மாக்கள் தான்

தந்தையை மகிமை செய்கிறார்கள் ஆனால் அந்த மாதிரி அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களின் மகிமையை சுயம் சர்வ சக்திவான் செய்கிறார் அதாவது பரமாத்மாவிடமிருந்து ஆத்மாக்களுக்கு மகிமை ஏற்படுகிறது. தந்தை அவரே அந்த மாதிரி ஆத்மாக்களை ஒவ்வொரு நாளும் அடிக்கடி நினைவு செய்கிறார். அந்த மாதிரி உயர்ந்தவர்களாக ஆகுமளவு அந்த விசேஷ ஆத்மாக்களின் முக்கிய விசேஷம் என்ன? உங்களுடைய அந்த விசேஷத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? அவசியமாக தந்தையையும் விட ஏதோ விசேஷம் உங்களுடையது அதிகமாக இருக்கிறது. அதைத் தெரிந்திருக்கிறீர்களா? எந்த விஷயத்தில் தந்தையை விடவும் முன்னுக்கு இருக்கிறீர்கள்? அந்த விசேஷத்தைச் சொல்லுங்கள். பாப்தாதாவையும் விட எந்த விஷயத்தில் முன்னுக்கு இருக்கிறீர்கள்? அஷ்ட இரத்தினங்களில் சக்திகள் மட்டும்தான் இருக்கிறார்களா அல்லது பாண்டவர்களும் வர முடியுமா? சகோதரன் சகோதரனாக இருக்கிறீர்கள் என்றால், அம்மாதிரி ஆத்மீக ரூபத்தின் நிலையில் நிலைத்திருக்கும் ஆத்மா அஷ்ட இரத்தினமாக ஆக முடியும். இதில் சக்தி மற்றும் பாண்டவர்களின் விஷயம் இல்லை ஆனால் ஆத்மீக நிலையின் விஷயம் ஆகும். இருவர்களும் வர முடியும். முதல் எட்டில் பாண்டவர்களின் இடமும் இருக்கிறது.

நல்லது, ஆத்மாக்களையும் தந்தையின் எஜமானனாக ஆக்கும் முதல் விசேஷம் என்னவாக இருக்கிறது? அவர்கள் தந்தையையும் விட உயர்ந்தவர்களாக ஆகிறார்கள். அந்த விசேஷமானது தந்தையைப் பிரத்யக்ஷம் செய்வது. தந்தையின் சம்மந்தத்தில் அருகில் கொண்டு வருவது, தந்தையின் வாரிசாக ஆக்குவது இது முதல் படைப்பாகிய உங்களுடைய காரியம் ஆகும். தந்தை குழந்தைகள் மூலமாகத் தான் பிரத்யக்ஷம் ஆகிறார். நிராகாரத் தந்தை மேலும் சாகார பிரம்மாபாபா இருவரையும் தன்னுடைய நிச்சயம், தன்னுடைய பிராமண வாழ்க்கையின் ஆதாரத்தில், தன்னுடைய அனுபவத்தின் ஆதாரத்தில் உலகின் எதிரில் வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். எனவே தான் விசேஷம் என்று ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படி தந்தையை வெளிப்படுத்தும் விசேஷம் குழந்தைகளினுடையது, எனவே தந்தை பிரதிபலனாக உலகின் எதிரில் குப்த (இரகசிய) ரூபத்தில் இருந்து சக்தி சேனை மற்றும் பாண்டவ சேனையை வெளிப்படுத்துகிறார். அப்படி இந்த

விசேஷம் குழந்தைகளினுடையது. எனவே தந்தையையும் விட அதிக பூஜைக்குரியவர்களாக ஆகியிருக்கிறீர்கள். அந்த மாதிரி தன்னுடையவிசேஷம் நினைவில் இருக்கிறதா அல்லது மறந்து விடுகிறீர்களா? சங்கமயுக பிராமணர்களின் விசேஷம் எப்பொழுதும் நினைவு சொரூபத்தில் இருப்பதற்கானது. அப்படியானால் பிராமணத்தன்மையின் விசேஷத்தை அனுபவம் செய்கிறீர்களா? சூத்திரத்தன்மை என்றால் நினைவு மறந்த சொரூபம். பிராமணன் ஆகியும் பின்ப நினைவு மறந்த நிலையில் வந்து விட்டீர்கள் என்றால் சூத்திரருக்கும் பிராமணருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? மர்ஜீவா ஜென்மத்தின் (உடலிலிருந்து கொண்டே மறு பிறவி எடுத்த) ஆன்மீக நிலை என்னவாக ஆனது? நினைவு மறந்த நிலை லௌகீகம் ஆகும். அதாவது இந்த உலகின் பழக்க வழக்கம் ஆகும். பிராமணர்களின் பழக்கம் எப்பொழுதும் நினைவு சொரூபமாகும். எப்பொழுதாவது தன்னுடைய லௌகீக குலத்தின் பழக்க வழக்கம் மற்றும் மரியாதைகள் யாருக்காவது மறக்கிறதா என்ன? பிராமண குலத்தின் பழக்க வழக்கம் மற்றும் மரியாதைகள் மறந்து விடுகிறது என்பது சம்பவமா? பிராமணர்களின் பழக்க வழக்கம் ஆன்மீகமானது. இந்த பழக்க வழக்கத்தில் நடந்து கொள்வது சாதாரணம் மற்றும் சகஜமான விஷயம் ஆகும். ஏனென்றால் எப்பொழுது நீங்கள் பிராமணனாகவே இருக்கிறீர்கள் என்றால் மற்ற குலத்தின் பழக்க வழக்கத்தைக் கடைப்பிடிப்பதில் கடினம் இருக்க முடியும் ஆனால் இதுவோ உங்களுடைய தொடக்கத்தின் பழக்க வழக்கம் ஆகும். இயற்கையான வாழ்க்கையின் விஷயம் ஆகும். பிராமண வாழ்க்கையின் சம்ஸ்காரத்தின் விஷயம் ஆகும். இதில் கடினம் என்ன இருக்கிறது? பிராமண வாழ்க்கையின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் எது? அனைத்து தெய்வீக குணங்களுமே பிராமணர்களின் சுபாவம். இதைத் தான் தெய்வீக சுபாவம் என்று கூறுகிறீர்கள் என்றால், தெய்வீக குணங்கள் பிராமணர்களுக்கு இயல்பான ஒன்று அதாவது பிராமண வாழ்க்கையின் சுபாவம் அனைத்து தெய்வீக குணங்கள் ஆகும். உள்ளடக்குவது, ரமணீகரமானது, சிரித்த முகம். சகித்துக் கொள்வது, திருப்தியாக இருப்பது -பிராமணர்களின் வாழ்க்கையின் சுபாவம் மற்றும் சம்ஸ்காரமாகும் -உலகின் சேவாதாரி. எப்பொழுது பிராமண வாழ்க்கையின் சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் இதுவே தான் என்றால் எந்த குணத்தையும் தாரணை செய்வது மற்றும் சேவாதாரியாக

ஆவதற்காக தன்னுடையதை அதாவது நான், எனது என்பவைகளைத் தியாகம் மற்றும் நிரந்தர தபஸ்வி சொரூபம் மற்றும் நினைவு சொரூபமாக ஆவது சுலபமான மற்றும் சாதாரண விஷயம் இல்லையா? ஒருவேளை யாருக்காவது, ஏதாவது ஜென்மத்தின் சம்ஸ்காரம் இருக்கிறது மற்றும் ஜென்மத்திலிருந்தே சுபாவம் இருக்கிறது என்றால் அதை மாற்றுவது கடினமா அல்லது நடந்து கொள்வது சுலபமாக இருக்கிறதா? எப்படி நீங்களும் பலவீனத்தின் வசமாகி இது என்னுடைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் என்று சாக்குபோக்கு கூறுகிறீர்கள். இதே போல் பிராமண வாழ்க்கையின் ஆதி சுபாவம் மற்றும் சம்ஸ்காரமாக என்ன இருக்கிறதோ அதன்படி நடந்து கொள்வது சுலபமாக இருக்குமா அல்லது கடினமாக இருக்குமா? ஒருவேளை இந்த தெய்வீக குணங்களின், சம்ஸ்காரங்களின் புறம்பாக யாராவது ஏதாவது காரியம் செய்வீர்கள் என்றால் அப்பொழுது இது பிராமணர்களுக்காக கடினமாக இருக்க வேண்டும். இப்பொழுது நடைமுறையில் என்ன இருக்கிறது? சூத்திர தன்மையின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் இயற்கையான ரூபத்தில் இருக்கிறதா அல்லது பிராமணத் தன்மையின் சுபாவம் இயற்கையான ரூபத்தில் இருக்கிறதா? இதிலோ முயற்சி செய்வதற்கான அவசியம் இல்லை. ஏனென்றால், இவை வாழ்க்கையின் இயற்கையான சம்ஸ்காரம் ஆகும். எப்படி தன்னுடைய சுவமானத்தின் சிம்மாசனத்தில் நிலைத்திருக்க முடிவதில்லை. தன்னுடைய ஆசனத்தை விட்டு விடுகிறீர்கள். மேலும் உருவாகியிருக்கும் தன்னுடைய பாக்கியத்தை மறந்து விடுகிறீர்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். எனவே தான் தன்னுடைய உண்மையான சுபாவம், சம்ஸ்காரத்தில் கடினத்தை அனுபவம் செய்கிறீர்கள். புரிந்ததா? இந்த விஷயத்தில் தந்தைக்கு ஒரு மகிமை இருக்கிறது. அது குழந்தைகளுக்கும் இருக்கிறது. கடினத்தை சுலபமாக்குபவர்" அப்படி கடினத்தை சுலபமாக்குபவர், மலையை கடுகாக்குபவர் மற்றும் பஞ்சாக்குபவர் என்று தந்தையின் மகிமை இருக்கிறது. பஞ்சு எவ்வளவு லேசாக இருக்கிறது. மேலும் சுத்தமாக இருக்கிறது, மலை எவ்வளவு கடினமானதாக மற்றும் பாரமானதாக இருக்கிறது. எங்கு மலை மேலும் எங்கு பஞ்சு மற்றும் கடுகு? அப்படியானால் எது தந்தையின் மகிமையாக இருக்கிறதோ அது உங்களுடையதாக இல்லையா? யார் கடினத்தை சுலபமாக்கக்கூடிய பிராமணராக இருக்கிறாரோ அவருக்கு ஏதாவது விஷயத்தில் கடினம்

அனுபவம் ஆகிறது என்ற இது நடக்க முடியுமா? எனவே தன்னுடைய சுவமானத்தில் நிலைத்திருந்து தன்னுடைய விசேஷத்தை ஒவ்வொரு நேரமும் நினைவில் வையுங்கள். விசேஷ ஆத்மாக்கள் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் விசேஷமாகச் செய்வார்கள் அதாவது பர்வானதாகச் செய்வார்கள்.

நல்லது. அந்த மாதிரி எப்பொழுதும் கடினத்தை சுலபமாக்குபவர், எப்பொழுதும் நினைவு சொரூப தந்தைக்குச் சமமாக ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வினாடி உலக நன்மையின் விசேஷ காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய உலகிற்கு நன்மை செய்யும் மற்றும் பாப்தாதாவின் இதயசிம்மாசனதாரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 20.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஈடுபாட்டின் சாதனம் தடை!

வரதான பூமியிலிருந்து வரமளிக்கும் வள்ளல் மூலமாக அனைத்து வரதானங்களையும் பிராப்தியாக அடைந்து தீவிர முயற்சியாளராக ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? முயற்சி செய்யும் முறையில் என்ன மாற்றத்தைச் செய்திருக்கிறீர்களோ அதை அழியாததாகச் செய்திருக்கிறீர்களா அல்லது அற்ப காலத்திற்காகச் செய்திருக்கிறீர்களா? எப்பொழுதாவது ஏதாவது சூழ்நிலை வந்தால், எப்படிப்பட்ட தடையும் அசைக்கக்கூடியதாக வந்து விட்டாலும் யாருடன் சுயம் தந்தை சர்வ சக்திவான் இருக்கிறாரோ அவரின் எதிரில் அந்தத் தடை என்ன பெரிய விஷயம்? அவரின் எதிரில் அந்த தடை மாறி என்னவாக ஆகி விடும். தடை ஈடுபாட்டின் (லகன் -ஆழ்ந்த ஆர்வம்) சாதனமாகி விடும். மகிழ்ச்சி அடைவீர்கள் இல்லையா? ஒருவேளை ஏதாவது சூழ்நிலை மற்றும் நபர் தடை ஏற்படுத்துவதற்குக் காரணம் ஆகிறார் என்றால் அவருக்காக வெறுப்பு நிறைந்த பார்வை, வீணான எண்ணங்கள் உருவாவது இருக்கக்கூடாது ஆனால் அவருக்காக பாராட்டுக்கள் வெளிப்பட வேண்டும். ஒருவேளை இந்தப் பார்வையை வைத்தீர்கள் என்றால் உங்கள் அனைவருக்கும் உயர்ந்த பார்வையாகி விடும். யார் எப்படி இருந்தாலும் ஆனால் தன்னுடைய பார்வை மற்றும் உள்உணர்வு எப்பொழுதும் நற்சிந்தனை உள்ளதாக இருக்கட்டும் மற்றும் நன்மை பயக்கும் பாவனை உடையதாக இருக்கட்டும். ஒவ்வொரு விஷயத்திலும் நன்மை தென்படட்டும். நன்மை செய்யும் தந்தையின் குழந்தைகள் நன்மை செய்பவர் தான் இல்லையா? நன்மை செய்பவரான பிறகு எந்தவொரு தீமை பயக்கும் விஷயம் இருக்க முடியாது. இந்த நிச்சயம் மற்றும் நினைவு சொரூபமானவராக ஆகி விட்டீர்கள் என்றால் நீங்கள் ஒருபொழுதும் மேலே கீழே ஆட மாட்டீர்கள்.

எப்படி யாராவது பச்சை அல்லது சிகப்பு கண்ணாடி அணிகிறார் என்றால் அவருக்கு அனைத்தும் பச்சையாக மற்றும் சிகப்பாகத் தான் தென்படும். அதே போல் உங்களுக்கு மூன்றாவது கண்ணில் நன்மை பயக்கும் கண்ணாடி போடப்பட்டிருக்கிறது. மூன்றாவது கண்ணே நன்மை பயப்பது தான். அதில் தீமை தென்படுவது என்பது இருக்கவே முடியாது. எதை அஞ்ஞான மனிதர்கள் நன்மையின்மை என்று நினைக்கிறார்களோ அந்த நன்மையின்மையிலும் உங்களுடைய நன்மை அடங்கியிருக்கிறது. எப்படி மனிதர்கள் விநாஷத்தை நன்மையின்மை என்று நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் இதன் மூலமாகத் தான் கதி, சத்கதியின் வாசல்கள் திறக்கும் என்று தெரிந்திருக்கிறீர்கள். அப்படி எந்த விஷயம் எதிரில் வந்தாலும் அனைத்திலும் நன்மை அடங்கியிருக்கிறது. அந்த மாதிரி நிச்சயபுத்தி யுடையவராகி நடந்து கொண்டீர்கள் என்றால் என்ன பிராப்தி ஆகும்? ஒரே சீரான நிலை ஆகி விடும். எந்த விஷயத்திலும் நிற்கக்கூடாது. யார் நிற்கிறார்களோ அவர்கள் பலவீனமானவர்களாக இருப்பார்கள். மகாவீர் ஒருபொழுதும் நிற்பதில்லை. தடை வந்தது, ஆகவே நின்று விட்டோம் என்று அப்படி இருக்கக்கூடாது. நல்லது. ஓம் சாந்தி,

<u>வரதானம்: நேரம் மற்றும் எண்ணத்தையும் சேர்த்து தன்னுடைய அனைத்து பொக்கிஷங்களையும் வில் செய்யக்கூடிய (உயில் எழுதிக் கொடுக்கக்கூடிய) மோகத்தை வென்றவர் ஆகுக!</u>

எப்படி குழந்தைகளுக்கு அனைத்தையும் வில் (உயில்) எழுதிக் கொடுக்கப்படுகிறது, அதே போல் நீங்களும் தந்தையை தன்னுடைய வாரிசாக ஆக்கி அனைத்தையும் வில் செய்து விட்டீர்கள் என்றால் வில் பவர் (மனோபலம்) வந்து விடும். இந்த வில் பவர் மூலமாக மோகம் (பற்றுதல்) தானாக அழிந்து விடும். எப்படி சாகார தந்தை (பிரம்மாபாபா) தன்னை முழுமையாகவே வில் செய்தார். அதே போல் உங்களுடைய நினைவு, நேரம் மற்றும் எண்ணங்களின் பொக்கிஷத்தை வில் செய்யுங்கள் அதாவது ஸ்ரீமத் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் மோகத்தை வென்றவர். பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: ஒருவர் பிறரோடு அன்புடன் விளங்குவதற்காக சரளத்தன்மை (எனிமை, சகஜம்) மற்றும் சகித்துக் கொள்ளும் தன்மையின் குணத்தை தாரணை செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 23.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக பொக்கிஷங்களின் அதிபதி!

தன்னை லைட் ஹவுஸ் (கலங்கரை விளக்கம்) மற்றும் மைட் ஹவுஸ் (சக்தி நிறைந்தவர்) என்று நினைக்கிறீர்களா? தற்சமயத்தின் நிலைக்கு ஏற்றபடி உங்கள் அனைவருடைய எந்த சொரூபம் உலக நன்மைக்கான காரியம் செய்ய முடியும்? அந்த சொரூபத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? இந்த நேரம் மைட் ஹவுஸின் சொரூபத்தின் அவசியம் இருக்கிறது. அனைத்து சக்திகள் நிறைந்த தந்தையின் குழந்தைகள் நாமும் மைட் ஹவுஸ் ஆகியிருக்கிறோம் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? அனைத்து சக்திகளும் தன்னில் நிரம்பியிருக்கிறது என்று நினைக்கிறீர்களா? தேவதைகள் சக்தி நிறைந்தவர் இல்லை, ஆனால் அனைத்து சக்திகளும் நிறைந்தவர்கள் பிராமணர்கள். பிராமணர்களின் பொக்கிஷத்தில் பிராப்தி இல்லாத சக்தி ஒன்றும் இல்லை என்பது அனைத்து சக்திகள் நிரம்பியவர்கள் என்பவர்களின் மகிமையாக இருக்கிறது.

எப்படி தேவதைகளின் பொக்கிஷங்களில் அவர்கள் அடையாத பொருட்கள் ஏதுமில்லை என்று தேவதைகளின் மகிமையாகக் கூறப்படுகிறது அதே போல் அவர்கள் அடையாத எந்த சக்தியும் பிராமணர்களின் பொக்கிஷத்தில் இல்லை என்பது பிராமணர்கள் உங்களுடைய மகிமை ஆகும். ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவீர்கள். எப்பொழுது தந்தையின் பெயரே சர்வ சக்திவான், அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்தவர் என்று இருக்கிறது அதாவது சக்திகளின் பொக்கிஷங்களின் அதிபதியின் குழந்தைகள் நீங்கள் என்றால், எந்த தந்தை அனைத்து சக்திகளின் அதிபதியாக இருக்கிறாரோ அவரது குழந்தைகளிடம் பிராப்தியில்லாதது என்று ஏதாவது இருக்க முடியுமா? யார் குழந்தையாக இருக்கிறாரோ அவர் தான் அதிபதி ஆகிறார். தன்னை குழந்தையிலிருந்து அதிபதி ஆகுபவன் என்று நினைக்காதவர்கள் இங்கு யாராவது இருக்கிறார்களா? அனைத்து

அதிபதிகளும் அமர்ந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அனைத்து சக்திகளின் பொக்கிஷங்களின் அதிபதிகளாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? பொக்கிஷங்களின் அதிபதியாக இருப்பவர், என்னிடம் சகித்துக் கொள்ளும் சக்தி இல்லை, மாயாவை பகுத்தறியும் சக்தி இல்லை, ஞான பொக்கிஷத்தைப் பராமரிக்கும் சக்தி இல்லை, எண்ணங்களை உள்ளடக்கும் சக்தி இல்லை மற்றும் பொக்கிஷங்களை நினைவு செய்வதற்கான சக்தி இல்லை என்று எப்பொழுதாவது இந்த மாதிரி சிந்திக்க முடியுமா என்ன? எவ்வளவு தான் ஏதாவது காரியத்தில் புத்தி விஸ்தாரத்தில் சென்றிருந்தாலும் விஸ்தாரத்தை ஒரு நொடியில் உள்ளடக்கும் சக்தி இல்லையா? அதிபதியிடம் அந்த மாதிரியான வார்த்தையோ எண்ணமோ இருக்க முடியுமா? ஒருவேளை இருக்கிறது என்றால் அவரை என்னவென்று கூறுவது? அந்த நேரத்து நிலையை அதிகார உரிமையின் நிலை என்று கூற முடியுமா?அதிபதி எப்பொழுதும் அதிபதியாகவே இருக்கிறார். இந்த நேரம் அதிபதி, அடுத்த நேரம் பிச்சைக்காரன் அந்த மாதிரி சர்வ சக்திவான் இருப்பாரா என்ன? அதிபதியிலிருந்து அடிக்கடி ராயல் பிச்சைக்காரனாக ஏன் ஆகிறீர்கள்? தந்தையின் எதிரில் கூட குழந்தை வந்து பாபா எனக்கு உதவி செய்யுங்கள், சக்தி கொடுங்கள் மற்றும் ஆதரவு கொடுங்கள் என்று கூறினார் என்றால், அவரை என்னவென்று கூறுவது. இதை ராயல் பிச்சைக்காரத்தன்மை என்று கூறமாட்டோமா? இது பக்தியின் சம்ஸ்காரம் ஆகும். எப்படி தேவதைகளின் எதிரில் சென்று நீங்களோ சர்வ குண சம்பன்னமானவர்கள் மற்றும் நானே.....என்று கூறுகிறார்கள், அந்த மாதிரியே தந்தையின் எதிரில் மாஸ்டர் சர்வ சக்திவான் வந்து கூறுகிறார் -பாபா நீங்களோ அனைத்து சக்திகளின் கடலாக இருக்கிறீர்கள், ஆனால் என்னிடம் அந்த சக்தி இல்லை, பலமற்றவனாக இருக்கிறேன், மாயாவிடம் தோல்வி அடைந்து விடுகிறேன், வீணான எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை, மேலும் மாயாவின் தடைகளைக் கண்டு பயந்து விடுகிறேன் என்று கூறுகிறார் என்றால் இது அதே பக்தியின் சம்ஸ்காரம் இல்லையா என்ன?

தந்தை என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார் அப்படி அவரை தெரிந்து கொள்ளாமல் பாவனையின் வசமாகி சர்வ வியாபி என்றும் கூறுகிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா? இவையும் தந்தையை நிந்தனை செய்வது என்று நீங்கள் கூறுகிறீர்கள்

இல்லையா? கடுமையிலும் கடுமையான வார்த்தையாகத் திட்டுவது என்று கூறுகிறீர்கள். அதே போலவே தன்னுடைய உயர்ந்த சுவமானமாகிய மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞானம், அன்பு மற்றும் ஆனந்தம் அப்படி அனைத்தின் கடல், பின்பு கொஞ்சம் சக்தியின் குறை என்று தனக்காக கூறுகிறார் என்றால் அவரை மாஸ்டர் கடல் என்று கூற முடியுமா என்ன? ஒரு புறம் தன்னை மாஸ்டர் ஞானக்கடல், ஆனந்தத்தின் கடல் என்று கூறிக் கொண்டு, பிறகு இதையும் கூறினார் என்றால், தன்னை நிந்தனை செய்வதாக ஆகவில்லையா? தானே தன்னை நிந்தனை செய்வது என்பது பிராமணர்களின் சுயமரியாதையா என்ன? இந்த வார்த்தை சொல்வது மற்றும் இந்த எண்ணத்தை எண்ணுவது, இதனால் தன்னை நிந்தனை செய்கிறீர்கள் மற்றும் தந்தையையும் நிந்தனை செய்கிறீர்கள். எப்படி? தந்தையோ வள்ளலாக இருக்கிறார், அவராகவே கொடுப்பவர். யாராவது கூறுவதினால் கொடுப்பவர் அல்ல. அப்படிப்பட்ட வள்ளலை மனிதனாக்குவது என்பது நிந்தனை செய்வதாக ஆகாதா என்ன? சொல்வதினால்! செய்வது யார்? மனிதன். இன்னொரு விஷயம் தந்தைக்கும் நினைவூட்டுபவர்களாக ஆகிறீர்கள் -இதனால் என்ன நிரூபணம் ஆகிறது. தந்தைக்கு தன்னுடைய காரியம் செய்வது மறந்து விட்டதா என்ன? அதனால் நீங்கள் தந்தைக்கு நினைவூட்டுகிறீர்களா என்ன? பாபா நீங்களோ உதவி செய்பவராகத் தான் இருக்கிறீர்கள். எனவே உதவி செய்யுங்கள். இந்த மாதிரி கூறுவதை என்னவென்று கூறலாம். எப்பொழுது பிராமணன் என்றால் அனைத்து பிராப்தி சொரூபமானவர் என்று மகிமையே இருக்கிறது. பிராப்தி சொரூபமானவரிடம் பிராப்தியின்மை எங்கிருந்து வந்தது. எனவே பிராமணர்களின் நிலை பவர் ஹவுஸ் ஆனது என்று கூறினோம். இப்பொழுது பவர் ஹவுஸையும் தாண்டிய பாஷையை புரிந்தீர்களா? பவர் ஹவுஸின் வார்த்தைகள் இவை அல்ல. இப்பொழுதோ கடைசி முடிவு வெளியாவதற்கான நேரமும் அருகில் வந்து கொண்டிருக்கிறது. கடைசி முடிவின் நேரத்தில் கூட ஒருவேளை யாராவது முதல் பாடமே படித்துக் கொண்டிருக்கிறார். அதிலேயும் உறுதியாகவில்லை என்றால் அந்த மாதிரியானவரின் முடிவு என்னவாக இருக்கும்? எனவே இருந்தபோதிலும் பாப்தாதா கொஞ்ச காலம் முன்பாகவே கூறுகிறார் யாருக்காவது ஹை ஜம்ப் (தாண்டிச் செல்வது) மற்றும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்றால் இப்பொழுதிலிருந்து ஆறு மாதத்திற்குள் அதாவது இந்த வருடத்தில்

தன்னைத் தானே எந்த நிலையில் மற்றும் எந்த ஸ்திதியில் நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறீர்களோ அதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த மாதிரி கொஞ்ச காலத்திற்குள் தன்னை சம்பன்னம் ஆக்குவதற்கு சாதாரண முயற்சியால் முடியாது. இப்பொழுதோ தீவிர முயற்சி அதாவது எண்ணம், சொல் மற்றும் செயல் இந்த மூன்றின் சமநிலைக்கான பயிற்சி செய்ய வேண்டும். அவரைத் தான் தீவிர முயற்சியாளர் என்று கூறுவது.

எப்படி நாம் வள்ளலின் குழந்தைகள் என்று புத்தியில் நினைக்கிறீர்கள் மற்றும் புரிந்து கொள்கிறீர்கள் ஆனால் வார்த்தை மற்றும் செயலில் வித்தியாசம் இருக்கிறது. நாம் அனைத்து ஆத்மாக்களை யும் விட உயர்ந்த பிராமணன் என்று எண்ணத்தில் யோசிக்கிறீர்கள் ஆனால் வார்த்தை மற்றும் செயலில் வித்தியாசம் இருக்கிறது. உலகிற்கு நன்மை செய்பவர் என்று நினைக்கிறீர்கள், ஆனால் வார்த்தை மற்றும் செயலில் வித்தியாசம் இருக்கிறது. அப்படி மூன்றுமே சமமாகி விட்டது என்றால் அதைத்தான் தீவிர முயற்சி அதாவது தந்தைக்குச் சமமான நிலை என்று கூறுவது. அப்படியானால் தன்னை தந்தைக்குச் சமமாக ஆக்குவதற்காக நேரம் கொடுக்கிறீர்களா? ஆறு மாதங்களுக்குப் பிறகு இந்த ஆன்மீக சேனையின் மகாவீரர்கள், குதிரைப்படையினர் மற்றும் காலாட்படையினர் அதாவது பிரஜைகள் அனைவரும் பிரத்யக்ஷம் ஆவார்கள். அதுவரை உங்களுக்குள்ளேயே பிரத்யக்ஷம் ஆகவில்லை என்றால் உலகின் எதிரில் எப்பொழுது வெளிப்படுவீர்கள். மேலும் உலகின் எதிரில் வெளிப்படவில்லை என்றால் எப்பொழுது பிரத்யக்ஷம் ஏற்படும்? எனவே தன்னை மற்றும் தந்தையை வெளிப்படுத்துவதற்காக மற்றும் தந்தையின் பிரத்யக்ஷதாவை செய்வதற்காக இப்பொழுது கடைசியாக அதிவேக தீவிர முயற்சியாக இன்னும் என்ன செய்ய வேண்டியது இருக்கிறது? அதிவேக முயற்சி எது? வேகமான முயற்சியே கடைசியானது என்ற அதைத் தெரிந்திருக்கிறீர்களா? எந்த விதமான முயற்சியாவது உங்கள் எதிரில் தென்படுகிறதா? அதிவேக முயற்சியின் விதி என்ன அதன் மூலம் தந்தைக்குச் சமமாக ஆகி விடுவீர்கள்? இந்த சித்தி ஏற்படும். விதியின்றி சித்தி (கைகூடுதல்) ஏற்பட முடியாது. ஒரே ஒரு வார்த்தை தான் என்று அனேக தடவைகள் கூறியிருந்திருக்கிறோம். கடைசியில் வந்தும் தீவிர முயற்சி செய்வதற்கான விதி -உறுதிமொழி. எந்தவொரு விஷயத்தைப் பற்றியும்

இதைச் செய்யவே கூடாது, இதை இப்பொழுது செய்ய வேண்டும் என்று உறுதி எடுப்பது. கடைசி தான் அதிவேகம் என்பது தான் உறுதிமொழி எடுப்பதின் விதியாகும். உறுதிமொழி என்றால் எண்ணத்தை உருவாக்கினீர்கள் மற்றும் சொரூபம் ஆனீர்கள். உறுதிமொழி எடுப்பதில் ஒரு விநாடி நேரம் எடுக்கும். அப்படி இப்பொழுது தீவிர முயற்சியானது ஒரு விநாடிக்கானதாகத் தான் இருக்க வேண்டும். ஏனென்றால் கடைசி பரீட்சையின் என்ன முடிவு வெளியாக வேண்டுமோ, கடைசி பரீட்சைக்கான நேரம் எவ்வளவு கிடைக்கும்? ஒரு விநாடி கடைசி பரீட்சையின் நேரமும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது மற்றும் கேள்வித்தாளும் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. பற்றுதலை வென்ற நினைவுசொரூபமான நிலை என்று ஏற்கனவே கேள்வித்தாளைப் பற்றிக் கூறியிருந்தோம். ஒரு விநாடியில் பற்றுதலை வென்றவராக ஆகி விடுங்கள் என்று கட்டளை கிடைத்தது என்றால் ஒரு விநாடியில் ஒருவேளை பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவராக ஆகவில்லை, தன்னை சொரூபமாக ஆக்குவதில் அதாவது யுத்தம் செய்வதிலேயே நேரத்தை இழந்தார் மற்றும் புத்தியை நிலைநிறுத்துவதிலேயே நேரம் எடுத்துக் கொண்டார் என்றால் என்னவாகி விடும்? தோல்வி அப்படி நேரமும் ஒரு விநாடி தான் கிடைக்கும். இதையும் முன்பாகவே கூறிவிடுகிறோம். கேள்வித்தாளையும் முன்பாகவே கூறுகிறோம் என்றால் எவ்வளவு பேர் தேர்ச்சி பெற வேண்டும்? மிக வேமாகச் செய்யும் முயற்சியின் விதி "உறுதிமொழி" மூலமாக தன்னை வெளிப்படுத்துங்கள். தந்தையை வெளிப்படுத்துங்கள் என்றால் உறுதிமொழி மூலமாக பிரத்யக்ஷதாவை (வெளிப்படுத்துதல்) செய்யுங்கள். இது கடினமா என்ன? தைரியம் மற்றும் உல்லாசம், போதை மற்றும் இலக்கு இவற்றை ஒருவேளை சேர்த்தே வைத்தீர்கள் என்றால் அனேக கல்பங்களுக்குச் சமமாக முழுமையாக தேர்ச்சி அடைவது நிச்சயிக்கப்பட்டே இருக்கிறது. எந்தக் கடினமும் இல்லை. இந்த ஆறு மாதங்களுக்குள் தன்னுடைய முக்கிய நான்கு பாடங்களை எதிரில் வைத்து நான்கிலும் தேர்ச்சி பெறும் மதிப்பெண்கள் இருக்கிறதா என்று மட்டும் சோதனை செய்ய வேண்டும். இது குறைந்ததிலும் குறைந்த தேர்ச்சி பெறுவதற்கான மதிப்பெண்கள் ஆனால் விசேஷ ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு முழு மதிப்பெண்கள் பெறுவதற்கான லட்சியத்தை வைக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று பாடங்களில் நல்ல மதிப்பெண்கள் பெறுவோம்

மற்றும் ஒன்று அல்லது இரண்டு குறைவாக இருக்கிறது என்றாலும் தேர்ச்சி பெற்று விடுவோம் என்று அப்படி நினைக்காதீர்கள். ஒருவேளை யாராவது ஒரு பாடத்தில் தோல்வி அடைகிறார் என்றால் என்னவாகிறது? அவருக்கு மீண்டும் பரீட்சை எழுத வேண்டும், அவருக்கு ஒரு வருடம் இழப்பாகியது இல்லையா? அதாவது அவர் சூரிய வம்சத்தைத் தவற விட்டார் இல்லையா? சூரிய வம்சத்தின் முதல் ராஜ்யபாக்கியம் மற்றும் இயற்கையின் முதல் நிலை அனைத்து பிராப்தி நிரம்பிய வாழ்க்கையிலிருந்து தவறி விடுவார் இல்லையா? ஆம் ஒருவேளை ஏறும் கலையில் இருந்து இருந்து கடைசியில் வந்து முழு மதிப்பெண்கள் பெற்றார் என்றால் திரேதாயுகத்தில் கொஞ்சம் உயர்ந்த பிராப்தியை அடைந்து விடுவார். எனவே இதையும் யோசிக்கக்கூடாது. நான்கு பாடங்களிலும் முழுமையாகத் தேர்ச்சி பெறுவது முழு மதிப்பெண்கள் பெறுவது தான் முதல் நிலை முயற்சி ஆகும். அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெறும் அளவிற்கான மதிப்பெண்கள் பெறுவது இரண்டாம் நிலை முயற்சி ஆகும். மூன்றாம் நிலை முயற்சியோ செய்யவே கூடாது. ஏனென்றால் மூன்றாவதைப் பற்றி யோசிக்கவே கூடாது. இருந்தாலும் பாபா நேரம் கொடுக்கிறார். தன்னைத் தானே அனைத்து பாடங்களிலும் முழுமையாக்கிக் கொள்ளுங்கள். புரிந்ததா? மூன்று குரூப்களை வெளியிட வேண்டும். நம்பர்-1 எவரெடி குரூப், 2 -ரெடி குரூப், 3 லேசி (சோம்பேறி) குரூப். இந்த ஆறு மாதங்களுக்குள் தன்னை மாற்றம் செய்து முதல் குரூப்பில் கொண்டு வர வேண்டும் அதாவது எவரெடி குரூப். ஆர்டர் கிடைத்தது மற்றும் செய்தீர்கள். ஆர்டரை ஏற்றுச் செய்வதில் சோம்பல் வேண்டாம். இந்த மூன்று குரூப்கள் மூலமாக தனக்குத்தானே கண்ணாடியில் சாட்சாத்காரம் கிடைத்து விடும். எப்படி சென்ற கல்பத்தில் பிரம்மா குமார் (நாரதர்) கண்ணாடியில் தன்னுடைய காட்சியைப் பார்த்தார் இல்லையா? அதே போல் ஞானம் என்ற கண்ணாடியில் தன்னைத் தானே நான் எந்த குரூப்பில் இருக்கிறேன் மற்றும் எந்த கிரேடில் வரப்போகிறவன் என்று பார்ப்பீர்கள். எப்படி குரூப்போ அப்படி கிரேட் இருக்கும். நல்லது.

எப்பொழுதும் தனக்காகவும் மற்றும் உலகத்திற்காகவும் நற்சிந்தனையான நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணத்தை உயர்வாக வைத்துக் கொள்ளக்கூடிய, எப்பொழுதும் தன்னுடைய பொக்கிஷத்தின் நினைவு

மற்றும் சிந்தனையில் இருக்கக் கூடிய எப்பொழுதும் குஷியின் டானிக்கினால் நிரம்பியிருக்கக்கூடிய, அனைத்து பலஹீனமான ஆத்மாக்களுக்கும் பலம் கொடுக்கக்கூடிய, அனைத்து ஆத்மாக்களுக்கும் தமோகுண சுபாவம் மற்றும் சம்ஸ்காரங்களை மாற்றக்கூடிய, சாட்சியாக இருந்து மற்றும் எப்பொழுதும் துணைவரை அனுபவம் செய்யக்கூடிய, அந்த மாதிரி கோடியிலும் சிலர் அந்த சிலரிலும் சிலரான பலகோடி மடங்கு பாக்கியசாலி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

வரதானம்: ஸ்தூலம் மற்றும் சூட்சுமம் இரண்டு முறையாலும் தன்னை பிஸியாக வைத்துக் கொள்ளக்கூடிய மாயாவை வென்றவர் வெற்றி அடைபவர் ஆகுக!

தன்னை சேவாதாரி என்று புரிந்து தன்னுடைய ஆர்வம், ஊக்கத்தோடு சேவையில் பிஸியாக இருந்தீர்கள் என்றால் மாயாவிற்கு வாய்ப்பு கிடைக்காது. எப்பொழுது எண்ணத்தினால், புத்தியால், ஸ்தூல காரியத்திலிருந்து ஓய்வாக இருக்கிறீர்களோ அப்பொழுது மாயா வாய்ப்பை எடுத்துக் கொண்டு விடுகிறது ஆனால் ஸ்தூலம் மற்றும் சூட்சுமம் இரண்டு முறையாலும் மிகுந்த குஷியோடு சேவையில் பிஸியாக இருந்தீர்கள் என்றால் குஷியின் காரணமாக மாயா தாக்குதல் செய்வதற்கான தைரியம் வைக்க முடியாது. எனவே உங்களுக்கு நீங்களே ஆசிரியர் ஆகி புத்தியை பிஸியாக வைப்பதற்கான தினசரி நிகழ்ச்சி நிரலை தயாரித்தீர்கள் என்றால் மாயாவை வென்றவர், வெற்றி அடைபவர் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: பாபா என்னுடன் இருக்கிறார் என்று ஒரு விநாடி கூட யோசிக்காமல் கூறுகிறீர்கள் மற்றும் நிச்சயமும் இருக்கிறது என்றால் மாயா அருகில் வர முடியாது!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

## 28.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# யோகயுக்த் (நினைவுசொரூபம்) ஆவதினால் இயல்பாகவே யுக்தியுக்தான (யதார்த்தமான)எண்ணம், சொல் மற்றும் செயல் இருக்கும்!

எப்படி வெளியுலக இராணுவத்தின் தளபதி எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் அங்கேயே ஒரு விநாடியில் நின்று விடுங்கள்' என்று கட்டளையிடுகிறார். ஒருவேளை அவர் இந்தக் கட்டளையை யோசிப்பதில் மற்றும் புரிந்து கொள்வதிலேயே நேரம் எடுத்துக் கொண்டார் என்றால் அதனுடைய விளைவு என்னவாகும். வெற்றிக்கான திட்டம் நடைமுறையில் வர முடியாது. இதே விதமாக எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆகுபவரிடம் ஒரு நொடியில் தன்னுடைய எண்ணத்தை நிறுத்தி விடுவதற்கான விசேஷம் இருக்கும். எந்தவொரு ஸ்தூல காரியம் செய்து கொண்டு மற்றும் ஞானத்தை சிந்திப்பதிலும் மிகவும் பிஸியாக இருக்கிறார் என்றாலும் அந்த நேரத்திலும் தன்னைத் தானே ஒரு விநாடியில் நிறுத்தி விட வேண்டும். எப்படி அந்த மனிதர்களும் ஒருவேளை மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் மிகவும் மும்முரமாக யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் அந்த நேரத்தில் கூட நில்லுங்கள் என்று சொன்னவுடனேயே நின்று விடுவார்கள். இதே போல் எந்த நேரமும், இந்த எண்ணத்தை வைக்காதீர்கள் மற்றும் இந்த நேரம் சிந்தனை செய்வதற்குப் பதிலாக விதை ரூப நிலையில் நிலைத்து விடுங்கள் என்றால் விநாடியில் நிறுத்தி விட முடியுமா? எவ்வாறு ஸ்தூல கர்ம இந்திரியங்களை ஒரு நொடியில் எப்படி மற்றும் எங்கு செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும், அவற்றின் மேல் அதிகாரம் இருக்கிறது இல்லையா? அந்த மாதிரி புத்தி மற்றும் எண்ணங்களின் மேலும் அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா?

முற்றுப்புள்ளி வைக்க விரும்பினால் வைக்க முடிய வேண்டும். அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? விஸ்தாரத்தில் செல்வதற்குப் பதிலாக ஒரு விநாடியில் முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும். அந்த நிலையை புரிந்திருக்கிறீர்களா? எப்படி டிரைவிங் லைசன்ஸ் எடுக்கச் செல்கிறார்கள் என்றால் வேண்டுமென்றே அவரை அதிகவேகமாக ஓட்ட வைத்து திடீரென்று நிறுத்தச் செய்வார்கள் மற்றும் பிரேக் போட வைப்பார்கள். இதுவும் கூட பயிற்சி அல்லவா!. அப்படி தன்னுடைய புத்தியை ஓட்டுவதற்கும், நிறுத்துவதற்குமான பயிற்சி செய்ய வேண்டும். எப்பொழுது அந்த மாதிரியான நேரத்தில் ஒரு விநாடியில் நின்று விட்டது என்றால் அப்பொழுது அதிசயம் என்று கூறலாம். நிரந்தரமாக வெற்றி அடைபவர் யாரென்றால் யாருக்கு யுக்தியுக்தான எண்ணம், சொல் மற்றும் செயல் இருக்கிறது அல்லது யாருக்கு ஒரு எண்ணம் கூட வீணாக ஆவதில்லையோ, அவர் தான். அது எப்பொழுது இருக்கும் என்றால் எப்பொழுது இந்தப் பயிற்சி இருக்குமோ, அப்பொழுது தான். உதாரணத்திற்கு அந்த மாதிரி ஏதாவது சேவை இருக்கிறது அதில் முழுமையான வெற்றி ஏற்பட வேண்டியதாக இருக்கிறது என்றால் அந்த நேரமும் நிறுத்துவதற்கான பயிற்சி செய்யுங்கள்.

முழு மூங்கில் காடும் (உலகமும்) நெருப்பு பிடித்து எரியும், இப்பொழுது அந்த மாதிரியான நேரம் வந்து கொண்டிருக்கிறது. அந்த நெருப்பிலிருந்து காப்பாற்றுவதற்காக இரண்டு விஷயங்கள் அவசியமாக இருக்கிறது. எப்பொழுது விநாசத்தின் நெருப்பு நாலாபுறங்களிலும் பிடித்து எரியுமோ அந்த நேரம் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய முதல் கடமை -அமைதியின் தானம் அதாவது வெற்றிக்கான பலம் கொடுப்பது, அதற்குப் பிறகு என்ன வேண்டும்? பிறகு யாருக்கு என்ன அவசியமாக இருக்கிறதோ அது நிறைவேற்றப்படுகிறது. உங்களுக்கு அந்த நேரத்தில் அவர்களுடைய எந்த அவசியத்தை (தேவை) நிறைவேற்ற வேண்டியது இருக்கும். அந்த நேரம் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு சக்தியின் அவசியம் இருக்கும். சிலருக்கு சகித்துக் கொள்வதற்கான சக்தியின் அவசியம் இருக்கும். சிலருக்கு உள்ளடக்குவதின் சக்தியின் அவசியம் இருக்கும். சிலருக்கு தீர்மானம் செய்வதின் சக்தியின் அவசியம் இருக்கும், மேலும் சிலருக்கு முக்தியின் அவசியம் இருக்கும். யாருக்கு என்ன விருப்பம் இருக்குமோ

அதை நிறைவேற்று வதற்காக தந்தையின் அறிமுகம் மூலமாக ஒரு நொடியில் அமைதியில்லாத ஆத்மாவை அமைதியாக ஆக்கும் சக்தியும் அந்த நேரம் தேவையாக இருக்கும். எனவே இந்த அனைத்து சக்திகளையும் இப்பொழுதிலிருந்தே ஒன்றாகச் சேர்க்க வேண்டும், இல்லையென்றால் அந்த நேரம் உயிர்பிச்சை எப்படி கொடுக்க முடியும்? முழு உலகத்தின் அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்திகளின் தானம் கொடுக்க வேண்டியதாக இருக்கும். இந்த அளவு ஸ்டாக்கை (கையிருப்பை) சேர்க்க வேண்டும், அதன் மூலம் தானும் தன்னை சக்தியின் ஆதாரத்தில் நடத்து விக்க முடியும் மேலும் மற்றவர்களுக்கும் கொடுக்க முடியும். யாரும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விட வேண்டாம். ஒரு ஆத்மாவாவது வஞ்சிக்கப்பட்டு இருந்து விட்டது என்றால் இந்த சுமை யார் மேல் வரும்? உயிர்பிச்சை கொடுப்பதற்காக பொறுப்பானவர்களாக யார் இருக்கிறார்களோ அவர்கள் மேல் தான் வரும். எனவே தன்னுடைய ஒவ்வொரு சக்தியின் ஸ்டாக்கையும் சோதனை செய்யுங்கள். யாரிடம் அனைத்து சக்திகளின் ஸ்டாக் சேமிப்பாகி இருக்கிறதோ அவர் தான் உலக ஆத்மாக்களின் நடுவில் அதிர்ஷ்ட நட்சத்திரத்தின் ரூபத்தில் பிரகாசிப்பதாகத் தென்படுவார். எனவே இப்பொழுது அந்த மாதிரி சோதனை செய்ய வேண்டும்.

அமிர்தவேளை எழுந்ததிலிருந்து தன்னை கவனம் என்ற தண்டவாளத்தில் நடத்து விக்க வேண்டும். தண்டவாளத்தில் வண்டி சரியாக செல்லும் இல்லையா. உங்கள் மேல் பாரதத்தின் மட்டும் அல்லாது முழு உலகத்தின் பொறுப்பும் இருக்கிறது. உயர்ந்த ஆத்மாக்களின் ஒவ்வொரு காரியமும் மகானாக இருக்கும் இல்லையா. எனவே முழு நாளிலும் அந்த மாதிரி ஏதாவது வார்த்தையையோ சொல்ல வில்லையே என்ற இந்த சோதனையும் செய்ய வேண்டும். மேலும் மனதில் எந்த வீணான எண்ணமும் ஓடவில்லையே அல்லது ஏதாவது காரியம் தவறாக நடக்கவில்லையே என்பதையும் சோதிக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணத்தின் மேலும் முதலிலேயே கவனம் இருக்கட்டும். யோகயுக்தாக (நினைவு சொரூபமாக) இருப்பதினால் தானாகவே யுக்தியுக்த்தான (மிகச்சரியான) எண்ணம், சொல் மற்றும் செயல் இருக்கும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 30.06.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாபா மற்றும் குழந்தைகள்!

ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாக்கக்கூடிய. வாழ்க்கையை உயர்ந்ததாக்கக்கூடிய, இராஜயோகத்தைக் கற்பிக்கக்கூடிய, நிரந்தர யோகி. சகஜயோகி மற்றும் கர்மயோகி ஆக்கக்கூடியவர் அனைவருக்கும் பிடித்தமான பாபா கூறுகின்றார்: இந்த குழு எப்படிப்பட்ட குழு? இந்த ஆன்மீகப் புதிரைத் தெரிந்துள்ளீர்களா? தெரிந்து கொண்டுவிட்டீர்களா? அல்லது தெரிந்து கொண்டேயிருக்கின்றீர்களா? தெரிந்து கொண்டீர்களா? அல்லது தெரிந்து கொள்வதன் கூடவே அதனை ஏற்று நடந்து கொள்கின்றீர்களா? தெரிந்து கொள்வது என்பது முதல்நிலை, ஏற்றுக் கொள்வது இரண்டாவது நிலை மேலும் அதன்படி நடப்பது மூன்றாவது நிலையாகும். நீங்கள் எந்த நிலை வரை வந்துள்ளீர்கள்? கடைசி நிலை (Last stage) வரை வந்து விட்டீர்களா? யாரெல்லாம் ஆமாம் என்று கூறினார்களோ அவர்களிடம் ஒரு கேள்வி? அதாவது அந்த மூன்றாவது நிலை தான் அனைத்திலும் கடைசி (Ever-Lasting) நிலையா? மூன்றாவது நிலை அடைவது சகஜமாக உள்ளதா? அல்லது அடைந்து விட்டீர்களா? ஆனால் கடைசி என்பதை அடிக்கோடிட்டு (Under-line) கடைசியிலும் கடைசி நிலையாக்கவும். நான் யார்? இந்த விலைமதிப்பற்ற சிரேஷ்டமான வாழ்க்கையில் தன்னுடைய விதவிதமான பெயர் ரூபத்தைத் தெரிந்துள்ளீர்களா? முக்கிய சொரூபம் மற்றும் முக்கியமான பெயர் என்ன? எப்படி பாபாவினுடைய அநேக பெயர் அவருடைய காரியத்தை வைத்து பாடப்படுகின்றது ஆனாலும் கூட முக்கிய பெயர் ஒன்றும் உண்டல்லவா? அதே போல சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுக்குக்கூட பல பெயர், பல காரியங்களின் ஆதாரத்தில் அல்லது குணங்களின் ஆதாரத்தில் பாபா மூலமாக பாடப்படுகின்றன. அதில் முக்கியமான பெயர்கள் என்ன? எப்பொழுது பிரம்மா வாயின் மூலம் பிறவி எடுத்தீர்களோ அப்பொழுது பாபா எந்த பெயரில் அழைத்தார்? எதுவரையில் பிராமணன் ஆகவில்லையோ,

அதுவரையில் எந்தவொரு காரியத்திற்கும் நிமித்தமாக முடியாது. முதலில் பிரம்மா வாய் வழி ஞானம் கேட்ட வம்சத்தினர் ஆவீர்கள். பிரம்மாவின் உறவில் வந்து தான் பிராமணன் அதாவது பிரம்மாகுமாரிகள், பிரம்மா குமாரர்கள்! ஆரம்பப் பெயராக (Suname) இதனைத்தானே எழுதுகின்றீர்கள்? தன்னுடைய அறிமுகத்தை எந்த பெயரில் தருகின்றீர்கள்? உலகீய மனிதர்கள் எந்த பெயரில் உங்களைத் தெரிந்துள்ளார்கள்? பிரம்மா குமார், பிரம்மாகுமாரிகள் அதாவது சிரேஷ்டமான பிராமணர்கள் என்ற ரூபத்தில் தெரிந்து வைத்துள்ளார்கள். பிரம்மா குமாரிகள் என்ற பெயரைக் கொண்டவர்கள் தன்னுடைய கடைசி நிலை வரை அதாவது முற்றிலும் கடைசி நிலையில் இருக்கின்றீர்களா? முற்றிலும் கடைசி நிலையென்றால் ஒவ்வொரு எண்ணம், சொல், செயல் சம்மந்தம், தொடர்பு மற்றும் சேவையில் பிராமண நிலையின் நடைமுறை வாழ்க்கையில் (Practical Life) நடந்து வருகின்றீர்களா? எண்ணத்திலும், வார்த்தையிலும் சூத்திரத்தன்மை துளியளவு கூட தென்படக்கூடாது, பிராமணர்களுடைய எண்ணம், சொல், செயல் என்னவாக இருக்க வேண்டும் என்பதை பாபா ஏற்கனவே கூறியிருக்கின்றார், அதன் அனுசாரமாக கடைசியிலும் கடைசியாக இருக்கின்றதா? பிராமண ரூபத்தில் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு கர்மம் பிரம்மாபாபாவிற்குச் சமமாக இருக்கின்றதா? எப்படி பாபாவோ அப்படி குழந்தைகள்! எந்த சுபாவம் எண்ணம் சமஸ்காரம் பாபாவுடையதோ அது குழந்தைகளுடையதாக இருக்கின்றதா? பாபாவிற்கு வீணான எண்ணம் வருகின்றதா? பலவீனமான எண்ணங்கள் உருவாக முடியுமா? பாபாவிற்கே வரவில்லையென்றால், பிறகு பிராமணர்களுக்கு ஏன் வருகின்றது? பாபா ஆடாத அசையாத உறுதியான ஸ்திதியில் இருக்கிறார் என்றால், பிறகு பிராமண குழந்தைகளின் கடமை என்ன? தகுதியான குழந்தைகளின் கடமை என்ன? பாபாவைப் பின்பற்றுவது! (Follow father)!

ஈஸ்வரிய சேவை செய்வது மட்டும் பாபாவைப் பின்பற்றுவது ஆகாது. ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு எண்ணத்திலும் பாபாவைப் பின்பற்றுவது! அப்படி ஃபாலோ பாதர் ஆகி விட்டீர்களா? எப்படி பாபாவிற்கு ஈஸ்வரிய சமஸ்காரம், தெய்வீக சுபாவம், தெய்வீகமான மனோநிலை, தெய்வீக திருஷ்டி சதா இருக்கின்றதோ, அதுபோல

உங்களுடைய விருத்தி, திருஷ்டி, சுபாவம், சமஸ்காரம் ஆகி விட்டதா? அப்படி ஈஸ்வரிய குணங்களையுடைய தோற்றம் ஆகி விட்டதா? அந்த தோற்றத்தின் மூலமாக பாபாவினுடைய குணங்கள், காரியத்தின் வெளிப்பாடு இருக்க வேண்டும். அவர்களைத்தான் பாபாவைப் பின்பற்றுவோர் என்று கூற முடியும். எப்படி பாபாவின் குணத்தைப் பாடுகிறீர்கள், வர்ணனை செய்கின்றீர்கள் அப்படி தன்னிடத்தில் அனைத்து குணத்தையும் தாரணை செய்கின்றீர்களா? தன்னுடைய ஒவ்வொரு கர்மத்தையும் பாபாவிற்கு சமான் ஆக்கி விட்டீர்களா? ஒவ்வொரு கர்மத்தையும் தினைவில் இருந்து செய்கின்றீர்களா? எந்த கர்மத்தை நினைவிலிருந்து செய்கின்றீர்களோ அந்த கர்மம் நினைவுச்சின்னமாகி விடும். அப்படி நினைவு சின்னத்தின் முந்த்தியாக அதாவது கர்மயோகி ஆகி விட்டீர்களா? ஒவ்வொரு கர்மமும் யோகயுக்த், யுத்தியுக்த், சக்தியுக்தாக வைப்பதுதான் கர்மயோகியாகும். அப்படிப்பட்ட கர்மயோகி ஆகி விட்டீர்களா? அல்லது அமர்த்து யோகம் செய்பவர்களாக மட்டும் உள்ளீர்களா? விசேஷமாக அமர்ந்து யோகம் செய்யும்போது மட்டும் யோகியாக அதாவது யோக யுக்தாக உள்ளீர்களா? அல்லது ஒவ்வொரு சமயமும் யோக யுக்தாக உள்ளிர்களா? கர்மயோகி, சகஜயோகி என்று எதனை வர்ணனை செய்கின்றோமோ, அது நடைமுறையில் உள்ளதா என்ன? அதாவது கடைசியிலும் கடைசி முயற்சி, கர்ம யோகியை கர்மம் தன் பக்கம் கவர்ந்திழுக்க முடியுமா? யோகி தன்னுடைய யோக சக்தியினால் கர்மேந்திரியங்களை காரியம் செய்விக்கக் கூடியவராக இருப்பார்களா? கர்மயோகிகளை கர்மம் தன் பக்கம் கவர்ந்திழுத்தால் அவர்களை யோகி என்று சொல்லத் தான் முடியுமா? யார் கர்மத்திற்கு வசமாகி கர்மம் செய்கின்றார்களோ அவர்களை என்ன சொல்லலாம்? கர்மபோகி என்று தானே சொல்ல முடியும். யார் கர்மபோகிற்கு வசமாகின்றார்களோ அவர்கள் கர்மச் சுமையை அனுபவிப்பதில் நல்ல, கெட்ட கர்மத்திற்கு வசமாகின்றார்கள். சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் கர்மாதீத் நிலையில் உள்ளீர்கள் அதாவது கர்மத்திற்கு அடிமை ஆவதில்லை. சுதந்திரமாக இருந்து கர்மேந்திரியங்களை கர்மத்தில் ஈடுபடுத்துகிறீர்கள். நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்? எதனைக் கற்றுக் கொள்வதற்காகச் செல்கின்றீர்கள் என்று யாராவது கேட்டால்.நீங்கள் என்ன பதில் கூறுகின்றீர்கள்? சகஜ ஞானம், சகஜ ராஜயோகம் கற்கச் செல்கின்றோம் என்று பதில்

கூறுகின்றீர்களல்லவா? அதனைக் கற்றுக் கொண்டிருக்கின்றோம் என்பது உறுதியாக உள்ளதல்லவா? சகஜமான பொருளை தனதாக்கிக் கொள்வது தாரணை செய்வது சகஜம்தானே? அதனால் தான் இதனை ஞானம் என்று கூறுகின்றீர்கள். சதா ஞான சொரூபமாகி விட்டீர்களா? சகஜமான ஞானம் என்றால் ஞான சொரூபமாவது கூட சகஜம்தானே? சதா ஞான சொரூபமாவது -இதுதான் பிராமணர்களுடைய தொழில் ஆகும்!

தன்னுடைய தர்மத்தில் நிலைத்திருப்பது இயற்கையாக (Natural) உள்ளதல்லவா? அதுபோன்று ராஜயோகத்திற்கு என்ன அர்த்தம் கூறுகின்றீர்கள்? அனைத்திலும் மேன்னையானது, அனைத்து யோகத்திற்கும் ராஜாவானது. மேலும் இதன் மூலம் ராஜ்யம் பிராப்தியாகக் கிடைக்கின்றது என்று கூறுகின்றீர்கள் அல்லவா? நீங்கள் அனைவரும் ராஜயோகிகள்தானே? அல்லது ராஜ்யத்தை எதிர் காலத்தில்தான் பிராப்தியாக அடையப் போகின்றீர்களா? இப்பொழுது சங்கமயுகத்தில் ராஜாவா? அல்லது எதிர்காலத்தில் தான் ஆகப்போகின்றீர்களா? யார் சங்கமயுகத்தில் ராஜ்யத்தை அடையவில்லையோ, அவர்கள் எதிர்காலத்தில் என்ன அடைய முடியும்? எப்படி அனைத்திலும் மேன்மையான யோகம் என்று கூறுகின்றீர்கள் அதுபோல மேன்மையான யோகி வாழ்க்கை வாழ வேண்டுமல்லவா? முதலில் தன்னுடைய கர்மேந்திரியங்களுக்கு ராஜா ஆகி விட்டீர்களா? யார் தனக்குத் தானே ராஜா ஆக வில்லையோ அவர்கள் எப்படி உலகிற்கு ராஜா ஆக முடியும்? ஸ்தூலமான (பௌதீக) கர்மேந்திரியங்கள், ஆத்மாவின் சக்திகளான மனம், புத்தி, சமஸ்காரம் அனைத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் (Control) வைத்துள்ளீர்களா? அவற்றின் மீது ராஜாவாகி ராஜாங்கம் செய்கின்றீர்களா? ராஜயோகி என்றால், இப்போதிலிருந்தே ராஜ்யம் செய்பவர்கள். ராஜ்யம் செய்யக்கூடிய சமஸ்காரத்தை, சக்தியை இப்பொழுதிலிருந்தே தாரணை செய்கின்றீர்களா? எதிர்காலத்தில் 21-ஜென்மம் ராஜ்யம் செலுத்துவதற்கான தாரணை நடைமுறையில் உள்ளதா? சகஜ ஞானம், சகஜ யோகம் மூன்றாவது நிலை வந்து விட்டதா? எண்ணங்களுக்கு நில்! என்று கட்டளையிட்டால் நின்றுவிடுகின்றதா? தூய்மையான எண்ணம், அவ்யக்த ஸ்திதியில் நிலைத்து விடு என்று புத்திக்கு கட்டளையிட்டால் (Direction) அதில்

புத்தியை ஸ்திரப்படுத்த முடிகின்றதா? அப்படி ராஜா ஆகி விட்டீர்களா? அப்படிப்பட்ட ராஜா யோகிகளாக யார் உள்ளார்களோ? அவர்களையே பாபாவைப் பின்பற்றுவோர் (ஃபாலோ பாதர்) என்று அழைக்க முடியும். ராஜாக்கள் தமது உதவியாளர்களாக இருக்கின்றவர்கள் மூலமாக எந்த நேரம், எந்த காரியத்தை விரும்பினாலும் செய்விக்க முடியும். அதுபோல சங்கம யுகத்தில் விசேஷமான சக்திகள் உங்களின் உதவியாளர்கள். எப்படி ராஜா இந்த காரியத்தை இவ்வளவு நேரத்தில் செய்யுங்கள் என்று தன்னுடைய உதவியாளர் களுக்கு கட்டளையிடுகின்றாரோ, அதுபோல தன்னுடைய சர்வசக்திகள் மூலமாக தன்னுடைய காரியத்தை சகஜமாக முழுமையாக செய்து முடிக்கின்றீர்களா? அதாவது கட்டளையிடுகின்றீர்களா? எதிர்நோக்கும் சக்தி வந்தால் அதனை ஒதுக்கி விடுவீர்களா? சகஜ யோகி என்றால், உங்களுடைய அனைத்து சக்திகளும் முழுமையாக உங்களுக்கு உதவி செய்கின்றனவா? எந்த நேரம் எந்த சக்தி வேண்டுமோ அதனை காரியத்தில் ஈடுபடுத்த முடிகின்றதா? அப்படிபட்ட ராஜா ஆகி விட்டீர்களா? எப்படி ஆதி காலத்தில் ராஜ்ய சபையில் 8 அல்லது 9 ரத்தினங்கள் புகழ் வாய்ந்தவர்களாக இருப்பார்கள், அதாவது சதா சக யோகியாக இருப்பார்கள். அதுபோல எட்டு சக்திகள் உங்களுக்கு சக யோகியாக உள்ளனவா? இதன் மூலமாகத்தான் தன்னுடைய எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ள முடியும். இந்தக் கண்ணாடியில் தன்னுடைய உள்ளத்தையும், உருவத்தையும் பார்ப்பதன் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

6-மாதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது, அது வினாசத்திற்கான தேதியல்ல. ஒவ்வொரு சங்கமயுக ராஜாக்களும் தன்னுடைய ராஜ்ய சபையை அதாவது சக யோகி சக்திகளை எவரெடியாக்கி (Ever ready) தயார் செய்வதற்காக இந்த நேரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், இப்பொழுதிலிருந்து ராஜ்ய சபைக்கான சமஸ்காரத்தை உருவாக்கவில்லையென்றால், எதிர்காலத்தில் நீண்டகால ராஜா ஆக முடியாது. 6-மாதத்திற்கான அர்த்தம் புரிந்ததா? தன்னுடைய சக யோகிகளை முன்னால் வைத்துப் பார்க்கவும். தன்னுடைய எண்ணங்களை நிறுத்திப் பார்க்கவும். தன்னுடைய புத்தியை கட்டளைப்படி நடத்திப் பார்க்கவும். இந்த முன் ஒத்திகைக்காக (Rehearsal) 6-மாதம் கொடுக்கப்பட்டுள்ளது. புரிந்ததா?

நல்லது. சதா சகஜ ஞான சொரூபம், சதா ராஜயோகி, நிரந்தர யோகி, அனைத்து சக்திகளையும் தன்னுடைய சக யோகியாக்கக் கூடிய, பாபாவிற்கு சமமான எண்ணம், சமஸ்காரம், மற்றும் கர்மம் செய்யக்கூடிய, அப்படிப்பட்ட சங்கமயுக அனைத்து ராஜாக்களுக்கும் பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகளும், வணக்கமும்.

வரதானம்: அமைதியின் சக்தி மூலமாக ஒரு நொடியில் ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு செய்யக்கூடிய ஏகாந்தவாசி ஆகுக!

எப்பொழுது ஏதாவது புதிய மற்றும் சக்திசாலியான கண்டுபிடிப்பு செய்கிறார்கள் என்றால் அதை பூமிக்கடியில் செய்வார்கள். இங்கு ஏகாந்தவாசி ஆவது தான் அன்டர்கிரவுன்ட் ஆவது ஆகும். என்ன நேரம் கிடைத்தாலும். காரிய விவகாரம் செய்து கொண்டும். கேட்டு, சொல்லி, வழி முறை கொடுத்தும் இந்த உடல் சம்மந்தப்பட்ட உலகம் மற்றும் உடலின் உணர்விலிருந்து அமைதியில் சென்று விடுங்கள். இந்தப் பயிற்சி மற்றும் அனுபவம் செய்வது, செய்விப்பதின் நிலை ஒவ்வொரு பிரச்சனைக்கும் சமாதானம் செய்து தீர்வு காணப்பட்டுவிடுகிறது. இதன் மூலம் ஒரு நொடியில் யாருக்கும் அமைதி மற்றும் சக்தியின் அனுபவம் செய்விப்பார்கள். யார் எதிரில் வந்தாலும் அவர் இதே நிலையில் சாட்சாத்காரத்தின் அனுபவம் செய்வார்.

சுலோகன்: வீணான எண்ணம் மற்றும் தீய எண்ணத்திலிருந்து விலகியிருந்து ஆத்மீக நிலையில் இருப்பது தான் யோகயுக்தாக ஆவதாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 08.07.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# காலத்தின் அழைப்பு!

நீங்கள் அனைவரும் எங்கு அமர்ந்திருக்கிறீர்கள்? அனைவரும் மேளாவில் (சந்திப்பில் / விழாவில்) அமர்ந்திருக்கிறீர்களா? இது தான் நடைமுறையில் நடக்கும் மேளா மேலும் மற்ற அனைத்து மேளாக் களும் ஞாபகார்த்தங்களே! இப்பொழுதைய இந்த இனிமையான சந்திப்பின் மேளாவினால் அனேக இடங்களில் மற்றும் அனேக பெயர்களால் மேளாக்களை (விழாக்களை) கொண்டாடி வருகிறார்கள். மேளாவில் விசேஷமாக சந்திப்பு நடக்கிறது. மேளா என்றால் சந்திப்பது. இந்த சந்திப்பு அதாவது இது எந்த மேளா? இந்த நேரத்தின் முக்கியமான மேளாவே ஆத்மா ரூபத்தில் பரமாத்மா தந்தையிடம் சந்திப்பதற்கான மற்றும் ஆத்மா மற்றும் பரமாத்மாவின் மேளா என்று அப்படியும் கூறலாம். ஒரு உறவில் மட்டுமில்லாமல் அனைத்து உறவுகளினால், அனைத்து உறவிற்குரிய தந்தையோடு சந்திப்பதின் மேளாவாகும். மேலும் அனைத்து பிராப்திகளுக்கான மேளா இதுவாகும். ஒரு விநாடியில் அனைத்து உறவுகளினால் அனைத்து உறவிற்குரிய தந்தையோடு சந்திப்பை ஏற்படுத்துவதினால் பிராப்தி தானாகவே ஏற்பட்டு விடுகிறது. மேலும் மற்ற மேளாக்களோ செலவு செய்வதற்கானதாக இருக்கின்றன ஆனால் இந்த மேளா அனைத்து பிராப்திகளை செய்விப்பதற்கானது மற்றும் மற்ற மேளாக்கள் ஒருவேளை ஏதாவது பிராப்தி செய்வித்தாலும் கூட ஏதாவது கொடுத்து தான் பிராப்தி அடைவீர்கள் ஆனால் இங்கு என்ன கொடுக்கிறீர்கள்? எதை உங்களால் பராமரிக்க முடியாதோ அதைத் தான் கொடுக்கிறீர்கள் இல்லையா? இங்கு ஏதாவது நல்லதைக் கொடுக்கிறீர்களா என்ன? எவற்றை உங்களால் சமாளிக்க முடியவில்லையோ அதைத் தான் தந்தைக்கு கொடுக்கிறீர்கள். இதனால் தந்தையை என்னவாக்கி விட்டீர்கள்? சேவாதாரியாக ஆக்கினீர்கள் இல்லையா? எப்படி தன்னுடைய பொருளை கவனிப்பதற்காக ஏதாவது வேலைக்காரர்கள் வைக்கப்படுகிறார்கள். அதே போல் எதை உங்களால் கட்டுப்படுத்த

முடிய வில்லையோ அதைத் தான் தந்தைக்குக் கொடுக்கிறீர்கள் இல்லையா? மற்றபடி தந்தைக்கு வேறு ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா என்ன? குப்பைகளைக் கொடுத்து விட்டு ஒருவேளை பலகோடி பிராப்தி ஆகி விட்டது என்றால் அதை கொடுத்தது என்று கூறலாமா? அல்லது பெற்றதா? அதை பெற்றது என்று தான் கூறுவோம் இல்லையா? அப்படி மற்ற அனைத்து மேளாக்களிலும் கொடுப்பது இருக்கிறது, மேலும் அங்கு ஒருவேளை கொடுத்து ஏதாவது பெற்றீர்கள் என்றால் அது என்ன பெரிய விஷயம் ஆனால் இந்த மேளா அனைத்து பிராப்திகளையும் செய்விக்கும் மேளாவாகும். என்ன விரும்புகிறீர்களோ மற்றும் எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு நீங்கள் பிராப்தி செய்ய முடியும். அப்படி அந்த மாதிரி அனைத்து பிராப்திகளின் மேளாவை எப்பொழுதாவது எங்காவது பார்த்திருக்கிறீர்களா? அந்த மாதிரி மேளாவில் நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள். மேளாவில் ஒன்று சந்திப்பு நடக்கிறது மற்றும் இன்னொன்று என்ன நடக்கிறது? மற்ற மேளாக்களிலோ அழுக்காவார்கள். மேலும் இங்கு என்னவாகிறீர்கள்? சுத்தமாக. சுத்தமாகவோ ஆகி விட்டீர்கள் இல்லையா? அல்லது நீங்கள் அனைவரும் இதுவரை சுத்தம் ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? சுத்தம் ஆன பிறகு என்ன நடக்கிறது? அலங்காரம் நடக்கிறது. மேலும் திலகம் இடப்படுகிறது. இப்பொழுது நிரந்தரமான நினைவுத் திலகத்தை உங்களுக்கு இட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் தெய்வீக குணங்களின் ஆபரணங்களினால் உங்களை நீங்களே அலங்கரித்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி மேளாவில் சந்திப்பதும் ஆனது மற்றும் கொண்டாடுவதும் ஆனது. கூடவே மேளாவில் நாடகங்களும் இருக்கும். சந்திப்பு மற்றும் நாடகம் இரண்டும் சேர்ந்தே இருக்கிறது. அப்படி சந்திப்பு மற்றும் நாடகம் இந்த இரண்டு வார்த்தைகளை ஒருவேளை நிரந்தரமாக நினைவு வைத்தீர்கள் என்றால் உங்களுடைய நிலை என்னவாகி விடும்?

ஒருவேளை எப்பொழுதாவது நிலை, மேலே கீழே ஆகிறது என்றால் அதற்கான காரணம் மேளா அதாவது சந்திப்பு அதிலிருந்து புத்தியை வேறுபக்கம் ஆக்கி விடுகிறீர்கள் அதாவது மேளாவிலிருந்து வெளியேறி விடுகிறீர்கள். மேலும் அதை நாடகம் என்று நினைப்பதில்லை. அப்படி மேளா மற்றும் நாடகம் இந்த இரண்டு

வார்த்தைகளை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். மேளாவில் அனைத்து விஷயங்களும் வந்து விடுகிறது. எந்தெந்த விஷயங்களில் சந்திப்பு நடக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா? மேளா என்ற வார்த்தை நினைவு வருவதினால் சம்ஸ்காரங்களின் சந்திப்பு, தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு மற்றும் அனைத்து உறவுகளினால் எப்பொழுதும் பிராப்தியின் சந்திப்பு அப்படி இவை அனைத்தும் மேளாவில் வந்து விடுகின்றன. இந்த படைப்பு ஒரு நாடகமாகும். இதுவோ முக்கியமான விஷயம் ஆனால் மாயாவின் விதவிதமான சோதனைகள் மற்றும் சூழ்நிலைகள் என்ன வருகின்றனவோ இவையும் உங்களை பொறுத்தளவில் ஒரு நாடகமாகும். ஒருவேளை இதை நாடகம் என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் நாடகத்தில் ஒருபொழுதும் வேதனை அடைய மாட்டீர்கள், மகிழ்ச்சி அடைந்து கொண்டே இருப்பீர்கள். அப்படி சோதனைகள் கூட ஒரு நாடகம் ஆகும். மூன்றாவது விஷயம். நாடகம் என்று புரிந்து கொள்வதினால் என்னென்ன விதவிதமான பலவகையான சம்ஸ்காரங்களின் பாத்திரங்களை பார்க்கிறீர்களோ அந்த நடிகர்களுக்கு இந்த எல்லைக்கப் பாற்பட்ட நாடகத்தில் இந்த பங்கு அதாவது காட்சி அடங்கியிருக்கிறது என்ற இது நினைவில் வருவதினால் ஒருபொழுதும் நிலை மேலே கீழே ஆகாது. எப்பொழுதும் ஒரே சீரான நிலை இருக்கும். இது பல வகையான பாத்திரங்கள், இது நாடகம் என்ற இந்த நினைவு எப்பொழுது இருக்கும் என்றால் பல வகையான காட்சிகளில் பாத்திரங்கள் இல்லை என்பது எப்பொழுதாவது இருக்க முடியுமா என்ன? பெயரே பலவகையான நாடகம் என்பது தான். எப்படி எல்லைக்குட்பட்ட திரைப்படத்தில் விதவிதமான பெயரால் விதவிதமான காட்சிகள் இருக்கின்றன. பெயரே இரத்த வெள்ளம் அடங்கிய காட்சிகள் என்றிருக்கிறது என்றால் அதில் ஒருவேளை ஏதாவது பயங்கரமான மற்றும் வேதனை நிறைந்த காட்சி பார்த்தீர்கள் என்றால் அதிர்ச்சி அடைவீர்களா என்ன? ஏனென்றால் இந்த காட்சியே இரத்த வெள்ளம் அடங்கியது தான் என்று புரிந்திருக்கிறீர்கள். முன்பாகவே அந்த மாதிரி புரிந்து அதைப் பார்ப்பார்கள். அதே போலவே உதாரணத்திற்கு ஏதாவது சண்டை சச்சரவு, கோபத்திற்கான கதை இருக்கிறது என்றால் அதைப் பார்த்து சிரிப்பார்களா? அல்லது அழுவார்களா? அவசியம் சிரிப்பார்கள் இல்லையா? ஏனென்றால் இதுவொரு நாடகம் என்று தெரிந்திருக்கிறீர்கள். அதே போலவே இந்த

எல்லைக்கப்பாற்பட்ட நாடகத்தின் பெயரே விதவிதமான காட்சிகள் அடங்கிய டிராமா. அப்படியானால் அதில் விதவிதமான சம்ஸ்காரம், விதவிதமான சுபாவம், விதவிதமான சூழ்நிலைகளைப் பார்த்து எப்பொழுதாவது அதிர்ச்சி அடைவீர்களா என்ன? அல்லது அதையும் பார்வையாளர் ஆகி ஒரே சீரான நிலையில் நிலைத்திருந்து பார்பார்களா? எனவே ஒருவேளை இதுவொரு விதமான நாடகம் என்று புரிந்து மற்றும் நினைவு வைத்தீர்கள் என்றால் முயற்சி செய்வதில் எதைக் கடினம் என்று நினைக்கிறீர்களோ அது சுலபமாக ஆகி விடாதா என்ன?

இந்த இரண்டு வார்த்தைகளையும் மறந்து விடுகிறீர்கள். மேளாவையும் மற்றும் நாடகத்தையும் மறந்து விடுகிறீர்கள். மேலும் மறப்பதினால் தான் தன்னை வேதனையடைய வைக்கிறீர்கள். ஏனென்றால் நினைவு அதாவது பார்வையாளராக இருக்கும் ஆசனத்தை விட்டு விடுகிறீர்கள். இருப்பிடத்தை விட்டு விட்டு ஒருவேளை யாராவது நாடகத்தைப் பார்க்கிறார் என்றால் பின்பு அவருக்கு என்ன நிலைமை ஏற்படும்? எனவே இருப்பிடத்தில் அமர்ந்திருந்து வகை வகையான காட்சிகள் அடங்கிய டிராமா என்பதை நினைவில் வைத்துக் கொண்டே, ஒருவேளை ஒவ்வொரு நடிகரின் ஒவ்வொரு பாத்திரத்தையும் பார்த்தீர்கள் என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வாயிலிருந்து சபாஷ், சபாஷ் என்பது வெளியாகும். சபாஷ் இனிமையான நாடகம்! என்பது வெளியாகும். இது என்ன ஆனது, ஏன் ஆனது என்பது வெளியாகாது. மாறாக 'சபாஷ், சபாஷ்' என்ற வார்த்தை வாயிலிருந்து வெளியாகும் அதாவது எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பார். எப்பொழுதும் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அனுபவம் செய்வார். அந்த மாதிரி நடைமுறையில் தன்னை அனுபவம் செய்கிறீர்களா?

மேளாவிலிருந்து வெளியேறிவிட்டார்கள் என்றால் வேதனை அடைகிறார்கள் மற்றும் எப்பொழுது கையை விட்டு விடுகிறார்கள் என்றாலும் வேதனை அடைந்து விடுகிறார்கள். அதே போலவே இங்கேயும் நீங்கள் தந்தையின் கையை விட்டு விடுகிறீர்கள். "கையை விட்டு விடுவது" இதன் அர்த்தத்தை என்ன வென்று புரிந்து கொண்டீர்கள். தந்தைக்கோ ஸ்தூலமான கையோ இல்லை. ஸ்ரீமத் தான்

கை மற்றும் புத்தியின் நினைவு தான் துணை. அப்படி மேளாவில் எப்பொழுது கை மற்றும் துணை இரண்டையுமே விட்டு விடுகிறீர்கள் அதாவது தந்தையிடமிருந்து விலகி விடுகிறீர்கள் என்றால் அப்பொழுது தான் வேதனை அடைகிறீர்கள். கை மற்றும் துணை இரண்டையும் ஒருவேளை விடவில்லை என்றால் எப்பொழுதும் குஷியில் இருப்பீர்கள். எனவே இப்பொழுது மேளா மற்றும் நாடகம் என்று புரிந்து கொண்டு நீங்கள் எப்பொழுதும் தன்னுடைய மற்றும் மற்றவர்களின் பங்கைப் பாருங்கள். இதுவோ சுலபமான விஷயம் மற்றும் பொதுவான அதாவது பழைய விஷயமாகும். பழைய விஷயத்தை நிரந்தரமானதாக ஆக்கியிருக்கிறீர்களா அல்லது எப்பொழுதாவது மறந்து டுகிறீர்களா? மேலும் எப்பொழுதாவது அந்த நேரத்தில் நினைவு செய்கிறீர்களா? ஒருவேளை அந்த இரண்டு வார்த்தைகளையும் நிரந்தரமாக நினைவு வைத்தீர்கள் என்றால் நிரந்தர குஷியில் மற்றும் நிரந்தர சக்தி சொரூபத்தில் இருக்க முடியும் என்பதினால் தான் இதையும் கூறினோம். இப்பொழுது சின்ன சின்ன விஷயங்களில் மற்றும் சாதாரண எண்ணங்களின் தடைகளில் நேரத்தை இழக்கக்கூடாது. இப்பொழுதோ மாஸ்டர் படைப்பவர் ஆகி தன்னுடைய எதிர்காலத்தின் பிரஜை மற்றும் பக்தர்கள் இருவர்களுக்கும் தனக்கு பிராப்தி ஆகியிருக்கும் சக்திகள் மூலமாக வரதானம் கொடுக்கும் நேரம் வந்து விட்டது. இப்பொழுது கொடுப்பதற்கான நேரமேயன்றி தனக்காக பெறுவதற்கான நேரமல்ல. ஒருவேளை கொடுக்கும் நேரத்திலும் யாராவது தனக்காகப் பெற்றுக் கொண்டே இருக்கிறார் என்றால் எப்பொழுது கொடுப்பார்? சத்யுகத்தில் கொடுப்பாரா என்ன? அங்கு அவசியமாக இருக்குமா என்ன? அப்படி இப்பொழுது தான் தன்னுடைய படைப்பை நிரப்புவதற்கான நேரம் ஆகும். இப்பொழுது தனக்காக நேரத்தை இழப்பது மற்றும் தனக்காக அனைத்து சக்திகளையும் உபயோகத்தில் கொண்டு வருவது, அதிலேயே அனைத்து சக்திகளை முடித்து விடுவது என்றால் என்ன சம்பாதித்தீர்களோ அதை சாப்பிட்டீர்கள் என்பதாகும், அந்த மாதிரி செய்வதற்கான நேரம் இப்பொழுது இல்லை. முன்பு சம்பாதித்தீர்கள் மற்றும் சாப்பிட்டீர்கள் என்ற நேரம் இருந்தது ஆனால் இப்பொழுதைய நேரம் எது? என்ன சேமித்து வைத்திருக்கிறீர்களோ அதை அனைத்து ஆத்மாக்களுக்கும் கொடுப்பதற்கான நேரம் ஆகும். இல்லையென்றால் உங்களுடைய பிரஜை மற்றும் பக்தர்கள் இந்த பிராப்திகளினால் வஞ்சிக்கப்பட்டு

இருந்து விடுவார்கள். மேலும் அவர்கள் பிச்சைக்காரர்களுக்கு பிச்சைக்காரர்களாகவே இருந்து விடுவார்கள். வள்ளல் மற்றும் வரமளிக்கும் வள்ளலின் குழந்தைகள் வரமளிக்கும் வள்ளல் மற்றும் வள்ளலாக ஆக மாட்டார்களா? எந்த நேரம் அனைத்து ஆத்மாக்களும் விகாரியாகி ஏதாவது பெறுவதற்காக உங்கள் எதிரில் வருவார்கள் என்றால் இரக்க மனமுடைய தந்தையின் குழந்தைகள் அனைத்து ஆத்மாக்களுக்காக இரக்கப்பட மாட்டீர்களா? அந்த நேரம் அவர்கள் மேல் இரக்கம் வராதா என்ன. அவர்கள் துடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க முடியுமா என்ன? லௌகீக ரூபத்திலும் கூட எல்லைக்குட்பட்ட படைப்பவர் (தந்தை) தன்னுடைய படைப்பை (குழந்தைகளை) துக்கமானவர்களாக மற்றும் துடித்துக் கொண்டிருப்பவர்களாகப் பார்க்க முடியாது. இப்பொழுது நீங்களும் மாஸ்டர் படைப்பவர்கள் தான் இல்லையா? அது தந்தையினுடைய காரியம் மட்டும் தானா அல்லது உங்களுடைய காரியமுமா? எப்பொழுது நீங்கள் அனைவரும் மாஸ்டர் படைப்பவர் என்றால் மாஸ்டர் படைப்பவர் தன்னுடைய படைப்பின் துக்கம் மற்றும் துடிப்புகளை ஒருபொழுதும் பார்க்க முடியாது. அந்த நேரம் அவர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டியது இருக்கும், ஒருவேளை இப்பொழுதிலிருந்தே கையிருப்பை ஒன்றாகச் சேர்க்கவில்லை மற்றும் என்ன சம்பாதித்தீர்களோ அதை சாப்பிட்டுக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அவர்களுக்கு கொடுப்பீர்களா என்ன? இப்பொழுது உங்களுடைய வரவு, செலவு கணக்கைப் பார்க்க வேண்டும். இந்த நேரத்திற்கு ஏற்றபடி மாஸ்டர் படைப்பவருக்கு எந்த வரவு, செலவைப் பார்க்க வேண்டும்? என்னென்ன தவறுகள் செய்தோம், இதுவோ குழந்தைப் பருவத்தின் கணக்காகும், ஆனால் மாஸ்டர் படைப்பவருக்கு தன்னுடைய எந்த சார்ட்டை சோதிக்க வேண்டும்? நீங்கள் ஒவ்வொரு சக்தியையும் எதிரில் வைத்துக் கொண்டே இன்றைய நாளில் அனைத்து சக்திகளிலிருந்து எந்த சக்தியை மற்றும் எத்தனை சதவிகிதத்தில் சேமித்திருக்கிறோம் என்ற இந்த கணக்கைப் பாருங்கள். இப்பொழுது சேமிப்பு கணக்கின் வரவு, செலவைப் பார்க்க வேண்டும். செலவிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இன்று வரையிலும் தனக்காக செலவு செய்து கொண்டே இருப்பீர்களா என்ன? மற்றவர்களுக்கு கொடுப்பது என்பது செலவல்ல. இதுவோ ஒன்றைக் கொடுப்பது மற்றும் லட்சத்தைப் பெறுவது. அது செலவுக் கணக்கில் செல்லாமல், அது சேமிப்பு கணக்காக ஆகும். எப்பொழுது தன்னுடைய

தடைகளுக்காக சக்திகளை உபயோகம் செய்கிறீர்கள், அது செலவாகும். எப்பொழுதாவது ஏதாவது தடை ஏற்படுகிறது அதை அகற்றுவதில் என்ன நேரத்தை செலவழித்தீர்கள் அல்லது எந்த ஞான செல்வத்தை செலவு செய்தீர்கள், இந்த அனைத்து செலவுகளை இப்பொழுதிலிருந்தே மிச்சப்படுத்த வேண்டும்.

எப்படி அரசாங்கமும் இன்றைய நாட்களில் சேமிப்புத் திட்டங்களை உருவாக்குகிறது. அப்படி அனைத்து சக்திகள் நிறைந்தவரின் அரசாங்கமும் அனைத்து குழந்தைகளுக்கும் இப்பொழுது சேமிப்பிற்கான திட்டத்தை உருவாக்குங்கள் என்று கட்டளையிடுகிறது. செலவிற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். இப்பொழுதோ கொடுத்துக் கொண்டே இருங்கள். இப்பொழுது பெறுவதற்காக ஏதாவது இன்னும் மீதம் இருக்கிறதா என்ன? ஒருவேளை இருக்கிறது என்றால் தந்தை முழுமையான ஆஸ்தியை கொடுக்கவில்லை என்று நிரூபணமாகிறது ஆனால் தந்தையோ (பிரம்மா) தன்னிடம் எதையும் வைத்துக் கொள்ளவே இல்லை. ஒரு நொடியில் முழுமையான ஆஸ்தியையோ கொடுத்து விடுகிறார், எதையாவது இன்னும் அடைய வேண்டும் என்று இருப்பதே இல்லை. அப்படியானால் இப்பொழுது சேமிப்பு செய்வது தெரியுமா அல்லது செலவு செய்வதற்கான பழக்கம் ஏற்பட்டு விட்டதா? அந்த மாதிரியாக அனேகர் இருக்கிறார்கள் சேமிக்கத் தெரியவே தெரியாது. சேமிப்பு செய்ய முடியாது. அவர்கள் இன்னும் செலவு செய்து செய்து கடன் வாங்குவதற்கான பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. இங்கேயும் எப்பொழுது தன்னுடைய சக்தியை செலவு செய்து விடுகிறீர்களோ அப்பொழுது இந்த தீதி, தாதி மற்றும் பாப்தாதா ஏதாவது கொடுத்து விடட்டுமே என்று கூறுகிறீர்கள். ஆதாரத்தை எடுத்துக் கொள்கிறீர்கள். நான் யாருடைய குழந்தை என்று முதலில் யோசியுங்கள். அளவில்லா பொக்கிஷத்தின் அதிபதியின் குழந்தைகள் நீங்கள். போதை இருக்கிறது தான் இல்லையா? எப்பொழுது அளவில்லா பொக்கிஷத்தின் குழந்தையாக இருப்பவர் அதிபதியாக ஆகிறார் பின்பு அந்த மாதிரியானவரே மற்றவர்களிடமிருந்து சக்தியின் ஆதாரத்தை எடுக்கிறார் என்றால் அவரை என்னவென்று கூறலாம்? மிகுந்த புத்திசாலி. அந்த மாதிரி மிகுந்த புத்திசாலியாகவோ ஒருபொழுதும் ஆவது இல்லை தான் இல்லையா? சேமிப்பு செய்வதற்கான வழிகள் மற்றும் சேமிப்பு திட்டத்தை தெரிந்திருக்கிறீர்கள். சேமிப்பு

செய்வதற்காகவும் அனைத்தையும் விட சுலபமான மற்றும் உயர்ந்த வழி எது? அதன் மூலம் அனைத்து சக்திகளின் சேமிப்பு செய்ய முடியும். பட்ஜட் கூட எப்படி உருவாக்குவார்கள்? முதலில் தயாரிப்பார்கள், பின்பு தான் சோதனை செய்வார்கள் இல்லையா. தானாகவே சேமிப்பு ஆகும் மாதிரி எப்படி தயாரிப்பது? பட்ஜட்டை உருவாக்குவது என்றால் தன்னுடைய புத்தியின் வார்த்தைகளின் மற்றும் காரியத்தின், அனைத்திற்கும் தன்னுடைய ஒவ்வொரு நேரத்தின் நிகழ்ச்சி நிரலை நிர்ணயம் செய்வது.

எப்படி பட்ஜட் தயாரிக்கிறார்கள் என்றால் இவ்வளவு தொகை இதில் செலவு செய்வோம் என்று அதில் நிர்ணயம் செய்கிறார்கள். அதன் அனுசாரமே பின்பு செலவு செய்கிறார்கள். அப்பொழுது தான் பட்ஜட்டிற்கு ஏற்றபடி காரியம் வெற்றி அடைய முடியும். பட்ஜட் உருவாக்குவது என்றால் அமிர்தவேளை எழுந்து தினசரி தன்னுடைய புத்தியின் திட்டம், வார்த்தை மூலம் என்னென்ன செய்ய முடியும் மற்றும் காரியம் மூலம் என்னென்ன செய்ய வேண்டும் அவை அனைத்தையும் நிர்ணயம் செய்யுங்கள் அதாவது தன்னுடைய மூன்று விதமான தினசரி டைரியை எழுதுங்கள். அப்படி தினசரி டைரி எழுதுவதினால் புத்திக்காக என்ன காரியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ பின்பு அதை எப்படி நான் பட்ஜட்டை உருவாக்கினேனோ அதே போலவே காரியம் செய்தேனா என்று சோதனை செய்ய வேண்டும் அல்லது பட்ஜட் ஒன்றாக இருக்கிறது மற்றும் திட்டம் இன்னொன்றாகவோ இல்லையே? அப்படி தன்னுடைய அனைத்து சக்திகளை சேமிப்பதற்கான சுலபமான யுக்தி தினசரி தன்னுடைய எண்ணம், சொல், செயலிற்கான திட்டத்தை உருவாக்குவது தான். புத்தியை முழு நாளில் என்ன காரியத்தில் பிஸியாக வைக்க வேண்டும் என்று இதை அமிர்தவேளையிலிருந்து ஒருவேளை நிர்ணயம் செய்து விட்டீர்கள் என்றால் பின்பு அனைத்து வீணானவைகளும் முடிவடைந்து விடும். வீணானதை அழித்து விட்டீர்கள் என்றால் சக்தி நிறைந்தவர்களாக ஆகி விடுவீர்கள். வீணானதை அழிப்பதற்காக திட்டமிட்டு செயல்படும் புத்தியை உருவாக்குங்கள். திட்டமிடும் புத்தியை உருவாக்குவதினால் தான் தன்னுடைய அனைத்து சக்திகளை சேமிக்க முடியும். ஏனென்றால் எந்த சக்தியை செலவு செய்கிறீர்களோ அவை அனைத்தும் வீணாக செலவு

செய்கிறீர்கள். ஒருவேளை வீணான கணக்கே முடிவடைந்து விட்டது என்றால் சேமிப்பு இயல்பாகவே ஆகி விடும். வீணானதை அகற்றுவதற்காக தினசரி டைரி எழுதுங்கள். இதே முறையில் இன்றைய நாளில் புத்தியில் விசேஷமாக எந்த எண்ணத்தை வைக்க வேண்டும் அல்லது இன்று வாய்மொழி மூலமாக என்ன காரியம் செய்ய வேண்டும் என்று தன்னுடைய நேரத்தையும் நிர்ணயம் செய்யுங்கள். அதை நிர்ணயம் செய்வதினால் சக்தியை வீணாக்கும் சாதாரண மற்றும் வீணான வார்த்தைகள் அனைத்தும் சேமிப்பாகி விடும். யார் வேஸ்ட் செய்வதில்லையோ (வீணாக்குவதில்லையோ) அவர் பெஸ்ட் (மிகச் சிறந்தவராக) ஆகி விடுகிறார். வேஸ்ட் செய்பவர் ஒருபொழுதும் பெஸ்ட் ஆக முடியாது. அனைத்து விஷயங்களையும் பாருங்கள் மற்றும் தன்னுடைய சேமிப்பு திட்டத்தை அதிகரியுங்கள். அப்பொழுது தான் மாஸ்டர் படைப்பவர் ஆக முடியும். இப்பொழுது மாஸ்டர் படைப்பவர் ஆகி படைப்பை பாலனை செய்வதற்கான சாமர்த்தியம் வரவில்லை. மாஸ்டர் படைப்பவர் ஆகவில்லை என்றால் என்னவாக வேண்டியதிருக்கும். ஒருவேளை யாரையாவது பாலனை செய்யத் தெரியவில்லை என்றால் வேறு யாருடைய பாலனையிலாவது செல்ல வேண்டியது வரும். மாஸ்டர் படைப்பவருக்கு பதிலாக படைப்பு ஆக வேண்டியது வரும். ஆக வேண்டியதோ மாஸ்டர் படைப்பவர் தான் இல்லையா. இரண்டு வார்த்தைகள் என்ன கூறினோமோ மேளா மற்றும் நாடகம். எப்பொழுதும் இவற்றை மட்டும் நினைவில் வைத்தீர்கள் என்றால் கூட சேமிப்புத் திட்டம் ஆகி விடும். வீணான எண்ணம், வீணான நேரம் மற்றும் வீணான சக்தி ஆகிய எவற்றை செலவு செய்கிறீர்களோ அவை சேமிப்பாகி விடும். இதற்காக தன்னுடைய நியமத்தை மட்டும் உறுதியாக்குங்கள். இதைச் செய்வோம் என்று யோசிக்கிறீர்கள் ஆனால் விதிப்படி நியமத்தை உருவாக்குவதில்லை. ஒரு மாதம் வேகத்தில் இருக்கிறீர்கள் பிறகு பின்பு மாயா வருவது ஆரம்பமாகி விடுகிறது அதாவது மாயா உங்களை நினைவிழக்க வைக்கும் காரியத்தை ஆரம்பம் செய்து விடுகிறது. எனவே என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்?

பாருங்கள். எப்பொழுது யாராவது சுயநினைவில் இல்லை என்றால் அவருக்காக இன்ஜக்ஷனுக்கு மேல் இன்ஜக்ஷன் போட்டுக் கொண்டே இருப்பார்கள் அல்லது எப்பொழுது யாருக்காவது ஆபரேஷன்

செய்கிறார்கள் என்றால் அதைப் பார்த்து உணர்வில் வர வேண்டாம் என்பதற்காகவும் இன்ஜக்ஷன் போட்டுக் கொண்டே இருப்பார்கள். எந்த நேரம் இப்பொழுது வேகம் நினைவிழந்த நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்களோ அதாவது மாயாவின் வேகம் ஆரம்பம் ஆகிறது என்றால் எந்த இன்ஜன்ஷன் போடுவீர்கள்? கவனம் மற்றும் சோதனையோ இருக்கவே இருக்கிறது ஆனால் அதன் கூடவே அமிர்தவேளையில் பவர் ஹவுசிடமிருந்து முழுமையான பவரை எடுப்பதற்கான என்ன நியமம் இருக்கிறதோ அதை அடிக்கடி சோதனை செய்யுங்கள். இது தான் மிகப் பெரிய இன்ஜக்ஷன் ஆகும். அமிர்தவேளை தந்தையோடு கனக்ஷனை இணைத்து கொண்டீர்கள் என்றால் முழு நாளும் மாயாவிடம் மயங்குவதிலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள். இந்த இன்ஜக்ஷனின் குறை தான் இருக்கிறது. கனக்ஷன் சரியாக இருக்க வேண்டும். எழுந்து அமர்ந்து விட வேண்டும் என்று அப்படி மட்டும் இல்லை. எழுந்து என்னவோ அமர்ந்து விட்டீர்கள், இந்த நியமத்தைப் பாலனை செய்தீர்கள் ஆனால் கனக்ஷன் சரியாக இருக்கிறதா அதாவது பிராப்திகளின் அனுபவம் ஆகிறதா? ஒருவேளை இன்ஜக்ஷன் போட்டு சக்தியின் அனுபவம் ஆகவில்லை என்றால் இன்ஜக்ஷன் முழுமையான காரியம் செய்யவில்லை என்று தான் புரிந்து கொள்ள வேண்டும். இதே விதமாக அமிர்தவேளையின் கனக்ஷன் அதாவது அனைத்து சக்திகள் மற்றும் அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆவது இது மிகப் பெரிய இன்ஜக்ஷன் ஆகும். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையுடன் இருக்கக்கூடிய மற்றும் எப்பொழுதும் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தில் சந்திப்பைக் கொண்டாடக்கூடிய, ஒரு எண்ணம் மற்றும் ஒரு நொடி கூட மேளாவிலிருந்து வெளியில் செல்லாதவர்களுக்கு, எப்பொழுதும் சாட்சி மற்றும் நினைவு என்று ஆசனத்தில் அமர்ந்து ஒவ்வொரு காட்சியையும் பார்க்கக் கூடிய விளையாட்டு வீரர் மற்றும் பார்வையாளராக இருக்கும் தீவிர முயற்சியாளருக்கு, ஒரு நொடியில் எண்ணம் மற்றும் சொரூபத்தை உருவாக்கக்கூடிய அதாவது என்ன எண்ணம் செய்தீர்களோ மேலும் அந்த சொரூபம் ஆகி விடட்டும். அந்த மாதிரி தீவிர முயற்சி செய்யும் அமர் பவ என்பதின் வரம் பெற்ற குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

வரதானம்: எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருந்து குஷியை அனுபவம் செய்யக்கூடிய களைப்பற்ற சோம்பல் இல்லாதவர் ஆகுக!

எந்த விதமான சம்ஸ்காரம் அல்லது சுபாவத்தை மாற்றம் செய்வதில் மனம் உடைந்து போவது அல்லது அலட்சியத் தன்மை வருவது கூட களைப்படைவது தான், இதிலிருந்தும் களைப்பற்றவர் ஆகுங்கள். களைப்பற்றவரின் அர்த்தமே சோம்பல் இல்லாதவர். எந்த குழந்தைகள் அந்த மாதிரி சோம்பலற்றவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருக்கிறார்கள் மற்றும் குஷியின் அனுபவம் செய்கிறார்கள். அவர்களுடைய மனதில் ஒருபொழுதும் துக்கத்தின் அலை வர முடியாது. எனவே எப்பொழுதும் எதிரில் இருங்கள் மற்றும் குஷியின் அனுபவம் செய்யுங்கள்.

சுலோகன்: சித்தி சொரூபம் ஆவதற்காக ஒவ்வொரு எண்ணத்தில் புண்ணியம் மற்றும் வார்த்தையில் ஆசீர்வாதங்களை சேமித்துக் கொண்டே இருங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.07.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பற்றுதல் மற்றும் சுபாவம் மாறுவதினால் உலக மாற்றம்!

எவ்வளவு சப்தத்தில் வருவதற்கான நிலை பிடித்திருக்கிறதோ அந்த அளவு சப்தத்திலிருந்து அப்பாற்பட்டுச் செல்லும் நிலையும் பிடித்திருக்கிறதா? சப்தத்தில் வருவது மற்றும் சப்தத்திலிருந்து விலகிச் செல்வது இவை இரண்டுமே ஒரே சமமாக சகஜமாக இருக்கிறதா அல்லது சப்தத்திலிருந்து விலகிச்செல்வது கடினமாக இருக்கிறதா? உண்மையில் சுயதர்மம் அமைதி சொரூபமாக இருக்கும் காரணத்தினால் சப்தத்திலிருந்து விலகிச் செல்வது மிக சுலபமானதாக இருக்க வேண்டும். எப்படி ஸ்தூல உடல் மூலமாக எங்காவது செல்வதற்காகக் கூறப்படுகிறீர்கள் என்றால், போவது மற்றும் வருவது இவை இரண்டுமே சகஜமாக அனுபவம் ஆகிறது இல்லையா! அதே போலவே இப்பொழுது ஒரு நொடியில் இந்த உடலின் நினைவிலிருந்து புத்தி மூலமாக விலகிச் செல்வது மற்றும் வருவது இவை இரண்டுமே சகஜமாக அனுபவம் ஆகுமா? அதாவது ஒரு நொடியில் அந்த மாதிரி செய்ய முடியுமா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது உடலின் ஆதாரத்தை எடுப்பது மற்றும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது உடலின் ஆதாரத்தை விட்டு விட்டு தன்னுடைய அசரீரி சொரூபத்தில் நிலைத்து விடுவது என்ற இந்த நிலைகளை போகும்பொழுதும் வரும்பொழுதும் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்களா? எப்படி உடலை தாரணை செய்தீர்கள், அதே போலவே பின்பு உடலிலிருந்து விலகிச் சென்றுவிடுவது இந்த இரண்டும் ஒரே மாதிரி அனுபவம் ஏற்படுகிறதா? இந்த அனுபவம் தான் கடைசி பரீட்சையில் முதல் நம்பர் பெறுவதற்கான ஆதாரம் ஆகும். அப்படியானால் கடைசி பரீட்சை எழுதுவதற்காக இப்பொழுதிலிருந்தே தயாராகி விட்டீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? எப்படி வினாஷம் செய்பவர்கள் ஒரு சிறு கட்டளை கிடைத்தவுடனேயே தன்னுடைய காரியத்தை நிறைவேற்றி விடுவார்கள் அதாவது

விநாஷம் செய்யும் ஆத்மாக்கள் அந்தளவு எவரெடியாக (தயாராக இருக்கிறார்கள் அதாவது ஒரு நொடியின் ஜாடையினால் தன்னுடைய காரியத்தை இப்பொழுது கூட ஆரம்பம் செய்ய முடியும். அப்படியானால் உலகின் புது நிர்மாணம் செய்யக்கூடிய அதாவது ஸ்தாபனைக்கு பொறுப்பாகியிருக்கும் ஆத்மாக்கள் அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறார்களா? தன்னுடைய ஸ்தாபனையின் காரியத்தை விநாஷம் செய்பவர்களுக்கு உத்தரவு கிடைக்கின்ற மாதிரி, அதை போன்று செய்தாகி விட்டதா?

எப்படி யாதவ சேனைகள் முழு சக்தியோடு தயார் செய்து விட்டிருக்கிறார்கள். அதே போலவே பாண்டவ சேனையும் தன்னுடைய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்களா? அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறீர்களா? எப்படி லைட் ஹவுஸ் மற்றும் பவர் ஹவுஸ் ஒரு நொடியில் சுவிட்சை (பொத்தானை) அழுத்தியவுடன் நாலாபுறங்களிலும் ஒளி மற்றும் சக்தியை அதாவது மின்சாரத்தை பரப்பிவிடுகிறதோ அதே போலவே பாண்டவ சேனை ஒரு நொடியின் வழிகாட்டுதலின் படி லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆகி அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒளி மற்றும் சக்தியின் வரதானத்தைக் கொடுக்க முடியுமா? எப்படி ஸ்தூல கண் பார்வை ஒரு இடத்தில் இருந்து கொண்டு ஒரு நொடியில் நாலாபுறங்களிலும் பார்க்கிறதோ அதே போலவே மூன்றாவது கண் மூலமாக ஒரு நொடியில் நீங்கள் நாலாபுறங்களிலும் பாரதத்தை மட்டுமின்றி முழு உலகத்தின் ஆத்மாக் களுக்கு பார்வையாலேயே நன்மை செய்விக்க முடியுமா? எப்படி மிக சரளமாக மற்றும் சகஜமான முறையில் ஸ்தூல கண்கள் மூலமாக பார்வையைப் பரப்ப முடியுமோ அது போலவே நீங்கள் பார்வையாலேயே நன்மை செய்ய முடியுமா? மூன்றாவது கண் திறப்பதினால் ஒரு நொடியில் விநாஷம் ஏற்பட்டுவிட்டது என்ற மகிமையும் இருக்கிறது. விநாஷத்தின் கூடவே ஸ்தாபனையும் இருக்கவே இருக்கிறது. தந்தையின் கூடவே குழந்தைகளுக்கும் மகிமை இருக்கிறது. வெகுதொலைதூரம் வரை பார்வை செல்லும் அளவிற்கு மூன்றாவது கண் அவ்வளவு சக்திசாலியாக இருக்கிறதா? எப்படி ஸ்தூலமான கண்கள் பலஹீனமாகின்றன என்றால் வெகுதூரம் வரை பார்க்க முடியாது, அது போலவே தன்னுடைய மூன்றாவது கண்ணின் சக்தியைப் பார்த்துக்

கொண்டே இருக்கிறீர்களா? மூன்றாவது கண்ணை சக்திசாலியானதாக ஆக்குவதற்காக இரண்டே வார்த்தைகளின் மேல் மட்டும் கவனம் இருக்க வேண்டும். மூன்றாவது கண்ணில் பலஹீனம் வருவதற்கும் அந்த இரண்டு விஷயங்கள் தான். அவை எவை? ஸ்தூலமான கண்கள் பலஹீனம் ஆவதற்கான காரணம் என்னவாக இருக்கிறது? (மூளை வேலை செய்வது அதிகமாகும் காரணத்தினால்) விஷயமோ அது தான், ஆனால் இந்த அனைத்து விஷயங்களையும் இரண்டு வார்த்தைகளின் சாரத்தில் கொண்டு வருவதினால் கவனம் வைப்பது சுலபமாகி விடுகிறது. அப்படி பலஹீனம் கொண்டு வருவதற்கான இரண்டு வார்த்தைகள் ஒன்று பற்றுதல், இன்னொன்று பழைய சுபாவம். சிலரை தன்னுடைய பழைய சுபாவம் பலஹீனம் ஆக்குகிறது, வேறு சிலரை ஏதேனும் பற்றுதல் பலஹீம் ஆக்குகிறது. இந்த இரண்டு முக்கியமான பலஹீனங்கள் இருக்கின்றன. இதனுடைய விஸ்தாரம் மிக அதிகமாக இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஏதாவது பற்றுதல் இருக்கிறது. மேலும் ஒவ்வொருவரில் இன்று வரை வரிசைக்கிரமமான சதவிகிதத்தில் பழைய சுபாவமும் இருக்கிறது. ஒருவேளை இந்த சுபாவம் மற்றும் பற்றுதல் மாறிவிட்டது என்றால் உலகமும் மாறிவிடும். ஏனென்றால் எப்பொழுது உலகை மாற்றம் செய்பவர் அவரே மாறவில்லை. என்றால் உலகை எப்படி மாற்ற முடியும்?

எந்த விதமான பற்றுதலும் இருக்கிறதா என்று தன்னை சோதனை செய்யுங்கள். அது எண்ணத்தின் ரூபத்தில் பற்றுதல் ஆனாலும், சம்மந்தத்தின் ரூபத்திலானாலும், நெருக்கத்தின் ரூபத்திலானாலும் மற்றும் தன்னுடைய ஏதாவது விசேஷத்தின் பக்கமாக இருந்தாலும் ஒருவேளை தன்னுடைய ஏதாவது விசேஷத்தில் கூட பற்றுதல் இருக்கிறது என்றால் அந்த பற்றுதல் பந்தனமானதாக ஆக்கி விடும். பந்தனமுக்த் ஆகவிடாது. ஏனென்றால் பற்றுதல் அசரீரி ஆகவிடுவதில்லை. மேலும் அது உலக நன்மை செய்பவராகவும் ஆக்கமுடியாது. யார் தன்னுடைய பற்றுதலிலேயே மாட்டிக் கொண்டிருக்கிறாரோ அவர் உலகிற்கு முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் ஆஸ்தியை எப்படி கொடுக்க முடியும்? பற்றுதல் உள்ளவர் ஒருபொழுதும் அனைத்து சக்திகளும் நிரம்பியவராக ஆக முடியாது, பற்றுதல் உள்ளவர் தர்மராஜின் தண்டனைகளிலிருந்து சம்பூர்ணமாக விடுபட்டு வணக்கம் கூறிச் செல்பவராக ஆக முடியாது. பற்றுதல்

உள்ளவர்களுக்கு நமஸ்காரம் செய்தே தான் ஆக வேண்டும் மற்றும் பற்றுதல் உள்ளவர்கள் சம்பூர்ண முதல் பிறவியின் இராஜ்ய பாக்கியத்தை அடைய முடியாது. இந்த விதமாக பழைய சுபாவம் உள்ளவர்கள் புது வாழ்க்கையை மற்றும் புது யுகத்தை முழுமையாக மற்றும் நிரந்தரமாக அனுபவம் செய்ய முடியாது. ஒவ்வொரு ஆத்மா மேலும் சகோதரன், சகோதரன் என்ற உணர்வு வைக்காததினால் சுபாவம் ஒரு தடையாக ஆகி விடுகிறது. விஸ்தாரத்தையோ நீங்களும் தெரிந்திருக்கிறீர்கள், ஆனால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும். விஸ்தாரத்தை வாழ்க்கையில் உள்ளடக்கி தந்தைக்குச் சமமாக ஆக்கி விட வேண்டும். எந்த பழைய சுபாவமும் இருக்க வேண்டாம் மற்றும் எந்த பற்றுதலும் இருக்க வேண்டாம். எப்பொழுது உடல், மனம் மற்றும் பொருள் அனைத்தையும் தந்தைக்கு சமர்ப்பணம் செய்தாகி விட்டதோ பின்பு என்னுடைய கருத்து, என்னுடைய அறிவு மற்றும் என்னுடைய சுபாவம் என்ற இந்த வார்த்தைகள் எங்கிருந்து வந்தன? என்னுடையது என்பது இன்னும் இருக்கிறதா அல்லது என்னுடையது என்பது உன்னுடையதாக ஆகி விட்டதா? என்னுடையது என்பதெல்லாம் உன்னுடையதாக ஆகி விட்டது என்றால் என்னுடைய மனம் என்பது இல்லாமல் ஆகி விட்டது இல்லையா? மனம் மற்றும் உடல் தந்தையின் சொத்தாகி விட்டது. உங்களுடையதோ இல்லை இல்லையா? என்னுடைய மனம் சஞ்சலப்படுகிறது என்று இப்படி கூறுவது எங்கிருந்து வந்தது? என்னுடைய மனம் என்பது இன்னும் விடுபடவில்லையா? என்னுடையது என்பது எதில் இருக்கும்? குரங்கில், அது தானாகவே இறந்து விடும்! ஆனால் அதனுடைய என்னுடையது என்னுடையது என்பது இறக்காது. எனவே ஓவியர்களும் மகாவீரன் ஹனுமானுக்கு வாலின் அடையாளத்தை வரைந்திருக்கிறார்கள். மகாவீரனாகத் தான் இருக்கிறார், ஆனால் கூடவே வாலும் இருக்கிறது. அப்படியானால் இந்த வால் எதனுடையது? பற்றுதல் மற்றும் சுபாவத்தினுடையது. எதுவரை இந்த வாலுக்கு நெருப்பு வைக்கவில்லையோ அது வரை இலங்கைக்கு நெருப்பு பிடிக்க முடியாது. அப்படி விநாஷத்தின் எச்சரிக்கையின் சகஜமான அடையாளம் எதுவானது? இந்த வாலுக்குத் தான் நெருப்பு வைக்க வேண்டும். அனைத்து மகாவீரர்களின் பற்றுதலில் நெருப்பு பிடித்து விட்டது என்றால், இந்த பழைய உலகம் இருக்குமா என்ன? இப்பொழுது அனைத்து விதமான பற்றுதல் மற்றும் சுபாவத்தை

முடித்து விடுங்கள். எனவே எப்படி விநாஷம் செய்யும் ஆத்மாக்கள் விநாஷத்திற்காக துடித்துக் கொண்டிருக்கிறார்கள், அதே போலவே ஸ்தாபனை செய்யும் நீங்கள் உலக நன்மைக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறீர்களா? அந்த மாதிரி சுயசேவை மற்றும் உலகின் சேவை இந்த இரண்டிற்காகவும் புதுப்புது கண்டுபிடிப்புகளை செய்கிறீர்களா? எப்படி அவர்கள் உலக விநாஷம் விரைவாகவும் சுலபமாகவும் ஆகி விடும் அளவிற்கு புதுப் புது கண்டுபிடிப்புகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போலவே மகாவீரர்கள் நீங்கள் அமைதி சக்தியின் கண்டுபிடிப்பாளர்கள் உலகத்தின் மாற்றம் ஏற்படுவது மற்றும் அவர்கள் முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் ஆஸ்தியைப் பெறுவதில் ஒரு விநாடி தான் ஆக வேண்டும். மேலும் சுலபமாகவும் ஆகி விட வேண்டும் என்று அந்த மாதிரி திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களா? அந்த மாதிரி மிகவும் புதுமையான கண்டுபிடிப்பினால் ஒரு நொடியில் பார்வையினாலேயே நன்மை, ஒரு நொடியில் துக்கமாக இருப்பவர் சுகமானவராக, பலமற்றவரிலிருந்து பலம் நிரம்பியவராக மற்றும் அமைதியின்மையிலிருந்து அமைதியை அனுபவம் செய்விக்கும் மாதிரி ஆக வேண்டும். அப்படி அவர்களுடைய துடிப்பு ஒரு நொடியில் முடிந்து விடுகிற மாதிரி மிகவும் புதுமையான ஆன்மீக ஆயுதங்கள் மற்றும் யுக்திகளைப் பற்றி யோசிக்கிறீர்களா? எப்படி குண்டுகள் மூலமாக ஒரு நொடியில் இறந்து விடுகிறார்கள். அதே போல் ஒரு நொடியில் அவர்களுக்கு வரதானம், மகாதானம் கொடுக்க முடிய வேண்டும், அந்த மாதிரி மகாதானி மற்றும் வரதானியாக ஆகியிருக்கிறீர்களா என்ன? அனைத்து மன ஆசைகளை நிறைவேற்றும் காமதேனுவாக ஆகியிருக்கிறீர்களா அல்லது இதுவரை தன்னுள் ஏதாவது ஆசைகள் இன்னும் நிறைவேறாமலேயே இருக்கிறதா? ஒருவேளை தன்னுடைய ஏதாவது விருப்பங்கள், ஆசைகள் இருக்கிறது என்றால் காமதேனுவாக எப்படி ஆவீர்கள். எனக்கு பெயர் கிடைக்க வேண்டும் மற்றும் மரியாதை கிடைக்க வேண்டும் என்ற இந்த விருப்பமும் இருக்க வேண்டாம். புரிந்ததா?

அப்படி ஒரு நொடியில் மூன்றாவது கண் மூலமாக உலகிற்குப் பார்வையாலேயே நன்மை செய்யக்கூடிய, ஒரு நொடியில் அமைதியின்மை மற்றும் துக்கத்திலிருந்து விலக்கி எடுத்துச் செல்லக்கூடிய, பற்றுதல் மற்றும் சுபாவத்திலிருந்து விடுபட்டு கர்மாதீத்

நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் ஆஸ்தியின் பிராப்தியுடைய வாழ்க்கையில் எப்பொழுதும் இருக்கக்கூடிய முக்தி மற்றும் ஜீவன்முக்தி அடைந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 21.07.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக நீதிபதி மற்றும் உலகியல் நீதிபதி!

தன்னை நீதிபதி என்று நினைக்கிறீர்களா? தன்னைத் தானே மற்றும் மற்ற ஆத்மாக்களை ஜட்ஜ் பண்ண (யார் எப்படி என்று பகுத்தறிவது) முடியுமா? அந்த நீதிபதிகளோ வார்த்தை மற்றும் காரியங்களைத் தான் பகுத்தறிகிறார்கள் ஆனால் நீங்களோ எண்ணத்தைக் கூட ஜட்ஜ் பண்ண முடியும். அந்த மாதிரியான நீதிபதியானவர் தன்னையும் மற்றும் மற்ற ஆத்மாக்களையும் ஜட்ஜ் பண்ண முடிய வேண்டும் மற்றும் பகுத்தறிய முடிய வேண்டும் அந்த மாதிரி ஆகி விட்டீர்களா? அந்த மாதிரி நீதிபதியாக யார் ஆக முடியும்? யாருடைய புத்தி என்ற முள் ஒருமுகப்பட்டு நிலையாக இருக்கிறதோ அவர் தான். எப்படி தராசில் நிறுத்தப்படும் பொருள் எவ்வளவு எடை என்று, எப்பொழுது அதனுடைய முள் ஒருநிலையாகி ஆகி விடுகிறதோ, ஆடுவது அசைவது நின்று விடுகிறதோ, மேலும் இரண்டு பக்கமும் சமமாகி விடுகிறதோ அப்பொழுது தான் பகுத்தறிய முடியும், அதே போலவே யாருடைய புத்தியின் நினைவு என்ற முள் ஒருநிலையாக இருக்கிறதோ, யாருடைய புத்தியில் எந்த விதமான அங்கு இங்கு என்று அலை பாய்தலும் நின்று விடுகிறதோ மற்றும் தீய எண்ணமற்ற நிலை இருக்கிறதோ மேலும் யாருடைய வார்த்தை மற்றும் செயலில் அன்பு மற்றும் சட்டம், நட்பு மற்றும் சக்தி இவை இரண்டின் சமநிலை இருக்கிறதோ அந்த மாதிரியான நீதிபதி தான் சரியான தீர்ப்பைக் கொடுக்க முடியும். அந்த மாதிரியான ஆத்மா சுலபமாகவே யாரையும் பகுத்தறிய முடியும். அப்படியானால் அந்த மாதிரி பகுத்தறியும் சக்தி மற்றும் முடிவெடுக்கும் சக்தியை தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா?

வெளியுலக ஜட்ஜ் ஒருவேளை தீர்ப்பளிப்பதில் தவறு செய்கிறார் என்றால் ஏதாவது ஆத்மாவின் ஒரு ஜென்மத்தை வீணாக இழக்க வைக்க முடியும் அல்லது அவருடைய கொஞ்ச காலத்தை வீணாக இழக்க வைக்க முடியும் அல்லது அவருக்கு அனேக விதமான

நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கான காரணமானவர் ஆக முடியும், ஆனால் ஆன்மீக நீதிபதிகளாகிய நீங்கள் ஒருவேளை யாரையாவது பகுத்தறிய முடியவில்லை என்றால் ஆத்மாவின் அனேக ஜென்மங்களின் எதிர்காலத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கான காரணமானவர் ஆகி விடுவீர்கள். தன் மேல் அந்த மாதிரியான பொறுப்பு இருப்பதாக உணருகிறீர்களா? எப்பொழுது நீங்கள் அனைத்து ஆத்மாக்களின் நன்மைக்கான பொறுப்பாளர் ஆகின்றீர்களோ, அனேக ஆத்மாக்களை தந்தையோடு சந்திப்பை செய்விப்பதற்கான பொறுப்பாளர் ஆகின்றீர்களோ அந்த மாதிரியான ஆத்மாக்களுக்கு தன் மீதுள்ள எவ்வளவு பெரிய பொறுப்பை உணர வேண்டும். ஒருவேளை யாராவது துடித்துக் கொண்டிருக்கும் தாகம் நிறைந்த ஆத்மா உங்கள் எதிரில் வந்தால் அவருடைய துடிப்பு மற்றும் தாகத்தை முடித்து அவருடைய தாகத்தைத் தீர்ப்பதற்கான பொறுப்பாளராக யார் இருக்கிறார்? தந்தையா அல்லது நீங்களா? தந்தையோ முதுகெலும்பாக இருக்கிறார் ஆனால் பொறுப்பானவர்கள் சக்தி சேனை மற்றும் பாண்டவ சேனை தான். அப்படி பொறுப்பாளராக ஆகுபவர்களின் மேல் இந்தளவு பெரிய பொறுப்பு இருக்கிறது. அதனால் எந்த ஆத்மாவையும் எந்த விஷயத்திலிருந்தும் அல்லது எந்த சொத்திலிருந்தும் ஆஸ்தி வஞ்சிக்கப்பட வைக்க முடியாது, அப்படியானால் அந்த மாதிரி அனைவரின் மகாதானி மற்றும் வரதானியாக ஆகியிருக்கிறீர்களா? ஒருநொடியில் யாரையாவது பகுத்தறிய முடியுமா? ஒருவேளை யாருக்காவது அமைதியின் தேவை இருக்கிறது மற்றும் நீங்கள் அவருக்கு சுகத்தின் வழியைக் கூறுகிறீர்கள் (பகுத்தறியும் சக்தியின் குறைவின் காரணமாக) என்றால் அவர் திருப்தி அடைய மாட்டார். எனவே என்ன பிராப்தி அடைய வேண்டும் என்ற ஒவ்வொருவரின் விருப்பத்தை பகுத்தறிபவர் தான் முழுமையான மற்றும் யதார்த்தமான ஜட்ஜ்மென்ட் செய்ய முடியும். அந்த மாதிரி புத்தி என்ற முள் ஒரே நிலையில் இருக்கும் மாதிரி அனைவரின் ஆசைகளைத் தெரிந்திருப்பவரின் விசேஷத் தகுதி என்னவாக இருக்கும்? அன்பு மற்றும் சட்டத்தின் சமநிலை இருப்பதற்காக முக்கியமாக விசேஷ தாரணையாக என்ன இருக்கும்? (அனைவரும் கூறினார்கள்) மிக நல்ல நல்ல விஷயங்களையோ கூறினீர்கள். யார் அவரே ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலையில் நிலைத்திருப்பாரோ அவர் தான்

யாருடைய ஆசையையும் நிறைவேற்ற முடியும் என்பதே இவை அனைத்தின் சாரமாகும்.

ஒருவேளை தன்னிடமே ஏதாவது ஆசை நிறைவேறாமல் இருந்து விட்டது என்றால் அவர் மற்றவர்களின் ஆசைகளை நிறைவேற்ற முடியாது. எப்பொழுது தானே யுக்தியுக்த் நிரம்பிய, ஞானம் நிறைந்த மற்றும் எப்பொழுதும் வெற்றி நிறைந்தவராக இருப்பாரோ அப்பொழுது தான் ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை இருக்கும். யார் அவரே வெற்றி மூர்த்தியாக இருக்க மாட்டாரோ அவர் அனேக ஆத்மாக்களின் எண்ணங்களைக் கூட வெற்றியடையச் செய்ய முடியாது. எனவே யார் நிரூபணம் கொடுக்க வேண்டும். ஆசிரியர் ரூபத்தில் சுலோகன் எதுவரை வாழ்கிறோமோ அதுவரை படிக்க வேண்டும்' அதாவது கடைசி நிமிடம் வரை படிக்க வேண்டும். ஒருவேளை இந்த லட்சியம் உறுதியாக இருக்கிறது என்றால் பின்பு அனைத்து பிராப்திகளும் தானாகவே இருக்கும். மேலும் குருவின் ரூபத்தில் சுலோகன் -எங்கு அமர வைக்கிறாரோ, எப்படி அமர வைக்கிறாரோ, என்ன கூறுகிறாரோ, எப்படி கூறுகிறாரோ, எப்படி நடத்து விக்க வேண்டுமோ மற்றும் எப்படி தூங்க வைக்க வேண்டுமோ அதாவது அனைத்தையும் செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார்' என்ற இந்த நிலை தான் சத்குருவின் சுலோகன் ஆகும். இப்பொழுது காதலனின் ரூபத்தில் என்ன சுலோகன் இருக்கிறது? 'உன்னோடு தான் அமருவேன், உன்னோடு தான் அருந்துவேன் மற்றும் மூச்சுக்கு மூச்சு உன்னோடு இருப்பேன்'. இது தான் காதலனின் ரூபத்திற்கான சுலோகன். இந்த அனைத்து விஷயங்களையும் உங்கள் எதிரில் கொண்டு வந்து தன்னுடைய முயற்சியை சோதனை செய்யுங்கள். இவை அனைத்தையும் ரிவைஸ் செய்ய வேண்டும்.

வெகுகாலமாக மற்றும் ஒரே சீரான அதாவது இடைவிடாது நான்கு உறவுகளையும் வைத்துக் கொண்டிருந்தேனா அல்லது இடையிடையே துண்டிக்கப்பட்டதா? என்ற இதையும் சோதனை செய்ய வேண்டும். ஒருவேளை இடையில் ஏதாவது இடைவெளி இருந்து விட்டது என்றால் அடிக்கடி துண்டு பட்ட உறவு பலஹீனமாக இருக்கும். எனவே இந்த நான்கு விஷயங்களின் ஆதாரத்தில் தன்னுடைய வாழ்க்கையை

ரிவைஸ் செய்து பாருங்கள். இந்த சோதனையை செய்து என்னுடைய பிராப்தி என்னவாக இருக்கிறது என்று தன்னைத் தானே பகுத்தறிய முடியும். சூரியவம்சத்தில் வருவேனா அல்லது சந்திரவம்சத்திலா? சூரியவம்சத்திலும் இராஜகுடும்பத்திலா அல்லது சுயம் மகாராஜா, மகாராணி ஆகுபவரா? இப்பொழுது கடைசி பரீட்சைக்கான நேரம் அருகில் இருக்கிறது என்றபோது எப்படி லௌகீக படிப்பில் அனைத்து பாடங்களும் ரிவைஸ் செய்யப்படுகிறது மேலும் ஒவ்வொரு பாடத்தையும் ரிவைஸ் செய்து தன்னுடைய குறையை சரி செய்கிறார்கள், அனைவரும் தன்னுடைய முயற்சி செய்வதை இந்த விதமாக ரிவைஸ் செய்ய வேண்டும். எப்படி தனக்கே நீதிபதியாக ஆவது அதற்கான முறையை இப்பொழுது கூறிக் கொண்டிருக்கிறோம். அப்படி தன்னையே பகுத்தறிவது வந்து விட்டது என்றால் பின்பு மற்றவர்களையும் சுலபமாகவே பகுத்தறிய முடியும். எப்பொழுது சுயம் தானே பிராப்தி நிரம்பியவராக இருப்பாரோ அப்பொழுது மற்றவர்களுக்கும் பிராப்தி செய்விக்க முடியும். இந்த சோதனை செய்வதோ சுலபம் தான் இல்லையா? ஒரு பாடம், ஒரு சம்மந்தம், ஒரு தாரணை, ஒரு சுலோகனில் கூட குறை இருக்க வேண்டாம்.

இப்பொழுது ரிசல்ட் வெளியாவதற்கான நேரம் வந்து கொண்டிருக்கிறது என்றால் ரிசல்ட் வெளியாவதற்கு முன்பாகவே புகார்களை முடித்து விடுங்கள். உங்களுடைய புகாரையும் சுயம் நீங்களே செய்கிறீர்கள், அமிர்தவேளையிலிருந்து உங்களுடைய புகாரைச் செய்கிறீர்கள். எதுவரை தன்னுடைய புகார்கள் இருக்கின்றனவோ அது வரை முழுமையாக ஆக முடியாது. எனவே தானே மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி தன்னுடைய புகாரை முடித்து விடுங்கள். இருந்தாலும் இப்பொழுது கடைசி வாய்ப்புக்கான நேரம் இருக்கிறது. பின்போ மிக கால தாமதத்தின் அறிவிப்பு பலகை போடப்பட்டு விடும். இப்பொழுது பிராப்திக்கான நேரம் கூட அதிகம் கடந்து விட்டது. கொஞ்சம் இருக்கிறது' பின்பு வேதனைப்படும் நேரம் வந்து விடும். அந்த நேரத்தில் பிராப்தி செய்ய முடியாது. எனவே கொஞ்ச நேரம் என்ன இருக்கிறதோ, இந்த வாய்ப்பு கூட மற்றவர்களின் காரணமாக உங்களுக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது, இருந்தாலும் வாய்ப்பு தான் இல்லையா. அப்படியானால் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமா அல்லது இழக்க வேண்டுமா, உங்களுடைய முயற்சியினால் நீங்கள் என்ன

விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். எனவே இப்பொழுதிலிருந்தே ரிவைஸ் செய்யுங்கள். எப்பொழுது ரிவைஸ் செய்வீர்களோ மற்றும் நிர்ணயம் செய்வீர்கள் என்றால் எந்த ரூபத்தில் செய்ய வேண்டும் என்பதை ஏற்கனவே கூறியிருக்கிறோம். விதியையோ சொல்லியே விட்டோம். ஏனென்றால் விதிப்பூர்வமாக செய்வதினால் (சித்தியின்) விரும்புகின்ற பிராப்தியோ இருக்கவே இருக்கிறது.

யார் சம்பூர்ண நிலையின் வெகு அருகில் இருப்பாரோ அவருடைய எண்ணத்தில், வார்த்தையில் மற்றும் செயலில் ஒரு போதை இருக்கும். அது எது? ஈஸ்வரிய போதையோ அனைவருக்கும் இருக்கவே இருக்கிறது. ஈஸ்வரிய போதையின் ஆஸ்தியாக ஈஸ்வரனின் மடியில் வந்து விட்டீர்கள் மற்றும் பிராப்தியும் ஏற்பட்டது. அதுவோ இருக்கவோ இருக்கிறது ஆனால் விசேஷமாக இந்த போதை என்னவாக இருக்கும்? அவருடைய எண்ணத்தில், வார்த்தையில் போதையின் எந்த விஷயம் இருக்கும்? நான் என்னென்ன செய்கிறேனோ அதில் முழுமையான வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்ற போதை எண்ணத்தில் இருக்கும். என் ஒவ்வொரு காரியத்தின் பின்னால் வெற்றி என்னுடைய நிழல் மாதிரி வந்து கொண்டிருக்கும் என்று செய்யும் காரியத்திலும் இந்த போதை இருக்கும். என்னுடைய வார்த்தைக்கு வெற்றி உறுதியானது. வெற்றி என் பின்னாலேயே வரக்கூடியது. வெற்றி என்னிடமிருந்து தனியாக இருக்க முடியாது. அந்த மாதிரியான போதை ஒவ்வொரு எண்ணத்தில், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு செயலில் எப்பொழுது இருக்கிறதோ அப்பொழுது வெகு அருகில் இருக்கிறோம் என்று புரிந்து கொள்ளுங்கள். ஆகத் தான் வேண்டும், சட்டமோ அப்படி கூறுகிறது, கர்மத்தின் தத்துவம் மற்றும் ஞானமோ இதைத் தான் கூறுகிறது என்ற இது தான் அருகாமை. இப்பொழுது இதன் மூலம் வெகு அருகிலா, அருகிலா அல்லது எதிரிலா என்று தீர்மானம் செய்யுங்கள். இது மூன்று நிலை ஆகி விட்டது இல்லையா? நல்லது.

அனைவரின் மனதினுள் ஒரு எண்ணத்தின் குழப்பம் இருக்கிறது -அது எது? இந்த சந்திப்பு கூட எது வரை என்று தெரியவில்லை என்பது தான். இந்தக் குழப்பத்திற்கான பதில் என்னவாக இருக்கும்? பிராப்தி செய்வதற்கான நேரம் இப்பொழுது அதிகம் கடந்து சென்று விட்டது,

கொஞ்சம் இருக்கிறது, கொஞ்சத்திலும் மிக கொஞ்சம் இருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். எப்பொழுது பிராப்தி செய்வதற்கான நேரம் கொஞ்சம் இருக்கிறது மேலும் வரக்கூடியவர்களும் அனேக ஆத்மாக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் காரணமாக உங்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த மாதிரி ஆத்மாக்களுக்காக இப்பொழுது தந்தையும் பந்தனத்தில் கட்டப்பட்டு இருக்கிறார். எனவே எப்பொழுது புதுப்புது இரத்தினங்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய சென்ற கல்பத்தின் உரிமையை வரிசைக்கிரமமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் பாப்தாதாவிற்கும் உரிமையை கொடுப்பதற்காக வர வேண்டியதாகவே ஆனது இல்லையா? எனவே என்னவாகும் என்று தெரியவில்லை என்ற இந்த குழப்பத்தை உருவாக்காதீர்கள், ஆனால் அவ்யக்த சந்திப்பிற்கான அவ்யக்த ரூபத்தில் அனுபவம் செய்விப்பதற்காக இடையிடையே வாய்ப்பும் கொடுக்கப்படுகிறது மற்றும் நேரமும் கொடுக்கப்படுகிறது. அதன் மூலம் திடீரென்று நேரெதிரில் அவ்யக்த சந்திப்பை செய்யும் பார்ட் முடிவடைந்தது என்றால் அவ்யக்த நிலை மூலமாக அவ்யக்த சந்திப்பின் அனுபவம் செய்ய முடியும். எதுவரை தந்தையின் முழுமையான பிரத்யக்ஷதா (வெளிப்படுதல்) ஆகவில்லையோ அதுவரை குழந்தைகள் மற்றும் தந்தையின் சந்திப்போ இருக்கத் தான் வேண்டும் ஆனால் வியக்தம் மூலமாக (சரீரத்தோடு) அவ்யக்த சந்திப்பு மற்றும் அவ்யக்த நிலை மூலமாக அவ்யக்த சந்திப்பாக இருந்தாலும் ஆனால் சந்திப்போ கடைசி வரை இருக்கிறது தான் இல்லையா? எனவே ஒருவேளை அவ்யக்த நிலை மூலமாக அவ்யக்த சந்திப்பின் அனுபவம் ஏற்படவில்லை என்றால் தந்தையின் சந்திப்பின், பிராப்தியின் மற்றும் சர்வ சக்திகளின் வரதானத்தின் ஒரு அழகான சந்திப்பின் அனுபவமாக என்ன இருக்கிறதோ அதிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுவார்கள் என்ற அந்த நேரமும் விரைவில் வரப்போகிறது. எனவே இந்த இரண்டு சந்திப்புக்களும் இது வரை சேர்ந்தே நடந்து கொண்டிருக்கிறது ஆனால் கடைசி நிலை என்னவாக இருக்கும். கடைசி நிலைக்கான ஏற்பாடுகள் செய்விப்பதற்காக தந்தைக்குத் தான் நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது மற்றும் கற்றுக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. என்ன நடக்கப்போகிறது என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? எனவே இந்த அளவு குழப்பத்தில் வராதீர்கள். எப்பொழுது அப்படி ஆக வேண்டும் என்று

இருக்கிறது என்றால் அவ்யக்த நிலையில் நிலைத்திருப்பவர்களுக்கு தானாகவே சப்தம் கேட்கும், டச்சிங் ஏற்படும். சூட்சும எண்ணம் ஏற்படும், தந்தி வரும் அல்லது டிரங் கால் இருக்கும். புரிந்ததா. எப்பொழுது லைன் கிளியராக இருக்கிறதோ அப்பொழுது தான் புரிந்து கொள்ள முடியும். எப்பொழுது அவ்யக்த சந்திப்பின் அனுபவம் இருக்குமோ அப்பொழுது தான் வந்து சேருவீர்கள் இல்லையா. இதற்கிடையில் இந்த வாய்ப்பைக் கொடுத்து பயிற்சி செய்விக்கிறோம். மற்றபடி பயப்படுவதற்கான எந்த விஷயமும் இல்லை. புரிந்ததா. நல்லது,

அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி மூர்த்தி, ஞான சொரூப, சக்தி நிரம்பிய தெய்வீக தாரணை நிரம்பிய, யோகயுக்த, யுக்தியுக்த் எண்ணம் மற்றும் காரியம் செய்யக்கூடிய, பகுத்தறியும் சக்தியை ஒவ்வொரு ஆத்மாவிற்காக காரியத்தில் கொண்டு வரக்கூடிய, ஆன்மீக நீதிபதி உயர்ந்த ஆத்மாக்களுக்கு நிரந்தர வரதானி மூர்த்தி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் கண்ணின் மணிகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: அமிர்தவேளையின் மகத்துவத்தை புரிந்து அதை சரியான முறையில் உபயோகிக்கக்கூடிய எப்பொழுதும் சக்தி நிரம்பியவர் ஆகுக!

தன்னை சக்தி நிரம்பியவராக ஆக்குவதற்காக தினசரி அமிர்தவேளையில் உடலின் மற்றும் மனதின் நடைப்பயிற்சி செய்யுங்கள். எப்படி அமிர்தவேளை நேரத்தின் சகயோகமும் இருக்கிறது, புத்தியின் சதோபிரதான நிலையின் சகயோகமும் இருக்கிறது என்றால் அந்த மாதிரி வரதானி நேரத்தில் மனதின் நிலையும் அனைத்தையும் விட சக்தி நிறைந்த நிலையாகத் தேவைப்படுகிறது. சக்தி நிறைந்த நிலை என்றால் தந்தைக்குச் சமமான விதை ரூப நிலை. சாதாரண நிலையிலோ காரியம் செய்து கொண்டே இருக்க முடியும் ஆனால் வரதானத்தின் நேரத்தை சரியான முறையில் உபயோகித்தீர்கள் என்றால் பலஹீனம் முடிவடைந்து விடும்.

**சுலோகன்: தன்னுடைய சக்திகளின் பொக்கிஷத்தினால் சக்தியில்லாத பிற வசப்பட்ட ஆத்மாக்களை சக்திசாலி ஆக்குங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 02.08.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சரியான விதியின் மூலமாக சித்தி சொரூப பிராப்தி!

சித்தி சொரூபமாக்கக்கூடிய, ஞான சொரூபம், சக்தி சொரூபம், அன்பு சொரூபம் ஆக்கக்கூடிய சர்வசக்திவான் பாபா கூறுகின்றார்: தனக்குள் விதியின் மூலமாக சித்தி சொரூப பிராப்திகளை அனுபவம் செய்கின்றீர்களா என்ன? ஏனென்றால் யார் எந்த முயற்சி செய்தாலும் அதனுடைய லட்சியம் சித்தி நிலையை பிராப்தியாக அடைவதாக தான் இருக்கும். உலகத்தில் உள்ளவர்களிடம் நிறைய பேர்களிடம் நிறைய ரித்தி-சித்தி இருக்கின்றது. அவர்களிடம் இருப்பது ரித்தி-சித்தி; ஆனால் உங்களிடம் இருப்பது விதியின் மூலமான சித்தியாகும். விதி மூலமாக சித்தி என்பது தான் சரியானது. இதனை வேறு விதமாக எடுத்துக் கொள்வதால் ரித்தி-சித்தியில் சென்று விடுகின்றார்கள். தன்னை சித்தி சொரூபம் என்று புரிந்திருக்கின்றீர்களா? எந்தவொரு எண்ணத்தைக் கொண்டு வந்தாலும் அதனை விதிப்பூர்வமாக கொண்டு வரும்போது சித்தி அவசியம் கிடைக்கின்றது. விதிப்படி இல்லையென்றால் நிச்சயம் சித்தி நிலை கிடைக்காது. எனவே தான் பக்தி மார்க்கத்தில் கூட எந்த காரியம் செய்தாலும் விதிக்குத்தான் முக்கியத்துவம் தருகின்றார்கள். விதிப்பூர்வமாகச் செய்யும்போது தான் அந்த சித்தி நிலையை அனுபவம் செய்கின்றார்கள். அனைத்தினுடைய ஆரம்பமும் இங்கிருந்துதான் ஏற்படுகின்றது இல்லையா? எனவே பாபா கேட்கின்றார் சித்தி சொரூபமுடையோர் என்று தன்னைத்தான் புரிந்திருக்கின்றீர்களா? அல்லது இனிதான் ஆக வேண்டுமா? காலத்தின் அனுசாரமாக இரண்டு பக்கமும் விளைவின் (பலன்) சொரூபம் இதுவரையில் 95-சதவீதம் இருக்க வேண்டும்.

எப்படி நேரத்தின் வேகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். மேலும் சவால் செய்கின்றீர்கள், எந்த சவாலை எடுக்கின்றீர்களோ அது எப்பொழுது உங்கள் ஸ்திதி முழுமையாக வருகின்றதோ அப்பொழுது

தான் சம்பன்னம் ஆகும். நீங்கள் என்ன சவால் எடுக்கின்றீர்களோ அந்த மாற்றம் எதன் ஆதாரத்தில் ஏற்படும்? அதற்கு ஆதாரமானவர் யார்? அதற்கு நீங்கள்தான் ஆதாரமானவர்கள். ஆதாரமானவர் உறுதியாக இல்லையென்றால் பிறகு காரியம் எப்படி நடக்கும்? எப்பொழுது ஆதாரமானவர்கள் தயாராகின்றார்களோ? அப்பொழுதுதான் ராஜ்யம் தாயாராகும். யார் ராஜ்யம் செய்ய அதிகாரி ஆகக்கூடியவரோ அவரே இன்னும் அதிகாரத்தை அடையவில்லை என்றால், பிறருக்கு அதிகாரம் வரிசைப்படி எப்படி விடைக்கும்? மேலும் 2-வருடத்திற்கான சவால் எடுக்கின்றார்கள் என்றால் உலக மாற்றத்திற்கான காரியம் எவ்வாறு நடக்கும்? உங்களின் ஸ்திதி, விதியின் மூலம் சித்தியை பிராப்தியாக அடையவில்லையென்றால், பிறகு உலக நன்மைக்கான காரியத்திலும் எப்படி சித்தி (பலன்) கிடைக்கும்? முதலில் தனக்குத்தானே சித்தியடைய வேண்டும். இவ்வளவு பெரிய காரியம் குறைவான நேரத்தில் நடக்க வேண்டுமென்றால், எவ்வளவு வேகமாக காரியங்களைச் செய்ய வேண்டும்? 37-வருடத்தில் 50-சதவீதம் வந்துள்ளீர்கள் என்றால் இப்பொழுது 2-வருடத்தில் 100-சதவீதம் வருவதற்கு என்ன செய்ய வேண்டும்? அதற்காக ஏதாவது திட்டம் தீட்டியுள்ளீர்களா? எப்படி வேகத்தை அதிகரிப்பது, சித்தி சொரூபம் எப்படியாவது? எண்ணம் உருவானதும் பலன் கிடைக்க வேண்டும். இதனைத்தான் 100-சதவீதம் சித்தி சொரூபம் என்று சொல்லப்படுகின்றது. கர்மம் செய்ததும் பலனை பிராப்தியாக அடைய வேண்டும்.

சாதாரண ஞானத்தின் மூலம் ரித்தி சித்தியை பிராப்தியாக அடைகின்றார்கள். சிரேஷ்டமான ஞானத்தின் மூலம் விதியின் மூலமாக சித்தியை பிராப்தியாக அடைய முடியாதா என்ன? சித்தி முழுமையாக கிடைக்காததற்குக் காரணாம் எந்த விதியில் குறையுள்ளது என்று சோதனை செய்யவும். விதியை சோதனை செய்வதன் மூலம் சித்தியை தானாகவே பிராப்தியாக அடைய முடியும். இதில்கூட சித்தி கிடைக்காததற்கு காரணம் ஒரே நேரத்தில் மூன்று விதமான சேவை செய்வதில்லை. மூன்று விதமான சேவை மூன்று வழிகளில் செய்ய வேண்டும். ஞானம் நிறைந்தவராகி, சக்தி நிறைந்தவாகி, அன்பு நிறைந்தவாராகி; இதில் அன்பு, சட்டம் இரண்டும் வந்து விடுகின்றது. இந்த மூன்று சொரூபத்தின் சேவை செய்ய

வேண்டும் ஆனால் மூன்று விதத்தில் செய்ய வேண்டும். அதாவது மனம், வார்த்தை, செயல் என்று மூன்றின் மூலமாக மூன்று சொரூபத்தில் செய்ய வேண்டும். வார்த்தை மூலமாக எப்பொழுது சேவை செய்கின்றீர்களோ அப்பொழுது மனம் சக்திசாலியாக இருக்க வேண்டும். சக்திசாலி மனோநிலை மூலமாகத்தான் அவர்களுணடய மனதை மாற்ற முடியும். மற்றும் வார்த்தை மூலமாக அவர்களை ஞானம் நிறைந்தவராக ஆக்க முடியும். பிறகு கர்மத்தின் மூலமாக அதாவது சம்பந்தம் தொடர்பில் வரக்கூடியவர்களுக்கு அன்பு சொரூபத்தின் மூலம் இதுதான் உண்மையான ஈஸ்வரிய குடும்பம் அங்கு வந்து சேர்ந்து விட்டேன் என்ற அனுபவத்தை தானாகவே செய்வார்கள். மேலும் நம்முடைய நடத்தை அப்படியிருக்க வேண்டும் அதன் மூலம் அவர்கள் இதுதான் என்னுடைய உண்மையான குடும்பம் என்பதை அனுபவம் செய்வார்கள். இப்படி மூன்று ரூபத்தில் அவர்களுடைய மனதை கட்டுப்பாட்டில் கொண்டு வாருங்கள். மேலும் வார்த்தை மூலமாக ஞானத்தை அளித்து லைட், மைட்டின் வரதானங்களை அளியுங்கள். கர்மத்தின் மூலமாக அதாவது தொடர்பின் மூலமாக தன்னுடைய ஸ்தூல நடத்தையின் மூலமாக ஈஸ்வரிய குடும்பத்தின் அனுபவத்தை செய்வித்தீர்களேயானால் இந்த விதியின் மூலமாக சேவை செய்யும் போது ஏன் சித்தி ஏற்படாது? ஏற்படாத காரணம் நீங்கள் மூன்று ரூபத்தின் சேவையை மூன்று விதத்தில் செய்யவில்லை. எப்பொழுது நீங்கள் வார்த்தையில் வருகின்றீர்களோ அப்பொழுது மனம் சக்திசாலியாக இருக்க வேண்டும். அது இருப்பதில்லை. சக்திசாலி நிலை குறைந்து விடுகின்றது. எப்பொழுது மனதிற்கு பிடித்தமான செயலை செய்யும் போது மனதை சக்திசாலியாக வைப்பதில்லை. சக்தி குறைந்து விடுகின்றது. ஒரே நேரத்தில் இந்த மூன்றும் சேர்ந்திருந்தால் சித்தி அவசியம் கிடைக்கும். இப்பொழுது இந்த விதத்தில் சேவை செய்வதற்கான கவனம் மற்றும் பயிற்சி தேவை. நீங்கள் அவர்களுடைய சம்பந்தத்தில் வருவதில்லை அதாவது ஆழமான தொடர்பில் வருவதில்லை. மேலோட்டமான தொடர்பில் வருகின்றீர்கள். மேலோட்டமான சம்பந்தம் என்பது அல்ப காலத்திற்கானது. அன்பில் கொண்டு வருகின்றீர்கள், ஆனால் அன்பின் கூடவே சக்திசாலி நிலையிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த ஆத்மாக்களிடம் சக்தி நிறைந்து அந்த சக்தி மூலமாக அவர்கள் பிரச்சனைகள், சூழ்நிலைகள், வாயுமண்டலம் இதனை எதிர்நோக்கி சதா

கால சம்பந்தத்தில் இருப்பார்கள் ஆனால் அது நடப்பதில்லை. ஞானத்தின் கவர்ச்சியில் வருகின்றார்கள் அல்லது அன்பின் கவர்ச்சியில் வந்து விடுகின்றார்கள். அதிகமாக அன்பின் கவர்ச்சியில்தான் வந்து விடுகின்றார்கள். இரண்டாவது நம்பர்தான் ஆனார். எந்தவொரு விஷயம் வந்தாலும் அசையக்கூடாது அப்படிப்பட்ட சக்திசாலி நிலை ஏற்பட வேண்டும். இதில் மட்டும் தான் இன்னும் குறையுள்ளது.
யார் சேவாதாரி நிமித்தமானவர்களோ அவர்களிடம் ஞானம் நிறைய உள்ளது, அன்பும் இருக்கின்றது ஆனால் சக்தி குறைவாக இருக்கின்றது. சக்திசாலி நிலையின் அடையாளம் என்ன? ஒரு வினாடியில் எந்தவொரு வாயுமண்டலம், சூழ்நிலை, மாயையின் பிரச்சனைகளையும் முடித்து விடுவார்கள். தோல்வியடைய மாட்டார்கள். எநத்வொரு ஆத்மா பிரச்சனை ரூபத்தில் வந்தாலும் அவர்கள் முன்னால் பலியாகி விடுவார்கள். அதனை இயற்கை அவர்களுக்கு தாசியாகி விடும் என்று கூட சொல்லலாம். பஞ்ச தத்துவங்களே தாசியாகும் போது மனித ஆத்மாக்கள் உங்களிடம் பலியாக மாட்டார்களா என்ன? இதுதான் சக்திசாலி நிலையின் நடைமுறை சொரூபம். எனவே மூன்று சொரூபத்தின மூலமாக சேவை செய்யும் நிலையை கொண்டு வந்து விட்டால் ஒவ்வொரு காரியத்திலும் சித்தி அவசியம் கிடைக்கும். விதியின் காரணத்தினால்தான் சித்தி கிடைக்கின்றதல்லனா? விதியில் குறையிருந்தால் சித்தியிலும் குறை ஏற்படும். எனவே சித்தி சொரூபமாவதற்காக இந்த விதியை முதலில் சரி செய்யவும்.

பக்திமார்க்கத்தில் அதனை செய்கின்றார்கள், ஆனால் இங்கு சாதனம். எந்தவொரு சாதனம்? பாப்தாதாவினுடைய ஒவ்வொரு விஷேசங்களையும் தாரணை செய்து விஷேச ஆத்மா ஆகி விடுவீர்கள். எப்படி தேர்விற்கான நேரம் நெருக்கத்தில் வரவர எதையெல்லாம் படித்தீர்களோ? மனப்பாடம், மற்றும் நடைமுறைப்பாடம் இரண்டிலுமே திருப்பிப் பார்த்து எந்தெந்த பாடத்தில் என்னென்ன குறைகள் உள்ளது என்பதை சோதனை செய்வீர்கள் அல்லவா? இப்பொழுது நேரம் நெருக்கத்தில் வந்துக் கொண்டிருக்கின்றது. எனவே எந்தெந்த பாடங்களில் குறைகள் உள்ளது என்று அனைத்து பாடங்களையும் சோதனை செய்யவும். மனப்பாடம் நடைமுறை இரண்டையும்

சோதனை செய்யவும். ஒவ்வொரு பாடத்தையும் பார்த்து தன்னைத்தான் முழுமையடைய செய்யவும். முதலில் திருப்பிப் பார்க்கும் போதுதான் தன்னுடைய குறைகள் தென்படும். அப்பொழுதுதான் முழுமை நிலையடைய முடியும். சித்தியினுடைய சதவீதம் அதிகமாகும் போது நேரம் கூட வீணாகாது. குறைவான நேரத்தில் அதிகமான வெற்றி கிடைக்கும். இதற்குத்தான் சித்தி என்று சொல்லப்படுகின்றது. சமயத்தை அதிகமாக செலவு செய்து, அதிகமான முயற்சி செய்து பிறகு பலன் கிடைத்தால் அதனை சதவீதம் குறை என்றுதான் சொல்ல முடியும். அனைத்து பக்கத்திலிருந்தும் குறைவான செலவு செய்ய வேண்டும். உடலை, மனதை குறைவாக ஈடுபடுத்த வேண்டும். இல்லையென்றால் எவ்வளவு எண்ணம் செய்கின்றீர்கள், மாதக் கணக்கில் திட்டமெல்லாம் தீட்டுகின்றீர்கள். சமயம், எண்ணாம், தன்னுடைய சர்வசக்திகள், அதனைக்கூட அதிகமாக ஈடுபடுத்தக்கூடாது. அதாவது குறைவான செலவில் அதிகமான வருமானத்தையடைய வேண்டும். சித்தியடையக்கூடிய எண்ணங்கள் மட்டுமே நம் மனதில் எழ வேண்டும். எதில் வெற்றியுள்ளதோ அதுவே சமயத்தின்படி நிச்சயிக்கப்பட்டதாக வேண்டும். இதனைத்தான் சித்தி சொரூபம் என்று சொல்லப்படுகின்றது.

அனைத்து பாங்களிலும் நான் எந்தளவு தேர்ச்சிப் பெற்று இருக்கின்றேன் என்பதை எப்படி கண்டறிய முடியும்? யார் எந்தளவு நடைமுறையில் தேர்ச்சியடைகின்றார்களோ அந்தளவு அந்த பாடத்தின் ஆதாரத்தில் லட்சியம் மற்றும் மதிப்பு கிடைக்கும். ஒன்று பிராப்தியின் அனுபவமும் கிடைக்கும். எப்படி ஞானம் என்ற பாடத்தின் மூலமாக லைட், மைட்டினுடைய பிராப்திகளை அனுபவம் செய்கின்றீர்கள். அந்த ஞானம் என்ற பாடத்தின் ஆதாரத்தில் அவ்வளவு மதிப்பு கிடைக்கும். தெய்வீக பரிவாரத்தின் மூலமாகவும், மற்ற ஆத்மாக்கள் மூலமாகவும் கிடைக்கும். எப்படி பாருங்கள் மகான் ஆத்மாக்களுக்கு ஏன் மதிப்பு கிடைக்கின்றது? ஏனென்றால் அவர்கள் சாதனா செய்திருக்கின்றார்கள். பாடத்தை மனப்பாடம் செய்திருக்கின்றார்கள். அதன்படி அவர்களுக்கு லட்சியம் மற்றும் மதிப்பு கிடைக்கின்றது. மேலும் இயற்கைக்கூட தாசியாகி விடுகின்றது. ஒரே ஒரு ஞான விஷயத்தைக் கூறினேன். அதுபோல யோகத்தின் மூலமாக என்ன லட்சியம் பிராப்தி கிடைக்கின்றது?

யோகம் என்றால் நினைவு. அதன் மூலமாகவும் லட்சியம் பிராப்தியாக கிடைக்க வேண்டும். அவர்கள் என்ன எண்ணம் செய்தாலும் அது சக்திசாலியாக இருக்கும். எந்தவொரு பிரச்சனை வந்தாலும் அவர்களுக்கு முன்கூட்டியே யோக சக்தி மூலமாக இது வரப்போகின்றது என்பது அனுபவமாகும். முதலிலேயே தெரிந்து விட்ட காரணத்தினால் ஒருபோதும் தோல்வியடைய மாட்டார்கள். எதனை சுபாவம் என்று கூறுகின்றீர்களோ அது கூட முயற்சியில் தடையாகாது. எனவே எந்த பாடத்திற்கு என்ன லட்சியமோ அது அனுபவம் ஆக வேண்டும். லட்சியம் இருந்தால் அதனுடைய விளைவு மதிப்பு அவசியம் கிடைக்கும். அவர்கள் வாயினால் எந்த வார்த்தை பேசினாலும், என்ன திட்டம் தீட்டினாலும் சக்திசாலியாக இருப்பதால் அதற்கு அனைவரும் மதிப்பளிப்பார்கள். அதாவது ஒருவருக்கொருவர் திட்டத்தை கூறும்போது அது சக்திசாலியாக இருப்பதால் அனைவரும் அதற்கு மதிப்பு தருவார்கள். இப்படி ஒவ்வொரு பாடத்தையும் பாருங்கள். தெய்வீக குணம் என்ற பாடம் மற்றும் சேவை என்ற பாடத்திலும் லட்சியத்தின் நெருக்கமான சம்பந்தம் தொடர்பில் வருவதற்கான பிராப்தி கிடைக்கின்றது. நெருக்கமான சம்பந்தம் தொடர்பில் வருவதன் மூலமாக தானாகவே மதிப்பு கிடைக்கின்றது. இப்படி ஒவ்வொரு பாடத்தையும் சோதனை செய்யவும். சோதனை செய்வதற்கான சாதனம் மதிப்பு. நான் ஞான சொரூபமானவன் என்ற நினைவில் ஞானம் கொடுத்தால் கேட்பவர் அதற்கு மதிப்பு தருகின்றார்களா? ஞானத்திற்கு மதிப்பளிப்பது என்றால் ஞானம் நிறைந்தவர்களுக்கு மதிப்பளிப்பது. யோகம் என்ற பாடத்தில் லட்சியம் இருந்தால் யாருடைய எண்ணத்தையும் பரிவர்த்தனை செய்வதற்கான சக்தியை உருவாக்க முடியும். அவர்கள் அவசியம் மதிப்பளிப்பார்கள். இந்த வழியில் ஒவ்வொரு பாடத்தையும் சோதனை செய்யவும். ஒவ்வொரு பாடத்திலும் லட்சியம் மற்றும் மதிப்பு இரண்டையும் யார் அனுபவம் செய்கின்றார்களோ? அவர்களே சம்பன்னமானவர்கள் ஆவார்கள். பாதிப்பிலிருந்து விலகி, தூரத்தில் இருப்பவர்கள் தான் சம்பன்னமானவர்கள். சரீத்தினுடைய பாதிப்பு எண்ணங்களுடைய பாதிப்பு, சம்பந்தம் தொடர்பினுடைய பாதிப்பு எது வந்தாலும் அதனுடைய சூழ்நிலை, வாயுமண்டலத்திலிருந்து அனைத்து விதமான பாதிப்பிலிருந்து விடுப்பட்டு இருக்கின்றீர்களென்றால் எல்லா

பாடங்களிலும் தேர்ச்சியடைந்துள்ளீர்கள், அதாவது சம்பன்னமாக உள்ளீர்கள். அப்படி ஆகி விட்டீர்களா? லட்சியம் கூட இதுதானே?

யார் ஆதார மூர்த்திகளோ, அவர்களிடம் சக்திசாலி எண்ணங்கள் இல்லையென்றால் அவர்களின் நேரத்தை மாற்றுவதில் கூட பலவீனமாகி விடுவார்கள். இதன் காரணமாக தனக்குள் எவ்வளவு சக்திகளை கொண்டு வருகின்றீர்களோ அவ்வளவு உலக மாற்றத்திற்கான நேரத்தையும் நெருக்கத்தில் கொண்டு வர முடியும். நாடகத்தின்படி நேரம் நிச்சயிக்கப்பட்டது ஆனால் நாடகம் கூட யாரை ஆதாரமாக வைத்து உருவாக்கப்பட்டது. ஆதாரம் வேண்டுமல்லவா? ஆதார மூர்த்திகள் நீங்கள்தானே? இப்பொழுது நீங்கள் அனைவருடைய பார்வையிலும் இருக்கின்றீர்கள். இரண்டு வருடங்களுக்கான சவால் செய்திக்கின்றீர்கள் அல்லவா? இந்த விஷயங்களை கேட்கும் போது ஒருவேளை உண்மையில் வினாசம் வரவில்லையென்றால் என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சம் வருகின்றதா? இரண்டு வருடத்தில் வரவில்லையென்றால் இந்த எண்ணம் வருவதற்குக்கூட வாய்ப்பிருக்கின்றது. எதிர் கொள்வது என்பது செய்து விடுவோம். அதன் அர்த்தம் என்ன? உள்ளுக்குள் ஏதோ இருக்கின்றது. அதனால்தான் வருகின்றது. இரண்டு வருடத்தில் ஆகி விடும் என்பது உங்கள் அனைவருக்கும் பக்காவாக உள்ளதா? உங்களிடம் யாராவது வினாசம் ஆகவில்லையென்றால் என்ன செய்வது என்று கேட்கின்றார்கள் என்றால் அதற்கு நீங்கள் என்ன பதில் கூறுவீர்கள்? அதனால் புரிய வைக்கும் போது தெளிவாக புரிய வைக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளில் முழுமையாக ஆகி விடாது. இரண்டு ஆண்டுகளில் அப்படிப்பட்ட காட்சிகளை பார்ப்பார்கள் இதனால் வினாசம் ஆரம்பமாகி விட்டது, வினாசம் நடந்து கொண்டிருக்கின்றது என்பதை புரிந்து கொள்வார்கள். ஒரு விஷயம் சகஜமாகி விட்டால் மற்ற விஷயங்களும் சகஜமாகி விடும். வினாசத்திற்கு சமயம் ஆகுமல்லவா? எப்பொழுது நீங்கள் சம்பூர்ணமாகி விடுகின்றீர்களோ? அப்பொழுது உங்களுடைய காரியமும் சம்பூர்ணமாகி விடும். எனவே நீங்கள்தான் இப்பொழுது சம்பூர்ணமாக வேண்டும்.

அட்வான்ஸ் பார்ட்டிகள் என்ன காரியம் செய்து கொண்டிருக்கின்றார்கள்? உங்களுக்காக அவர்கள் அனைத்து

விதத்திலும் தயார் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் குடும்பத்தில் செல்வீரகளோ, மாட்டீர்களோ ஆனால் ஸ்தாபனைக்கான காரியம் நடக்க வேண்டும் அதற்கு அவர்கள் நிமித்தமாகி உள்ளார்கள். சிலர் சக்திசாலி நிலையில் நிமித்தமாவார்கள். அப்படி சக்தியடைவார்கள் இதன் மூலம் ஸ்தாபனை காரியத்திற்கு உதவியாளர்கள் ஆவார்கள். நாளுக்கு நாள் புது ரத்தம் மதிப்பு அதிகமாக உள்ளது, எந்தளவு காலம் முன்னேறி செல்கின்றதோ. சிறியவர்கள் புத்தி காரியம் செய்யும் அளவு பெரியவர்களுக்கு செய்வதில்லை. கொஞ்சம் கொஞ்சம் தூய்மையின் சக்தி இருக்கின்ற காரணத்தால் அவர்கள் புத்தி செய்யும் காரியத்தை பெரியவர்கள் புத்தி செய்வதில்லை. அதிக ஆயுள் காரணத்தால் ஒப்பிடும் போது சிறியவர்களிடம் சதோபிரதான நிலை இருக்கின்றது. இந்த மாற்றம் இருக்கின்றதல்லவா? பெரியவர்கள் கூட சிறியவர்களின் சிந்தனைக்கு மதிப்பளிப்பார்கள். இப்பொழுது இருக்கும் பெரியர்கள் நாங்கள் பழைய சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்று நினைக்கின்றார்கள். இவர்கள் இன்றைய சமூகத்தை சேர்ந்தவர்கள். அவர்களுக்கு மதிப்பு அளிக்கவில்லையென்றால் அவர்கள் பெரியவர்களைப் புரிந்து கொண்டு நடக்க மாட்டார்கள். அப்பொழுது காரியம் நடக்காது. ஆதி காலத்தில் குழந்தைகளை செல்வாக்குடன் நடத்தினார்கள் ஆனால் இப்பொழுது குழந்தைகளைக்கூட எஜமானன் என்று புரிந்துக் கொண்டு நடத்துகின்றார்கள். இது கூட நாடகத்தில் பதிவானது. சிறியவர்கள் அதிசயம் செய்து காட்டுவார்கள். அட்வான்ஸ் பார்ட்டியினுடைய காரியம் நடந்து கொண்டிருக்கின்றது. அதுவும் உங்களுடைய ஸ்திதி முன்னோக்கி செல்வதற்காக எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கின்றது. அவர்களுடைய காரியமும் உங்கள் தொடர்பின் மூலமாகவே நடைபெற உள்ளது.

அனைத்து காரியத்திற்கும் ஆதாரமாக விஷேச ஆத்மாக்களாகிய நீங்களேதான் இருக்கின்றீர்கள் ஆனால் நாளாக நாளாக தளர்ந்து விடுகின்றது. தீ பிடிக்கின்றது, பிறகு குளிர்ந்து விடுகின்றது ஆனால் குளிர்ந்து விடக்கூடாது தானே? வெளித்தோற்றத்தை மனிதர்கள் பார்க்கின்றார்கள், இவையெல்லாம் நடந்து கொண்டே தான் இருக்கின்றது, இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை என்று நினைக்கின்றார்கள். பரம்பரையாக விளையாட்டு நடந்து கொண்டேதான் இருக்கின்றது ஆனால் நடந்து கொண்டிருக்கும் போதே

ஏன் தளர்ந்து விடுகின்றது? இதற்கான காரணம் என்ன? சதவீதம் குறைவாக உள்ளது. சொற்பொழிவு செய்கின்றீர்கள்; ஆனால் அதன் கூடவே தோற்றம் அனைவரையும் கவர்ந்திழுக்க வேண்டும். அப்பொழுது தான் சொற்பொழிவிற்கு மதிப்பு இருக்கும். எனவே தன்னை ஒவ்வொரு பாடத்திலும் சோதனை செய்யவும். தற்சமயம் சொற்பொழிவின் போட்டி வைத்தால் அதில் மற்றவர்கள் வெற்றி அடையலாம் ஆனால் நடைமுறை என்றால் அதில் உங்களை யாரும் தோல்வியடைய செய்ய முடியாது.

முக்கிய விஷேசத்தா நம்முடைய நடைமுறை வாழ்க்கையாகும். நடைமுறை விஷயங்களை நீங்கள் ஏதாவது கூறினீர்கள் என்றால் அவர்கள் அமைதியாகி விடுகின்றார்கள். எப்பொழுது சொற்பொழிவில் நடைமுறை விஷயங்களை வெளிப்படுத்துகின்றீர்கள், அப்பொழுது அவர்கள் கொடுக்கும் சொற்பொழிவிலும் தனிப்பட்டதாகி விடுகின்றது. நீங்கள் என்ன பேசுகின்றீர்களோ அது உங்கள் கண்கள் மூலம் இவர்கள் பேசுவது நடைமுறை வாழ்க்கையானது என்பதை அவர்கள் அனுபவம் செய்வார்கள். அனுபவ மூர்த்தியாக இருந்தால் தான் பிரபாவத்தை ஏற்படுத்த முடியும். மற்றபடி அனைவரும் கேட்டு கேட்டு களைத்து விட்டார்கள். சொற்பொழிவாற்றக்கூடியவர் நிறைய இருப்பதால் கேட்டு கேட்டு அனைவரும் களைப்படைந்துள்ளார்கள். நிறைய கேட்டு விட்டோம் என்று கூறுகின்றார்கள். இப்பொழுது அனுபவம் செய்ய விரும்புகின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது பிராப்தியடைய செய்ய வேண்டும். ஒவ்வொரு சப்தமும் அனுபவம் செய்விக்கும் அளவிற்கு நமது சொற்பொழிவில் சக்தி இருக்க வேண்டும். தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். சரீரம் என்று நினைக்காதீர்கள் என்று நீங்கள் புரிய வைக்கின்றீர்கள் அல்லவா? கேட்கக்கூடியவர் அனுபவம் செய்யும் அளவிற்கு இந்த வார்த்தைகளில் சக்தி இருக்க வேண்டும். ஒரு வினாடியாவது அவர்கள் அனுபவம் செய்ய வேண்டும். இந்த அனுபவம் அவர்களை விட்டுச் செல்லாது. கவர்ச்சிக்கப்பட்டு உங்களிடம் வருவார்கள்.

எப்படி இடை இடையில் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டே அவர்களை அமைதியின் அனுபவம் செய்விக்கின்றீர்கள். இந்த பயிற்சியை அதிகப்படுத்துங்கள். அவர்களை அனுபவத்தின் பக்கம் அழைத்துச்

செல்லவும். இந்த பழைய உலகத்தின் மீது வைராக்கியம் ஏற்படுத்த விரும்புகின்றீர்களா? சொற்பொழிவில் என்ன கருத்துக்களை கூறுகின்றீர்களோ? அதனை கொடுத்துக் கொண்டே வைராக்கிய விருத்தியின் அனுபவத்தின் பக்கம் அழைத்துச் செல்வது. இதன் மூலம் உண்மையில் இந்த உலகம் முடியப் போகின்றது இதன் மீது மனதை செலுத்துவது வீணாது என்பதை அவர்கள் அனுபவம் செய்ய வேண்டும். அவசியம் நடைமுறைப் படுத்துவார்கள். உலகாய பண்டிதர்கள் பேசுவதில் கூட சக்தி இருக்கின்றது. ஒரு வினாடியில் சிரிக்க வைக்கின்றார்கள். ஒரு வினாடியில் அழவும் வைக்கின்றார்கள். அப்பொழுது தான் இவர்கள் பேச்சில் சக்தி இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். முழு சபையையும் சிரிக்க வைக்கின்றார்கள். அனைவருக்கும் மயான வைராக்கியத்தை ஏற்படுத்துகின்றார்கள் அல்லவா? அவர்களுடைய சொற்பொழிவிற்கே அவ்வளவு சக்தியிருந்தால் உங்களுடைய சொற்பொழிவிற்கு சக்தியிருக்காதா என்ன? நீங்கள் அசரீரி ஆக்குவதற்கு விரும்பினால் உங்களால் அந்த அனுபவத்தை ஏற்படுத்த முடியாதா? அந்த சூழ்நிலையை உருவாக்க முடியாதா? நடைமுறை அனுயவம் செய்விப்பது என்று இதனைத்தான் சொல்லப்படுகின்றது.

இப்பொழுது அனைத்தும் மாறும் அளவிற்கு உங்களின் சொற்பொழிவு இருக்க வேண்டும். இவர்கள் சொற்பொழிவு உலகத்தினரைக் காட்டிலும் தனிப்பட்டதாக உள்ளது என்பதை மற்றவர் அனுபவம் செய்ய வேண்டும். அவர்கள் சபையோரை சிரிக்க வைக்கலாம், அழ வைக்கலாம், ஆனால் அசரீரியின் அனுபவத்தை செய்விக்க முடியாது. பாபாவிடம் அன்பை இணைக்க வைக்க முடியாது. அவர்களுக்கு தெரியவே தெரியாது. எனவே தனிப்பட்டதாக இருக்க வேண்டும். எதுவரையில் பாபா யார்? நான் ஆத்மா, பரமாத்மா தந்தை என்பதை எதுவரையில் அனுபவம் செய்விக்கவில்லையோ? அது வரையில் இந்த விஷயங்களை எப்படி வெளிப்படுத்த முடியும்? ஆத்மா பரமாத்மாவிற்கும் இரவுக்கும் பகலுக்கும் உள்ள வேறுபாடு உள்ளது என்பதை அனுபவம் செய்விக்கும் அளவிற்கு உங்கள் சொற்பொழிவு சக்திசாலியாக உள்ளதா? எப்பொழுது வேறுபாட்டை உணர்கின்றார்களோ அப்பொழுது கீதையின் பகவான் யார் என்பதை அத்தாட்சியுடன் வெளிப்படுத்த முடியும். கருத்துக்கள் மூலமாக மட்டும்

அவர்களுடைய புத்தியில் அமராது. மேலும் மேலும் சிந்தனையலைகள் தோன்றிக் கொண்டேயிருக்கும் ஆனால் அனுபவம் செய்ய வையுங்கள். அனுபவத்தின் முன்னால் எந்த விஷயமும் வெற்றி பெற இயலாது. சொற்பொழிவில் இப்பொழுது இந்த விஷயத்தை சேர்த்துக் கொள்ளவும்.

முரளியின் சாரம்:

1. நினைவு சக்தியின் மூலமாக லட்சியம் பிராப்தியாக கிடைக்கின்றது. யோகிகள் எந்தவொரு எண்ணம் செய்தாலும் அதில் சக்தி இருக்கும். ஏதாவது பிரச்சனைகள் வந்தாலும் அவர்களுக்கு இது வரப்போகின்றது என்பது மூன் கூட்டியே அனுபவம் ஆகும். முதலிலேயே தெரிந்து கொண்ட காரணத்தால் அவர்கள் ஒரேோதர் தோல்வியடைமாப்பார்கள்.

2. யார் ஆதார மூர்த்திகளாக உள்ளார்களோ? அவர்களின் எண்ணத்தில் சக்தியில்லை என்றால், மாற்றத்திற்கான காரியமும் பலவீனமாகி விடும். எந்தளவு சுயம் தான் சக்திசாலியாகின்றீர்களோ அந்தளவு உலகை மற்றும் காரியத்தையும் நெருக்கத்தில் கொண்டு வருவீர்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 23.09.1973 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலகின் ஆத்மாக்களுக்கு லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) -கொடுப்பவர் தான் உலக அதிகாரி ஆவார்!

தன்னை உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்த நிலையில் எப்பொழுதும் நிலைத்திருக்கும் உயர்ந்த ஆத்மா என்று புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே இருக்கிறீர்களா? எப்படி "உயர்ந்தது உன்னுடைய பெயர், உயர்ந்தது உன்னுடைய காரியம் மற்றும் உயர்ந்தது உன்னுடைய இடம்" என்று தந்தையைப் பற்றி மகிமை இருக்கிறது. இதன் அனுசாரம் நீங்கள் உங்களையும் தந்தைக்குச் சமமாக உயர்ந்த பெயர் மற்றும் மேன்மையான காரியம் செய்யும் விசேஷ ஆத்மாக்களாக நினைக்கிறீர்களா? ஒன்று கூட வீணான மற்றும் சாதாரண எண்ணம் உருவாக வேண்டாம் என்ற கவனம் வைக்கிறீர்களா? இதைத் தான் உயர்ந்த நிலை என்று கூறுவது. நீங்கள் உங்களை அந்த மாதிரி உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? எதுவரை வேஸ்ட் (வீணான) எண்ணம், வார்த்தை மற்றும் செயல் இருக்கிறதோ அதுவரை பெஸ்ட் (சிறந்தவராக) ஆக முடியாது. ஒன்றோ பெஸ்ட் (உயர்ந்தது) அல்லது வேஸ்ட் (வீணானது) அப்படி இந்த இரண்டில் ஏதோ ஒன்று இருக்கிறது. எப்படி பகல் இருக்கிறது என்றால் இரவு இல்லை, இரவு இருக்கிறது என்றால் பகல் இல்லை அதே போலவே எங்கு வேஸ்ட் இருக்கிறதோ அங்கு பெஸ்ட் ஆக முடியாது. எனவே பெஸ்ட் ஆவதற்காக வேஸ்ட்டை அழிக்க வேண்டியதாக இருக்கும். எப்பொழுது வேஸ்ட் அழிந்து விடுமோ அப்பொழுது எந்த விதமான காரியம் செய்து கொண்டும், எந்த விதமான சுற்றுப்புறம் மற்றும் சூழ்நிலையில் இருப்பினும் மேலும் குழப்பங்கள் இருந்த போதிலும் ஆத்மா ரெஸ்ட்டில் (ஓய்வில் இருக்கிறது என்று அனுபவம் செய்வார்கள்.

## 1973 அவ்யக்த முரளி

எப்படி இன்றைய அறிவியலைச் சேர்ந்தவர்கள் தன்னுடைய அறிவியலின் ஞானத்தின் ஆதாரத்தினால் எப்படிப்பட்ட துக்கமான நேரத்திலும் ஒரு இன்ஜக்ஷன் மூலமாக அற்பகாலத்தின் ரெஸ்டின் அனுபவம் செய்விக்கிறார்கள் இல்லையா? அது போலவே எவ்வளவு தான் சப்தம் நிறைந்த மற்றும் எவ்வளவு தான் கீழ்த்தரமான சுற்றுப்புறம் இருந்தாலும் ஆனால் அமைதியின் சக்தி மூலமாக வேஸ்ட் அழிந்து விடும் காரணத்தினால் பெஸ்ட் நிலையில் நிலைத்திருப்பதினால் எப்பொழுதும் ரெஸ்ட் அனுபவம் செய்வார்கள் அதாவது எப்பொழுதும் தன்னை சுகம் மற்றும் சாந்தியின் படுக்கையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பதாக அனுபவம் செய்வார்கள். எப்படி நினைவுச் சித்திரத்தில் கூட, கடலில் எங்கும் அலைகளின் சீற்றம் இருக்கும் அப்படி கடலில் இருந்தபோதும், பாம்புகளின் படுக்கை ஆனபோதிலும் அதாவது சுற்றுப்புறம் மற்றும் சூழ்நிலை துக்கம் நிறைந்ததாக இருந்தபோதிலும் ஓய்வை அனுபவம் செய்வார்கள். அப்படி இதனுடைய உள் அர்த்தம் என்னவென்றால் அந்த மாதிரி சூழ்நிலைகள், அந்த மாதிரி சுற்றுப்புறம் எது தீண்டக்கூடியது, ஆட்டக்கூடியது மற்றும் தன்னுடைய விஷம் மூலமாக மயக்கம் அடையச் செய்வதாக இருந்தாலும் அந்த மாதிரி சுற்றுப்புறத்தையும் சுகம், சாந்தியின் படுக்கையாக்கி விட வேண்டும் அதாவது ஓய்விற்கான இடமாக்கி விட வேண்டும் அதாவது ஆத்மா எப்பொழுதும் தன் ஓய்வில் இருக்கட்டும். அப்படியானால் எப்படி நினைவுச் சித்திரம் இருக்கிறது அதே போலவே நடைமுறையில் வாழ்க்கையில் அனுபவம் செய்கிறீர்களா? சீதளமான சூழ்நிலையில் சீதளமாக இருப்பது ஒன்றும் பெரிய விஷயமில்லை, ஓய்விற்கான சாதனங்களில் ஓய்வாக இருப்பது இதுவும் சாதாரண விஷயமாகும் ஆனால் ஓய்வற்ற சூழலிலும் ஓய்வாக இருப்பது இதைத்தான் பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்" என்று கூறுவது. அந்த மாதிரி விஷக்கடலின் நடுவில் இருந்து கொண்டே ஐந்து விகாரங்களை தன்னுடைய ஓய்வு மற்றும் சுகம் சாந்தியின் படுக்கையாக்கி விடுவது அதாவது இப்பொழுதிலிருந்தே விகாரங்களின் மேல் எப்பொழுதும் வெற்றி அடைந்து எப்பொழுதும் ஞானத்தின் சிந்தனை மற்றும் தந்தையின் சந்திப்பில் மூழ்கியிருக்க வேண்டும்.

யார் அந்த மாதிரியான நிலையில் நிலைத்திருக்கிறார்களோ அதாவது எப்பொழுதும் (மக்ன) மூழ்கிய நிலையில் இருக்கிறார்களோ, அவர்கள்

தான் எப்பொழுதும் நிர்விக்ன (தடையற்றவர்களாக) இருக்கிறார்கள். மக்ன நிலை இல்லை என்றால் அவசியம் ஏதோ விக்னம் இருக்கிறது. இப்பொழுது விக்னம் உங்கள் மேல் தாக்குவதினால் அது தோல்வி அடைந்து விடுகிறதா அல்லது நீங்கள் விக்னங்களினால் தோல்வி அடைந்து விடுகிறீர்களா? இதுவரையிலும் கூட தோல்வி அடைந்து கொண்டே இருக்க வேண்டுமா என்ன, இந்த மாதிரி இருக்க முடியுமா? இதுவோ அசம்பவம் தான் இல்லையா? இப்பொழுது நீங்கள் தோல்வி அடையச் செய்பவர்களா அல்லது தோல்வி அடைபவர்களா? ஒருவேளை சுயம் நீங்களே நிர்விக்னமானவராக ஆகியிருக்கிறீர்கள் என்றால் அப்படி ஆகுபவரின் கடமையாக என்ன இருக்கிறது? சிலரோ இப்பொழுது ஆகிக் கொண்டிருக்கிறார்கள், சிலர் ஆகி விட்டார்கள். யார் (அவ்வாறு) ஆகிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் தன்னுடையதிலேயே பிஸியாக இருக்கிறார்கள் ஏனென்றால் எதுவரை சுயம் தானே ஆகவில்லையோ அதுவரை மற்றவர்களை ஆக்குவதில் அவரவர் களின் சக்திக்கேற்றபடி தான் காரியம் செய்ய முடியும் ஆனால் யார் ஆகி விட்டார்களோ அவர்களுடைய கடமையாக என்ன இருக்கிறது? மற்றவர்களை அந்த மாதிரி ஆக்க வேண்டும் என்பது தான் அவர்களுடைய கடமை. அப்படி ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. முதலில் நல்ல காரியங்கள் தன் வீட்டில் தொடங்கும் என்றால் தன்னுடன் இருப்பவர்களையும் ஆக்கியிருக்கிறீர்களா? அந்த உடன் இருப்பவர்கள் உங்களுக்கு யார் அவர்கள்? பிராமண பரிவாரத்தில் உங்களுடன் யார் இருக்கிறார்களோ அவர்கள் தான். அப்படி அந்த உங்களுடைய உடன் இருப்பவர்களை உங்களுக்குச் சமமாக ஆக்கிய பிறகு தந்தைக்கு சமமாக ஆக்க வேண்டும் ஆனால் முதல் நிலையில் ஒருவேளை அவர்களை உங்களுக்குச் சமமாக ஆக்கினீர்கள் என்றாலும் கூட பெரிய விஷயம் தான்.

யார் ஆகி விட்டார்களோ அவர்களுடைய கடமையாக என்ன இருக்கிறது? அவர்களுடைய சொரூபமாக இப்பொழுது என்ன இருக்க வேண்டும்? விக்ன விநாசக் என்று யாரோ பதில் கூறினார். நல்லது. விக்ன விநாசக் ஆக எப்படி ஆவீர்கள்? எந்த ரூபத்தினால் சம்ஹாரம் (அழித்தல்) செய்தீர்கள் என்றால் அதன் மூலம் சுலபமாகவே உலகின் சேவை செய்ய முடியும்? அந்த ரூபம் எது? அது டபுள் லைட் மற்றும் மைட் ஹவுசிற்கான ரூபம் ஆகும். டபுள் என்று ஏன் கூறினோம்?

ஏனென்றால் நீங்கள் இரண்டு காரியம் செய்ய வேண்டும். சிலருக்கு முக்திக்கான வழியைச் சொல்ல வேண்டும் மற்றும் சிலருக்கு ஜீவன் முக்திக்கான வழியைச் சொல்ல வேண்டும். ஒரு வழி மட்டும் அல்ல மாறாக இரண்டு வழிகளைக் காண்பிக்க வேண்டும் மேலும் ஒவ்வொரு ஆத்மாவையும் அவரவர்களின் இருப்பிடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அப்படி யார் ஆகி விட்டார்களோ அவருடைய சொரூபமாக டபுள் லைட் மற்றும் மைட்டாக இருக்க வேண்டும். அதன் மூலம் ஒரு இடத்தில் இருந்த போதிலும் கூட நாலா லும் தன்னுடைய லைட் மற்றும் மைட்டின் ஆதாரத்தில் அலைந்து ருக்கும் ஆத்மாக்களுக்குப் புகலிடம் கொடுக்க முடிய வேண்டும். அப்படியானால் இந்தக் காரியத்தில் பிஸியாக இருக்கிறீர்களா? இப்பொழுது லைட் மற்றும் மைட் இரண்டிற்குமான சமநிலை இருக்க வேண்டும். லைட்டினால் மட்டும் கூட காரியம் நடக்காது. மேலும் மைட்டினால் மட்டும் கூட காரியம் நடக்காது. இரண்டிற்கான சமநிலை எப்பொழுது சரியாக இருக்கிறது என்றால் அப்பொழுது அனைத்து குருடர்களின் குழந்தைகள் குருடர்களுக்கு (சாஸ்திரங்களிலும் கௌரவ சம்பிரதாயத்தினருக்காக குருடர்களின் குழந்தைகள் குருடர்கள் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது) தன்னுடைய லைட் மற்றும் மைட் மூலமாக எந்த வரதானம் கொடுப்பீர்கள் மேலும் அவர்கள் வரதானத்தில் என்ன பிராப்தி அடைவார்கள்? டிவைன் இன்சைட் அதாவது அவர்களுக்கு மூன்றாவது கண்ணின் வரதானம் கொடுங்கள்.

பொதுவாகவே கண்தானம் அனைத்தையும் விட உயர்ந்த தானம் என்று கூறப்படுகிறது. கண் இல்லை என்றால் உலகம் இல்லை. அனைத்தையும் விட மிகப் பெரிய உயிர்தானம் என்று கூறினாலும் அல்லது வரதானம் என்று கூறினாலும் அல்லது மகாதானம் என்று கூறினாலும், உண்மையிலேயே அது இது தான். அப்படி குருடர்களுக்கு டிவைன் இன்சைட் அல்லது மூன்றாவது கண்ணின் தானம் கொடுங்கள் அதன் மூலம் அவர்கள் முக்தி மற்றும் ஜீவன் முக்தியின் புகலிடத்தைப் பார்க்கவும் முடியட்டும். ஒருவேளை அவர்கள் பார்க்கவே இல்லை என்றால் பின்பு எப்படி சென்றடைவார்கள்? எனவே டபுள் லைட் மற்றும் மைட் ஹவுஸ் ஆகி, இரண்டின் சமநிலையைச் சரியாக வைத்து ஒவ்வொரு ஆத்மாவிற்கும் மூன்றாவது கண்ணின் வரதானம் கொடுங்கள். இது தான் உயர்ந்த ஆத்மாக் களின் கடமை ஆகும்.

தனக்காக மட்டுமே லைட் மற்றும் மைட்டை வைத்திருந்தீர்கள் என்றால் லைட் ஹவுஸ் என்று கூறப்படமாட்டீர்கள். ஒருவேளை தன்னுள் லைட் மற்றும் மைட் இருக்கிறது என்றால் தன்னுடன் இருப்பவர்களுக்கும் மற்றும் உலகின் அனைத்து ஆத்மாக்களுக்கும் மகாதானம் கொடுங்கள் மற்றும் வரதானம் கொடுங்கள். ஒருவேளை ஏதாவது பல்பு நாலாபுறத்திலும் வெளிச்சத்தை பரப்பவில்லை, எங்கு எரிந்து கொண்டிருக்கிறதோ அந்த சின்ன இடத்திற்கு மட்டும் ஒளியைக் கொடுக்கிறது என்றால் அதை காரியத்திற்கு உதவாது என்று கூறுவார்கள். எனவே நான் எனக்கு மட்டும் லைட் மற்றும் மைட் கொடுப்பவனாக ஆகியிருக்கிறேனா என்று தன்னைத் தானே பாருங்கள் அல்லது முழு உலகத்திற்கும் லைட் மற்றும் மைட் கொடுப்பவனாக ஆகியிருக்கிறேனா? எவ்வளவு தூரம் லைட் கொடுப்பவராக இப்பொழுது ஆவீர்களோ அந்தளவே சிறிய அல்லது பெரிய இராஜ்யத்தின் அதிகாரியாக எதிர்காலத்தில் ஆவீர்கள். ஒருவேளை கொஞ்ச ஆத்மாக்களுக்காக மட்டும் லைட் மற்றும் மைட் கொடுப்பதற்கான பொறுப்பானவர்கள் ஆகிறீர்கள் என்றால் அங்கேயும் (சத்யுகத்திலும்) கொஞ்ச ஆத்மாக்கள் மேல் இராஜ்யம் செய்வதற்கான அதிகாரி ஆவீர்கள். இங்கு உலகின் சேவாதாரி என்றால் அங்கே உலகின் இராஜ்ய அதிகாரி ஆவார்கள்.

இராஜ்ய அதிகாரி ஆக்குபவர் ஒருவர் இருக்கிறார், அவரைத் தான் டீச்சர் என்று கூறுகிறார்கள். அவர் இராஜ்ய காரிய விவகாரங்களை கற்றுக் கொடுப்பவர்களாக ஆவார்கள் ஆனால் இராஜ்யம் செய்பவர்களாக ஆக மாட்டார்கள். இப்பொழுது நீங்கள் கற்றுக் கொடுப்பவர்களாக ஆவீர்களா அல்லது இராஜ்யம் செய்பவர்களாக ஆவீர்களா? அங்கு சத்யுகத்திலும் நிமித்த மாத்திரமாக படிப்பிக்கவோ செய்வார்கள் இல்லையா! இராஜ்ய காரிய விவகாரங்களை கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களாக யார் இருக்கிறார்களோ அவர்களை இராஜ்யதாரி (ஆலோசகர்) என்று கூறுகிறார்கள் ஆனால் இராஜ்ய அதிகாரி என்று கூறுவதில்லை. அப்படி இராஜ்யதாரியாக ஆவீர்களா அல்லது இராஜ்ய அதிகாரியாக ஆவீர்களா? ஆனால் யார் இப்பொழுதிலிருந்தே தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரம் மற்றும் எண்ணத்தின் அடிமை ஆவதில்லையோ அவர் தான் அதிகாரி ஆவார். யார் இப்பொழுது கூட தன்னுடைய எண்ணத்தின் அடிமையாகிறார் என்றால் அவர் அதிகாரியாக ஆனாரா என்ன? அவர்

எண்ணங்களினும் அடிமையானார் இல்லையா! எனவே இப்பொழுது எண்ணங்களின் அடிமையாகவும் வேண்டாம், சுபாவம், சம்ஸ்காரத்தின் அடிமையாகவும் வேண்டாம். யார் இப்பொழுதிலிருந்து இந்த அனைத்தின் அதிகாரி ஆவார்களோ அவர் தான் அங்கு இராஜ்ய அதிகாரி ஆவார். இப்பொழுது எவ்வளவு அடிமையாக இருக்கிறேன் மற்றும் எவ்வளவு அதிகாரியாக இருக்கிறேன் என்ற கணக்கை எடுங்கள். பின்பு அதனுடைய ரிசல்ட் மூலமாக தானும் தன்னுடைய எதிர்காலத்தின் சாட்சாத்காரம் செய்ய முடியும். அதாவது தன்னைத் தானே பகுத்தறிவதற்கான கண்ணாடியில் தன்னுடைய நிகழ்காலம், எதிர்காலம் 21-ஜென்மங்களுக்காக நம்முடைய எதிர்காலத்தின் லட்சணங்கள் எப்படி இருக்க முடியும் என்பதை பார்க்க முடியும். ஒருவேளை உங்களை நீங்களே பகுத்தறிவதற்கான சக்தியின் கண்ணாடி அதிக சக்தி நிறைந்ததாக இருக்கிறது என்றால் நீங்கள் உங்களுடைய 21-ஜென்மங்களின் எதிர்காலத்தைப் பார்க்க முடியும். அந்தக் கண்ணாடி யிலோ (ஸ்தூலமான) அது எவ்வளவு தான் சக்திசாலியானதாக இருந்தாலும், எவ்வளவு தான் வெகுதூரத்தின் பொருளையும் பார்க்க முடியும் என்றாலும் அதுவோ இந்த உலகத்தைச் சேர்ந்ததாகத் தான் ஆனது இல்லையா! அதன் மூலம் எதிர்காலத்தையோ பார்க்க முடிவதில்லை, ஆனால் உங்களுக்கு பகுத்தறியும் சக்தியின் கண்ணாடி அந்தளவு சக்தி நிறைந்ததாக கிடைத்திருக்கிறது. அதன்மூலம் எதிர்காலத்து ஒரு ஜென்மம் அல்ல 21-ஜென்மங்களைப் பார்க்க முடியும். மேலும் பின்பு 21-ஜென்மங்களின் ஆதாரத்தில், எதிர்கால பதவியின் ஆதாரத்தில் தன்னுடைய பூஜாரி நிலையின் பங்கையும் பார்க்க முடியும். அந்த மாதிரி பாப்தாதா மூலமாகக் கிடைத்திருக்கும் சக்திசாலியான கண்ணாடியில் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா என்ன? தன்னை தெளிவாகப் பார்க்க முடிகிறதா அல்லது பார்ப்பதற்காகவும் வேறு யாருடைய அவசியமும் இருக்கிறதா? திரிகாலதரிசிக்கு வேறு யாருடைய தேவையும் இருக்குமா என்ன? திரிகாலதரிசியோ மற்றவர்களின் எதிர்காலத்தையும் தெரிந்து கொள்ள முடியும் அப்படியென்றால் நீங்கள் உங்களுடைய எதிர்காலத்தை தெரிந்து கொள்ள முடியாதா?

மூன்று காலத்தையும் தெரிந்தவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது ஒரு காலத்தை தெரிந்தவராக ஆகியிருக்கிறீர்களா? ஒரு காலத்தை

தெரிந்தவர் என்றால் நிகழ்காலத்தை மட்டும் பார்ப்பவர். இப்பொழுதோ மூன்று காலத்தையும் தெரிந்தவர் ஆகி அனைவருக்கும் செய்தி கொடுங்கள். எப்பொழுது ஒரு காலத்தைப் பார்ப்பவராகி செய்தி கொடுக்கிறீர்கள் என்றால் ஒரு சதவிகிதம் ரிசல்ட் தான் வெளியாகிறது. மூன்று காலத்தையும் தெரிந்தவராகி செய்தி கொடுத்தீர்கள் என்றால் மூன்று மடங்கு ரிசல்ட்டோ வெளியாகியே விடும். அதாவது 75 சதவிகிதமாக ரிசல்ட் இருக்கும். இப்பொழுதைய ரிசல்ட்டோ 25 சதவிகிதம் தான். அப்படியானால் இப்பொழுது என்ன செய்வீர்கள்? அனைவரும் பாண்டவ சேனையின் வெற்றிக் கொடியை பறக்க விடுவீர்களா? பின்பு என்ன செய்வீர்கள்? இருவர்களுமே (பாண்டவர்கள் மற்றும் சக்திகள்) பறக்க விடுவீர்கள் தான் இல்லையா? இந்தக் கொடியைப் பறக்க விடுவதோ சுலபம். ஒன்றுக்குப் பதிலாக நூறு கூட பறக்க விடுங்கள். ஒவ்வொருவரும் அவர்களுடைய பகுதி வ்வளவு வேண்டு மானாலும் பறக்க விடுங்கள் ஆனால் இந்தக் கொடி ஏற்றுவதின் அர்த்தம் என்ன? வெற்றிக் கொடியைப் பறக்க விட வேண்டும். இப்பொழுது நீங்கள் அனைவரும் சேர்ந்து உடல், மனம், பொருள் அனைத்தையும் என்னென்ன சேவைக்காக ஈடுபடுத்துகிறீர்களோ அதை எந்த லட்சியத்தோடு செய்து கொண்டிருக்கிறீர்கள்? சிவனுடைய படமுள்ள கொடியை பறக்கவிடுவதின் லட்சியத்தோடு மட்டும் செய்து கொண்டிருக்கிறீர்களா?

இப்பொழுது அனைவரும் ஒன்று சேர்ந்து தன்னுடைய இராஜ்யத்தின் வெற்றிக் கொடியைப் பறக்க விடுவோம் மற்றும் அனைவர் மேலும் வெற்றி அடைவோம் என்ற லட்சியத்தை வையுங்கள். பாருங்கள் உலகிற்கான வாய் எது? செய்தித்தாள், துண்டுப்பிரசுரம் மற்றும் மாத / வார இதழ்கள், இப்பொழுது உலகின் வாய் மூலமாக பேசிக் கொண்டு தான் இருக்கிறார்கள் இல்லையா? அமைதியாகி விட வேண்டும். கொல்ல முடியவில்லை என்றாலும் குறைந்தது மயக்கம் அடையவாவது ஆனால் பேசாமல் செய்து விடுங்கள். மயக்கம் அடைந்தவர் கூட பேச மாட்டார் இல்லையா? இப்பொழுது இந்த ரிசல்ட் வெளியாக வேண்டும். சாம்பலாக யார் ஆகிறார் மேலும் எத்தனை பேர் ஆகிறார்கள். மேலும் கோடியில், லட்சத்திலிருந்து ஒருவர் யார் வெளியாகிறார் என்ற இதையும் பார்ப்போம் ஆனால் இது எப்படி ஆகும்?

இதற்காக இரண்டு விஷயங்களை விட்டு விட வேண்டும் மற்றும் ஒரு விஷயத்தை தாரணை செய்ய வேண்டும். இரண்டு விஷயங்கள் எதை விட்டு விட வேண்டும்? (இரண்டு வேறுபட்ட வழிகளை விட்டு விட்டு ஒரு வழியை தாரணை செய்ய வேண்டும்) ஆனால் இரண்டு வழிகள் ஏன் இருக்கிறது? ஒரு வழியிலிருந்து இரண்டு வழியில் வருவதற்கான காரணம் என்ன? விட வேண்டிய இரண்டு விஷயங்கள் எவை? மேலும் தாரணை செய்ய வேண்டிய ஒரு விஷயம் எது? விட வேண்டியது ஒன்றோ புகழ்ச்சி (ஸ்துதி) மற்றும் இரண்டாவது சூழ்நிலை (பரிஸ்திதி). ஏனென்றால் ஒன்றோ ஏதாவது சூழ்நிலை காரணமாக நிலை மேலே கீழே ஆகிறது மற்றும் இரண்டாவது ஸ்துதியில் வருவதினால் ஸ்திதி உருவாகுவதில்லை. எனவே சுயஸ்திதியை தாரணை செய்ய வேண்டும் மற்றும் ஸ்துதி மற்றும் பரிஸ்திதி இந்த இரண்டு விஷயங்களையும் விட்டு விட வேண்டும். எண்ணத்தினாலும் விட வேண்டும். பரிஸ்திதியின் காரணமாக சுயஸ்திதி உருவாவதில்லை மேலும் ஸ்துதியின் காரணமாக ஸ்திதி உருவாவதில்லை. எனவே ஸ்துதியில் ஒருபொழுதும் வரக்கூடாது. ஒருவேளை இங்கு தன்னுடைய ஸ்துதி ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தையும் வைத்தீர்கள் என்றால் அரைக்கல்பமாக என்ன ஸ்துதி ஏற்பட வேண்டுமோ அதிலிருந்து நூறு மடங்கு குறைந்து விடும் ஏனென்றால் இப்பொழுதைய அற்பகாலத்து ஸ்துதி சதா காலத்தின் ஸ்திதியை குறைத்து விடுகிறது. எனவே இப்பொழுது பரிஸ்திதி வார்த்தையையும் கூறக்கூடாது. மேலும் ஸ்துதி கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் வைக்கக் கூடாது.

எவ்வளவு பணிவாக இருப்பீர்களோ அவ்வளவு படைப்புக் காரியம் வெற்றி அடையும். ஒருவேளை பணிவு இல்லை என்றால் படைப்புக் காரியம் செய்ய முடியாது. படைப்புக் காரியம் செய்வதற்காக முதலில் பணிவானவராக ஆக வேண்டும். எனவே ஒரு சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் எந்தக் காரியமாக இருந்தாலும் எந்த விதமான சூழ்நிலை எதிரில் இருந்தாலும் எப்படி "முதலில் நீங்கள்" அதாவது மற்றவர்களை முன்னேற்றுவது, தன்னை முன்னேற்று வதாகும் என்று அஞ்ஞான காலத்தின் பழமொழி இருக்கிறது. அந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும். தான் வளைந்து கொடுப்பது அல்லது தனக்கு கற்றுக் கொடுப்பது என்பது தன்னை

வளைத்துக் கொள்வது அல்ல. உலகை உங்கள் எதிரில் தலை வணங்க வைப்பது. எனவே எப்பொழுதும் ஒவ்வொருவரிலும் "முதலில் நீங்கள்" என்ற உள்ளுணர்வு, பார்வை மற்றும் வார்த்தை இருக்கட்டும். இந்த சுலோகனை ஒருபொழுதும் மறக்கக்கூடாது. எப்படி பாப்தாதா எண்ணத்திலோ, வார்த்தைகளிலோ அல்லது காரியத்திலோ முதலில் "நான்" என்று ஒருபொழுதும் செய்யவேயில்லை. எப்பொழுதும் குழந்தைகளை முதலில் கொண்டு வந்தார்கள். இந்த பார்வை மற்றும் உள்உணர்வை எதிரில் வையுங்கள். இந்த விதமாக 'தந்தையைப் பின்பற்றும் ஒவ்வொரு குழந்தையும் இந்த விஷயத்தில் தந்தையைப் பின்பற்றி நடந்தார்கள் என்றால் வெற்றியும் நூறு சதவிகிதம் கழுத்தின் மாலையாக ஆகி விடும். ஒருவேளை முதலில் நீங்கள் என்பதற்கு பதிலாக முதலில் நான்' என்ற எண்ணத்தை மட்டும் வைத்தாலும், ஒருவேளை ஒரு ஆத்மாவாவது இந்த எண்ணத்தை வைத்து வார்த்தை மற்றும் காரியத்தில் கொண்டு வந்தார் என்றால் வெற்றி மாலையின் ஒரு மணி உடைந்து விட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். மாலையில் ஒரு மணி கூட ஒருவேளை உடைந்து விட்டது என்றால் முழு மாலையின் மேலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே தன்னை இந்த விஷயத்தில் உறுதியாக்கத் தான் வேண்டும் ஆனால் தன்னையும் சேர்த்து குழுவையும் இந்த விஷயத்தில் மற்றும் இந்த சுலோகனில் எப்பொழுதும் வெற்றி அடையச் செய்யும் முயற்சியில் இருக்க வேண்டும் அதன் மூலம் வெற்றி மாலையின் ஒரு மணி கூட விலகிச் செல்லக்கூடாது. எப்பொழுது இந்த மாதிரி முயற்சி செய்வீர்கள் மற்றும் இந்தக் காரியம் செய்வீர்களோ அப்பொழுது தான் வெற்றிக் கொடியை தன்னுடைய ராஜ்யத்தின் மேல் நிற்க வைக்க முடியும்.

மேடை நாடகத்தில் தனக்கு கிடைத்த பாத்திரத்தில் நடிப்பதற்கு முன்பாக ஒத்திகை செய்வார்கள், பின்பு அதற்கான டிரஸ் (ஆடை) மற்றும் மேக்கப் ஆகியவை முடிவு செய்யப்படுகிறது. அப்பொழுது தான் அந்தப் பாத்திரம் வெற்றி அடைவதாக இருக்கும். அப்படி அலங்கரிக்கப்பட்டு எவரெடியாகி எப்பொழுது மேடையில் வருவீர்களோ அப்பொழுது சபாஷ், சபாஷ் என்ற ஒலியும், மீண்டும் ஒரு முறை என்ற ஒலியும் எழும். ஸ்தூலமாக தயார் செய்வதிலேயே பிஸியாக ஆகவில்லையே. முதலில் உங்களுடைய டிரஸை தயார் செய்யுங்கள். பின்பு மேக்கப்பிற்கான சாமான்களை தயார் செய்யுங்கள்.

மேக்கப் செய்வது என்றால் அந்த நிலையில் நிலைத்திருப்பது என்ற இதையும் தயார் செய்து கொண்டிருக்கிறீர்களா? இதற்காகவும் மீட்டிங் நடத்துகிறீர்களா? மீட்டிங்கில் அதிகமாக கலந்துரையாடி இந்த விஷயத்தை மறந்து விடாதீர்கள். ஸ்டாலை அலங்கரித்து, அலங்கரித்து நேரம் சென்று விட்டது மற்றும் நீங்கள் அப்படியே நின்று விடுகிறீர்கள் -அப்படியும் ஆகிறது தான் இல்லையா? அனேக சென்டர்களில் நிகழ்ச்சியைத் தயார் செய்து செய்து தான் அப்படியே நின்று விடுகிறார். அவர் தயார் ஆவதில்லை என்றால் இங்கு அந்த மாதிரி செய்யாதீர்கள். தானம் பெறுபவர்கள் வந்து விட்டார்கள் மற்றும் அந்த நேரம் இவர்களுக்குக் கொடுப்பதற்காக எதை எடுத்து வரலாம் என்று யோசிக்கிறீர்கள் எனவே முன்பாகவே ஸ்டாக்கை நிரப்பி வைக்கப்படுகிறது. அந்த நேரம் ஒன்றாகச் சேர்ப்பதற்கான முயற்சி செய்தீர்கள் என்றால் அனேகர்கள் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுவார்கள். எப்படி மற்ற பொருட்களின் ஸ்டாக்கை ஒன்றாக சேர்க்கிறீர்கள் அதே போல் இந்த ஸ்டாக்கை முதலில் ஒன்றாகச் சேருங்கள். யாருக்கு என்ன வேண்டுமோ, சுகம், சாந்தி வேண்டுமா அல்லது பிரஜை பதவி மட்டும் வேண்டுமா அல்லது யாருக்காவது செல்வந்தர் பதவி வேண்டுமா மற்றும் சிலர் உலக மகாராஜனுக்கு நமஸ்காரம் செய்ய மட்டும் விரும்புவார்கள், சிலர் நாங்கள் எப்பொழுதும் காலடிகளின் தாசனாகவே இருக்க வேண்டும் என்று அப்படியும் விரும்புகிறார்கள் என்றால் அந்த மாதிரியான பக்தர்கள் யார் பெயரை சொல்ல விரும்புகிறார்கள், அந்த மாதிரியானவர்களின் ஸ்டாக்கையும் நிரப்பிவிடுங்கள். யாருக்கு எது வேண்டும் மற்றும் எந்தப் பொருளின் ஆசை இருக்கிறது அவருடைய ஆசையை அழியாதவாறு நிறைவேற்ற முடிய வேண்டும். இந்த மண்ணாலான உலகத்தினுடையது அல்ல, பொன்னுலகத்திற்கானவை. எப்பொழுது அந்த மாதிரி ஸ்டாக் ஒன்றாக சேர்க்கப்பட்டிருக்குமோ அப்பொழுது தன்னுடைய ஸ்டாக்கிலிருந்து விரைவாக அந்த ஆத்மாக்களுக்கு கொடுக்க முடியும். இந்த மாதிரியான ஏற்பாட்டையும் செய்தீர்களா? இந்தக் கணக்கையும் எடுத்திருக்கிறீர்களா அல்லது ஒவ்வொரு ஜோனும் எவ்வளவு உடல் (சேவாதாரி), பணம் தருவார்கள், எத்தனை பேனர்கள், படுக்கை விரிப்புகள் ஆகியவை தருவார்கள் என்ற இந்தக் கணக்கை மட்டும் எடுத்திருக்கிறீர்களா? ஆனால் தன்னுடைய நெற்றியிலும் பேனரை கட்ட வேண்டியதாக இருக்கும்.

முதலிலோ தன்னுடைய உருவத்தின் சைத்தன்ய கண்காட்சியை வைக்க வேண்டியதாக இருக்கும். அதில் கண்கள் தாமரை மலர் மாதிரி தென்படட்டும், உதடுகளில் ஆன்மீக புன்சிரிப்பு தென்படட்டும் மற்றும் நெற்றியில் ஆத்மாவின் முகம் தென்படட்டும். அப்படி தன்னுடைய மூர்த்தியை அலங்கரித்திருக்கிறீர்களா? இந்தக் கண்காட்சியையும் தயார் செய்து கொண்டிருக்கிறீர்களா அல்லது ஸ்டாலில் வைக்கப்படும் கண்காட்சிகளை மட்டும் தயார் செய்து கொண்டிருக்கிறீர்களா? இதற்கான பரிசும் கிடைக்கும். நீங்கள் உங்களுக்குள் ஒவ்வொரு ஸ்டாலின் அலங்காரத்திற்காக பரிசு கொடுப்பீர்கள் மற்றும் பாப்தாதா சைத்தன்ய கண்காட்சியின் அலங்காரத்திற்காக பரிசு கொடுப்பார். எனவே இப்பொழுது இரண்டு பரிசுகள் கிடைக்கும். யார் யார் தன்னுடைய சைத்தன்ய கண்காட்சி மற்றும் தன்னுடைய நெற்றியின் பேனர் மூலமாக சேவை செய்தார்களோ அவர்களுக்குப் பரிசு வழங்குவோம். இப்பொழுது ரிசல்ட்டைப் பார்ப்போம். ரிசல்ட்டோ வரும் இல்லையா? ஃபர்ஸ்ட் (முதலாவது), செகன்ட் (இரண்டாவது). தேர்ட் (மூன்றாவது) என்று மூன்று பரிசுகள் கிடைக்கும், பாப்தாதாவும் மூன்று பரிசுகள் கொடுப்பார். நான் முதல் பரிசை பெறுவேன் என்று ஒவ்வொருவரும் இப்பொழுதிலிருந்தே யோசிக்கிறார்கள். ஒருவேளை அனைவருமே முதலில் வந்து விட்டால் கூட அனைவருக்கும் பரிசு கொடுப்போம். இதென்ன பெரிய விஷயம். ஒருவேளை இந்த அளவு வெற்றி அடைபவர்கள் ஆகி விட்டார்கள் என் வெற்றி இரத்தினங்களின் எதிரில் பரிசு என்ன பெரிய விஷயம அனைவரும் ஃபர்ஸ்ட் நம்பராக ஆனீர்கள் என்றால் பரிசும் அனைவருக்கும் கிடைக்கும். ஸ்தூலமாகக் கிடைக்கும். சூட்சுமம் என்று சொன்னோம் என்றால் பெரிய விஷயமாக இருக்காது. சாகார உலகில் இருக்கும் காரணத்தினால் சாகாரத்தில் தான் கொடுப்போம். என்ன கொடுப்போம் என்பதை இப்பொழுது கூற மாட்டோம். அது அந்த நேரம் பிரசித்தி ஆகும். எப்படி தகுதியிருக்குமோ அந்த தகுதிக்கேற்ப பரிசு இருக்கும். தங்கம் கூட என்ன பெரிய விஷயம். கொஞ்ச காலத்திற்கு பிறகு முழு தங்கமுமே உங்களுடைய காலடிகளில் வர வேண்டும். உலகின் அதிபதியாக ஆகுபவர்களுக்கு இதென்ன பெரிய விஷயம்? அப்படி இது பாப்தாதாவின் பரிசு இல்லையா? எத்தனை நம்பரோ அத்தனை பரிசு. எவ்வளவு நல்ல சேவையின் வெற்றியை காண்பித்தார்களோ அவர்களுக்கு அந்த மாதிரி நல்ல பரிசு கிடைக்கும். மற்றபடி ஸ்டாலின் அலங்காரத்திற்கான பரிசை

இவர்கள் (தீதி. தாதி) கொடுப்பார்கள் மற்றும் அதை பாப்தாதா கொடுப்பார். மன ஆறுதலுக்கானது மட்டும் இல்லை, நடைமுறையில் கொடுப்போம். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றியடையும். எப்பொழுதும் வெற்றி மூர்த்தியாக இருக்கும், எப்பொழுதும் சுயநிலை மூலமாக ஒவ்வொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளக்கூடிய, எப்பொழுதும் பணிவானவராகி புது உலக படைப்பைச் செய்யக்கூடிய மற்றும் ஒவ்வொரு அடியிலும் ஒரு தந்தையின் நினைவில், ஒற்றுமையாக இருந்து ஒருவரின் பெயரை புகழடையச் செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: இந்த உலகத்தின் பற்றுதலிலிருந்து விடுபட்டு அவ்யக்த வதனத்தைச் சுற்றி வரக்கூடிய பறக்கும் பறவை ஆகுக!

புத்தி என்ற விமானம் மூலமாக அவ்யக்த வதனம் மற்றும் மூலவதனத்தைச் சுற்றி வருவதற்காக பறக்கும் பறவை ஆகுங்கள். புத்தி மூலமாக எப்பொழுது விரும்புகிறீர்களோ. எங்கு விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைந்து விடுங்கள். இது எப்பொழுது இந்த உலகத்தின் பற்றுதலிலிருந்து முற்றிலும் விடுபட்டிருப்பீர்களோ அப்பொழுது முடியும். இது மதிப்பற்ற, உலகம், இந்த மதிப்பற்ற உலகத்தில் எப்பொழுது ஒரு வேலையும் இல்லை, ஒரு பிராப்தியும் இல்லை என்றால் புத்தி மூலமாகச் செல்வதையும் நிறுத்துங்கள். இது கொடூரமான நரகம் ஆகும். இதில் செல்வதற்கான எண்ணம் மற்றும் கனவும் வர வேண்டாம்.

சுலோகன்: தன்னுடைய முகம் மற்றும் நடத்தையினால் சத்தியத்தின் பண்பை அனுபவம் செய்விப்பது தான் உயர்ந்த தன்மையாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்